தலைவர் மாஓ சேதுங்

மேற்கோள்கள்

★

உலக பாட்டாளிகளே, ஒன்றுசேருங்கள்!

தலைவர்
மாஓ சேதுங்
மேற்கோள்கள்

அயல் மொழிப் பதிப்பகம்
பீக்கிங் 1972

சீன மக்கள் குடியரசில் பதிப்பிக்கப்பட்டது

உள்ளடக்கம்

1.	கம்யூனிஸ்ட் கட்சி	1
2.	வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும்	11
3.	சோஷலிஸமும் கம்யூனிஸமும்	33
4.	மக்கள் மத்தியில் முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது	66
5.	யுத்தமும் சமாதானமும்	85
6.	ஏகாதிபத்தியவாதிகளும் எல்லா பிற்போக்குவாதிகளும் கடதாசிப் புலிகள்	105
7.	போராடத் துணியுங்கள்! வெற்றி பெறத் துணியுங்கள்!	119
8.	மக்கள் யுத்தம்	127
9.	மக்கள் படை	144
10.	கட்சிக் கமிட்டிகளின் தலைமை	150
11.	வெகுஜன மார்க்கம்	171

12. அரசியல் வேலை 194
13. அதிகாரிகளுக்கும் படையின ருக்கும் இடையிலுள்ள உறவு கள் 214
14. படைக்கும் மக்களுக்கும் இடையிலுள்ள உறவுகள் 221
15. மூன்று பெரும் ஜனநாயகம் 226
16. கல்வியும் பயிற்சியும் 236
17. மக்களுக்குத் தொண்டு செய்க 242
18. தேசபக்தியும் சர்வதேசியமும் 249
19. புரட்சிகர வீர-சாகஸம் 258
20. விடா முயற்சியுடனும் சிக் கனமாகவும் நமது நாட்டை நிர்மாணிப்பது 265
21. சுய-சார்பும் கடினமான போ ராட்டமும் 276
22. சிந்தனை முறையும் வேலை முறையும் 289
23. பரிசீலனையும் படிப்பும் 328
24. தவறான கருத்துகளைத் திருத் துவது 338
25. ஐக்கியம் 358
26. கட்டுப்பாடு 362
27. விமர்சனமும் சுய-விமர்சன மும் 368
28. கம்யூனிஸ்டுகள் 383
29. ஊழியர்கள் 395
30. வாலிபர்கள் 413
31. மாதர் 421
32. கலையும் கலாசாரமும் 428
33. படிப்பு 435

1. கம்யூனிஸ்ட் கட்சி

நமது லட்சியத்துக்குத் தலைமை தாங்கும் கேந்திர சக்தி சீன கம்யூனிஸ்ட் கட்சி.

நமது சிந்தனைக்கு வழிகாட்டும் தத்துவ அடிப்படை மார்க்ஸிஸம்-லெனினிஸம்.

சீன மக்கள் குடியரசின் 1வது தேசிய மக்கள் காங்கிரஸ் 1வது கூட்டத்தின் ஆரம்ப உரை (15. செப்டம்பர். 1954.)

புரட்சி நடைபெற வேண்டுமானால், புரட்சிகரக் கட்சி ஒன்று இருக்க வேண்டும். புரட்சிகரக் கட்சி ஒன்று இல்லாவிட்டால், மார்க்ஸிஸம்-லெனினிஸ புரட்சிகரத் தத்துவத்தின் அடிப்படையில், மார்க்ஸிஸம்-லெனினிஸ புரட்சிகர நடையில் அமைக்கப்பட்ட கட்சி ஒன்று

இல்லாவிட்டால், ஏகாதிபத்தியத்தையும் அதன் வேட்டைநாய்களையும் தோற்கடிப்பதில் தொழிலாளர் வர்க்கத்துக்கும் பரந்துபட்ட பொதுமக்களுக்கும் தலைமை அளிப்பது சாத்தியமாகாது.

''புரட்சிகர உலக சக்திகளே! ஐக்கியப்பட்டு ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போரிடுங்கள்'' (நவம்பர். 1948.) தே. ப. தொ. 4.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முயற்சி இல்லாவிட்டால், சீன மக்களின் தூணாக விளங்கும் சீன கம்யூனிஸ்டுகள் இல்லாவிட்டால், சீனா சுதந்திரத்தையும் விடுதலையையும் பெறுவதோ அல்லது தொழில் மயமாக்கத்தையும், விவசாய நவீனமயமாக்கத்தையும் நிறைவேற்றுவதோ ஒருபோதும் முடியாது.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

சீன மக்கள் அனைவரின் தலைமைக் கேந்திரம் சீன கம்யூனிஸ்ட் கட்சி. இந்தக் கேந்திரம் இல்லாவிட்டால், சோஷலிஸ லட்சியம் வெற்றி பெற முடியாது.

சீனாவின் புதிய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் 3வது தேசிய காங்கிரஸ் பிரதிநிதிகளைச் சந்தித்த போது ஆற்றிய உரை (25. மே. 1957.)

மார்க்ஸிஸம்-லெனினிஸத் தத்துவத்தால் ஆயுதபாணியாக்கப்பட்ட, சுய-விமர்சன முறையைப் பயில்கின்ற, பொது மக்களுடன் தொடர்புடைய, சிறந்த கட்டுப்பாடுடைய ஒரு கட்சி; இத்தகைய ஒரு கட்சியின் தலைமையிலுள்ள ஒரு ராணுவம்; இத்தகைய கட்சியின் தலைமையிலுள்ள புரட்சிகர வர்க்கங்கள், புரட்சிகர குழுக்கள் எல்லாவற்றினதும் ஒரு ஐக்கிய முன்னணி — இந்த மூன்றும் தான் நாம் எதிரியைத் தோற்கடித்த மூன்று பிரதான ஆயுதங்கள்.

''மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் பற்றி'' (30. ஜூன். 1949.) தே. ப. தொ. 4.

நாம் பொதுமக்கள் மீது நம்பிக்கை வைக்க வேண்டும்; கட்சி மீது நம்பிக்கை வைக்க வேண்டும். இவை இரண்டும் ஆதாரக் கோட்பாடுகள். இந்தக் கோட்பாடுகளில் நாம் சந்தேகம் கொண்டால் நம்மால் ஒன்றையுமே சாதிக்க முடியாது.

''விவசாயத்தைக் கூட்டுறவுமயமாக்கும் பிரச்சினை பற்றி'' (31. ஜூலை. 1955.)

மார்க்ஸிஸம்-லெனினிஸத் தத்துவத்தாலும், சித்தாந்தத்தாலும் ஆயுதபாணியாக்கப்பட்ட சீன கம்யூனிஸ்ட் கட்சி சீன மக்களுக்கு ஒரு புதிய வேலைநடையை, அதாவது பிரதானமாக தத்துவத்தை அனுஷ்டானத்தோடு இணைக்கின்ற, பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்புகள் வைக்கின்ற, சுய-விமர்சனத்தைப் பயில்கின்ற வேலைநடையைக் கொண்டு வந்துள்ளது.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

ஒரு மகத்தான புரட்சி இயக்கத்துக்கு வழி காட்டும் எந்த ஒரு அரசியல் கட்சியும் புரட்சிகரத் தத்துவம், வரலாற்று அறிவு, நடைமுறை இயக்கம் பற்றிய ஒரு ஆழ்ந்த விளக்கம் ஆகியவற்றைப் பெற்றிராவிட்டால், அதை வெற்றிக்கு வழி நடத்துவது சாத்தியமாகாது.

''தேசிய யுத்தத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம்'' (அக்டோபர். 1938.) தே. ப. தொ. 2.

நாம் வழக்கமாகக் கூறுவது போல், சீர்செய் இயக்கம் என்பது ''சர்வவியாபகமான ஒரு மார்க்ஸிஸ கல்வி இயக்கம்''. சீர்செய்வது என்றால் கட்சி முழுவதும் விமர்சனம், சுய-விமர்சனம்—இவற்றின் மூலம் மார்க்ஸிஸத்தைக் கற்பது என்று அர்த்தம். இந்தச் சீர்செய் இயக்கத்தின் போக்கில், நாம் மார்க்ஸிஸம் பற்றிக் கூடுதலாகப் படிப்பது நிச்சயம்.

''சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பிரசார வேலை பற்றிய தேசிய மாநாட்டுரை'' (12. மார்ச். 1957.)

பல கோடி சீன மக்களுக்கும் சிறந்த ஒரு வாழ்வை உத்தரவாதம் செய்வதும், பொருளாதாரத்திலும், கலாசாரத்திலும் பின்தங்கிய நமது நாட்டைச் சுபிட்சமும், பலமும், உயர்ந்த கலாசாரத் தரமும் உடைய ஒரு நாடாக மாற்றுவதும் ஒரு கடினமான கடமையாகும். இந்தக் கடமைக்கு மேலும் திறமையாகத் தோள் கொடுத்து, உன்னத லட்சியங்களால் உந்தப்பட்டு, சீர்திருத்தங்களை நிறைவேற்றும் திடசித்தமுடைய, கட்சிக்கு வெளியேயுள்ள எல்லாருடனும் நன்ருய் வேலை செய்யக் கூடியவர்கள் ஆக வேண்டுமானல், நாம் இன்று மாத்திரமல்ல, எதிர்காலத்திலும் சீர்செய் இயக்கங்களை நடத்த வேண்டும்; இடைவிடாது தவறுனவை எல்லாவற்றையும் நம்மிடமிருந்து நீக்க வேண்டும்.

ஷை

கொள்கை என்பது ஒரு புரட்சிகரக் கட்சியின் சகல அனுஷ்டான நடவடிக்

கைகளினதும் தொடக்கப் புள்ளி. அது கட்சி நடவடிக்கைகளின் வளர்ச்சிப் போக்கிலும், இறுதி-விளைவிலும் தன்னைத் தானே வெளிப்படுத்துகின்றது. ஒரு புரட்சிகரக் கட்சி எந்த ஒரு நடவடிக்கையை எடுக்கும் போதும், ஒரு கொள்கையை அமுல் நடத்துகின்றது. அது ஒரு சரியான கொள்கையை அமுல் நடத்தாவிட்டால், அது பிழையான கொள்கையை அமுல் நடத்துகின்றது. அது ஒரு குறிப்பிட்ட கொள்கையை உணர்வுபூர்வமாக நடத்தாவிட்டால் அதைக் கண்மூடித்தனமாக அமுல் நடத்துகின்றது. ஒரு கொள்கையை அமுல் நடத்தும் வளர்ச்சிப் போக்கையும், இறுதி-விளைவையுமே நாம் அனுபவம் என்று கூறுகின்றோம். மக்களின் அனுஷ்டானத்தின் மூலம் தான், அதாவது, அனுபவத்தின் மூலம் தான், நாம் ஒரு கொள்கை சரியானதா, இல்லையா, எந்த அளவுக்கு அது

சரியானது அல்லது பிழையானது என்பதைக் கண்டு கொள்ள முடியும். ஆனல் மக்களின் நடைமுறை, குறிப்பாக ஒரு புரட்சிகரக் கட்சியினதும், புரட்சிகர மக்களினதும் அனுஷ்டானம் என்பது ஒரு கொள்கையுடன் அல்லது இன்னெரு கொள்கையுடன் சம்பந்தப்படாமல் இருக்க முடியாது. ஆகவே, எந்த ஒரு நடவடிக்கையையும் எடுப்பதற்கு முன், குறிப்பிட்ட சூழ்நிலைகளின் பிரகாரம் நாம் வகுத்த கொள்கையைக் கட்சி உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் நாம் விளக்க வேண்டும். இல்லாவிட்டால், கட்சி உறுப்பினர்களும், பொதுமக்களும் நமது கொள்கையின் வழிகாட்டலிலிருந்து விலகி விடுவர்; குருட்டுத்தனமாகச் செயல்பட்டு, ஒரு தவருன கொள்கையை அமுல் நடத்துவர்.

''தொழில், வர்த்தகம் சம்பந்தமான கொள்கை பற்றி'' (27. பெப்ரவரி. 1948.) தே. ப. தொ. 4.

நமது கட்சி சீன புரட்சியின் பொது மார்க்கத்தையும், பொதுக் கொள்கையையும், அதே போல வேலைகளுக்கான பல்வேறு ஸ்தூலமான மார்க்கங்களையும், ஸ்தூலமான கொள்கைகளையும் வகுத்துள்ளது. இருந்தும், பல தோழர்கள் நமது கட்சியின் வேலைகளுக்கான ஸ்தூலமான மார்க்கங்களையும் ஸ்தூலமான கொள்கைகளையும் நினைவில் வைத்திருக்கும் அதே வேளையில், அதன் பொது மார்க்கத்தையும் பொதுக் கொள்கையையும் அடிக்கடி மறந்துவிடுகின்றனர். நாம் கட்சியின் பொது மார்க்கத்தையும், பொதுக் கொள்கையையும் உண்மையில் மறந்தால், குருட்டுத்தனமான, அரைகுறையான, தெளிவில்லாத புரட்சிவாதிகளாகவே இருப்போம்; ஒரு வேலைக்குரிய ஸ்தூலமான மார்க்கத்தையும், ஸ்தூலமான கொள்கையையும் நாம் அமுல் நடத்தும் போது, நமது திசையை இழந்து, ஒருகால் இடப்பக்கமும், மறுகால் வலப்

பக்கமும் ஊசலாடி, நமது வேலையும் பாதிக்கப்படும்.

''ஷன்ஸி-சுய்யுவன் விடுதலைப்பிரதேச ஊழியர்கள் மாநாட்டுரை'' (1. ஏப்ரல். 1948.) தே. ப. தொ. 4.

கொள்கையும் தந்திரோபாயங்களும் நமது கட்சியின் உயிர். எல்லா மட்டங்களிலுள்ள தலைமைத் தோழர்களும் அவற்றில் பூரண கவனம் செலுத்த வேண்டுமேயன்றி, எவ்விதத்திலும் பராமுகமாய் இருக்கக் கூடாது.

''நிலைமை பற்றிய ஒரு சுற்றறிக்கை'' (20. மார்ச். 1948.) தே. ப. தொ. 4.

2. வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும்

வர்க்கங்கள் போரிடுகின்றன; சில வர்க்கங்கள் வெற்றியடைகின்றன; சில வர்க்கங்கள் ஒழிக்கப்படுகின்றன. இத்தகையது தான் வரலாறு, இத்தகையது தான் ஆயிரமாயிரம் ஆண்டுகால நாகரிகத்தின் வரலாறு. இந்தக் கண்ணோட்டத்திலிருந்து வரலாற்றை விளக்குவது சரித்திரவியல்-பொருள்முதல்வாதம்; இந்தக் கண்ணோட்டத்துக்கு எதிராக நிற்பது சரித்திரவியல்-கருத்துமுதல்வாதம்.

''பிரேமைகளை வீசி எறிந்து, போராடத் தயாராகுங்கள்!'' (14. ஆகஸ்ட். 1949.) தே. ப. தொ. 4.

வர்க்க சமுதாயத்தில் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் உறுப்

பினராகவே வாழ்கின்றூர்; ஒவ்வொரு சிந்தனையிலும் விதிவிலக்கின்றி ஒரு வர்க்கத்தின் முத்திரை குத்தப்பட்டிருக்கின்றது.

''நடைமுறை பற்றி'' (ஜுலை. 1937.) தே. ப. தொ. 1.

சமுதாய மாற்றங்கள் பிரதானமாக சமுதாயத்தில் காணும் அக முரண்பாடுகளின் வளர்ச்சியால், அதாவது, உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்குமிடையிலுள்ள முரண்பாடு, வர்க்கங்களுக்கிடையிலுள்ள முரண்பாடு, பழைமைக்கும் புதுமைக்கும் உள்ள முரண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சியால் ஏற்படுகின்றன. இந்த முரண்பாடுகளின் வளர்ச்சிதான் சமுதாயத்தை முன்னேறச் செய்கின்றது; பழைய சமுதாயத்தின் இடத்தில் புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் உந்து சக்தியாக விளங்குகின்றது.

''முரண்பாடு பற்றி'' (ஆகஸ்ட். 1937.) தே. ப. தொ. 1.

நிலப்பிரபு வர்க்கம் விவசாயிகளுக்கு எதிராக நடத்திய ஈவிரக்கமற்ற பொருளாதாரச் சுரண்டலும், அரசியல் ஒடுக்குமுறையும், அதன் ஆட்சிக்கு எதிராக, எண்ணற்ற கிளர்ச்சிகளில் கொந்தளித்தெழும் படி விவசாயிகளை நிர்ப்பந்தித்தன. ...விவசாயிகளின் வர்க்கப் போராட்டங்களும், விவசாயிகளின் கிளர்ச்சிகளும், விவசாயி யுத்தங்களும் தான் சீனுவின் பிரபுத்துவ சமுதாயத்தில் வரலாற்று வளர்ச்சியின் உண்மையான இயக்க சக்தியாக விளங்கின.

''சீன புரட்சியும் சீன கம்யூனிஸ்ட் கட்சியும்'' (டிஸம்பர். 1939.) தே. ப. தொ. 2.

இறுதியில் ஆராய்ந்து பார்த்தால், தேசிய போராட்டம் என்பது வர்க்கப் போராட்டம் தழுவிய ஒரு விஷயம். அமெரிக்காவில் வெள்ளையர் மத்தியிலுள்ள பிற்போக்கு ஆளும் கும்பல்கள் தான் கறுப்பு மக்களை அடக்கி ஒடுக்கு

கின்றனர். வெள்ளை மக்களில் ஏகப்பெரும்பான்மையினராக விளங்கும் தொழிலாளர், விவசாயிகள், புரட்சிகரப் புத்திஜீவிகள், இதர விழிப்புற்ற மக்கள் ஆகியோரை அவர்கள் எவ்விதத்திலும் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது.

''அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இனப்பாகுபாட்டை எதிர்க்கும் ஆபிரிக்க-அமெரிக்க மக்களின் நீதியான போராட்டத்துக்கு ஆதரவாக வெளியிட்ட அறிக்கை'' (8. ஆகஸ்ட். 1963.)

மக்களை அணிதிரட்டுவது எங்களைச் சார்ந்தது. சீன பிற்போக்குவாதிகளைப் பொறுத்தவரையில், மக்களை அணிதிரட்டி, அவர்களைத் தூக்கியெறிவது எங்களைச் சார்ந்தது. பிற்போக்கான ஒவ்வொன்றும் ஒரே தன்மையுடையது. அதை நீ அடியாவிட்டால், அது விழாது. இதுவும் நிலத்தைக் கூட்டுவது போன்றது. வழக்கத்தில், துடைப்பம் எட்டாத இடத்தில் தூசி தானாக மறைந்து விடாது.

''யப்பானிய-எதிர்ப்பு யுத்த வெற்றிக்குப் பிந்திய நிலைமையும் நமது கொள்கையும்'' (13. ஆகஸ்ட். 1945.) தே. ப. தொ. 4.

எதிரி தானாகவே அழிய மாட்டான். சீன பிற்போக்குவாதிகளோ அல்லது சீனாவிலுள்ள அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு சக்திகளோ கூட வரலாற்று அரங்கிலிருந்து சுயமாக இறங்க மாட்டார்கள்.

''புரட்சியை இறுதி வரை நடத்துக'' (30. டிஸம்பர். 1948.) தே. ப. தொ. 4.

புரட்சி என்பது ஒரு மாலை விருந்து அல்ல, அல்லது ஒரு கட்டுரை எழுதுவதல்ல, ஒரு ஓவியந் தீட்டுவதோ அல்லது தையல் வேலை செய்வதோ அல்ல; அது அவ்வளவு பண்பானதாக இருக்காது. அவ்வளவு ஒய்வானதாகவோ மிருதுவானதாகவோ இருக்காது. அவ்வளவு சாந்தமானதாக, இரக்கமுடையதாக, மரியா

தையானதாக இருக்காது. இன்னும் அடக்கமானதாகவோ பெருந்தன்மை வாய்ந்ததாகவோ இருக்காது. புரட்சி என்பது ஒரு கிளர்ச்சி; ஒரு வர்க்கம் இன்னெரு வர்க்கத்தைத் தூக்கி எறியும் ஒரு பலாத்கார நடவடிக்கை.

''ஹுநான் விவசாயி இயக்கப் பரிசீலனை பற்றிய அறிக்கை'' (மார்ச். 1927.) தே. ப. தொ. 1.

சியாங் கை-ஷேக் மக்களிடமிருந்து ஒவ்வொரு அவுன்சு அதிகாரத்தையும், ஒவ்வொரு அவுன்சு நன்மையையும் அபகரிக்க முயல்கிருன். நாம்? அவனுக்குப் பழிக்குப்பழி கொடுப்பது, ஒவ்வொரு அங்குல நிலத்துக்கும் போராடுவது, நமது கொள்கையாகும். அவனுடைய வழிமுறையைப் பின்பற்றி நாம் செயல்படுகின்ருேம். அவன் எப்பொழுதும் இடதுகையில் ஒரு வாளும், வலதுகையில் இன்னென்றும் ஏந்திய வண்ணம், மக்கள் மீது யுத்தத்தைத் திணிக்க முயல்கிருன். அவனுடைய வழியைப் பின்பற்றி நாமும் வாள்களை எடுக்க வேண்டும். . . . இப்பொழுது சியாங் கை-ஷேக் தனது வாள்களைத் தீட்டிக்கொண்டிருப்பதால், நாமும் நமது வாள்களைத் தீட்ட வேண்டும்.

''யப்பானிய-எதிர்ப்பு யுத்த வெற்றிக்குப் பிந்திய நிலைமையும் நமது கொள்கையும்'' (13. ஆகஸ்ட். 1945.) தே. ப. தொ. 4.

நமது எதிரிகள் யார்? நமது நண்பர்கள் யார்? புரட்சியில் இந்தப் பிரச்சினை முதல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. சீனுவின் கடந்த காலப் புரட்சிகள் எல்லாம் சாதித்தவை மிகக் குறைவாக இருப்பதன் அடிப்படைக் காரணம், அவை உண்மையான பகைவர்களைத் தாக்குவதற்கு உண்மையான நண்பர்களை ஐக்கியப்படுத்த தவறியதேயாகும். புரட்சிகரக் கட்சி என்பது பொதுமக்களின் வழிகாட்டி. அது பொதுமக்களை தவருன பாதையில் வழி நடத்திஞல், புரட்சி

என்பது தோல்வியடையாமல் இருக்க முடியாது. மக்களை நாம் தவறான பாதையில் இட்டுச்செல்லாமல், நமது புரட்சியின் நிச்சய வெற்றியை உத்தரவாதம் செய்ய வேண்டுமானால், நாம் உண்மையான விரோதிகளைத் தாக்குவதற்கு, உண்மையான நண்பர்களை ஐக்கியப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். உண்மையான பகைவர்களையும் உண்மையான நண்பர்களையும் வேறுபடுத்திக் கொள்ள, நாம் சீன சமுதாயத்திலுள்ள பல்வேறு வர்க்கங்களின் பொருளாதார அந்தஸ்தையும், புரட்சி பற்றி அவை கொண்டுள்ள மனோபாவங்களையும் பொதுவாக ஆராய்வது அவசியம்.

''சீன சமுதாயத்தில் வர்க்கங்களின் ஆராய்வு'' (மார்ச். 1926.) தே. ப. தொ. 1.

ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேர்ந்தவர்கள் — யுத்தபிரபுக்கள், அதிகார வர்க்கம், தரகு முதலாளித்துவ வர்க்கம், பெரும் நிலப்பிரபு வர்க்கம், இவர்களோடு இணைந்துள்ள பிற்போக்கான புத்திஜீவிகளின் பகுதி—அனைவரும் நமது எதிரிகள் ஆவர். தொழில் துறைப் பாட்டாளி வர்க்கம் என்பது நமது புரட்சியின் தலைமைப் பலம். அரை-பாட்டாளி வர்க்கம், குட்டி பூர்ஜுவா வர்க்கம் முழுவதும் நமது மிக நெருங்கிய நண்பர்கள். ஊசலாடும் மத்தியதர பூர்ஜுவா வர்க்கத்தைப் பொறுத்தவரையில், அதன் வலதுசாரி அணி நமது எதிரியாகவும், இடதுசாரி அணி நமது நண்பர்களாகவும் மாறலாம். ஆனால், அவர்கள் நமது அணிகளில் குழப்பம் விளைவிக்காமல், நாம் அவர்கள் மீது எப்பொழுதும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

ஷை

யார் புரட்சிகர மக்களின் பக்கத்தில் நிற்கிறாரோ, அவர் ஒரு புரட்சிவாதி ஆவர். யார் ஏகாதிபத்தியம், நிலப்பிர

புத்துவம், அதிகார-முதலாளித்துவம் ஆகியவற்றின் பக்கத்தில் நிற்கிருரோ, அவர் ஒரு எதிர்ப்புரட்சிவாதியாவர். யார் சொல்லளவில் மாத்திரம் புரட்சிகர மக்களின் பக்கத்தில் நின்று, ஆனல் செயலளவில் வேருக இருக்கிருரோ, அவர் சொல்லளவில் மாத்திரம் புரட்சிவாதியாவர். யார் சொல்லிலும் செயலிலும் புரட்சிகர மக்களின் பக்கத்தில் நிற்கிருரோ, அவர் தான் பூரண புரட்சிவாதியாவர்.

சீன மக்கள் அரசியல் கலந்தாலோசனை மாநாட்டின் 1வது தேசிய கமிட்டியின் 2வது கூட்டத்தில் ஆற்றிய முடிவுரை (23. ஜூன். 1950.)

எங்களைப் பொறுத்தவரையில், ஒரு தனிநபர், ஒரு அரசியல் கட்சி, ஒரு படை, அல்லது ஒரு பாடசாலை எதிரியால் தாக்கப்படாவிட்டால், அது தீயது. ஏனென்ருல் அது எதிரியின் மட்டத்துக்கு

நாம் தாழ்ந்து விட்டோம் என்று உண்மையில் அர்த்தமாகும் என நான் கருதுகின்றேன். நாம் எதிரியால் தாக்கப்பட்டால் அது சிறந்தது. காரணம், எதிரிக்கும் நமக்கும் இடையில் நாம் ஒரு தெளிவான எல்லைக்கோட்டை வரைந்துள்ளோம் என்பதை அது நிரூபிக்கின்றது. எதிரி நம்மைப் பிசாசு போல தாக்கி, நம்மை முற்றிலும் இருண்டவர்களாக, ஒரு நற்குணமேனும் இல்லாதவராக வரைந்து காட்டினுல், அது இன்னும் சிறந்தது. எதிரிக்கும் நமக்கும் இடையில் நாம் ஒரு தெளிவான எல்லைக்கோட்டை வரைந்திருக்கிருேம் என்பதை மாத்திரமல்ல, நமது வேலையில் பெரும் சாதனைகளை ஈட்டியுள்ளோம் என்பதையும் அது காட்டுகின்றது.

''எதிரியால் தாக்கப்படுவது நல்ல விஷயமன்றித் தீய விஷயமல்ல'' (26. மே. 1939.)

எதிரி எதை எதிர்க்கின்ருனே, அதை

நாம் ஆதரிக்க வேண்டும். எதிரி எதை ஆதரிக்கின்றுனே, அதை நாம் எதிர்க்க வேண்டும்.

''மத்திய செய்தி நிறுவனம், சௌ தாங் பௌ, ஸின் மின் பௌ— இவற்றின் மூன்று நிருபர்களுக்கு அளித்த பேட்டி'' (16. செப்டம்பர். 1939.) தே. ப. தொ. 2.

நமது நிலைப்பாடு பாட்டாளி வர்க்கத்தின், பரந்துபட்ட மக்களின் நிலைப்பாடு. கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், இது கட்சியின் நிலைப்பாட்டில் நிற்பது, கட்சி உணர்வில், கட்சிக் கொள்கையில் நிற்பது என்று அர்த்தமாகும்.

''யென்ஆன் கலை இலக்கிய கருத்தரங்கு உரை'' (மே. 1942.) தே. ப. தொ. 3.

துப்பாக்கி ஏந்திய எதிரிகள் ஒழிக்கப்பட்ட பின், துப்பாக்கி இல்லாத எதிரிகள்

இன்னும் இருப்பர். அவர்கள் நம்முடன் ஜீவமரணப் போராட்டம் நடத்துவது நிச்சயம். இந்த எதிரிகளை நாம் சாமானியமாகக் கருதக் கூடாது. தற்போது இவ்வாறு பிரச்சினையை எழுப்பாமலும் புரிந்து கொள்ளாமலும் விட்டால், நாம் மிகப் பாரதூரமான தவறுகளை இழைத்து விடுவோம்.

''சீன கம்யூனிஸ்ட் கட்சி 7வது மத்திய கமிட்டியின் 2வது பிளீனக் கூட்டத்தின் அறிக்கை'' (5. மார்ச், 1949.) தே. ப. தொ. 4.

ஏகாதிபத்தியவாதிகளும், உள்நாட்டுப் பிற்போக்குவாதிகளும் தமது தோல்வியை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்; அவர்கள் இறுதி வரை போராடுவது நிச்சயம். நாடு முழுவதிலும் சமாதானமும் ஒழுங்கும் நிலைநிறுத்தப்பட்ட பின்னரும், அவர்கள் பல்வேறு வழிகளிலும் சதி வேலைகளில் ஈடுபடுவர்.

தொல்லைகள் விளைப்பர். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் சீனாவில் தமது மீட்சிக்காகப் பாடுபடுவர். இது தவிர்க்க முடியாதது; சந்தேகத்திற்கிட மற்றது. எந்த நிலைமையிலும் நாம் நமது விழிப்புணர்ச்சியைத் தளர்த்தி விடக் கூடாது.

சீன மக்கள் அரசியல் கலந்தாலோசனை மாநாட்டின் 1வது பிளீனக் கூட்டத்து ஆரம்ப உரை (21. செப்டம்பர். 1949.)

சீனாவில் உடைமைமுறையைப் பொறுத்தவரையில், சோஷலிஸமாற்றம் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட போதிலும், முன்னைய புரட்சிக் காலகட்டங்களுக்கு இயல்பான மக்களின் பெருமளவில் நிகழும், கொந்தளிக்கும் வர்க்கப் போராட்டங்கள் அடிப்படையில் முடிவடைந்த போதிலும், தூக்கியெறியப்பட்ட நிலப்பிரபு, தரகு முதலாளித்துவ வர்க்கங்களின் மிச்சசொச்சங்கள் இன்

னும் இருக்கின்றன. பூர்ஜுவா வர்க்கம் இன்னும் இருக்கின்றது. குட்டி பூர்ஜுவா வர்க்கத்தின் புநருருவாக்கம் இப்பொழுது தான் ஆரம்பமாகியுள்ளது. வர்க்கப்போராட்டம் இன்னும் முடிவடையவில்லை. பாட்டாளி வர்க்கத்துக்கும் பூர்ஜுவா வர்க்கத்துக்கும் இடையில் நிகழும் வர்க்கப்போராட்டமும், பல்வேறு அரசியல் சக்திகளுக்கிடையில் நிகழும் வர்க்கப்போராட்டமும், பாட்டாளி வர்க்கத்துக்கும் பூர்ஜுவா வர்க்கத்துக்கும் இடையில் சித்தாந்தத் துறையில் நிகழும் வர்க்கப்போராட்டமும் தொடர்ந்தும் நீடித்தவையாகவும், வளைவுசுளிவானவையாகவும் இருக்கும். சில சமயங்களில் மிகக் கூர்மையானவையாகக் கூட மாறும். பாட்டாளி வர்க்கம் அதன் சொந்த உலகநோக்கின் பிரகாரம் உலகை மாற்ற விரும்புகின்றது. பூர்ஜுவா வர்க்கமும் அதன் சொந்த உலகநோக்கின் பிரகாரம் உலகை மாற்ற விரும்புகின்றது. இந்த அர்த்தத்தில், சோஷலிஸமா, முதலாளித்

துவமா ‘எது வெல்லும்’ என்ற பிரச்சினை உண்மையில் இன்னும் தீர்க்கப்படவில்லை.

''மக்கள் மத்தியில் முரண்பாடு களைச் சரியாகக் கையாள்வது பற்றி'' (27. பெப்ரவரி. 1957.)

நமது நாட்டில் சோஷலிஸத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையில் நிகழும் சித்தாந்தப் போராட்டத்தில் ‘எது வெல்லும்’ என்ற பிரச்சினையைத் தீர்மானிக்க ஒரு கணிசமான அளவு நீண்டகாலம் பிடிக்கும். காரணம், பூர்ஜுவா வர்க்கத்தினதும், பழைய சமுதாயத்திலிருந்து வந்த புத்திஜீவிகளினதும் செல்வாக்கு நமது நாட்டில் ஒரு நீண்டகாலம் நிலைத்திருக்கும். அது போலவே வர்க்க சித்தாந்தமும் நீடித்திருக்கும். இதைப் போதிய அளவு புரிந்து கொள்ளாவிட்டால் அல்லது பூரணமாகப் புரிந்து கொள்ளாவிட்டால், மிகப் பாரதூரமான தவறுகள் இழைக்கப்படும், சித்தாந்தத் துறையில் போராட்டம் நடத்த வேண்டிய

தேவையும் உதாசீனம் செய்யப்படும்.

ஷை

நமது நாட்டில் பூர்ஜுவா வர்க்க, குட்டி பூர்ஜுவா வர்க்க சித்தாந்தமும், மார்க்ஸிஸ-எதிர்ப்பு சித்தாந்தமும் இன்னும் நீண்டகாலம் நிலைத்திருக்கும். நமது நாட்டில் சோஷலிஸ அமைப்பு அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டு விட்டது. உற்பத்திசாதனங்களின் உடைமைமுறை மாற்றத்திலும் நாம் அடிப்படை வெற்றி ஈட்டியுள்ளோம். ஆனால், அரசியல், சித்தாந்த முன்னணிகளில் நாம் இன்னும் பூரண வெற்றி பெறவில்லை. சித்தாந்தத் துறையில், பாட்டாளி வர்க்கத்துக்கும் பூர்ஜுவா வர்க்கத்துக்கும் இடையில் நடைபெறும் போராட்டத்தில் ‘எது வெல்லும்’ என்ற பிரச்சினை உண்மையில் இன்னும் தீர்க்கப்படவில்லை. பூர்ஜுவா வர்க்க, குட்டி பூர்ஜுவா வர்க்க சித்தாந்தத்துக்கு எதிராக நாம் இன்னும்

ஒரு நீடித்த போராட்டத்தை நடத்த வேண்டியிருக்கின்றது. இதைப் புரிந்து கொள்ளாமல், சித்தாந்தப் போராட்டத்தைக் கைவிடுவது தவறு. தவருன கருத்துகள் எல்லாம், நச்சுக்களைகள் எல்லாம், பூதங்கள் பிசாசுகள் எல்லாம் விமர்சனத்துக்குள்ளாக்கப்பட வேண்டும். அவை தம்மிஷ்டப்படி தலைவிரித்தாடுவதை அனுமதிக்கக் கூடாது. இருந்தும், விமர்சனம் என்பது நியாயம் நிறைந்ததாக, ஆராய்ந்து விளக்குவதாக, நம்பிக்கை ஊட்டுவதாக இருக்க வேண்டும்; கரடு முரடானதாக, அதிகாரத்துவமுடையதாக, நிலையியலானதாக, அல்லது வரட்டுவாதமாக இருக்கக் கூடாது.

''சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பிரசார வேலை பற்றிய தேசிய மாநாட்டுரை'' (12. மார்ச். 1957.)

வரட்டுவாதம், திரிபுவாதம் இரண்டும் மார்க்ஸிஸத்துக்கு விரோதமானவை.

மார்க்ஸிஸம் நிச்சயம் முன்னேறி வளரும். அனுஷ்டானத்தின் வளர்ச்சியுடன் அதுவும் நிச்சயம் வளரும். அது முன்னேருமல் தேங்கி நிற்க முடியாது. அது ஸ்தம்பித்து, மாருத நிலையில் நின்ருல், அது உயிரற்றதாகி விடும். இருந்தும், மார்க்ஸிஸத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை அத்து மீறக் கூடாது. அத்து மீறினல், தவறுகள் இழைக்கப்படும். ஒரு நிலையியல் கண்ணேட்டத்திலிருந்து மார்க்ஸிஸத்தை அணுகுவதும், அதை ஏதும் விறைப்பான ஒன்ருகக் கருதுவதும் வரட்டுவாதம் ஆகும். மார்க்ஸிஸத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை நிராகரித்தால், அதன் சர்வவியாபக உண்மையை நிராகரித்தால், அது திரிபுவாதம் ஆகும். திரிபுவாதம் என்பது பூர்ஜுவா வர்க்க சித்தாந்தத்தின் ஒரு வடிவம். சோஷலிஸத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையிலுள்ள வேற்றுமைகளை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கும் பூர்ஜுவா வர்க்க சர்வாதிகாரத்துக்கும்

இடையிலுள்ள வேற்றுமைகளை, திரிபுவாதிகள் மறுக்கின்றனர். அவர்கள் வக்காலத்து வாங்குவது உண்மையில் முதலாளித்துவ மார்க்கமன்றி, சோஷலிஸ மார்க்கமல்ல. இன்றைய நிலைமைகளில் திரிபுவாதம் என்பது வரட்டுவாதத்திலும் பார்க்க ஆபத்தானது. இன்று சித்தாந்தத் துறையில் நமது முக்கியமான கடமைகளில் ஒன்று திரிபுவாதத்துக்கு எதிரான விமர்சனத்தை மலரச் செய்வதாகும்.

ஷி

திரிபுவாதம் அல்லது வலதுசாரி சந்தர்ப்பவாதம் என்பது ஒரு பூர்ஜுவா வர்க்க சித்தாந்த ஓட்டமே. இது வரட்டுவாதத்திலும் பார்க்க மேலும் அபாயமானது. திரிபுவாதிகள், வலதுசாரி சந்தர்ப்பவாதிகள், மார்க்ஸிஸத்துக்குச் சொண்டளவில் சேவை செய்கின்றனர்.

அவர்கள் கூட ''வரட்டுவாதத்தை'' தாக்குகின்றனர். ஆனால் அவர்கள் உண்மையில் தாக்குவது மார்க்ஸிஸத்தின் மிக அடிப்படை அம்சங்களையே ஆகும். அவர்கள் பொருள்முதல்வாதத்தையும் இயங்கியலையும் எதிர்க்கின்றனர் அல்லது திரித்துப் புரட்டுகின்றனர்; மக்கள் ஜன நாயக சர்வாதிகாரத்தையும், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பாத்திரத்தையும் எதிர்க்கின்றனர் அல்லது பலவீனப்படுத்த முயல்கின்றனர்; சோஷலிஸ மாற்றத்தையும் சோஷலிஸ நிர்மாணத்தையும் எதிர்க்கின்றனர் அல்லது பலவீனப் படுத்த முயல்கின்றனர். நமது நாட்டில் சோஷலிஸப் புரட்சியின் அடிப்படை வெற்றிக்குப் பின்னும், முதலாளித்துவ அமைப்பை மீட்கும் நப்பாசையுள்ள, சித்தாந்தத் துறை உட்பட, எல்லா துறைகளிலும் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராக போராட்டம் நடத்துகின்ற ஒரு பகுதியினர் இன்னும் இருக்கவே செய்வர். இந்தப் போராட்டத்

தில் அவர்களுடைய வலது கையாக விளங்குவோர் திரிபுவாதிகளே ஆவர்.

''மக்கள் மத்தியில் முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது பற்றி'' (27. பெப்ரவரி. 1957.)

3. சோஷலிஸமும் கம்யூனிஸமும்

கம்யூனிஸம் என்பது பாட்டாளி வர்க்கத்தின் ஒரு பூரணமான சித்தாந்த அமைப்பாக விளங்கும் அதே வேளையில், ஒரு புதிய சமுதாய அமைப்பாகவும் விளங்குகின்றது. இது இதர சித்தாந்த, சமுதாய அமைப்புகள் எல்லாவற்றிலும் பார்க்க வேறுபட்டது. மனித குல வரலாற்றில் மிகப் பூரணமான, மிக முற்போக்கான, மிகப் புரட்சிகரமான, மிகத் தர்க்கரீதியான அமைப்பாகவும் இது திகழ்கிறது. பிரபுத்துவத்தின் சித்தாந்த, சமுதாய அமைப்புக்கு இன்று வரலாற்று நூதனசாலையில் மாத்திரம் ஒரு இடம் உண்டு. முதலாளித்துவத்தின்

சித்தாந்த, சமுதாய அமைப்பும் உலகின் ஒரு பாகத்தில் (சோவியத் யூனியனில்) நூதனசாலைப் பொருளாகிவிட்டது. இதர பாகங்களில் அது ''மேற்கு மலைக் களுக்கு அப்பால் அஸ்தமிக்கும் சூரிய னைப் போல, விரைவாக மூழ்கி இறக் கின்ற ஒரு மனிதனைப் போல'' காட்சி யளிக்கின்றது. அதுவும் விரைவில் நூதன சாலைக்கு அனுப்பி வைக்கப்படும். கம் யூனிஸ சித்தாந்த, சமுதாய அமைப்பு ஒன்று தான் மண்சரிவின் வேகத்தோடும், இடியேற்றின் ஆற்றலோடும் உலகம் முழு வதிலும் பரவுவதாக, இளமையும் ஜீவ சக்தியும் நிரம்பியதாக விளங்குகின்றது.

''புதிய ஜனநாயகம் பற்றி'' (ஜன வரி. 1940.) தே. ப. தொ. 2.

சோஷலிஸ அமைப்பு இறுதியில் முத லாளித்துவ அமைப்பைப் பதிலியாக்கும். இது மனித சித்தத்துக்கு அப்பாற்பட்ட ஒரு புறநிலை விதி. பிற்போக்குவாதிகள் வரலாற்றுச் சக்கரத்தைத் தடுத்து நிறுத்த

எவ்வளவு தான் முயன்றாலும், இன்றோ நாளையோ புரட்சி தோன்றுவது நிச்சயம்; அது வாகை சூடுவதும் தவிர்க்க முடியா தது.

''மகத்தான அக்டோபர் சோஷ லிஸப் புரட்சியின் 40வது ஆண்டு நிறைவு விழாவின் போது சோவி யத் யூனியன் உயர்தர சோவியத் கூட்டத்தில் ஆற்றிய உரை'' (6. நவம்பர். 1957.)

கம்யூனிஸ்டுகளாகிய நாம் நமது அர சியல் கருத்துகளை ஒருபோதும் மறைப் பதில்லை. நமது எதிர்கால அல்லது கூடிய பட்ச வேலைத்திட்டம் சீனாவைச் சோஷலிஸத்துக்கும் கம்யூனிஸத்துக்கும் முன்தள்ளி விடுவதே. இது தெளிவா னது, சந்தேகத்திற் கிடமற்றது. நமது கட்சியின் பெயர், நமது மார்க்ஸிஸ உலகநோக்கு இரண்டும் இந்த ஈடிணை யற்ற பிரகாசமும் சோதியும் உடைய உன்னதமான எதிர்கால லட்சியத்தைத்

தெட்டத் தெளிவாகச் சுட்டிக் காட்டு கின்றன.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

முழுப்படியாக நோக்கினுல், சீன கம் யூனிஸ்ட் கட்சி தலைமை தாங்கும் சீனு வின் புரட்சி இயக்கம் இரண்டு கட்டங் களை, அதாவது, ஜனநாயக, சோஷலி ஸப் புரட்சிகளை உள்ளடக்கியது. இவை இரண்டும் சாராம்சத்தில் வேறுபட்ட இரண்டு புரட்சிகர போக்குகள். முன் னது பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் தான் பின்னது நிறைவேற்றப்பட முடியும். ஜனநாயகப் புரட்சி என்பது சோஷலிஸப் புரட்சிக்குத் தேவையான ஒரு தயா ரிப்பு. சோஷலிஸப் புரட்சி ஜனநாயகப் புரட்சியின் தவிர்க்க முடியாத ஒரு நீடிப்பு. கம்யூனிஸ்டுகள் அனைவரும் பாடுபடும் இறுதி இலட்சியம் ஒரு சோஷலிஸ, கம்

யூனிஸ சமுதாயத்தை ஸ்தாபிப்பதே ஆகும்.

''சீன புரட்சியும் சீன கம்யூனிஸ்ட் கட்சியும்'' (டிஸம்பர். 1939.) தே. ப. தொ. 2.

சோஷலிஸப் புரட்சியின் நோக்கம் உற்பத்தி சக்திகளை விடுதலை செய்வது. விவசாயத்திலும் கைத்தொழிலிலும் தனி உடைமைமுறையிலிருந்து சோஷலிஸ, கூட்டுஉடைமைமுறைக்கு மாறுவது, தனி யார் தொழில் துறையிலும் வர்த்தகத்தி லும் முதலாளித்துவ உடைமைமுறை யிலிருந்து சோஷலிஸ உடைமைமுறைக்கு மாறுவது இரண்டும் உற்பத்தி சக்திகளைப் பெருமளவில் விடுதலை செய்வது திண் ணம். இவ்வாறு தொழில், விவசாய உற்பத்தியின் பிரமாண்டமான வளர்ச் சிக்கு சமுதாய சூழ்நிலைகள் சிருஷ்டிக்கப் படுகின்றன.

உயர்தர அரசாங்க மாநாட்டில் ஆற்றிய உரை (25. ஜனவரி. 1956.)

நாம் இப்பொழுது சமுதாய அமைப்பில் தனிஉடைமைமுறையிலிருந்து பொதுஉடைமைமுறைக்கு மாறிச் செல்லும் புரட்சியை மாத்திரமல்ல, தொழில் நுட்பத்துறையில் கைத்தொழில் உற்பத்தியிலிருந்து பெருமளவு நவீன யந்திர உற்பத்திக்கு மாறிச் செல்லும் புரட்சியையும் நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்த இரண்டு புரட்சிகளும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. விவசாயத்தைப் பொறுத்தவரையில், நமது நாட்டின் நிலைமைகளில் (முதலாளித்துவ நாடுகளில் விவசாயம் முதலாளித்துவ முறையில் வளர்கின்றது) பெரும் யந்திரங்களின் உபயோகத்துக்கு முன், கூட்டுறவு முறை ஸ்தாபிக்கப்பட வேண்டும். எனவே, தொழில் துறையையும் விவசாயத்தையும், சோஷலிஸ தொழில்மயமாக்கத்தையும் விவசாயத்தின் சோஷலிஸ மாற்றத்தையும் இரண்டு வேறுபட்ட, தனித்தனி விஷயங்களாகக் கருதக் கூடாது. ஒன்றைப் பலவீனமாக்கும் அளவிற்கு மற்றதை வலியுறுத்தக் கூடாது.

''விவசாயத்தைக் கூட்டுறவுமயமாக்கும் பிரச்சினை பற்றி'' (31. ஜூலை. 1955.)

புதிய சமுதாய அமைப்பு மிக அண்மையில் தான் ஸ்தாபிக்கப்பட்டது. அது ஸ்திரப்படுவதற்கு இன்னும் காலம் தேவை. ஒரு புதிய சமுதாய அமைப்பு ஸ்தாபிக்கப்பட்ட அதே கணத்தில் பூரணமாக ஸ்திரப்படுத்தப்பட முடியும் என்று ஒருபோதும் எண்ணிவிடக் கூடாது. ஏனென்றால், அது அசாத்தியம். அது படிப்படியாகத் தான் ஸ்திரப்படுத்தப்பட வேண்டும். இறுதியில் அதை ஸ்திரப்படுத்த வேண்டுமானால், நாட்டின் சோஷலிஸத் தொழில்மயமாக்கத்தை நிறைவேற்ற வேண்டும்; பொருளாதாரத்துறையில் சோஷலிஸப் புரட்சியை உறுதியாக நடத்த வேண்டும். இன்னும் அரசியல், சித்தாந்த முன்னணிகளில் இடைவிடாது கடினமான

சோஷலிஸப் புரட்சி போராட்டங்களை யும், சோஷலிஸக் கல்வியையும் நடத்த வேண்டும். இவை தவிர, பல்வேறு சர்வதேசிய சூழ்நிலைகளும் இதற்கு இசை வாக இருக்க வேண்டும்.

''சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பிர சார வேலை பற்றிய தேசிய மாநாட் டுரை'' (12. மார்ச். 1957.)

சீனவில் சோஷலிஸ அமைப்பை ஸ்திரப் படுத்தும் போராட்டம், சோஷலிஸமா, முதலாளித்துவமா 'எது வெல்லும்' என்பதைத் தீர்மானிக்கும் போராட்டம், இன்னும் ஒரு நீண்ட வரலாற்றுக் கால கட்டம் வரை நடந்து கொண்டே இருக் கும். ஆனல் புதிய சோஷலிஸ அமைப்பு முறை ஸ்திரப்படுத்தப்படுவது நிச்சயம் என்பதை நாம் எல்லாரும் உணர்ந்து கொள்ள வேண்டும். நவீன தொழில் துறை, நவீன விவசாயம், நவீன விஞ்ஞா னம், கலாசாரம் ஆகியவை உடைய ஒரு சோஷலிஸ நாட்டை நாம் நிச்சயம் கட்டி அமைப்போம்.

ஷை

நமது நாட்டின் மீது பகைமை பாராட் டும் புத்திஜீவிகளின் தொகை மிகச் சிறியது. அவர்கள் நமது பாட்டாளி வர்க்க சர்வாதிகார நாட்டை விரும்பா மல், பழைய சமுதாயத்துக்காக ஏங்கித் துடிக்கின்றனர். சந்தர்ப்பம் வாய்க் கும் போதெல்லாம் அவர்கள் தொல் லைகளைத் தூண்டி, கம்யூனிஸ்ட் கட்சியை தூக்கியெறிந்து, பழைய சீனவை மீட்க எத்தனிக்கின்றனர். பாட்டாளி வர்க்க, பூர்ஜுவா வர்க்க மார்க்கங்களுக்கிடை யில், சோஷலிஸ, முதலாளித்துவ பாதை களுக்கிடையில் அவர்கள் பின்னையதி லேயே பிடிவாதமாக நிற்கின்றனர். உண் மையில் இந்தப் பாதை சாத்தியமான தல்ல. எனவே அவர்கள் ஏகாதிபத்தி யம், நிலப்பிரபுத்துவம், அதிகார முதலா ளித்துவம் ஆகியவற்றிடம் சரணடைய தயாராய் இருக்கின்றனர். அரசியல் வட்டாரங்கள், தொழில், வர்த்தகத் துறைகள், கலாசார, கல்வித்துறைகள், விஞ்ஞான, தொழில் நுட்பத்துறைகள்,

மத வட்டாரங்கள் எல்லாவற்றிலும் இத்தகைய நபர்கள் காணப்படுகின்றனர். அவர்கள் கடைகோடி பிற்போக்குவாதி களாவர்.

ஷி

பாரதூரமான பிரச்சினை விவசாயிக ளுக்குப் போதனையளிப்பதாகும். விவ சாயிகளின் பொருளாதாரம் எங்கும் சித றுண்டு கிடக்கின்றது. சோவியத் யூனி யனின் அனுபவத்திலிருந்து பார்த்தால், விவசாயத்தைச் சமுதாயமயமாக்குவ தற்கு ஒரு நீண்டகாலமும், ஜாக்கிர தையான உழைப்பும் தேவை. விவசா யத்தைச் சமுதாயமயமாக்கா விட்டால், பூரணமான, ஸ்திரப்படுத்தப்பட்ட சோஷலிஸம் என்பது இருக்க முடியாது.

''மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் பற்றி'' (30. ஜுன். 1949.) தே. ப. தொ. 4.

முதலாவதாக, பரந்துபட்ட விவசாயி கள் கட்சியின் தலைமையில் படிப்படியாக

சோஷலிஸப் பாதையில் முன்னேற விரும் புகின்றனர்; இரண்டாவதாக, கட்சி சோஷலிஸப் பாதையில் முன்னேற விவ சாயிகளுக்குத் தலைமை தாங்கக் கூடியது என்பதை நாம் நம்ப வேண்டும். இந்த இரண்டு அம்சங்களும் விஷயத்தின் சாராம்சமும், பிரதான ஓட்டமும் ஆகும்.

''விவசாயத்தைக் கூட்டுறவுமய மாக்கும் பிரச்சினை பற்றி'' (31. ஜுலை. 1955.)

கூட்டுறவுகளின் தலைமை உறுப்புகள் பழைய கீழ் மத்திய விவசாயிகளையும், புதிய, பழைய மேல் மத்திய விவசாயி களின் இருசாராரையும் உதவிப் பல மாகக் கொண்டு, வறிய விவசாயிகளின தும், புதிய கீழ் மத்திய விவசாயிகளின தும் ஆதிக்கத்தை இவற்றில் ஸ்தாபிக்க வேண்டும். இவ்வாறு தான் கட்சிக் கொள்கையின் பிரகாரம் வறிய விவசா யிகளையும், மத்தியதர விவசாயிகளையும் ஐக்கியப்படுத்த முடியும்; கூட்டுறவுகளை

ஸ்திரப்படுத்த முடியும்; உற்பத்தியைப் பெருக்க முடியும்; நாட்டுப்புறம் முழு வதிலும் சோஷலிஸ மாற்றத்தைச் சரி யாக நிறைவேற்ற முடியும். இல்லா விட்டால், மத்தியதர விவசாயிகளையும், வறிய விவசாயிகளையும் ஐக்கியப்படுத்த முடியாது; கூட்டுறவுகளை ஸ்திரப்படுத்த முடியாது; உற்பத்தியைப் பெருக்க முடியாது; நாட்டுப்புறம் முழுவதிலும் சோஷலிஸ மாற்றத்தை நிறைவேற்ற முடியாது.

''சாங்ஷா மாவட்டத்திலுள்ள கௌஷன் கிராமத்தின் வூதாங் கூட்டுறவின் கட்டுப்பாடு மத்திய தர விவசாயிகளிடமிருந்து வறிய விவசாயிகளின் கைகளுக்கு மாறி யது எப்படி?'' என்ற கட்டுரையின் அறிமுகக் குறிப்பு (1955.)

மத்தியதர விவசாயிகளுடன் ஐக்கியப் படுவது அவசியம். அப்படிச் செய்யா விட்டால் அது தவறு. ஆனால், மத்தி

யதர விவசாயிகளை ஐக்கியப்படுத்தி, நாட்டுப்புறம் முழுவதிலும் சோஷலிஸ மாற்றத்தை நிறைவேற்ற வேண்டுமா னால், நாட்டுப்புறத்தில் தொழிலாளர் வர்க்கமும் கம்யூனிஸ்ட் கட்சியும் யாரைச் சார்ந்திருக்க வேண்டும்? வறிய விவசாயிகளையன்றி வேறு யாரையும் அல்ல என்பது நிச்சயம். முன்பு நிலப் பிரபுக்களுக்கு எதிராகப் போராடிய போதும், நிலச்சீர்திருத்தம் அமுல்நடத் தப்பட்ட காலத்திலும் அப்படியே செய் யப்பட்டது. இன்று விவசாயத்தில் சோஷலிஸ மாற்றத்தை நிறைவேற்ற, பணக்கார விவசாயிகளுக்கும், இதர முத லாளித்துவ அம்சங்களுக்கும் எதிராகப் போராட்டம் நடத்தும் போதும் அப்ப டியே செய்ய வேண்டும். இந்த இரண்டு புரட்சிக் காலகட்டங்களிலும் மத்தியதர விவசாயிகள் ஆரம்பத்தில் ஊசலாடி னர்கள். நிகழ்ச்சிகளின் பொது வளர்ச்சிப் போக்கையும், புரட்சியின் வெற்றி கிட்டி வருவதையும் தாம் தெளிவாகக்

காணும் போது தான், மத்தியதர விவசாயிகள் புரட்சியின் பக்கத்தைச் சார்ந்து கொள்வர். புரட்சி என்பது தினம் தினம் விசாலமாக வளர்ந்து, இறுதியில் வெற்றி பெற வேண்டுமானுல், வறிய விவசாயிகள் மத்தியதர விவசாயிகள் மத்தியில் வேலே செய்து, அவர்களேத் தம்பக்கம் வென்றெடுக்க வேண்டும்.

''பூஆன் மாவட்டத்தில் 'மத்தியதர விவசாயிகள் கூட்டுறவு'ம் 'வறிய விவசாயிகள் கூட்டுறவு'ம் தந்த பாடங்கள்'' என்ற கட்டுரையின் அறிமுகக் குறிப்பு (1955.)

நல்வாழ்க்கை-நிலேயுடைய விவசாயிகள் மத்தியில் முதலாளித்துவத்தை நோக்கிச் செல்லும் சுபாவம் பாரதூரமாகக் காணப்படுகின்றது. கூட்டுறவு இயக்கத்தின் போதும், அதன் பின்னர் மிக நீண்டகாலமும் நாம் விவசாயிகள் மத்தியில் செய்ய வேண்டிய அரசியல் வேலேயைச் சிறிதளவேனும் அலட்சியம்

செய்தால், இந்த முதலாளித்துவ சுபாவம் தலேவிரித்தாடத் தொடங்கி விடும்.

''முதலாளித்துவ சுபாவத்துக்கு எதிராக ஒரு உறுதியான போராட்டம் நடத்தப்பட வேண்டும்'' என்ற கட்டுரையின் அறிமுகக் குறிப்பு (1955.)

விவசாயத்தைக் கூட்டுறவுமயமாக்கும் இயக்கம் என்பது அதி ஆரம்பத்திலிருந்தே ஒரு கடினமான சித்தாந்த, அரசியல் போராட்டமாக இருந்து வருகின்றது. இத்தகைய போராட்டத்துக்கூடாகச் செல்லாமல் ஒரு கூட்டுறவையேனும் ஸ்தாபிக்க முடியாது. ஒரு புத்தம் புதிய சமுதாய அமைப்பை ஒரு பழைய அமைப்பின் இடத்தில் கட்டி எழுப்ப வேண்டுமானுல், அந்தத் தளம் முதலில் துப்புரவாக்கப்பட வேண்டும். பழைய அமைப்பைப் பிரதிபலிக்கும் பழைய சித்தாந்தங்களின் மிச்சசொச்சங்கள் மக்களின் மனதில் பொதுவாக நீண்டகாலம் நிலேத்திருக்கும். அவை எளி

தில் மறைந்து விட மாட்டா. கூட்டுறவு ஒன்றை ஸ்தாபித்து, ஸ்திரப்படுத்துவதற்கு முன், அது மேலும் பல போராட்டங்களுக்கூடாகச் சென்றே ஆக வேண்டும். ஸ்திரப்படுத்தப்பட்ட பின்னர் கூட, அதன் முயற்சிகளைத் தளர்த்திய அதே கணத்தில் அது தகர்ந்து நொறுங்கலாம்.

''ஒரு பாரதூரமான பாடம்''
என்ற கட்டுரையின் அறிமுகக்
குறிப்பு (1955.)

சமீப ஆண்டுகளில், புதிய பணக்கார விவசாயிகள் எங்கும் தோன்றியுள்ளனர். நல்வாழ்க்கை-நிலையுடைய மத்தியதர விவசாயிகள் பலர் தம்மைப் பணக்கார விவசாயிகளாய் மாற்றுவதற்குப் பாடுபடுகின்றனர். இவற்றுடன் நாட்டுப்புறத்தில் முதலாளித்துவத்தின் இயல்பான சக்திகள் தினம் தினம் வளர்ந்து வருகின்றன. மறுபுறம், வறிய விவசாயிகள்

பலர் போதிய உற்பத்திசாதனங்கள் இல்லாமல் இன்னும் வறுமையில் வாடுகின்றனர்; சிலர் கடன்களில் வாழ்கின்றனர்; வேறு சிலர் தமது நிலத்தை விற்று, அல்லது வாடகைக்கு விட்டு சீவிக்கின்றனர். இந்தப் போக்கைக் கட்டுப்படுத்தாவிட்டால், நாட்டுப்புறத்தில் துருவச் சேர்க்கை நாளடைவில் கடுமையாவது நிச்சயம். நிலங்களை இழந்த விவசாயிகளும், வறுமையில் வாழும் விவசாயிகளும், தம்மை அழியாமல் காக்கவோ அல்லது தமது கஷ்டங்களைச் சமாளிக்கத் தமக்கு உதவி செய்யவோ நாம் ஒன்றும் செய்யவில்லை என்று முறையீடு செய்வர். முதலாளித்துவத் திசையில் செல்லும் நல்வாழ்க்கை-நிலையுடைய மத்தியதர விவசாயிகள் கூட நம் மீது திருப்தியடைய மாட்டார்கள். ஏனென்றால், நாம் முதலாளித்துவப் பாதையில் செல்ல எண்ணாத வரையில், அவர்களுடைய கோரிக்கையை நம்மால் பூர்த்தி செய்ய முடியாது. இத்தகைய நிலைமைகளில்,

தொழிலாளர்-விவசாயிகள் நேச அணி தொடர்ந்து ஸ்திரமாக இருக்க முடியுமா? முடியாது என்பது தெளிவு. இந்தப் பிரச்சினை புதிய அடிப்படையில் தான் தீர்க்கப்பட முடியும். இதன் அர்த்தம் யாதெனில், படிப்படியாகச் சோஷலிஸத் தொழில்மயமாக்கத்தையும், கைத்தொழில்கள், முதலாளித்துவ தொழில் துறை, வர்த்தகம் ஆகியவற்றில் சோஷலிஸ மாற்றத்தையும் கொண்டுவரும் அதே வேளையில், விவசாயம் முழுவதிலும் சோஷலிஸ மாற்றத்தையும் படிப்படியாகக் கொண்டுவர வேண்டும்; அதாவது, கிராமிய மக்கள் அனைவரும் கூட்டாக மேலும் சிறந்த வாழ்வு பெறுவதற்காக, கூட்டுறவுமுறையை அமுல் நடத்தி, நாட்டுப்புறத்தில் பணக்கார-விவசாயிகளின் பொருளாதாரத்தையும் தனியார் பொருளாதாரத்தையும் ஒழித்துக் கட்ட வேண்டும். இந்த வழியில் தான் தொழிலாளர்-விவசாயிகள் நேச அணியை

ஸ்திரப்படுத்த முடியும் என்று நாம் கருதுகின்றோம்.

''விவசாயத்தைக் கூட்டுறவுமயமாக்கும் பிரச்சினை பற்றி'' (31. ஜூலை. 1955.)

ஒட்டுமொத்தத் திட்டமிடுதல், சர்வாம்ச பரிசீலனை என்றால், நமது நாட்டின் 60 கோடி மக்களின் நலன்களையும் கணக்கில் எடுக்கும் ஒன்று என்று நாம் கருதுகின்றோம். திட்டங்கள் வகுத்தல், விவகாரங்களைக் கையாளுதல், பிரச்சினைகள் பற்றி சிந்தித்தல் ஆகியவற்றில் எதைச் செய்யும் போதும், சீனா 60 கோடி ஜனத்தொகை உடையது என்ற உண்மையை மனதில் கொண்டு தொடங்க வேண்டும். இந்த உண்மையை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது.

''மக்கள் மத்தியில் முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது பற்றி'' (27. பெப்ரவரி. 1957.)

கட்சியின் தலைமை தவிர, தீர்க்கமான இன்னொரு அம்சம் யாதெனில் நமது 60 கோடி ஜனத்தொகை ஆகும். கூடுதலான மக்கள் என்றால், கூடுதலான கருத்துகள், கூடுதலான உற்சாகம், கூடுதலான ஆற்றல் என்று அர்த்தம். பரந்துபட்ட பொதுமக்கள் இன்று போல் என்றும் இவ்வளவு உற்சாகமுடையவர்களாக, இவ்வளவு எழுச்சியுடையவர்களாக, இவ்வளவு துணிவுடையவர்களாக இருந்ததில்லை.

''ஒரு கூட்டுறவு பற்றி அறிமுகம் செய்வது'' (15. ஏப்ரல். 1958.)

இதர குணாதிசயங்களை விட சீனாவின் 60 கோடி மக்களின் விசேஷ குணாம்சம் என்னவென்றால், அவர்கள் ''வறுமையும் வெறுமையும்'' உடையவர்கள். இது ஒரு தீய விஷயம் போலத் தோன்றலாம். ஆனால் யதார்த்தத்தில் இது நல்லது. வறுமை என்பது மாற்றத்துக்கான

ஆசையை, செயலுக்கான ஆசையை, புரட்சிக்கான ஆசையை தூண்டுகின்றது. அழுக்குப் படியாத ஒரு வெள்ளைக் கடதாசியில் மிகப் புதிய, மிக அழகான எழுத்துகளை வரைய முடியும். மிகப் புதிய, மிக அழகான சித்திரங்களைத் தீட்ட முடியும்.

ஷை

சீன புரட்சி தேசியரீதியாக வெற்றி பெற்று, நிலப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்ட பின், சீனாவில் இரண்டு அடிப்படை முரண்பாடுகள் இன்னும் இருக்கவே செய்யும். முதலாவது அக முரண்பாடு, அதாவது, தொழிலாளர் வர்க்கத்துக்கும் பூர்ஜுவா வர்க்கத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடு. இரண்டாவது புற முரண்பாடு, அதாவது, சீனாவுக்கும் ஏகாதிபத்திய நாடுகளுக்கும் இடையிலுள்ள முரண்பாடு. இதன் காரணமாக, தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையிலுள்ள மக்கள் குடியரசின் அரசாங்க அதிகாரம், மக்கள் ஜனநாயகப்

புரட்சியின் வெற்றிக்குப் பின், பலப்ப டுத்தப்பட வேண்டுமே அன்றி, பலவீ னப்படுத்தப்படக் கூடாது.

''சீன கம்யூனிஸ்ட் கட்சி 7வது மத்திய கமிட்டியின் 2வது பிளீனக் கூட்டத்தின் அறிக்கை'' (5. மார்ச். 1949.) தே. ப. தொ. 4.

''நீங்கள் அரசாங்க அதிகாரத்தை இல்லாமற் செய்ய விரும்பவில்லையா?'' ஆம், விரும்புகின்றோம். ஆனால் இப்பொ ழுது அல்ல; இப்பொழுது நாம் அப்படிச் செய்ய முடியாது. ஏன்? காரணம், ஏகாதிபத்தியம் இன்னும் இருக்கின்றது; உள்நாட்டுப் பிற்போக்குவாதிகள் இன் னும் இருக்கின்றனர்; உள்நாட்டில் வர்க் கங்கள் இன்னும் இருக்கின்றன. நமது இன்றைய கடமை தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தி, மக்களின் நலன்களைப் பேணுவதற்காக, மக்களின் அரசாங்க யந்திரத்தை — பிரதானமாக மக்கள் ராணுவம், மக்கள் போலீஸ், மக்கள்

நீதி மன்றம் ஆகியவற்றை — பலப்ப டுத்துவதாகும்.

''மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் பற்றி'' (30. ஜுன். 1949.) தே. ப. தொ. 4.

நமது நாட்டு தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையிலுள்ள தொழிலாளர்-விவசா யிகளின் நேச அணியை அடிப்படையாகக் கொண்ட ஒரு மக்கள் ஜனநாயக சர்வா திகார நாடு. இந்தச் சர்வாதிகாரம் எதற்காக? அதன் முதலாவது பணி நமது நாட்டிலுள்ள பிற்போக்கு வர்க் கங்களையும், பிற்போக்குவாதிகளையும், சோஷலிஸப் புரட்சியை எதிர்க்கும் சுரண்டல்காரரையும் நசுக்குவது; நமது சோஷலிஸ நிர்மாணத்தைச் சீர்குலைப் பவர்களை நசுக்குவது; வேறு வார்த்தை யில் சொன்னால், உள்நாட்டில் எதிரிக்கும் நமக்கும் உள்ள முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பது. உதாரணமாக, குறிப் பிட்ட எதிர்ப்புரட்சிவாதிகளைக் கைது

செய்து, விசாரணை நடத்தி, தண்டிப்பது; நிலப்பிரபுக்களினதும், அதிகார வர்க்க முதலாளிகளினதும் வாக்குரிமையையும் பேச்சுரிமையையும் ஒரு குறிப்பிட்ட காலம் வரை பறிமுதல் செய்வது—இவையனைத்தும் நமது சர்வாதிகாரத்தின் எல்லைக்கு உட்பட்ட விவகாரங்கள். சமுதாய ஒழுங்கையும் பரந்துபட்ட மக்களின் நலன்களையும் பாதுகாப்பதற்காக, மோசடிக்காரர், ஏமாற்றுக்காரர், தீயிடுவோர், கொலைகாரர், குற்றவாளிக் கூட்டத்தினர், சமுதாய ஒழுங்கைப் பாரதூரமாகச் சீர்குலைக்கும் இதர குண்டர்கள் ஆகியோர் மீது சர்வாதிகாரம் செலுத்துவதும் அவசியமானது. இந்தச் சர்வாதிகாரத்தின் இரண்டாவது பணி வெளிநாட்டு எதிரிகளின் சதிவேலைகள், சாத்தியமான ஆக்கிரமிப்பு இவற்றிலிருந்து நமது நாட்டைப் பாதுகாப்பது. இத்தகைய நிலைமை ஏற்படும் போது, எதிரிக்கும் நமக்கும் இடையிலுள்ள புற முரண்பாட்டுக்குத் தீர்வு காண்பது

இச்சர்வாதிகாரத்தின் கடமை. இந்தச் சர்வாதிகாரத்தின் நோக்கம் மக்கள் அனைவரும் சமாதானமாக உழைப்பில் ஈடுபட்டு, சீனாவை நவீன தொழில் துறை, நவீன விவசாயம், நவீன விஞ்ஞானம், கலாசாரம் ஆகியவையுடைய ஒரு சோஷலிஸ நாடாகக் கட்டி வளர்ப்பதற்கு அவர்களைப் பாதுகாப்பதாகும்.

''மக்கள் மத்தியில் முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது பற்றி'' (27. பெப்ரவரி. 1957.)

மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்துக்குத் தொழிலாளர் வர்க்கத்தின் தலைமை இன்றியமையாதது. ஏனென்றால், தொழிலாளர் வர்க்கம் தான் மிக தூர திருஷ்டி உடையது, மிகுதியும் சுயநல மற்றது, மிகப் பூரணமான புரட்சி உணர்வுடையது. தொழிலாளர் வர்க்கத்தின் தலைமை இல்லாவிட்டால் புரட்சி என்பது தோல்வியடையும்; அதன் தலைமை இருந்தால் புரட்சி வாகை சூடும்

என்பதைப் புரட்சி வரலாறு முழுவதும் நிரூபிக்கின்றது.

''மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் பற்றி'' (30. ஜுன். 1949.) தே. ப. தொ. 4.

மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் தொழிலாளர் வர்க்கம், விவசாயி வர்க்கம், நகர குட்டி பூர்ஜுவா வர்க்கம் ஆகியவற்றின் நேச அணியை, பிரதானமாக தொழிலாளர்-விவசாயிகளின் நேச அணியை அடிப்படையாகக் கொண்டது. காரணம், இந்த இரண்டு வர்க்கங்களும் சீனுவின் ஜனத்தொகையில் 80 முதல் 90 வீதமாக விளங்குகின்றன. ஏகாதிபத்தியத்தையும் கோமிந்தாங் பிற்போக்குவாதிகளையும் தூக்கி எறியும் பிரதான சக்திகள் இந்த இரண்டு வர்க்கங்களுமே. புதிய ஜனநாயகத்திலிருந்து சோஷலிஸத்துக்கு மாறிச் செல்வது இந்த இரண்டு வர்க்கங்களின் நேச அணியில் தான் தங்கி இருக்கின்றது.

ஷை

வர்க்கப்போராட்டம், உற்பத்திப் போராட்டம், விஞ்ஞானப் பரிசோதனை— இம் மூன்றும் ஒரு ராட்சஸ சோஷலிஸ நாட்டைக் கட்டி வளர்ப்பதற்கான மூன்று பெரும் புரட்சி இயக்கங்கள். கம்யூனிஸ்டுகள் அதிகாரத்துவத்திலிருந்து விடுதலை பெற்றவர்களாகவும், திரிபுவாதம், வரட்டுவாதம் இவற்ருல் பீடிக்கப் படாதவர்களாகவும், என்றும் வெல்லப் பட முடியாதவர்களாகவும் விளங்க இம் மூன்று இயக்கங்களும் நிச்சய உத்தரவாதங்களாகத் திகழ்கின்றன. பாட்டாளி வர்க்கமும் பரந்துபட்ட உழைப்பாளி மக்களும் ஐக்கியப்பட்டு ஒரு ஜனநாயக சர்வாதிகாரத்தை ஸ்தாபிப்பதற்கும் இவை நம்பகமான உத்தரவாதமாகும். இந்த இயக்கங்கள் இன்றி, நிலப்பிரபுக்களும், பணக்கார-விவசாயிகளும், எதிர்ப்புரட்சிவாதிகளும், தீய பிரகிருதிகளும், எல்லா விதமான பூதங்கள் பிசாசுகளும் தம் மிச்சைப்படி திரிய அனுமதிக்கப்படும் அதே வேளையில், நமது ஊழியர்கள் இவை

எல்லாவற்றுக்கும் முன் தமது கண்களை மூடி, அவர்களுள் அநேகர் பல விஷயங்களில் எதிரிக்கும் நமக்கும் இடையில் வேறுபாடு செய்து கொள்ளக் கூடத் தவறி, மாறாக எதிரியுடன் ஒத்துழைத்து, அவனால் உழல்படுத்தி, பிரித்து, ஆத்மீக ரீதியில் கெடுக்கப்பட்டால், இவ்வாறு நமது ஊழியர்கள் வெளியே இழுக்கப்பட்டால் அல்லது எதிரி உள்ளே நுழைய முடிந்தால், நமது தொழிலாளர், விவசாயிகள், புத்திஜீவிகள் பலரும் எதிரியின் மென்மையான, கடினமான தந்திரோபாயங்கள் இரண்டுக்கும் முன் பாதுகாப்பின்றி விடப்பட்டால், பின்னர் மிக விரைவில், ஒரு சமயம் சில ஆண்டுகளில், ஒரு தசாப்தத்தில், அல்லது கூடிய பட்சம் ஒரு சில தசாப்தங்களில், எதிர்ப்புரட்சி மீட்சி ஒன்று தேசியரீதியில் தவிர்க்க முடியாத படி ஏற்படும்; மார்க்ஸிஸம்-லெனினிஸ கட்சி நிச்சயம் ஒரு திரிபுவாதக் கட்சியாக அல்லது பாஸிஸக் கட்சியாக

மாறும்; சீனா முழுவதும் அதன் நிறத்தில் மாற்றமடையும்.

''குருசேவின் போலிக் கம்யூனிஸமும் உலகத்துக்கான அதன் வரலாற்றுப் படிப்பினைகளும் பற்றி'' என்ற கட்டுரையில் மேற்கோள், மக்கள் தினசரி. 14. ஜூலை. 1964.

மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் இரண்டு முறைகளை உபயோகிக்கின்றது. எதிரிகளைப் பொறுத்தவரையில், அது சர்வாதிகார முறையைப் பாவிக்கிறது; அதாவது, தேவையெனக் கருதும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அரசியல் நடவடிக்கைகளில் பங்குபற்ற அவர்களை அனுமதிக்காது; மக்கள்-அரசாங்கத்தின் சட்டங்களுக்குப் பணிந்து ஒழுகும் படியும், உழைப்பில் கலந்து கொள்ளும் படியும், உழைப்பின் மூலம் தம்மைப் புநருருவாக்கும் படியும், அது அவர்களை நிர்ப்பந்திக்கும். இதற்கு மாறாக, மக்களைப் பொறுத்தவரையில், அது நிர்ப்பந்தத்தை உபயோகிக்காமல், ஜனநாயக முறையைக்

கையாளுகிறது; அதாவது, அரசியல் நடவடிக்கைகளில் கலந்து கொள்ள மக்களை அனுமதிக்கிறது. இப்படி அல்லது அப்படிச் செய்யும் படி அவர்களை நிர்ப்பந்திப்பதில்லை. பதிலுக்கு, அவர்களுக்குப் போதனை அளிப்பதிலும், அவர்களை இணங்கச் செய்வதிலும் அது ஜனநாயக முறையை உபயோகிக்கின்றது.

சீன மக்கள் அரசியல் கலந்தாலோசனை மாநாட்டின் 1வது தேசிய கமிட்டியின் 2வது கூட்டத்தில் ஆற்றிய முடிவுரை (23. ஜுன். 1950.)

மேலும் உறுதியான அடிப்படையில் சீனுவில் சோஷலிஸ லட்சியத்தின் துரித வளர்ச்சியைக் கொண்டுவருவதற்காக, கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் சீன மக்கள் உக்கிரமான சீர்செய் இயக்கம் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கின்றனர். இது சோஷலிஸம் முதலாளித்துவம் என்ற இரண்டு பாதைகள், அரசாங்கத்தின்

அடிப்படை அமைப்பு, அதன் பிரதான கொள்கைகள், கட்சி அரசாங்க இயங்குனர்களின் வேலைநடை, மக்களின் நல் வாழ்வு பிரச்சினை முதலியவை பற்றி நகரிலும் நாட்டுப்புறத்திலும் நடைபெறும் ஒரு தேசியரீதியான விவாதம். இது உடனடியான தீர்வைக் கோரும் மக்கள் மத்தியிலுள்ள உண்மையான முரண்பாடுகளுக்குச் சரியான தீர்வு காண்பதற்காக வழிகாட்டலின் கீழும், சுதந்திரமாகவும் உண்மைகளை முன் வைத்து நியாயங்காட்டி விளக்குவதன் மூலம் நடத்தப்படும் ஒரு விவாதம். இது மக்களின் சுய-போதனைக்கும், சுய-புநருருவாக்கத்துக்குமான ஒரு சோஷலிஸ இயக்கம்.

''மகத்தான அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் 40வது ஆண்டு நிறைவு விழாவின் போது சோவியத் யூனியன் உயர்தர சோவியத் கூட்டத்தில் ஆற்றிய உரை'' (6. நவம்பர். 1957.)

மகத்தான நிர்மாண வேலையில் மிகக் கடினமான கடமைகள் நமக்கு முன் இருக்கின்றன. நமது கட்சியில் ஒரு கோடிக்கு மேலான உறுப்பினர்கள் இருந்த போதிலும், நாட்டின் முழு ஜனத்தொகையில் அவர்கள் மிகச் சிறு பான்மையினரே ஆவர். நமது பல்வேறு அரசாங்க நிறுவனங்களிலும், பொதுஜன ஸ்தாபனங்களிலும் பெருமளவு வேலைகள் கட்சி உறுப்பினர் அல்லாதவர்களால் செய்யப்பட வேண்டியிருக்கின்றன. நாம் பொது மக்களைச் சார்ந்து நிற்பதிலும், கட்சி உறுப்பினர் அல்லாதவர்களுடன் ஒத்துழைப்பதிலும் தேர்ச்சி பெற்றிருக்காவிட்டால், இந்த வேலைகளை நன்முகச் செய்வது அசாத்தியம். கட்சி முழுவதன் ஐக்கியத்தைத் தொடர்ந்து பலப்படுத்தும் அதே வேளையில், நமது தேசிய இனங்கள், ஜனநாயக வர்க்கங்கள், ஜனநாயகக் கட்சிகள், மக்கள் ஸ்தாபனங்கள் எல்லாவற்றின் ஐக்கியத்தைத் தொடர்ந்து பலப்படுத்தி, நமது மக்கள்

ஜனநாயக ஐக்கிய முன்னணியையும் ஸ்திரப்படுத்தி, விரிவாக்க வேண்டும். நமது வேலையின் எந்தத் தொடரிலும், கட்சிக்கும் மக்களுக்குமிடை ஐக்கியத்தை ஊறுபடுத்தும் ஆரோக்கியமற்ற எல்லா வெளிப்பாடுகளையும் நாம் உணர்வுபூர்வமாக இல்லாமல் செய்ய வேண்டும்.

''சீன கம்யூனிஸ்ட் கட்சி 8வது தேசிய மாநாட்டின் ஆரம்ப உரை''
(15. செப்டம்பர். 1956.)

4. மக்கள் மத்தியில் முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது

நாம் இரண்டு வகையான சமுதாய முரண்பாடுகளை எதிர்நோக்குகின்றோம். ஒன்று, எதிரிக்கும் நமக்கும் இடையிலுள்ள முரண்பாடுகள். மற்றது, மக்கள் மத்தியில் காணும் முரண்பாடுகள். இவை இயல்பில் முற்றிலும் வேறுபட்ட இரண்டு வகையான முரண்பாடுகள்.

''மக்கள் மத்தியில் முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது பற்றி'' (27. பெப்ரவரி. 1957.)

எதிரிக்கும் நமக்கும் இடையிலுள்ள முரண்பாடுகள், மக்கள் மத்தியிலுள்ள முரண்பாடுகள் என்ற இரண்டு வகையான முரண்பாடுகளையும் நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால், நாம் முதலில் ''மக்கள்'' என்றால் யார், ''எதிரி'' என்றால் யார் என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். . . . இன்றைய கட்டத்தில், சோஷலிஸத்தை நிர்மாணிக்கும் காலகட்டத்தில், சோஷலிஸ நிர்மாண லட்சியத்தை அங்கீகரித்து, ஆதரித்து, அதில் பங்குபற்றும் வர்க்கங்கள், வர்க்கத்தட்டுகள், சமுதாயக் குழுக்கள் எல்லாம் மக்கள் என்ற வகையைச் சேர்ந்தவை. சோஷலிஸப் புரட்சியை எதிர்க்கின்ற, சோஷலிஸ நிர்மாணத்தின் மீது பகைமை பாராட்டுகின்ற, அல்லது அதற்குச் சதி செய்கின்ற சமுதாய சக்திகள், சமுதாயக் குழுக்கள் எல்லாம் மக்களின் எதிரிகள்.

ஷை

சீனாவில் இன்றைய நிலைமைகளில் தொழிலாளர் வர்க்கத்துக்குள் நிலவும் முரண்பாடுகள், விவசாயி வர்க்கத்

துக்குள் நிலவும் முரண்பாடுகள், புத்தி ஜீவிகள் மத்தியிலுள்ள முரண்பாடுகள், தொழிலாளர் வர்க்கத்துக்கும் விவசாயி வர்க்கத்துக்கும் இடையிலுள்ள முரண் பாடுகள், ஒருபுறம் தொழிலாளர், விவசாயிகளுக்கும், மறுபுறம் புத்திஜீவிக ளுக்கும் இடையிலுள்ள முரண்பாடுகள், ஒருபுறம் தொழிலாளர் வர்க்கத்துக்கும் இதர உழைப்பாளி மக்களுக்கும், மறு புறம் தேசிய பூர்ஜுவா வர்க்கத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடுகள், தேசிய பூர்ஜுவா வர்க்கத்தின் மத்தியிலுள்ள முரண்பாடுகள் முதலியவை எல்லாம் மக்கள் மத்தியிலுள்ள முரண்பாடுகள் ஆகும். நமது மக்கள்-அரசாங்கம் மக் களின் நலன்களே உண்மையாகப் பிரதிநி தித்துவப்படுத்தும் ஒரு அரசாங்கம்; மக் களுக்குத் தொண்டு செய்யும் ஒரு அரசா ங்கம். ஆனல் இந்த அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையில் கூட குறிப்பிட்ட முரண்பாடுகள் இருப்பது உண்மை. அவற்றில் அரசாங்கத்தின் நலன்கள்,

கூட்டுறவின் நலன்கள், தனிநபர் நலன் கள் ஆகியவற்றுக்கிடையில் நிலவும் முரண்பாடுகள், ஜனநாயகத்துக்கும் மத்தியத்துவத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடுகள், தலைமை தாங்குவோருக் கும் தலைமை தாங்கப்படுவோருக்கும் இடையிலுள்ள முரண்பாடுகள், அர சாங்க நிறுவனங்களிலுள்ள சில ஊழியர் களின் அதிகாரத்துவ வேலைநடைக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நிலவும் முரண்பாடுகள் ஆகியவை அடங்கியுள் ளன. இவையும் மக்கள் மத்தியிலுள்ள முரண்பாடுகளே. பொதுவாகச் சொன் ஞல், மக்கள் மத்தியில் நிலவும் முரண்பா டுகளில் மக்கள் நலன்களின் அடிப்படை ஒருமைப்பாடு புதைந்து கிடக்கின்றது.

ஷ

நமக்கும் எதிரிக்கும் இடையில் நிலவும் முரண்பாடுகள் பகையுள்ள முரண்பாடு கள். மக்கள் மத்தியில், உழைப்பாளி மக்கள் மத்தியில் உள்ள முரண்பாடுகள்

பகையற்ற முரண்பாடுகள். சுரண்டப்படும் வர்க்கங்களுக்கும் சுரண்டும் வர்க்கங்களுக்கும் இடையிலுள்ள முரண்பாடுகள் பகையுடையவையாய் இருக்கும் அதே வேளையில் பகையற்றவையாகவும் இருக்கின்றன.

ஷே

நமது நாட்டு மக்களின் அரசியல் வாழ்வில், நமது சொல்லிலும் செயலிலும் பிழையையும் சரியையும் பிரித்தறிவது எப்படி? நமது நாட்டு அரசியல் சட்டத்தின் கோட்பாடுகள், ஏகப்பெரும்பான்மையான நமது மக்களின் விருப்பம், நமது நாட்டு அரசியல் கட்சிகளும் குழுக்களும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பிரகடனம் செய்த பொது அரசியல் கருத்துகள் ஆகியவற்றின் பிரகாரம், அதற்கான வரையறை, பொதுவாகச் சொன்னால், பின்வருவன என்று நாம் கருதுகின்றோம்:

(1) நமது சொல்லும் செயலும் நமது பல்வேறு தேசிய இன மக்களையும் பிளவுபடுத்த அல்ல, ஒன்றுபடுத்த துணை செய்ய வேண்டும்.

(2) அவை நமது சோஷலிஸ மாற்றத்துக்கும் சோஷலிஸ நிர்மாணத்துக்கும் பாதகமாக அல்ல, சாதகமாக இருக்க வேண்டும்.

(3) அவை மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை ஸ்திரப்படுத்தத் துணை செய்ய வேண்டும். அதற்குக் குழிபறிக்கவோ அல்லது அதைப் பலவீனப்படுத்தவோ கூடாது.

(4) அவை ஜனநாயக மத்தியத்துவத்தை ஸ்திரப்படுத்தத் துணை செய்ய வேண்டும். அதற்குக் குழிபறிக்கவோ அல்லது அதைப் பலவீனப்படுத்தவோ கூடாது.

(5) அவை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையைப் பலப்படுத்தத் துணை செய்ய வேண்டும். அதைப் புறக்கணிக்கவோ அல்லது பலவீனப்படுத்த

வோ கூடாது.

(6) அவை சர்வதேசிய சோஷலிஸ ஐக்கியத்துக்கும், சமாதானம் விரும்பும் உலக மக்களின் சர்வதேசிய ஐக்கியத்துக்கும் பாதகமாக அல்ல, சாதகமாக இருக்க வேண்டும்.

இந்த ஆறு வரையறைகளில் சோஷலிஸ மார்க்கமும் கட்சியின் தலைமையும் மிக முக்கியமான இரண்டு அம்சங்கள்.

ஷை

எதிர்ப்புரட்சிவாதிகளை நசுக்கும் பிரச்சினை நமக்கும் எதிரிக்கும் இடையிலுள்ள முரண்பாடு பற்றிய போராட்டப் பிரச்சினையாகும். மக்கள் மத்தியில், இந்தப் பிரச்சினையை ஓரளவு வேறு நிலையில் வைத்துப் பார்க்கும் சிலரும் இருக்கின்றனர். நம்மிலும் பார்க்க வேறுபட்ட கருத்துடையவர்கள் இருசாரார் இருக்கின்றனர். வலதுசாரிச் சிந்தனைப் போக்குடையவர்கள் எதிரிக்கும் நமக்கும் இடையில் வேறுபாடு செய்து கொள்ளாமல், எதிரிகளை நம்மவர்களாகக் கருதுகின்றனர். பரந்துபட்ட மக்கள் எதிரிகளெனக் கருதும் அதே நபர்களை அவர்கள் நண்பர்களாகக் கருதுகின்றனர். ''இடதுசாரி'' சிந்தனைப் போக்குடையவர்கள் மக்கள் மத்தியில் காணும் சில முரண்பாடுகளை எதிரிக்கும் நமக்கும் உள்ள முரண்பாடுகளாகக் கருதி, உண்மையில் எதிர்ப்புரட்சிவாதிகள் அல்லாதவர்களையும் எதிர்ப்புரட்சிவாதிகள் என்று கருதும் அளவிற்கு, எதிரிக்கும் நமக்கும் உள்ள முரண்பாடுகளைப் பிரமாதப்படுத்துகின்றனர். இந்த இரண்டு கண்ணோட்டங்களும் தவறானவை. இவற்றால் எதிர்ப்புரட்சிவாதிகளை நசுக்கும் பிரச்சினையைச் சரியான முறையில் கையாளவோ, அல்லது அந்த வேலையைச் சரியாகக் கணிக்கவோ முடியாது.

ஷை

தன்மையில் வேறுபட்ட முரண்பாடுகள் தன்மையில் வேறுபட்ட முறைகளால்

தான் தீர்க்கப்பட முடியும். உதாரண மாக, பாட்டாளி வர்க்கத்துக்கும் பூர்ஜுவா வர்க்கத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடு சோஷலிஸப் புரட்சி முறையால் தீர்க்கப்பட வேண்டும். பரந்துபட்ட மக்களுக்கும் நிலப்பிரபுத்துவ அமைப்புக்கும் இடையிலுள்ள முரண்பாடு ஜனநாயகப் புரட்சி முறையால் தீர்க்கப்பட வேண்டும். காலனிகளுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடு தேசியப் புரட்சி யுத்த முறையால் தீர்க்கப்பட வேண்டும். சோஷலிஸ சமுதாயத்தில் தொழிலாளர் வர்க்கத்துக்கும் விவசாயி வர்க்கத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடு விவசாயத்தைக் கூட்டுறவுமயமாக்கி, யந்திரமயமாக்கும் முறையால் தீர்க்கப்பட வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சிக்குள் நிலவும் முரண்பாடு விமர்சனம், சுய-விமர்சனம் என்ற முறையால் தீர்க்கப்பட வேண்டும். சமுதாயத்துக்கும் இயற்கைக்கும் இடையிலுள்ள முரண்பாடு உற்பத்தி சக்திகளை

விருத்தியாக்கும் முறையால் தீர்க்கப்பட வேண்டும். ...வேறுபட்ட முரண்பாடுகளைத் தீர்க்க வேறுபட்ட முறைகளை உபயோகிக்கும் கோட்பாடு மார்க்ஸிஸ-லெனினிஸவாதிகள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு கோட்பாடு.

''முரண்பாடு பற்றி'' (ஆகஸ்ட். 1937.) தே. ப. தொ. 1.

எதிரிக்கும் நமக்கும் இடையிலுள்ள முரண்பாடுகள், மக்கள் மத்தியிலுள்ள முரண்பாடுகள் இரண்டும் இயல்பில் வேறுபட்டவையாக இருப்பதால், அவற்றைத் தீர்க்கும் முறைகளும் வேறுபட்டவை. சுருக்கமாகச் சொன்னால், முன்னது எதிரிக்கும் நமக்கும் இடையில் ஒரு தெளிவான எல்லைக்கோட்டை வரைந்து கொள்ளும் ஒரு பிரச்சினை. பின்னது சரிக்கும் பிழைக்கும் இடையில் ஒரு தெளிவான எல்லைக்கோட்டை வரைந்து கொள்ளும் ஒரு பிரச்சினை. எதிரிக்கும்

நமக்கும் உள்ள பிரச்சினை கூட சரியும் பிழையும் சம்பந்தமான பிரச்சினை என்பது உண்மையே. உதாரணமாக, யார் சரி, நாமா அல்லது ஏகாதிபத்தியம், நிலப் பிரபுத்துவம், அதிகார முதலாளித்துவம் ஆகிய உள்நாட்டு, வெளிநாட்டுப் பிற் போக்குவாதிகளா என்பது கூட சரியும் பிழையும் சம்பந்தமான ஒரு விஷயமே. ஆனால், மக்கள் மத்தியில் சரியும் பிழை யும் சம்பந்தமான பிரச்சினையிலிருந்து இது வேறுபட்ட ஒன்றாகும்.

''மக்கள் மத்தியில் முரண்பாடு களைச் சரியாகக் கையாள்வது பற்றி'' (27. பெப்ரவரி. 1957.)

சித்தாந்த இயல்பு தழுவிய பிரச்சினை களை, அல்லது மக்கள் மத்தியில் தகராற் றுக்கு உரிய பிரச்சினைகளைத் தீர்க்கும் ஒரே ஒரு வழி ஜனநாயக முறை, கலந் துரையாடல் முறை, விமர்சன முறை, இணங்க செய்வது, போதனையளிப்பது ஆகியவற்றை உபயோகிப்பதன்றி, பலாத்

காரத்தையோ அல்லது அடக்கு முறை யையோ உபயோகிப்பதல்ல.

ஷி

மக்கள் தமது உற்பத்தியையும் படிப் பையும் பயனுள்ள முறையில் நிறைவேற் றவும், தமது வாழ்க்கையைத் தகுந்த முறையில் ஒழுங்கு செய்யவும் உதவியாக, தமது அரசாங்கமும், உற்பத்திக்குப் பொறுப்பானவர்களும், கலாசார, கல்வி ஸ்தாபனங்களின் பொறுப்புதாரிகளும் ஒரு கட்டுப்பாட்டியல்புடைய பொருத்த மான நிர்வாக உத்தரவுகளைப் பிறப் பிக்க வேண்டுமென விரும்புகின்றனர். இத்தகைய நிர்வாக விதிகள் இல்லாவிட் டால் சமுதாய ஒழுங்கை நிலைநிறுத்த முடியாது என்பதை எல்லாரும் அறிவர். நிர்வாகக் கட்டளைகளும், இணங்கச் செய்து போதனையளிக்கும் முறையும் மக் கள் மத்தியில் முரண்பாடுகளைத் தீர்ப்ப தில் பரஸ்பரம் ஒன்றை ஒன்று பூர்த்தி செய்வதாக இருக்கின்றன. சமுதாய

ஒழுங்கை நிலைநிறுத்துவதற்கான நிர்வாகக் கட்டளைகள் கூட இணங்கச் செய்து போதனையளிக்கும் முறையுடன் கையாளப்பட வேண்டும். பல நிலைமைகளில் நிர்வாக விதிகள் மட்டும் பலனளிக்க மாட்டா.

ஷை

பூர்ஜுவா வர்க்கமும் குட்டி பூர்ஜுவா வர்க்கமும் தத்தம் சித்தாந்தங்களை வெளியிடுவது தவிர்க்க முடியாதது. அரசியல், சித்தாந்தப் பிரச்சினைகளில் சாத்தியமான எல்லா வழிகளிலும் அவர்கள் தமது கருத்துகளைப் பிடிவாதமாக வெளியிடுவது நிச்சயம். அவர்கள் தமது கருத்துகளை வெளியிடாமலும் பிரதிபலிக்காமலும் இருப்பது சாத்தியமாகாது. நாம் அடக்குமுறைகளைப் பாவித்து, அவர்கள் தமது கருத்துகளை வெளியிடுவதைத் தடுக்கக் கூடாது. பதிலாக அவர்கள் தமது கருத்துகளை வெளியிட

அனுமதிக்க வேண்டும். அதே வேளையில், அவர்களுடன் விவாதித்து, அவர்களைத் தகுந்த முறையில் விமர்சனம் செய்ய வேண்டும். எல்லாவிதமான தவறான கருத்துகளையும் நாம் சந்தேகத்திற்கிடமின்றி விமர்சனம் செய்ய வேண்டும். விமர்சனம் செய்யாமல், தவறான கருத்துகள் கட்டுப்பாடின்றிப் பரவுவதைப் பார்த்துக் கொண்டிருப்பதும், அவை களத்தில் ஆதிக்கம் செலுத்துவதை அனுமதிப்பதும் உண்மையில் சரியல்ல. தோன்றும் போதெல்லாம் தவறுகள் விமர்சிக்கப்பட வேண்டும்; நச்சுக்களைகள் போராடப்பட வேண்டும். ஆனால், இத்தகைய விமர்சனத்தில் வரட்டுவாத, நிலையியல் முறையை உபயோகிக்கக் கூடாது. மாறாக இயங்கியல் முறையைப் பிரயோகிக்க முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். நமக்குத் தேவையானவை விஞ்ஞான ஆராய்வும், நம்பிக்கை ஊட்டும் நியாயமுமே ஆகும்.

ஷை

மக்களின் குறைபாடுகளை விமர்சனம் செய்வது தேவையானது. ...ஆனல், அப்படிச் செய்யும் போது, நாம் மக்களின் நிலைப்பாட்டில் உண்மையாக நின்று, அவர்களைப் பாதுகாத்து, போதிக்கும் இதய ஆர்வத்துடன் பேச வேண்டும். தோழர்களை எதிரிகள் போல நடத்துவது எதிரியின் நிலைப்பாட்டை எடுப்பதற்குச் சமமாகும்.

''யென்ஆன் கலை இலக்கிய கருத்தரங்கு உரை'' (மே. 1942.) தே. ப. தொ. 3.

முரண்பாடும் போராட்டமும் சர்வவியாபகமானவை; சார்பற்றவை. ஆனல் முரண்பாடுகளைத் தீர்க்கும் முறைகள், அதாவது போராட்ட வடிவங்கள், முரண்பாடுகளின் இயல்புகள் வேறுபடுவதற்கு ஏற்ப வேறுபடுகின்றன. சில முரண்பாடுகள் வெளிப்படையாகப் பகை இயல்பு உடையவை. சில அப்படி அல்ல. விஷயங்களின் ஸ்தூலமான வளர்ச்சியின் பிரகாரம், ஆரம்பத்தில் பகையற்றிருந்த முரண்பாடுகள் பகையுடையவையாக வளர்கின்றன. அதே வேளையில், ஆரம்பத்தில் பகையுடையவையாக இருந்தவை பகையற்ற முரண்பாடுகளாக வளர்கின்றன.

''முரண்பாடு பற்றி'' (ஆகஸ்ட். 1937.) தே. ப. தொ. 1.

சாதாரண சூழ்நிலைகளில், மக்கள் மத்தியில் நிலவும் முரண்பாடுகள் பகையற்ற முரண்பாடுகள் ஆகும். ஆனல் அவை சரியான முறையில் கையாளப்படா விட்டால், அல்லது நமது விழிப்புணர்ச்சியைத் தளர்த்தி, கண்காணிப்பை தாழ்த்தி விடுவோமானல், பகை என்பது தோன்றலாம். ஒரு சோஷலிஸ நாட்டில் இத்தகைய வளர்ச்சி வழக்கத்தில் ஒரு ஸ்தலரீதியான, தற்காலிகமான தோற்றப்பாடேயாகும். இதற்குக் காரணம், அங்கு மனிதனை மனிதன் சுரண்டும் முறை ஒழிக்கப்பட்டு, மக்களின் நலன்கள்

அடிப்படையில் ஒன்ருக விளங்குகின்றன.

"மக்கள் மத்தியில் முரண்பாடு களைச் சரியாகக் கையாள்வது பற்றி" (27. பெப்ரவரி. 1957.)

நமது நாட்டில் தொழிலாளர் வர்க்கத்துக்கும் தேசிய பூர்ஜுவா வர்க்கத்துக்கும் இடையில் நிலவும் முரண்பாடு மக்கள் மத்தியிலுள்ள முரண்பாட்டு வகையைச் சேர்ந்தது. இவை இரண்டுக்கும் இடையில் நடைபெறும் வர்க்கப்போராட்டம் பொதுவாக மக்கள் மத்தியில் நிகழும் வர்க்கப்போராட்டமே. இதற்குக் காரணம், சீன தேசிய பூர்ஜுவா வர்க்கம் ஒரு இரட்டைக் குணும்சம் உடையது. பூர்ஜுவா-ஜனநாயகப் புரட்சிக் காலகட்டத்தில், அது ஒருபுறம் புரட்சிகர இயல்பு உடையதாகவும் மறுபுறம் சமரச இயல்புடையதாகவும் இருந்தது. சோஷலிஸ புரட்சிக் காலகட்டத்தில், அதற்கு ஒரு புறம், லாபத்துக்காகத் தொழிலாளர் வர்க்கத்தைச் சுரண்டும் இயல்பும், மறு

புறம், அரசியல் சட்டத்தை ஆதரித்து சோஷலிஸ மாற்றத்தை ஏற்கும் இயல்பும் இருக்கின்றன. தேசிய பூர்ஜுவா வர்க்கமும், ஏகாதிபத்தியம், நிலப்பிரபு வர்க்கம், அதிகார முதலாளித்துவ வர்க்கம் ஆகியவையும் ஒரே தன்மையானவை அல்ல. தொழிலாளர் வர்க்கத்துக்கும் தேசிய பூர்ஜுவா வர்க்கத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடு சுரண்டுவதற்கும் சுரண்டப்படுவதற்கும் இடையிலுள்ள ஒரு முரண்பாடு. அது இயல்பில் பகை உடையது. ஆனுல் சீனுவின் ஸ்தூலமான நிலைமைகளில், இந்தப் பகையுடைய வர்க்க முரண்பாடு சரியான முறையில் கையாளப்பட்டால், பகையற்ற முரண்பாடாக மாற்றப்பட்டு, சமாதான முறைகளில் தீர்க்கப்பட முடியும். இருந்தும், இதைச் சரியான முறையில் கையாளாமல், தேசிய பூர்ஜுவா வர்க்கத்துடன் ஐக்கியப்பட்டு, அதை விமர்சனம் செய்து, அதற்குப் போதனையளிக்கும் கொள்கையைக் கடைப்பிடிக்கா விட்டால், அல்லது

தேசிய பூர்ஜுவா வர்க்கம் நமது இந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாவிட்டால், அம்முரண்பாடு எதிரிக்கும் நமக்கும் இடையிலுள்ள முரண்பாடாக மாறிவிடும்.

ஷை

சோஷலிஸ நாட்டிலுள்ள பிற்போக்குவாதிகள் ஏகாதிபத்தியவாதிகளுடன் கள்ளக்கூட்டுச் சேர்ந்து மக்கள் மத்தியில் முரண்பாடுகளைப் பயன்படுத்தி, வேற்றுமைகளை விதைத்து, ஒழுங்கீனத்தைத் தூண்டி, தமது சதி நோக்கங்களை நிறைவேற்ற முயன்றனர். ஹங்கேரிய சம்பவத்தின் இந்தப் படிப்பினை பெரும் கவனத்துக்குரிய ஒன்ருகும்.

ஷை

5. யுத்தமும் சமாதானமும்

யுத்தம் என்பது வர்க்கங்கள், தேசங்கள், நாடுகள், அரசியல் குழுக்கள் ஆகியவற்றுக்கிடையில் நிலவும் முரண்பாடுகள் ஒரு குறிப்பிட்ட கட்டத்துக்கு வளர்ச்சியடைந்ததும், அவற்றைத் தீர்ப்பதற்குரிய அதி உயர்ந்த போராட்ட வடிவம். தனியுடைமை முறையும், வர்க்கங்களும் தோன்றியது முதல் யுத்தமும் இருந்து வருகின்றது.

''சீன புரட்சி யுத்தத்தில் யுத்த தந்திரப் பிரச்சினைகள்'' (டிஸம்பர். 1936.) தே. ப. தொ. 1.

''அரசியலின் நீடிப்பே யுத்தம் என்பது''. இந்த அர்த்தத்தில், யுத்தம் அரசியலாகவும், யுத்தம் தானே அரசியல்

நடவடிக்கையாகவும் விளங்குகின்றது. புராதன காலம் முதல் அரசியல் குணும்சம் இல்லாத யுத்தமே இருந்ததில்லை....

ஆனுல் யுத்தத்துக்கு அதற்குரிய விசேஷ குணும்சங்கள் உண்டு. இந்த அர்த்தத்தில், யுத்தத்தைப் பொதுவாக அரசியலுடன் சமப்படுத்த முடியாது. ''விசேஷ நடவடிக்கைகள் மூலம் அரசியலின் நீடிப்பே யுத்தம் என்பது''. அரசியல் அதன் வழக்கமான வழிகளில் மேற்கொண்டு முன்னேற முடியாத ஒரு குறிப்பிட்ட கட்டத்துக்கு வளர்ச்சியடைந்ததும், அதன் பாதையிலுள்ள தடைகளை நீக்குவதற்காக யுத்தம் வெடிக்கின்றது. ...தடைகள் அகற்றப்பட்டு, அரசியல் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டதும் யுத்தமும் முடிவடைகின்றது. ஆனுல் அத்தடைகள் முற்ருக நீக்கப்படாவிட்டால், அக்குறிக்கோள் பூரணமாக நிறைவேற்றப்படும் வரையில் யுத்தமும் தொடர்ந்து நடைபெறும். ...எனவே, அரசியலை இரத்தம் சிந்தாத யுத்தம் என்றும், யுத்தத்தை

இரத்தம் சிந்தும் அரசியல் என்றும் கூறலாம்.

''நீண்டகால யுத்தம் பற்றி''
(மே. 1938.) தே. ப. தொ. 2.

யுத்தங்களில் நீதியான யுத்தங்கள் அநீதியான யுத்தங்கள் என இரண்டு வகை உண்டு என்பதை வரலாறு காட்டுகின்றது. முற்போக்கான எல்லா யுத்தங்களும் நீதியானவை. முற்போக்கைத் தடுக்கும் எல்லா யுத்தங்களும் அநீதியானவை. கம்யூனிஸ்டுகளாகிய நாம் முற்போக்கைத் தடுக்கின்ற அநீதியான யுத்தங்கள் எல்லாவற்றையும் எதிர்க்கின்ருேம். ஆனுல் முற்போக்கான, நீதியான யுத்தங்களை நாம் எதிர்ப்பதில்லை. கம்யூனிஸ்டுகளாகிய நாம் நீதியான யுத்தங்களை எதிர்க்காதது மாத்திரமல்ல, அவற்றில் ஊக்கமாகப் பங்கும் பற்றுகின்ருேம். அநீதியான யுத்தங்களைப் பொறுத்தவரையில், முதலாவது உலக மகா யுத்தம் ஒரு உதார

ணமாகும். இதில் இருதரப்பும் ஏகாதி பத்திய நலன்களுக்காகப் போரிட்டன. எனவே உலகக் கம்யூனிஸ்டுகள் அனே வரும் அந்த யுத்தத்தை உறுதியாக எதிர்த் தார்கள். இத்தகைய ஒரு யுத்தத்தை எதிர்க்கும் வழி, அது வெடித்தெழுவதற்கு முன், அதைத் தடுக்கச் சாத்தியமான அனைத்தையும் செய்வதே. அது ஒருகால் வெடித்ததும், சாத்தியமான போதெல் லாம் யுத்தத்தை யுத்தத்தால் எதிர்க்க வேண்டும்; அநீதியான யுத்தத்தை நீதி யான யுத்தத்தால் எதிர்க்க வேண்டும்.

ஷை

வர்க்க சமுதாயத்தில், புரட்சிகளும், புரட்சி யுத்தங்களும் தவிர்க்க முடியா தவை. அவை இல்லாவிட்டால், சமு தாய வளர்ச்சியின் எந்த ஒரு பாய்ச்ச லேயும் நிறைவேற்ற முடியாது; பிற் போக்கு ஆளும் வர்க்கங்களைத் தூக்கியெ றிவது சாத்தியமாகாது; எனவே மக்கள்

அரசியல் அதிகாரத்தைப் பெறுவதும் அசாத்தியம்.

''முரண்பாடு பற்றி'' (ஆகஸ்ட். 1937.) தே. ப. தொ. 1.

புரட்சி யுத்தம் என்பது நஞ்சைப் போக்கும் ஒரு எதிர் நஞ்சு. அது எதிரி யின் நஞ்சைப் போக்குவது மாத்திரமல்ல, நமது சொந்த அழுக்கைக் கூட அது சுத் திகரிக்கின்றது. நீதியான ஒவ்வொரு புரட்சி யுத்தத்துக்கும் பிரமாண்டமான ஆற்றல் உண்டு. அது பல பொருட்களை மாற்றக் கூடியது; அல்லது அவற்றின் மாற்றத்துக்கான பாதையைத் திறக்கக் கூடியது. சீன-யப்பானிய யுத்தம் சீனு, யப்பான் இரு நாடுகளையும் மாற்றும்; சீனு எதிர்ப்பு யுத்தத்திலும், ஐக்கிய முன் னணியிலும் அழுத்தமாக நின்ருல், பழைய யப்பான் புதிய யப்பானுக மாறுவதும், பழைய சீனு புதிய சீனுவாக மாறுவதும் நிச்சயம். சீனு, யப்பான் இரு நாட்டு மக்களும், இதர ஒவ்வொரு விஷயமும்

இந்த யுத்தத்தின் போக்கிலும், யுத்தத்தின் பின்னும் மாற்றமடைவது திண்ணம்.

''நீண்டகால யுத்தம் பற்றி'' (மே. 1938.) தே. ப. தொ. 2.

''துப்பாக்கியிலிருந்து அரசியல் அதிகாரம் பிறக்கிறது'' என்ற உண்மையை ஒவ்வொரு கம்யூனிஸ்டும் கிரகித்துக் கொள்ள வேண்டும்.

''யுத்தமும் யுத்ததந்திரமும் பற்றிய பிரச்சினைகள்'' (6. நவம்பர். 1938.) தே. ப. தொ. 2.

ஆயுத பலாத்காரத்தால் அதிகாரத்தைக் கைப்பற்றுவது, யுத்தத்தால் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது, புரட்சியின் கேந்திரக் கடமையும், அதன் அதி உயர்ந்த வடிவமும் ஆகும். புரட்சி பற்றிய இந்த மார்க்ஸிஸம்-லெனினிஸக் கோட்பாடு சீனுவுக்கு மாத்திரமல்ல, இதர நாடுகளுக்கும் சர்வவியாபகமாகப் பொருந்திய, பூரணமாகப் பொருந்திய ஒரு கோட்பாடு.

ஷை

சீனுவில் ஆயுதப் போராட்டம் இல்லாவிட்டால், பாட்டாளி வர்க்கத்துக்கு ஒரு அந்தஸ்து கிடையாது; மக்களுக்கு ஒரு அந்தஸ்து கிடையாது; கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒரு அந்தஸ்து கிடையாது; புரட்சியும் வாகை சூடாது. (பதினெட்டு ஆண்டுகளில்) நமது கட்சியின் வளர்ச்சியும், ஸ்திரப்பாடும், போல்ஷிவிஸமயமாக்கமும் புரட்சி யுத்தங்களின் மத்தியில் தான் முன்னேற்றம் அடைந்தன. ஆயுதப் போராட்டம் இல்லாவிட்டால், கம்யூனிஸ்ட் கட்சி இன்றுள்ள நிலையில் இருக்க முடியாது. இந்த இரத்தம் சிந்திப் பெற்ற அனுபவத்தை கட்சித் தோழர்கள் ஒருவரும் மறந்து விடக் கூடாது.

'''கம்யூனிஸ்டை' அறிமுகம் செய்வது'' (4. அக்டோபர். 1939.) தே. ப. தொ. 2.

அரசாங்கம் பற்றிய மார்க்ஸிஸ தத்துவத்தின் பிரகாரம், அரசாங்க அதிகாரத்தின் பிரதான பகுதி ராணுவம். யார் அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றி, நிலைநிறுத்த விரும்பினாலும், அவர் பலமான படை ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும். ''யுத்தத்தின் சர்வ வல்லமைத்துவத்துக்காக வாதாடுபவர்கள்'' நாம் என்று சிலர் நம்மை நகையாடுகின்றனர். ஆம், புரட்சி யுத்தத்தின் சர்வ வல்லமைத்துவத்துக்காக வாதாடுபவர்கள் நாம். அது தீயதல்ல, நல்லது; மார்க்ஸிஸம் தழுவியது. ரஷிய கம்யூனிஸ்ட் கட்சியின் துப்பாக்கிகள் சோஷலிஸத்தைச் சிருஷ்டித்தன. நாம் ஒரு ஜனநாயகக் குடியரசைச் சிருஷ்டிப்போம். தொழிலாளர் வர்க்கமும் உழைப்பாளி மக்களும் துப்பாக்கிப் பலத்தைக் கொண்டு தான் ஆயுதமேந்திய பூர்ஜுவா வர்க்கத்தையும் நிலப்பிரபுக்களையும் தோற்கடிக்க முடியும் என்று ஏகாதிபத்திய சகாப்தத்தின் வர்க்கப் போராட்ட அனுபவம் நமக்குப்

போதிக்கின்றது. இந்த அர்த்தத்தில், துப்பாக்கிகளால் தான் உலகம் முழுவதும் மாற்றப் பட முடியும் என்று நாம் கூறலாம்.

''யுத்தமும் யுத்ததந்திரமும் பற்றிய பிரச்சினைகள்'' (6. நவம்பர். 1938.) தே. ப. தொ. 2.

நாம் யுத்தத்தை ஒழிப்பதற்காக வாதாடுபவர்கள். நாம் யுத்தத்தை விரும்பவில்லை, ஆனால் யுத்தத்தை யுத்தத்தின் மூலம் தான் ஒழிக்க முடியும். துப்பாக்கியை ஒழிக்க வேண்டுமானால், துப்பாக்கி ஏந்துவது அவசியம்.

ஷை

யுத்தம், மனிதர் தம்மைப் பரஸ்பரம் வதை செய்ய வைக்கும் இந்தப் பிசாசு, இறுதியில் மனித சமுதாயத்தின் முன்னேற்றத்தால் ஒழிக்கப்படும். இது ஒழிக்கப்படும் காலமும் வெகு தூரத்தில் இல்லை. ஆனால், இதை ஒழிக்கும் ஒரே ஒரு வழி

யுத்தத்தை யுத்தத்தால் எதிர்ப்பது, எதிர்ப்புரட்சி யுத்தத்தைப் புரட்சி யுத்தத்தால் எதிர்ப்பது, தேசிய எதிர்ப்புரட்சி யுத்தத்தைத் தேசியப் புரட்சி யுத்தத்தால் எதிர்ப்பது, எதிர்ப்புரட்சி வர்க்க யுத்தத்தைப் புரட்சிகர வர்க்க யுத்தத்தால் எதிர்ப்பது ஆகும். ...மனித சமுதாயம் வர்க்கங்கள் ஒழிக்கப்பட்ட, அரசாங்கங்கள் ஒழிக்கப்பட்ட ஒரு கட்டத்துக்கு முன்னேறியதும், அங்கு எந்த விதமான யுத்தங்களும் இருக்க மாட்டா. எதிர்ப்புரட்சி யுத்தங்களோ, புரட்சி யுத்தங்களோ, அநீதியான யுத்தங்களோ, நீதியான யுத்தங்களோ இருக்க மாட்டா. இது மனிதகுலத்துக்கு நித்திய சமாதான சகாப்தமாக இருக்கும். புரட்சி யுத்தங்களின் விதிகள் பற்றிய நமது படிப்பு எல்லா யுத்தங்களையும் ஒழிக்கும் நமது ஆசையிலிருந்து தோன்றுகின்றது; கம்யூனிஸ்டுகளாகிய நம்மையும் எல்லா சுரண்டும் வர்க்கங்களையும் வேறுபடுத்திக்

காட்டும் எல்லைக்கோடு இதுவே.

''சீன புரட்சி யுத்தத்தில் யுத்த தந்திரப் பிரச்சினைகள்'' (டிஸம்பர். 1936.) தே. ப. தொ. 1.

நமது நாடும் இதர சோஷலிஸ நாடுகள் அனைத்தும் சமாதானத்தை விரும்புகின்றன. உலகின் பல்வேறு நாட்டு மக்களும் சமாதானத்தை விரும்புகின்றனர். யுத்தத்துக்காக ஏங்கி நிற்பவர்கள், சமாதானத்தை விரும்பாதவர்கள், லாபத்துக்காக ஆக்கிரமிப்பைச் சார்ந்து நிற்கும் விரல் விட்டெண்ணக் கூடிய ஏகாதிபத்திய நாடுகளின் ஒருசில ஏகபோக முதலாளித்துவக் கும்பல்கள் தான்.

''சீன கம்யூனிஸ்ட் கட்சி 8வது தேசிய மாநாட்டின் ஆரம்ப உரை'' (15. செப்டம்பர். 1956.)

நிரந்தர உலக சமாதானத்தைப் பெற வேண்டுமானுல், சோஷலிஸ முகாமிலுள்ள சகோதர நாடுகளுடன் நமது நட்புறவையும் ஒத்துழைப்பையும் நாம்

மேலும் விருத்தி செய்ய வேண்டும்; சமாதானம் விரும்பும் எல்லா நாடுகளுடனும் நமது ஐக்கியத்தைப் பலப்படுத்த வேண்டும். நம்முடன் சமாதானமாக வாழ விரும்பும் எல்லா நாடுகளுடனும், ஆதிபத்திய ஒருமைக்கும் அரசுரிமைக்கும் பரஸ்பரம் மதிப்புக் கொடுப்பது, சமத்துவம், பரஸ்பர நலன் என்ற அடிப்படையில், நாம் சகஜமான ராஜிய தந்திர உறவுகளை அமைக்கப் பாடுபட வேண்டும். பல்வேறு ஆசிய, ஆபிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகளின் தேசிய சுதந்திர இயக்கத்துக்கும், விடுதலை இயக்கத்துக்கும், அது போல, உலக நாடுகள் எல்லாவற்றின் சமாதான இயக்கத்துக்கும், நீதியான போராட்டங்களுக்கும் நாம் ஊக்கமான ஆதரவு அளிக்க வேண்டும்.

ஷை

ஏகாதிபத்திய நாடுகளைப் பொறுத்தவரையில், நாம் அவற்றின் மக்களுடன் ஐக்கியப்பட வேண்டும்; அவற்றுடன் சமாதான சகவாழ்வு நடத்தப் பாடுபட வேண்டும்; வர்த்தகம் செய்ய வேண்டும்; சாத்தியமான எந்த யுத்தத்தையும் தடுக்க வேண்டும். ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவை பற்றி யதார்த்தத்துக்கு ஒவ்வாத எவ்வித கருத்தும் கொள்ளக் கூடாது.

''மக்கள் மத்தியில் முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது பற்றி'' *(27. பெப்ரவரி. 1957.)*

நாம் சமாதானத்தை விரும்புகின்றோம். ஆனால் ஏகாதிபத்தியம் ஒரு போரை நடத்துவதில் அழுங்குப் பிடியாக நின்றால், நாமும் உறுதியான தீர்மானத்துடன் போரை நடத்திவிட்டு, பின்னர் நிர்மாணத்தில் ஈடுபடுவதன்றி, வேறு வழியில்லை. நீ தினம் தினம் யுத்தத்துக்கு அஞ்சினால், பின்னர் யுத்தம் வரும் போது யாது செய்வாய்? கீழ்க்காற்று மேல் காற்றை வெல்கிறது, யுத்தம் வெடிக்க

மாட்டாது என்று நான் முதலில் கூறினேன். இப்பொழுது யுத்தம் வெடித்தால் ஏற்படும் நிலைமை பற்றி இந்த விளக்கங்களை மேலும் கொடுத்துள்ளேன். இவ்வாறு, இரண்டு சாத்தியப்பாடுகளும் கணக்கில் எடுக்கப்பட்டுள்ளன.

கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் மாஸ்கோ மாநாட்டு உரை (18. நவம்பர். 1957.)

இப்பொழுது உலகில் பல்வேறு நாட்டு மக்களும், மூன்றாவது உலக மகா யுத்தம் வெடிக்குமா, இல்லையா என்பது பற்றி விவாதிக்கின்றார்கள். இந்தப் பிரச்சினையில் கூட, நாம் ஆத்மீகரீதியில் தயாராக இருந்து, சற்று ஆராய வேண்டும். நாம் சமாதானத்தில் அழுத்தமாக நிற்கிறோம். யுத்தத்தை எதிர்க்கிறோம். ஆனால், ஏகாதிபத்தியவாதிகள் யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுவதில் பிடிவாதமாக நின்றால், நாமும் அதற்கு அஞ்ச மாட்டோம். இந்தப் பிரச்சினையில் நமது மனோபாவம், இதர எந்தக் ''குழப்பத்திலும்'' நாம் கொள்ளும் அதே மனோபாவமாகும். முதலாவது, நாம் அதை எதிர்க்கிறோம்; இரண்டாவது, நாம் அதற்கு அஞ்சவில்லை. முதலாவது உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து, 20 கோடி ஜனத்தொகையுடைய சோவியத் யூனியன் பிறந்தது. இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின், மொத்தம் 90 கோடி ஜனத்தொகையுடைய ஒரு சோஷலிஸ முகாம் தோன்றியது. ஏகாதிபத்தியவாதிகள் மூன்றாவது உலக மகா யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுவதில் அழுங்குப் பிடியாய் நின்றால், மேலும் பல பத்துக் கோடி மக்கள் சோஷலிஸத்துக்கு மாறுவர், ஏகாதிபத்தியவாதிகளுக்கு உலகில் அதிக இடம் இருக்காது என்பது நிச்சயம். ஏகாதிபத்திய அமைப்பு முழுவதும் பூரணமாகத் தகர்ந்து போவது கூடச் சாத்தியம்.

''மக்கள் மத்தியில் முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது பற்றி'' (27. பெப்ரவரி. 1957.)

தொல்லை கொடுப்பது, தோல்வி அடைவது, மீண்டும் தொல்லை, மீண்டும் தோல்வி . . . தமது அழிவு வரை. இது மக்களின் லட்சியத்தைக் கையாள்வதில் ஏகாதிபத்தியவாதிகளும் உலகப் பிற்போக்குவாதிகளும் மேற்கொள்ளும் தர்க்கம். அவர்கள் ஒருபோதும் இந்தத் தர்க்கத்துக்கு விரோதமாகச் செல்ல மாட்டார்கள். இது ஒரு மார்க்ஸிஸ விதி. ''ஏகாதிபத்தியம் பயங்கரமானது'' என்று நாம் கூறும் போது, அதன் இயல்பு ஒரு போதும் மாறுது, ஏகாதிபத்தியவாதிகள் தமது கசாப்புக்கடைக் கத்திகளைக் கீழே போட மாட்டார்கள், தாம் அழியும் வரை புத்தர்களாக மாற மாட்டார்கள் என்று நாம் கருதுகின்றோம்.

போராட்டம், தோல்வி, மீண்டும் போராட்டம், மீண்டும் தோல்வி, மீண்டும் போராட்டம். . .தமது வெற்றி வரை. இது தான் மக்களின் தர்க்கம். அவர்களும் இந்தத் தர்க்கத்துக்கு எதிராகச் செல்ல மாட்டார்கள். இது இன்னொரு மார்க்ஸிஸ விதி. ரஷிய மக்களின் புரட்சி இந்த விதியைப் பின்பற்றியது. அப்படியே சீன மக்களின் புரட்சியும் இவ்விதியைப் பின்பற்றுகின்றது.

''பிரேமைகளை வீசியெறிந்து, போராடத் தயாராகுங்கள்!'' (14. ஆகஸ்ட். 1949.) தே. ப. தொ. 4.

நாம் வெற்றி பெற்றதன் காரணமாக, ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களுடைய வேட்டைநாய்களும் பழிவாங்குவதற்குப் போடும் பைத்தியகாரத்தனமான சூழ்ச்சிகளுக்கு எதிராக நமது விழிப்புணர்வை ஒருபோதும் தளர்த்திவிடக் கூடாது. யார் தமது விழிப்புணர்வைத் தளர்த்துகிறுரோ, அவர் தம்மை அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்கி, தம்மை ஒரு செயலற்ற நிலைக்குள் தள்ளிவிடுவார்.

''புதிய அரசியல் கலந்தாலோசனை மாநாட்டின் தயாரிப்புக் கமிட்டியில் ஆற்றிய உரை'' (15. ஜுன். 1949.) தே. ப. தொ. 4.

ஏகாதிபத்தியவாதிகளும் அவர்கள் வேட்டைநாய்களான சீன பிற்போக்குவாதிகளும் இந்தச் சீன மண்ணில் தாம் அடைந்த தோல்வியை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் சீன மக்களை எதிர்க்க சாத்தியமான எல்லா வழிகளிலும் மீண்டும் கூட்டுச் சேர்வார்கள். உதாரணமாக, வேற்றுமைகளை விதைக்கவும், தொல்லைகள் கொடுக்கவும் அவர்கள் தமது ஏஜண்டுகளைச் சீனுவுக்குள் அனுப்புவர். இது நிச்சயம்; இந்த நடவடிக்கைகளை அவர்கள் ஒருபோதும் மறந்துவிட மாட்டார்கள். இன்னெரு உதாரணத்தை எடுத்தால், ஏகாதிபத்தியவாதிகள் சீன பிற்போக்குவாதிகளைத் தூண்டிவிட்டு, தமது சொந்தப் படைகளைக் கூட அனுப்பி, சீனுவின் துறைமுகங்களை முற்றுகையிடுவர். சாத்தியமான காலம் வரை அவர்கள் இப்படிச் செய்வர். மேலும், துணிச்சல்வாத நடவடிக்கைகளில் இறங்க விரும்பினுல், சீனுவின் எல்லைப் பிரதேசங்களை ஆக்கிரமிக்கவும், அதன் எல்லைகளில் தொல்லை கொடுக்கவும் தமது படைகளில் ஒரு பகுதியை அனுப்புவர். இது கூட அசாத்தியமானதல்ல. இவை எல்லாவற்றையும் நாம் பூரணமாகக் கணக்கில் எடுக்க வேண்டும்.

ஷை

உலகம் முன்னேறுகின்றது; எதிர்காலம் பிரகாசமாய் இருக்கின்றது. வரலாற்றின் இப்போது ஓட்டத்தை எவராலும் மாற்ற முடியாது. வெற்றியில் மக்களின் நம்பிக்கையை வளர்ப்பதற்காக, உலக முன்னேற்றத்தின் நிலைமை பற்றியும், பிரகாசமான எதிர்காலம் பற்றியும் நாம் மக்கள் மத்தியில் இடைவிடாது பிரசாரம் செய்ய வேண்டும்.

''சுங்கிங் பேச்சுவார்த்தைகள் பற்றி'' (17. அக்டோபர். 1945.)
தே. ப. தொ. 4.

சீன மக்கள் விடுதலைச் சேனையின் தளபதிகள், போராளிகள் அனைவரும் தமது

போராட்ட திடசித்தத்தைச் சிறிதளவே னும் தளர்த்திவிடக் கூடாது. போராட்ட திடசித்தத்தைத் தளர்த்துகின்ற, எதிரி யைக் குறைத்து மதிப்பிடுகின்ற எந்தச் சிந்தனையும் தவறானது.

''சீன கம்யூனிஸ்ட் கட்சி 7வது மத்திய கமிட்டியின் 2வது பிளீனக் கூட்டத்தின் அறிக்கை'' (5. மார்ச். 1949.) தே. ப. தொ. 4.

6. ஏகாதிபத்தியவாதிகளும் எல்லா பிற்போக்குவாதிக ளும் கடதாசிப் புலிகள்

எல்லா பிற்போக்குவாதிகளும் கடதா சிப் புலிகள். தோற்றத்தில் பிற்போக் குவாதிகள் பயங்கரமானவர்கள். ஆனால் யதார்த்தத்தில் அவ்வளவு பலமுடைய வர்கள் அல்ல. நீண்டகால நோக்கிலி ருந்து பார்த்தால், உண்மையில் பலமு டையவர்கள் பிற்போக்குவாதிகள் அல்ல, மக்களே ஆவர்.

''அமெரிக்க நிருபர் அன்னா லூயிஸ் ஸ்ட்ரோங்குடன் நிகழ்த்திய சம்பா ஷணை'' (ஆகஸ்ட். 1946.) தே. ப. தொ. 4.

உலகில் இரட்டைத் தன்மை இல்லாத ஒரு விஷயமேனும் இல்லை. (இது எதிர் மறைகளின் ஒற்றுமை சம்பந்தமான விதி யாகும்). அது போல, ஏகாதிபத்தி யமும் எல்லா பிற்போக்கு சக்திகளும் கூட இரட்டைத் தன்மை உடையவை. அவை ஏககாலத்தில் நிஜப்புலிகளாகவும், கடதாசிப் புலிகளாகவும் இருக்கின்றன. வரலாற்றில் அடிமைச் சொந்தக்கார வர்க் கம், பிரபுத்துவ நிலச்சுவாந்தார் வர்க் கம், பூர்ஜுவா வர்க்கம் எல்லாம், தாம் அரசாங்க அதிகாரத்தைப் பெறுவதற்கு முன்னும், பெற்ற பின் ஒரு குறிப்பிட்ட காலம் வரையும், உக்கிரமானவையாக, புரட்சிகரமானவையாக, முற்போக்கா னவையாக இருந்தன; நிஜப்புலிகளாக இருந்தன. ஆனால் காலப்போக்கில், அவற்றின் எதிர்மறைகள் — அடிமை வர்க்கம், விவசாயி வர்க்கம், பாட்டாளி வர்க்கம் ஆகியவை — படிப்படியாகப் பலத்தில் மேம்பட்டு, அவற்றை எதிர்த்து மென்மேலும் பயங்கரமாகப் போராடிய

தன் காரணமாக, இந்த ஆளும் வர்க் கங்கள் படிப்படியாய் தம்மில் மாறுன வையாக மாறின; பிற்போக்கானவையாக மாறின; பின்தங்கிய நபர்களாக மாறின; கடதாசிப் புலிகளாக மாறின. இறுதி யில் மக்களால் தூக்கியெறியப்பட்டன அல்லது தூக்கியெறியப்பட இருக்கின்றன. பிற்போக்கான, பின்தங்கிய, உளுத்துப் போன வர்க்கங்கள் மக்களுக்கு எதிரான தமது ஜீவமரணப் போராட்டத்தின் போது கூட இந்த இரட்டைத் தன்மை யைப் பெற்றிருக்கின்றன. ஒருபுறம் அவை நிஜப்புலிகள்; மக்களைத் தின்றன; லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் தின் றன. மக்களின் போராட்ட லட்சி யம் கஷ்டநஷ்டங்களின் காலகட்டத்துக் கூடாகச் சென்றது. பாதையில் வளைவு சுளிவுகள் காணப்பட்டன. சீனுவில் ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், அதி கார முதலாளித்துவம் ஆகியவற்றின் ஆட்சியை ஒழித்துக் கட்ட சீன மக்கள் 100 ஆண்டுகளுக்கு மேல் செலவழித்த

னர். கோடிக்கணக்கான உயிர்களைப் பலியாகக் கொடுத்து, 1949ல் வெற்றி பெற்றனர். பாருங்கள்! அவை உயிர்ப் புலிகள், இரும்புப் புலிகள், நிஜப்புலிகள் இல்லையா? ஆனால் இறுதியில் அவை கடதாசிப் புலிகள், செத்த புலிகள், அல்வா புலிகள் ஆகிவிட்டன. வரலாற்று உண்மைகள் இவை. இந்த உண்மைகளை மக்கள் கண்டும் கேட்டும் அறியவில்லையா? இதற்குப் பல ஆயிரம், பல பத்தாயிரம் சான்றுகள் உண்டு. ஆம், பல்லாயிரம், பல பத்தாயிரம்! எனவே, சாராம்சத்தில் பார்த்தால், நீண்டகால நோக்கிலிருந்து, யுத்ததந்திரக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், கடதாசிப் புலிகள் என்ற அவற்றின் உண்மையான இயல்பில் வைத்து ஏகாதிபத்தியமும் எல்லா பிற்போக்குவாதிகளும் நோக்கப்பட வேண்டும். இந்தக் கருத்தில் தான் நாம் நமது யுத்ததந்திர சிந்தனையைக் கட்டி அமைக்கின்றோம். மறுபுறம், அவை மக்களைத் தின்னக் கூடிய உயிர்ப் புலிகள்,

இரும்புப் புலிகள், நிஜப்புலிகள் ஆகவும் இருக்கின்றன. இதில் நமது தந்திரோபாய சிந்தனையைக் கட்டி அமைக்கிறோம்.

சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி அரசியல் குழுவின் வூசாங் கூட்டத்து உரை (1. டிஸம்பர். 1958.) ''அமெரிக்க நிருபர் அன்னா லூயிஸ் ஸ்ட்ரோங்குடன் நிகழ்த்திய சம்பாஷணை''யின் விளக்கக் குறிப்பில் மேற்கோள், தே. ப. தொ. 4.

பலமுடையவர்கள் என்று புகழப்படும் பிற்போக்குவாதிகள் அனைவரும் கடதாசிப் புலிகளே என்று நான் கூறினேன். காரணம், அவர்கள் மக்களிடமிருந்து பிரிந்தவர்கள். பாருங்கள்! ஹிட்லர் ஒரு கடதாசிப் புலி இல்லையா? ஹிட்லர் தூக்கியெறியப்படவில்லையா? ரஷியாவின் ஸார் ஒரு கடதாசிப் புலி; சீனாவின் சக்கரவர்த்தி ஒரு கடதாசிப் புலி; யப்பானிய ஏகாதிபத்தியம் ஒரு கடதாசிப் புலி என்றும் நான் கூறினேன். பாருங்கள்! அவர்கள் எல்லாரும் தூக்கியெறியப்

பட்டு விட்டனர். அமெரிக்க ஏகாதிபத்தியம் இன்னும் தூக்கியெறியப்படவில்லை. அதனிடம் அணுக்குண்டும் இருக்கின்றது. அது கூட தூக்கியெறியப்படும் என்று நான் நம்புகின்றேன். அதுவும் ஒரு கடதாசிப் புலியே.

கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் மாஸ்கோ மாநாட்டு உரை (18. நவம்பர். 1957.)

''கல்லொன்றைத் தூக்கி தன் காலில் போடுவது'' என்பது குறிப்பிட்ட சில முட்டாள்களின் செயல்களை வருணிப்பதற்குச் சீன மக்கள் உபயோகிக்கும் ஒரு முதுமொழி. சகல நாட்டுப் பிற்போக்குவாதிகளும் இத்தகைய முட்டாள்களே. புரட்சிகர மக்களுக்கு எதிரான அவர்களின் அடக்குமுறைகள் அனைத்தும், இறுதியாக ஆராய்ந்து பார்த்தால், மக்களின் புரட்சிகளை மேலும் விசாலமான, மேலும் தீவிரமான அளவில் வளர்ப்பதற்கு மாத்திரம் துணை செய்யும். ரஷியாவின்

ஸாரும், சியாங் கை-ஷேக்கும் புரட்சிகர மக்களுக்கு எதிராக நடத்திய அடக்குமுறைகள் அனைத்தும் மகத்தான ரஷிய புரட்சியிலும், மகத்தான சீன புரட்சியிலும் இத்தகைய பாத்திரத்தை வகிக்கவில்லையா?

''மகத்தான அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் 40வது ஆண்டு நிறைவு விழாவின் போது சோவியத் யூனியன் உயர்தர சோவியத் கூட்டத்தில் ஆற்றிய உரை'' (6. நவம்பர். 1957.)

கடந்த ஒன்பது ஆண்டுகளாக அமெரிக்க ஏகாதிபத்தியம் சீன பிரதேசமான தைவானை ஆக்கிரமித்து, இடங்கொண்டிருக்கின்றது. குறுகிய காலத்துக்கு முன் அது லெபனானை ஆக்கிரமித்து இடங்கொள்ள அதன் துருப்புகளை அனுப்பியுள்ளது; உலகம் பூராவும் உள்ள பல நாடுகளில் அமெரிக்கா பல நூறு ராணுவத் தளங்களை அமைத்திருக்கின்றது. சீன

பூமியான தைவான், லெபனுன், அந்நிய நாடுகளிலுள்ள அமெரிக்க ராணுவத் தளங்கள் ஆகியவை எல்லாம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கழுத்திலுள்ள சுருக்குக் கயிறுகள் ஆகும். வேறுயாருமல்ல, அமெரிக்கர் தான், இந்தச் சுருக்குக் கயிறுகளை உண்டாக்கி, அவற்றைத் தமது சொந்தக் கழுத்தில் மாட்டி, அவற்றின் அந்தலைகளைச் சீன மக்கள், பல்வேறு அரபிய நாட்டு மக்கள், சமாதானத்தை நேசித்து ஆக்கிரமிப்பை எதிர்க்கும் உலக மக்கள் எல்லாரிடமும் கொடுத்துள்ளார்கள். அமெரிக்க ஆக்கிரமிப்பாளர் இந்த இடங்களில் தங்கியிருக்கும் காலம் எவ்வளவுக்கு நீடிக்கின்றதோ, அவ்வளவுக்கு அவர்கள் கழுத்திலுள்ள சுருக்குக் கயிறுகளும் இறுக்கமாகி வரும்.

உயர்தர அரசாங்க மாநாட்டில் ஆற்றிய உரை (8. செப்டம்பர். 1958.)

ஏகாதிபத்தியம் நீண்டகாலம் வாழ

மாட்டாது. காரணம், அது எப்பொழுதும் தீமைகளே செய்கின்றது. சகல நாடுகளிலும் மக்களுக்கு எதிரான பிற்போக்குவாதிகளை எப்பொழுதும் போஷித்து வளர்த்து வருகின்றது. பெருந்தொகையான காலனிகள், அரை-காலனிகள், ராணுவத் தளங்கள் ஆகியவற்றைப் பலாத்காரமாக இடங்கொண்டு, அணு ஆயுத யுத்தத்தால் சமாதானத்தை அச்சுறுத்துகின்றது. இவ்வாறு ஏகாதிபத்தியத்தால் நிர்ப்பந்திக்கப்பட்ட உலக மக்களில் 90 வீதத்துக்கு மேலானோர் அதற்கெதிரான போராட்டத்தில் எழுகின்றுர்கள் அல்லது எழ இருக்கின்றுர்கள். ஆனுல் ஏகாதிபத்தியம் இன்னும் உயிரோடு இருக்கின்றது. ஆசிய, ஆபிரிக்க, லத்தின் அமெரிக்க பிரதேசங்களில் அது இன்னும் தனிக்காட்டு ராஜா போல் வலம் வருகின்றது. மேற்கு உலகிலும் அது தனது சொந்த நாட்டு மக்களை அடக்கி ஒடுக்குகின்றது. இத்தகைய நிலைமை நிச்சயம் மாற வேண்டும். ஏகாதிபத்தியத்

தின், பிரதானமாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக்கும் ஒடுக்கு முறைக்கும் முடிவு கட்டுவது அனைத்துலக மக்களின் கடமையாகும்.

ஸின்ஹுவா செய்தி நிறுவன நிருபருக்கு அளித்த பேட்டி (29. செப்டம்பர். 1958.)

அமெரிக்க ஏகாதிபத்தியம் எங்கும் தனிக்காட்டு ராஜா போல் வலம் வந்து, தன்னை உலக மக்களனைவரின் எதிரியாக்கி, தன்னை மென்மேலும் தனிமைப்படுத்தியுள்ளது. அடிமைப்படுத்தப்பட விரும்பாத எவரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைகளிலுள்ள அணுக்குண்டுகளுக்கோ, ஜலவாயுக் குண்டுகளுக்கோ அஞ்சமாட்டார்கள். அமெரிக்க ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான உலக மக்களின் கோப அலைகள் தடுக்கப்பட முடியாதவை. அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் அதன் அடிவருடிகளுக்கும் எதிரான உலக மக்களின் போராட்டம் மேலும் மகத்தான

வெற்றிகளைப் பெறுவது நிச்சயம்.

''அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் பனாமா மக்களின் நீதியான தேசபக்த போராட்டத்துக்கு ஆதரவான அறிக்கை'' (12. ஜனவரி. 1964.)

அமெரிக்க ஏகபோக முதலாளித்துவக் கும்பல்கள் தமது ஆக்கிரமிப்பு, யுத்தக் கொள்கைகளை முன்னடத்துவதில் அழுங்குப் பிடியாய் நின்றால், உலக மக்கள் அனைவரும் அவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கும் நாள் நிச்சயம் வரும். அமெரிக்காவின் சகபாடிகளுக்கும் இதே கதி தான் காத்திருக்கின்றது.

உயர்தர அரசாங்க மாநாட்டில் ஆற்றிய உரை (8. செப்டம்பர். 1958.)

எதிரியை எதிர்க்கும் போராட்டத்துக்காக, நாம் ஒரு நீண்ட காலகட்டத்தில் பின்வரும் கருத்தை வளர்த்துள்ளோம்:-

யுத்ததந்திரரீதியில் நாம் எல்லா எதிரிகளையும் துச்சமாக மதிக்க வேண்டும்; தந்திரோபாயரீதியில் நாம் அவர்களைப் பாரதூரமாக எடுக்க வேண்டும். அதன் அர்த்தம் முழுப்படியாக நோக்கும் போது நாம் எதிரியைத் துச்சமாக மதிக்க வேண்டும்; ஆனால் ஸ்தூலமான ஒவ்வொரு பிரச்சினையிலும் நாம் அவனைப் பாரதூரமாக எடுக்க வேண்டும். முழுப்படியாக நோக்கும் போது நாம் எதிரியைத் துச்சமாக மதியாவிட்டால், நாம் சந்தர்ப்பவாதத் தவறு இழைத்தவர்கள் ஆவோம். மார்க்ஸும் எங்கெல்ஸும் இரண்டு தனி நபர்களாக இருந்த போதிலும், உலகம் முழுவதிலுமிருந்து முதலாளித்துவம் தூக்கியெறியப்படும் என்று அந்தக் காலத்திலேயே பிரகடனம் செய்தார்கள். ஆனால் ஸ்தூலமான பிரச்சினைகளில், ஒவ்வொரு எதிரியையும் பொறுத்தவரையில், நாம் அவர்களைப் பாரதூரமாக எடுக்காவிட்டால், நாம் துணிச்சல்வாதத் தவறு இழைத்தவர்கள் ஆவோம். யுத்தத்தில்

சமர்கள் ஒவ்வொன்றாகத் தான் நடத்தப்பட முடியும். எதிரிகள் ஒவ்வொருவராகத் தான் ஒழிக்கப்பட முடியும். தொழிற்சாலைகள் ஒவ்வொன்றாகத் தான் கட்டப்பட முடியும். விவசாயிகள் நிலத்தைத் துண்டு துண்டாகத் தான் உழ முடியும். ஒரு சாப்பாட்டைப் பொறுத்தவரையில் கூட இது பொருத்தமாகும். யுத்ததந்திரரீதியில் நாம் உணவு உண்பதை லேசாக எடுக்கின்றோம். அதைத் தின்று முடிக்க முடியும் என்பதை நாம் அறிவோம். ஆனால் யதார்த்தத்தில் அதை உண்ணும் போது, கவளம் கவளமாக உண்கிறோம். ஒரு விருந்து முழுவதையும் ஒரே வாயில் விழுங்கி விடுவது அசாத்தியம். இது பகுதி பகுதியாகத் தீர்வு காண்பது என்றும், ராணுவ விஞ்ஞானத்தில் எதிரிப் படைகளை ஒவ்வொன்றாக ஒழிப்பது என்றும் கூறப்படுகின்றது.

கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் மாஸ்கோ மாநாட்டு உரை (18. நவம்பர். 1957.)

சர்வதேசிய சூழ்நிலை இன்று ஒரு புதிய திருப்புமையத்தை அடைந்துள்ளது என்பது எனது அபிப்பிராயம். இன்று உலகில் கீழ்க்காற்று, மேல் காற்று என இரண்டு காற்றுகள் வீசுகின்றன. ''ஒன்றில் கீழ்க்காற்று மேல் காற்றை வெல்ல வேண்டும், அல்லது மேல் காற்று கீழ்க் காற்றை வெல்ல வேண்டும்'' என்பது ஒரு சீன பழமொழி. கீழ்க்காற்று மேல் காற்றை வெல்வது தான் இன்றைய நிலைமையின் குணும்சம் என நான் கருதுகின்றேன். அதாவது சொல்லின், சோஷலிஸ சக்திகள் ஏகாதிபத்திய சக்திகளை வெல்லும் பூரண மேம்பாடுடையவையாக மாறிவிட்டன.

ஷ

7. போராடத் துணியுங்கள்! வெற்றி பெறத் துணியுங்கள்!

உலக மக்களே, ஒன்றுபட்டு, அமெரிக்க ஆக்கிரமிப்பாளரையும், அவர்கள் அடிவருடிகளையும் தோற்கடியுங்கள்! உலக மக்களே, தைரியமாய் இருந்து, துணிந்து போராடி கஷ்டங்களைத் துச்சமாக மதித்து, அலையலையாக முன்னேறுங்கள்! அப்பொழுது உலகம் முழுவதும் மக்களுக்கே உரியதாகும். எல்லா விதமான பிசாசுகளும் நிச்சயம் ஒழிக்கப் படும்.

''அமெரிக்க ஆக்கிரமிப்புக்கெதிரான (லி) காங்கோ மக்களை ஆதரிக்கும் அறிக்கை'' *(28. நவம்பர். 1964.)*

சீன கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிஸம்-லெனினிஸ விஞ்ஞானத்தின் அடிப்படையில் சர்வதேசிய, தேசிய நிலைமைகளைத் தெளிந்த சிந்தையுடன் மதிப்பீடு செய்து, எல்லா உள்நாட்டு வெளிநாட்டு பிற்போக்குவாதிகளின் தாக்குதல்களும் தோற்கடிக்கப்பட வேண்டும், தோற்கடிக்கப்படவும் முடியும் என்பதை உணர்ந்து கொண்டது. வானத்தில் கருமுகில்கள் தோன்றிய போது, இவை தற்காலிகமானவையே, இருள் விரைவில் நீங்கும், சூரியன் இதோ தோன்றுவான் என்று நாம் சுட்டிக்காட்டினோம்.

''இன்றைய நிலைமையும் நமது கடமைகளும்'' (25. டிஸம்பர். 1947.) தே. ப. தொ. 4.

மனித வரலாற்றில் அழிவின் விளிம்பிலுள்ள எல்லா பிற்போக்கு சக்திகளும் புரட்சி சக்திகளுக்கு எதிராக நிர்க்கதியான இறுதிப் போராட்டம் ஒன்றை நடத்துவது வழக்கம். ஆனால் புரட்சிவாதிகள் சிலர் தோற்றத்தளவில் பலமாகவும், உள்ளூரப் பலவீனமாகவும் இருக்கும் இந்தத் தோற்றப்பாட்டால் தற்காலிகமாக ஏமாந்து, எதிரி அழிவைக் கிட்டி வரும் அதே வேளையில், தாம் வெற்றியை நோக்கி முன்னேறும் உண்மையைக் காணத் தவறிவிடுகின்றனர்.

''இரண்டாவது உலக மகா யுத்தத்தில் திருப்புமையம்'' (12. அக்டோபர். 1942.) தே. ப. தொ. 3.

அவர்கள் போர் தொடுத்தால், அவர்களைப் பூரணமாகத் துடைத்தொழிப்போம். விஷயங்கள் இப்படித் தான் இருக்கின்றன:- அவர்கள் தாக்கினால் நாம் அவர்களைத் துடைத்தொழிப்போம், அவர்களுக்கு அந்தத் திருப்தி கிடைக்கும். கொஞ்சமாக அழித்தால், கொஞ்சத் திருப்தி; கூடுதலாக அழித்தால் கூடிய திருப்தி; பூரணமாக அழித்தால் பூரண திருப்தி. சீனாவின் பிரச்சினைகள் சிக்கலானவை. நமது மூளைகளும் சிறிது சிக்க

லானவையாய் இருக்க வேண்டும். அவர்கள் போரிடத் தொடங்கினுல் நாம் எதிர்த்துப் போரிடுவோம்; சமாதானத்தை வென்றெடுக்கப் போரிடுவோம்.

''சுங்கிங் பேச்சுவார்த்தைகள் பற்றி'' (17. அக்டோபர். 1945.) தே. ப. தொ. 4.

நம்மை யாரேனும் தாக்கினுல், சமருக்கு நிலைமைகள் சாதகமாய் இருந்தால், நாம் நிச்சயம் தற்காப்புக்காகச் செயல்பட்டு, அவனை உறுதியாகவும், துப்புரவாகவும், முற்றுகவும், பூரணமாகவும் ஒழித்துக்கட்டுவோம் (நாம் மூர்க்கத்தனமாகத் தாக்கக் கூடாது. நாம் தாக்கினுல் வெற்றி பெற வேண்டும்). பிற்போக்குவாதிகளின் வெருட்டுக்கு அஞ்சிவிடக் கூடாது.

''கோமிந்தாங்குடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றி — சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் சுற்றறிக்கை'' (26. ஆகஸ்ட். 1945.) தே. ப. தொ. 4.

நமது சொந்த விருப்பத்தைப் பொறுத்தவரை, நாம் ஒரு நாள் கூடப் போரிட விரும்பவில்லை. ஆனுல் சூழ்நிலைகள் நம்மைப் போரிடும் படி நிர்ப்பந்தித்தால், நம்மால் இறுதிவரை போரிட முடியும்.

''அமெரிக்க நிருபர் அன்னு லூயிஸ் ஸ்ட்ரோங்குடன் நிகழ்த்திய சம்பாஷணை'' (ஆகஸ்ட். 1946.) தே. ப. தொ. 4.

நாம் சமாதானத்தை விரும்புகிறோம். ஆனுல், அமெரிக்க ஏகாதிபத்தியம் அதன் செருக்கான, அநியாயமான கோரிக்கைகளையும், ஆக்கிரமிப்பை விஸ்தரிக்கும் சூழ்ச்சிகளையும் கைவிடாத வரையில், சீன மக்களின் ஒரே ஒரு உறுதிப்பாடு கொரிய மக்களுடன் ஒன்றுக நின்று, தொடர்ந்தும் போரிடுவதாகும். இதற்குக் காரணம் நாம் யுத்தப் பிரியர் என்பதல்ல; நாம் யுத்தத்தை உடனடியாக நிறுத்தி, எஞ்சிய பிரச்சினைகளுக்குப் பின்னர் தீர்வு காண விரும்புகின்றோம். ஆனுல் அமெரிக்க

ஏகாதிபத்தியம் அப்படிச் செய்ய விரும்பவில்லை. அப்படியென்ருல் சரி, போர் நடக்கட்டும். அமெரிக்க ஏகாதிபத்தியம் எத்தனை ஆண்டுகள் போரிட விரும்பினுலும், நாமும் அத்தனை ஆண்டுகள் போரிடத் தயாராய் இருக்கிறேம். அமெரிக்க ஏகாதிபத்தியம் போரை நிறுத்த விரும்பும் காலம் வரை, சீன-கொரிய மக்கள் பூரண வெற்றி பெறும் வரை நாம் போரிடத் தயாராய் இருக்கிறேம்.

சீன மக்கள் அரசியல் கலந்தாலோசனை மாநாட்டின் 1வது தேசிய கமிட்டியின் 4வது கூட்டத்து உரை (7. பெப்ரவரி. 1953.)

நம் மத்தியிலுள்ள பலவீனமான சிந்தனை எல்லாவற்றையும் நாம் நீக்க வேண்டும். எதிரியின் பலத்தை அதிகப்படியாக மதிப்பது, மக்களின் பலத்தைக் குறைத்து மதிப்பது போன்ற கருத்துகள் எல்லாம் தவருனவை.

''இன்றைய நிலைமையும் நமது கடமைகளும்'' (25. டிஸம்பர். 1947.) தே. ப. தொ. 4.

அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களும் தேசங்களும் தமது விடுதலைக்கான நம்பிக்கையை ஏகாதிபத்தியத்தினதும் அதன் அடிவருடிகளினதும் ''விவேக''த்தின் மீது வைக்கக் கூடாது. தமது ஐக்கியத்தைப் பலப்படுத்தி, போராட்டத்தில் அழுத்தி நிற்பதன் மூலம் தான் அவர்கள் வெற்றி பெற முடியும்.

''அமெரிக்க-நோ டின் டியம் கும்பல் தென் வியட்நாமை ஆக்கிரமிப்பதையும், அதன் மக்களை வதை செய்வதையும் எதிர்க்கும் அறிக்கை'' (29. ஆகஸ்ட். 1963.)

இந்தத் தேசியரீதியான உள்நாட்டு யுத்தம் எப்பொழுது வெடித்தாலும் பரவாயில்லை, நாம் அதற்கு நன்கு தயாராயிருக்க வேண்டும். அது விரைவில், நாளைக் காலை வந்தாலும் கூட, நாம் தயாராய் இருக்க வேண்டும். இது ஒரு விஷயம். இன்றைய சர்வதேசிய, தேசிய நிலைமைகளில், இந்த உள்நாட்டு யுத்தம்

தற்காலிகமாக ஸ்தலரீதியானதாகவும் சில இடங்களுக்கு மாத்திரம் உரியதாக வும் இருக்கும். இது இரண்டாவது விஷ யம். முதலாவது விஷயம் நாம் தயார் செய்ய வேண்டிய ஒன்றுகும். இரண் டாவது விஷயம் நீண்டகாலமாகவே இருந்துவருகின்றது. சுருங்கச் சொன் ஞல் நாம் தயாராய் இருக்க வேண்டும். தயாராக இருந்தால், எத்தகைய சிக்க லான நிலைமையையும் சரியான முறையில் சமாளிக்க கூடியவர்களாய் இருப்போம்.

''யப்பானிய-எதிர்ப்பு யுத்த வெற் றிக்குப் பிந்திய நிலைமையும் நமது கொள்கையும்'' (13. ஆகஸ்ட். 1945.) தே. ப. தொ. 4.

8. மக்கள் யுத்தம்

புரட்சி யுத்தம் என்பது பொதுமக்க ளின் யுத்தம். பொதுமக்களைத் தட்டி யெழுப்பி, அவர்களைச் சார்ந்திருந்தால் தான் இந்த யுத்தத்தை நடத்த முடியும்.

''பொதுமக்களின் நல்வாழ்வில் அக்கறை கொள், வேலைமுறை களில் கவனம் செலுத்து'' (27. ஜனவரி. 1934.) தே. ப. தொ. 1.

உண்மையான இரும்புக் கோட்டை யாது? பொதுமக்கள், புரட்சியை உண்மையாகவும், விசுவாசமாகவும் ஆத ரிக்கும் லட்சோப லட்சம் பொதுமக்களே ஆவர். இது தான் உண்மையான இரும்புக் கோட்டை ஆகும். இதை எந் தச் சக்தியாலும் உடைப்பது சாத்திய

மாகாது, முற்றிலும் சாத்தியமாகாது. எதிர்ப்புரட்சி நம்மை நசுக்க முடியாது. மாறாக, எதிர்ப்புரட்சியை நம்மால் நசுக்க முடியும். புரட்சிகர அரசாங்கத்தைச் சூழ லட்சோப லட்சம் மக்களையும் அணி திரட்டி, நமது புரட்சி யுத்தத்தை விரி வாக்கி, எதிர்ப்புரட்சி முழுவதையும் ஒழித்துக்கட்டி, சீனு முழுவதையும் நாம் கைப்பற்றுவோம்.

ஷி

யுத்தத்தை நடத்தும் பேராற்றலின் செழுமையான ஊற்று மூலம் பொதுமக் கள் மத்தியில் தான் இருக்கின்றது. யப் பான் நம்மை இம்சிக்கத் துணியும் கார ணம், பிரதானமாக சீன மக்கள் ஸ்தா பனரீதியாக அணிதிரட்டப்படாததே ஆகும். இந்தக் குறைபாடு ஒருகால் திருத் தப்பட்டதும், யப்பானிய ஆக்கிரமிப்பா ளன் எழுந்து நிற்கும் நமது கோடானு கோடி மக்களாலும் சுற்றிவளைக்கப்படு வான். அவன் நெருப்புச் சுவாலைக்குள் பாய்ந்த வெறிமாடு போல், நாம் இடும் சத்தத்தால் அச்சுறுத்தப்பட்டு எரிந்து இறந்து விடுவான்.

''நீண்டகால யுத்தம் பற்றி''
(மே. 1938.) தே. ப. தொ. 2.

ஏகாதிபத்தியவாதிகள் நம்மை எவ்வ ளவு இம்சிக்கிறார்கள்! நாம் இதைப் பார தூரமாக எடுப்பது அவசியம். நாம் பலம் வாய்ந்த நிரந்தரப் படையை மாத்திர மல்ல, குடிப்படைப் பிரிவுகளையும் பெரு மளவில் ஸ்தாபிக்க வேண்டும். இப்படிச் செய்தால், ஏகாதிபத்தியவாதிகள் நமது நாட்டை ஆக்கிரமிக்கும் போது, அவர்கள் ஒரு அங்குலம் கூட நகர்வது கஷ்டமாக இருக்கும்.

ஸின்ஹுவா செய்தி நிறுவன
நிருபருக்கு அளித்த பேட்டி (29. செப்டம்பர். 1958.)

புரட்சி யுத்தத்தை முழுப்படியாக நோக்கினுல், மக்கள் கொரில்லாக்களும்

செஞ்சேனையின் பிரதான படைகளும் மனிதனின் வலக்கையும் இடக்கையும் போல ஒன்றுக்கொன்று உதவியானவை. நம்மிடம் செஞ்சேனையின் பிரதான படைகள் மாத்திரம் இருந்து, மக்கள் கொரில்லாக்கள் இல்லாவிட்டால், அது ஒரு கை மாத்திரமுடைய படைவீரனுக்குச் சமம். திட்டவட்டமாகச் சொன்னால், விசேஷமாக ராணுவ நடவடிக்கைகளில் தளப்பிரதேச மக்களை ஒரு அம்சமாக நாம் குறிப்பிடும் போது, நம்மிடம் ஆயுதம் தாங்கிய மக்கள் உண்டு என்று நாம் கருதுகின்றோம். எதிரி நமது தளப் பிரதேசத்தை அணுகுவதற்கு அஞ்சும் பிரதான அம்சம் இதுவே ஆகும்.

''சீன புரட்சி யுத்தத்தில் யுத்த தந்திரப் பிரச்சினைகள்'' (டிஸம்பர். 1936.) தே. ப. தொ. 1.

யுத்தத்தின் வெற்றியும் தோல்வியும், பிரதானமாக இருதரப்புகளின் ராணுவ, அரசியல், பொருளாதார, இயற்கை

நிலைமைகளால் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதில் கேள்விக்கே இடமில்லை. இவற்றால் மாத்திரம் நிர்ணயிக்கப்படுவதில்லை. யுத்தத்தை நடத்துவதில் இருதரப்பின் அகத்திறமையாலும் இது நிர்ணயிக்கப் படுகின்றது. ராணுவ யுத்த தந்திரி ஒருவன் ஒரு யுத்தத்தின் வெற்றிக்காக எடுக்கும் தனது முயற்சியில், பொருளாயத சூழ்நிலைகள் போடும் எல்லைகளைத் தாண்ட முடியாது; இருந்தும், இந்த எல்லைகளுக்குள் நின்று, அவன் வெற்றிக்காகப் பாடுபட முடியும், பாடுபடவும் வேண்டும். இராணுவ யுத்த தந்திரியின் செயல் அரங்கு புறநிலை பொருளாயத சூழ்நிலைகளின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ளது. ஆனால் இந்த அரங்கில் அவன் ஒலியும் வண்ணமும், ஆற்றலும் ஆண்மையும் நிறைந்த பல நாடக நிகழ்ச்சிகளை அரங்கேற்ற முடியும்.

ஷை

யுத்தத்தின் நோக்கம் குறிப்பாக ''தன்

ளேப் பாதுகாத்து, எதிரியை அழிப்பதாகும்''. (எதிரியை அழிப்பது என்ருல், அவனே நிராயுதபாணியாக்குவது, அதாவது, ''எதிர்க்கும் ஆற்றலே அவனிடமிருந்து பறிமுதல் செய்வது'' அன்றி, அவனுடைய படைகள் முழுவதையும் பௌதீகரீதியில் அழிப்பது அல்ல). புராதன யுத்த முறையில், ஈட்டியும் கேடயமும் உபயோகிக்கப்பட்டன. அதாவது, எதிரியைத் தாக்கி, அழிப்பதற்கு ஈட்டியும், தன்னேப் பேணி, காப்பதற்குக் கேடயமும் உபயோகிக்கப்பட்டன. இன்றைய காலத்தில் எல்லா ஆயுதங்களும் இவை இரண்டின் வளர்ச்சியாகவே இருக்கின்றன. குண்டு வீசும் விமானம், யந்திரத் துப்பாக்கி, நீண்ட தூரப் பீரங்கி, விஷ வாயு எல்லாம் ஈட்டியின் விருத்திகளாகவும், விமானப்பாதுகாப்பு அகழி, உருக்குக் கவசம், கன்கிறீட் கோட்டை, விஷ வாயு பாதுகாப்பு முகமூடி ஆகியவை கேடயத்தின் விருத்திகளாகவும் விளங்குகின்றன. டாங்கி என்பது ஈட்டி, கேட

யம் இரண்டின் பணிகளும் இணேக்கப்பட்ட ஒரு நவீன ஆயுதம். தாக்குதல் என்பது எதிரியை அழிக்கும் பிரதான சாதனம். ஆனுல் தற்காப்பும் மிக இன்றியமையாத ஒன்ருகும். தாக்குதலில் உடனடி நோக்கம் எதிரியை அழிப்பது. அதே சமயத்தில் அது சுய-பாதுகாப்பாகவும் விளங்குகின்றது. காரணம், எதிரியை அழிக்காவிட்டால், நீ அழிக்கப்படுவாய். தற்காப்பின் உடனடி நோக்கம் தன்னேப் பாதுகாப்பதாகும். ஆனுல் அதே சமயத்தில் தற்காப்பு என்பது தாக்குதலேப் பூர்த்தி செய்யும் ஒரு சாதனமாக அல்லது தாக்குதலுக்கு செல்லும் தயாரிப்புக் கட்டமாகத் திகழ்கிறது. பின் வாங்குவது என்பது தற்காப்பின் வகையைச் சேர்ந்தது; தற்காப்பின் நீடிப்பு. அதே வேளேயில், துரத்துவது தாக்குதலின் நீடிப்பாகும். யுத்தத்தின் ஆதார நோக்கம் எதிரியை அழிப்பது; சுய-பாதுகாப்பு இரண்டாந்தரமானது என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டும். காரணம் பெரும்

தொகையில் எதிரியை அழிப்பதன் மூலம் தான் பயனுள்ள முறையில் தன்னைப் பாதுகாக்க முடியும். எனவே எதிரியை அழிப்பதில் பிரதான சாதனமாக விளங்கும் தாக்குதல் முதன்மையானது. அதே வேளையில் எதிரியை அழிப்பதில் பூர்த்தி செய்யும் சாதனமாக, ஒரு சுய-பாதுகாப்பு சாதனமாக விளங்கும் தற்காப்பு இரண்டாந்தரமானது. உண்மையான யுத்தத்தில், கூடிய அளவு காலம் தற்காப்பும், எஞ்சிய காலம் தாக்குதலும் பிரதான பாத்திரம் வகிக்கின்றன. ஆனால் யுத்தத்தைப் பூரணமாக நோக்கினால், தாக்குதல் முதன்மையானது.

''நீண்டகால யுத்தம் பற்றி''
(மே. 1938.) தே. ப. தொ. 2.

ராணுவ நடவடிக்கைகளை வழிநடத்தும் எல்லா கோட்பாடுகளும், ''தனது சொந்தப் பலத்தைப் பாதுகாக்கவும், எதிரியின் பலத்தை அழிக்கவும் இயன்ற அளவு பாடுபடுவது'' என்ற ஒரு அடிப்படைக் கோட்பாட்டிலிருந்து வளர்கின்றன. . . . அப்படியென்றால், யுத்தத்தில் வீரத்தியாகத்துக்கு ஊக்கமளிப்பதை எப்படி நியாயப்படுத்த முடியும்? ஒவ்வொரு யுத்தமும் ஒவ்வொரு விலையை, சில வேளைகளில் மிக உயர்ந்த விலையைப் பெறுகின்றது. இது ''சுய-பாதுகாப்பு''க்கு முரண்பட்டதில்லையா? உண்மையில் இங்கு முரண்பாடே இல்லை. மேலும் சரியாகச் சொன்னால், தியாகமும் சுய-பாதுகாப்பும் ஒன்றுக்கு எதிரானவையாகவும், ஒன்றை ஒன்று நிறைவு செய்பவையாகவும் விளங்குகின்றன. காரணம், எதிரியை அழிப்பதற்கு மாத்திரமல்ல, தன்னைப் பாதுகாப்பதற்குக் கூட இத்தகைய தியாகம் இன்றியமையாதது; அரை-குறை அல்லது தற்காலிக ''பாதுகாப்பு-இன்மை'' (தியாகம் அல்லது விலைகொடுத்தல்) என்பது பொதுவான, நிரந்தரப் பாதுகாப்புக்குத் தேவையான ஒன்று. இந்த அடிப்படைக் கோட்பாட்டிலிருந்து, ராணுவ நடவடிக்

கைகள் அனைத்தையும் வழிநடத்தும் வரிசை வரிசையான பல கோட்பாடுகள் உதிக்கின்றன; அதாவது, சுடும் கோட்பாடு முதல் (தன்னைப் பாதுகாப்பதற்கு ஒதுக்கிடம் தேடுவதும், சூட்டு ஆற்றலைப் பூரணமாகப் பயன்படுத்தி, எதிரியை அழிப்பதும்) யுத்ததந்திரக் கோட்பாடுகள் வரை எல்லாவற்றிலும் இந்த அடிப்படைக் கோட்பாட்டின் உணர்வு வியாபித்திருக்கின்றது. நுட்பவியல் கோட்பாடுகள் எல்லாம், தந்திரோபாயங்கள், போரியக்கங்கள், யுத்ததந்திரம் சம்பந்தமான கோட்பாடுகள் எல்லாம், இந்த அடிப்படைக் கோட்பாட்டின் பிரயோகமாக விளங்குகின்றன. தன்னைப் பாதுகாப்பது, எதிரியை அழிப்பது இரண்டும் ராணுவக் கோட்பாடுகள் அனைத்தின் அடிப்படையாகும்.

''யப்பானிய-எதிர்ப்பு கொரில்லா யுத்தத்தில் யுத்ததந்திரப் பிரச்சினைகள்'' (மே. 1938.) தே. ப. தொ. 2.

நமது போர் நடவடிக்கைக் கோட்பாடுகள் பின்வருமாறு:-

(1) கலைந்து, தனிமைப்பட்டிருக்கும் எதிரிப் படைகளை முதலில் தாக்குவது; செறிந்த, பலமான எதிரிப் படைகளைப் பின்னர் தாக்குவது.

(2) சிறிய, மத்தியதர நகரங்களையும், விசாலமான கிராமப் பிரதேசங்களையும் முதலில் கைப்பற்றுவது; பெரிய நகரங்களைப் பின்னர் கைப்பற்றுவது.

(3) வினைத்திறனுடைய எதிரியின் படைகளைத் துடைத்தொழிப்பதைப் பிரதான இலக்காகக் கொள்ள வேண்டும். ஒரு நகரை அல்லது இடத்தைப் பாதுகாப்பதை அல்லது கைப்பற்றுவதைப் பிரதான இலக்காகக் கொள்ளக் கூடாது. ஒரு நகரை அல்லது இடத்தைப் பாதுகாப்பது அல்லது கைப்பற்றுவது வினைத்திறனுடைய எதிரிப் படைகளை அழிப்பதன் விளைவாகும். ஒரு நகரை அல்லது

இடத்தைப் பாதுகாப்பதற்கு அல்லது கைப்பற்றுவதற்கு முன், அது பலத டவை கைமாறுவது வழக்கம்.

(4) ஒவ்வொரு சமரிலும் முற்றிலும் மேம்பாடான படைகளை (எதிரியின் பலத்திலும் பார்க்க இரண்டு, மூன்று, நாலு, சில சமயங்களில் ஐந்து அல்லது ஆறு மடங்கு படைகளை) ஒன்று குவிப்பது, எதிரிப் படைகளை நாலு பக்கத்தாலும் சுற்றிவளைப்பது, அவற்றைப் பூரணமாகத் துடைத்தொழிப்பது, வலையிலிருந்து ஒருவரேனும் தப்பி ஓடாமல் பார்த்துக்கொள்வது. விசேஷ நிலைமைகளில், எதிரிக்கு அழிவு தரும் அடிகள் கொடுக்கும் முறையை உபயோகிப்பது; அதாவது, நமது பலம் முழுவதையும் ஒன்று குவித்து எதிரி மீது நேர்முகத் தாக்குதல் அல்லது ஒன்று அல்லது இரண்டு விலாப் புறங்களிலும் தாக்குதல் தொடுத்து, அவனுடைய ஒரு பகுதியைத் துடைத்தொழித்து, இன்னொரு பகுதியைச் சிதறி

ஓடச் செய்வது; இவ்வாறு, நமது படை இதர எதிரிப் படைகளை நசுக்குவதற்கு அதன் துருப்புகளை விரைவாக நகர்த்த முடியும். நாம் பெறுவதிலும் பார்க்கக் கூடுதலாய் இழக்கின்ற அல்லது இருதரப்பும் சமமாக இழக்கின்ற உராய்வுச் சமர்களைத் தவிர்க்கப் பாடுபடுவது. இப்படி செய்தால், முழுமையில் (எண்ணிக்கை அளவில்) நாம் தாழ்ந்தவர்களாய் இருந்தாலும், ஒவ்வொரு பகுதியிலும், குறிப்பிட்ட ஒவ்வொரு போரியக்கத்திலும் நாம் பூரண மேம்பாடுடையவர்களாய் இருப்போம். இது போரியக்கத்தின் வெற்றியை உத்தரவாதம் செய்யும். காலப்போக்கில், முழுமையிலும் நாம் மேம்பாடுடையவர்களாக மாறி, இறுதியில் எதிரிகள் எல்லாரையும் துடைத்தொழிப்போம்.

(5) தயார் செய்யாமல் எந்தச் சமரிலும் போரிடாதே; வெற்றி நிச்சயம் இல்லாத எந்தச் சமரிலும் இறங்காதே;

ஒவ்வொரு சமருக்கும் இயன்றவை அனைத்தையும் செய்து தயாராய் இருக்க வேண்டும்; எதிரிக்கும் நமக்கும் உள்ள அதே நிலைமைகளில் வெற்றியை உத்தரவாதம் செய்ய எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும்.

(6) சமரில் துணிவு, தியாகத்துக்கு அஞ்சாமை, களைப்புக்கு அஞ்சாமை, தொடர்ச்சியாகப் போரிடுவது (அதாவது, ஓய்வு இன்றி குறுகிய காலத்தில் அடுத்தடுத்துச் சமர் பல புரிவது) என்ற நமது போர் நடையைப் பூரணமாக வெளிப்படுத்துவது.

(7) எதிரி இயங்கிக் கொண்டிருக்கும் போது அவனைத் துடைத்தொழிக்கப் பாடுபடுவது; அதே சமயத்தில் நிலைத் தாக்குதல் தந்திரோபாயங்களில் கவனம் செலுத்தி, எதிரியின் அரண்களையும் நகரங்களையும் கைப்பற்றுவது.

(8) நகரங்களைத் தாக்கும் பிரச்சினையில், பலவீனமான காவல்களையுடைய

எதிரியின் அரண்கள், நகரங்கள் எல்லாவற்றையும் உறுதியாகக் கைப்பற்றுவது; சந்தர்ப்பங்கள் வாய்க்கும்போது, சூழ்நிலைகள் அனுமதித்தால் நடுத்தரப் பலத்தால் காவல் செய்யப்பட்டிருக்கும் எதிரியின் அரண்கள், நகரங்கள் எல்லாவற்றையும் கைப்பற்றுவது. பலத்த காவல்களையுடைய எதிரியின் அரண்கள், நகரங்கள் அனைத்தையும் பொறுத்தவரையில், சூழ்நிலைகள் பக்குவம் அடையும் வரை காத்திருந்து அவற்றைக் கைப்பற்றுவது.

(9) எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் எல்லாவற்றையும், ஆட்களில் பெரும்பாலானோரையும் கொண்டு, நமது பலத்தைப் பெருக்குவது. நமது படையின் பிரதான ஆட்பல, பொருளாயத ஊற்றுமூலங்கள் எல்லாம் போர் முனையில் தான் இருக்கின்றன.

(10) போர்களில் வரும் இடைக் காலங்களை ஓய்வு எடுக்கவும், நமது

படைகளைப் பயிற்றவும், ஸ்திரப்படுத்தவும் நல்ல முறையில் உபயோகிப்பது. ஓய்வெடுத்து, பயிற்சி செய்து, ஸ்திரப்படுத்தும் காலங்கள் பொதுவாக நீண்டவையாய் இருக்கக் கூடாது. இயன்ற அளவில் எதிரிக்கு மூச்சு விடவே அவகாசம் கொடுக்கக் கூடாது.

சியாங் கை-ஷேக்கைத் தோற்கடிக்க மக்கள் விடுதலைச் சேனை உபயோகித்த பிரதான முறைகள் மேற்குறிப்பிட்ட இவையே. உள்நாட்டு, வெளிநாட்டு எதிரிகளுக்கு எதிரான நீண்டகாலப் போராட்டத்தில் மக்கள் விடுதலைச் சேனை புடம் போட்டெடுக்கப்பட்டதன் விளைவுகள் இவை. நமது இன்றைய நிலைமைக்கும் இவை பூரணமாகப் பொருந்தியவை. ...நமது யுத்ததந்திரமும் தந்திரோபாயங்களும் மக்கள் யுத்தத்தை அடிப்படையாகக் கொண்டவை. மக்களுக்கு எதிரான எந்தப் படையும் நமது யுத்ததந்திர, தந்திரோபாயங்களை உபயோகிக்க முடியாது.

''இன்றைய நிலைமையும் நமது கடமைகளும்'' (25. டிஸம்பர். 1947.) தே. ப. தொ. 4.

தயாரிப்பு இல்லாவிட்டால் மேம்பாடென்பது உண்மையான மேம்பாடாக இருக்காது; முன்முயற்சியும் இருக்க முடியாது. இந்த அம்சத்தைக் கிரகித்துக் கொண்டால், தாழ்ந்ததாக இருக்கும் படையும் தயாராக இருந்தால், திடீர்த் தாக்குதல் மூலம் மேம்பாடான எதிரிகளையும் அடிக்கடி தோற்கடிக்க முடியும்.

''நீண்டகால யுத்தம் பற்றி'' (மே. 1938.) தே. ப. தொ. 2.

9. மக்கள் படை

மக்கள் படை ஒன்று இல்லாவிட்டால், மக்களுக்கு ஒன்றுமே இல்லை.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

இந்தப் படை பலமுடையது. காரணம், இந்தப் படையைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் உணர்வுபூர்வமான கட்டுப்பாடு உடையவர்கள். அவர்கள் எல்லாரும் ஒரு சில நபர்களின் அல்லது ஒரு குறுகிய கும்பலின் தனிநலன்களுக்காக அல்ல, பதிலுக்குப் பரந்துபட்ட மக்களின் நலன்களுக்காக, முழுத்தேசத்தின் நலன்களுக்காகவே ஒன்றுசேர்ந்து போரிடுகின்றனர். சீன மக்களின் பக்கத்தில் உறுதியாக நின்று, அவர்களுக்கு முழுமனதுடன்

சேவை செய்வதே இந்தப் படையின் ஒரே ஒரு நோக்கம்.

ஷை

சீன செஞ்சேனை என்பது புரட்சியின் அரசியல் கடமைகளை நிறைவேற்றும் ஒரு ஆயுதந்தாங்கிய குழு. விசேஷமாக இப்பொழுது, செஞ்சேனை போரிடுவதுடன் மட்டும் தன்னைக் கட்டுப்படுத்திவிடக் கூடாது. போரிட்டு எதிரியின் ராணுவ பலத்தை அழிப்பதோடு, பொதுமக்கள் மத்தியில் பிரசாரம் செய்வது, பொது மக்களை ஸ்தாபனரீதியாக அணிதிரட்டுவது, பொதுமக்களை ஆயுதபாணிகள் ஆக்குவது, புரட்சிகர அரசியல் அதிகாரத்தை ஸ்தாபிக்கவும் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபனங்களை நிறுவவும் பொதுமக்களுக்கு உதவி செய்வது முதலிய முக்கியமான கடமைகளுக்கும் தோள்கொடுக்க வேண்டும். செஞ்சேனை சும்மா போரிடுவதற்காக மட்டும் போரிடுவதில்லை. மாறாக, பொதுமக்கள் மத்தியில் பிரசாரம் செய்

வது, பொதுமக்களை ஸ்தாபனரீதியாக அணிதிரட்டுவது, பொதுமக்களை ஆயுத பாணிகளாக்குவது, புரட்சிகர அரசியல் அதிகாரத்தை ஸ்தாபிக்க பொதுமக்களுக்கு உதவி செய்வது முதலியவற்றுக்காகப் போரிடுகின்றது. பொதுமக்கள் மத்தியில் பிரசாரம் செய்வது, அவர்களை ஸ்தாபனரீதியாக அணிதிரட்டுவது, ஆயுதபாணிகளாக்குவது, புரட்சிகர அரசியல் அதிகாரத்தை ஸ்தாபிப்பது ஆகிய லட்சியங்களை நிறைவேற்றுவிட்டால், அது போரிடுவதற்கே அர்த்தமில்லை. செஞ்சேனை இருப்பதற்கே காரணமில்லை.

''கட்சியில் நிலவும் தவறான கருத்துகளைத் திருத்துவது பற்றி'' (டிஸம்பர். 1929.) தே. ப. தொ. 1.

மக்கள் விடுதலைச் சேனை எப்பொழுதும் ஒரு போர்ப்படையாக விளங்குகின்றது. தேசியரீதியான வெற்றிக்குப் பின்னர் கூட, நமது நாட்டில் வர்க்கங்கள் ஒழிக்கப்படாத, உலகில் ஏகாதிபத்திய

அமைப்பு இன்னும் இருக்கின்ற வரலாற்றுக் கட்டம் பூராவும் நமது படை ஒரு போர்ப்படையாக திகழும். இந்த விஷயத்தில் விபரீத விளக்கமோ அல்லது ஈடாட்டமோ இருக்கக் கூடாது.

''சீன கம்யூனிஸ்ட் கட்சி 7வது மத்திய கமிட்டியின் 2வது பிளீனக் கூட்டத்தின் அறிக்கை'' (5. மார்ச். 1949.) தே. ப. தொ. 4.

நம்மிடம் போருக்காக ஒரு படையும், உழைப்புக்காக ஒரு படையும் இருக்கின்றன. 8வது மார்க்க ராணுவமும், புதிய 4வது சேனையும் போருக்கான படைகள். இந்தப் படைகள் கூட போர், உற்பத்தி இரண்டிலும் ஈடுபடுகின்றன. இந்த இரண்டு வகையான படைகளையும் கொண்டு, இந்த இரண்டு கடமைகளிலும் வெகுஜன வேலையிலும் தேர்ச்சி பெற்ற படைகளைக் கொண்டு, நாம் கஷ்டங்களைக் கடக்க முடியும்; யப்

பானிய ஏகாதிபத்தியத்தைத் தோற்கடிக்க முடியும்.

''ஸ்தாபனரீதியில் அணிதிரள்க'' (29. நவம்பர். 1943.) தே. ப. தொ. 3.

நமது தேசிய பாதுகாப்பு ஸ்திரப்படுத்தப்படும். நமது பிரதேசத்தை மீண்டும் ஆக்கிரமிக்க எந்த ஒரு ஏகாதிபத்தியமும் அனுமதிக்கப்பட மாட்டாது. வீரம் செறிந்த, உருக்கேறிய மக்கள் விடுதலைச் சேனையை அத்திவாரமாகக் கொண்டு, நமது மக்கள் ஆயுதப்படைகள் பேணி, வளர்க்கப்பட வேண்டும். நம்மிடம் பலமிக்க ஒரு தரைப்படை மாத்திரமல்ல, பலம்வாய்ந்த விமானப்படையும் பலம்வாய்ந்த கடற்படையும் கூட இருக்கும்.

சீன மக்கள் அரசியல் கலந்தாலோசனை மாநாட்டின் 1வது பிளீனக் கூட்டத்து ஆரம்ப உரை (21. செப்டம்பர். 1949.)

கட்சி துப்பாக்கி மீது ஆணை செலுத்துகிறது. கட்சி மீது துப்பாக்கி ஆணை செலுத்துவதை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. இதுவே நமது கோட்பாடு.

''யுத்தமும் யுத்ததந்திரமும் பற்றிய பிரச்சினைகள்'' (6. நவம்பர். 1938.) தே. ப. தொ. 2.

நாம் மகத்தான மக்கள் விடுதலைச் சேனையைச் சேர்ந்தவர்கள்; நாம் மகத்தான சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலுள்ள படையினர்கள் என்பதை நமது அதிகாரிகள், படையினர் எல்லாரும் எப்பொழுதும் மனதில் வைத்திருக்க வேண்டும். கட்சியின் உத்தரவுகளை இடைவிடாது அனுசரிப்போமானால் நாம் வெற்றி பெறுவது திண்ணம்.

''சீன மக்கள் விடுதலைச் சேனையின் பிரகடனம்'' (அக்டோபர். 1947.) தே. ப. தொ. 4.

10. கட்சிக் கமிட்டிகளின் தலைமை

கட்சிக் கமிட்டி முறை என்பது கூட்டுத் தலைமையை உத்தரவாதம் செய்கின்ற, ஒரு தனிநபர் விஷயங்களின் நிர்வாகத்தை ஏகபோகமாக்காமல் தடுக்கின்ற, ஒரு முக்கியமான கட்சி அமைப்பு. சமீபத்தில் ஒருசில தலைமை உறுப்புகளில் (உண்மையில் எல்லாவற்றிலும் அல்ல) ஒரு தனிநபரே விஷயங்களின் நிர்வாகத்தை ஏகபோகமாக்கி, முக்கியமான பிரச்சினைகளை நிர்ணயிப்பது வழக்கம் என்பது அநேகமாகத் தெரியவந்தது. முக்கியமான பிரச்சினைகளின் தீர்வுகள் கட்சிக் கமிட்டிக் கூட்டங்களால் அல்ல, தனிநபர்களாலேயே தீர்மானிக்கப்படு

கின்றன. கட்சிக் கமிட்டி உறுப்பினர்கள் பெயரளவில் மாத்திரமே அங்கம் வகிக்கின்றனர். கமிட்டி உறுப்பினர்களின் அபிப்பிராய பேதங்கள் தீர்க்கப்பட முடியாமல், நீண்டகாலம் அப்படியே விடப்படுகின்றன. கட்சிக் கமிட்டி உறுப்பினர்கள் மத்தியில் நிலவும் ஐக்கியம் சம்பிரதாயமன்றி, உண்மையானதல்ல. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். இன்று முதல் மத்திய கமிட்டி பிராந்திய பியூரோக்கள் முதல் மாவட்டக் கட்சிக் கமிட்டிகள் வரையும், முன்னணிக் கட்சிக் கமிட்டிகள் முதல் பிரிகேட் கட்சிக் கமிட்டிகள் வரையும், ராணுவ பிரதேசங்களிலும் (புரட்சி ராணுவக் கமிஷனின் உப-கமிஷன்கள் அல்லது தலைமைக் குழுக்களிலும்), இன்னும் அரசாங்க நிறுவனங்கள், மக்கள் ஸ்தாபனங்கள், செய்தி நிறுவனங்கள், பத்திரிகைக் காரியாலயங்கள் ஆகியவற்றின் தலைமைக் கட்சி குழுக்களிலும், ஒரு சிறந்த கட்சிக் கமிட்டிக் கூட்ட முறை ஸ்தாபிக்கப்பட

வேண்டும். முக்கியமான எல்லா பிரச்சி னைகளும் (உண்மையில் முக்கியமற்ற, சாமானிய பிரச்சினைகள் அல்லது கூட்டங் களில் விவாதித்து, ஏற்கெனவே தீர்வுகா ணப்பட்டு, அமுல் நடத்தப்பட மாத்திர முள்ள பிரச்சினைகள் அல்ல) விவாதத் துக்குக் கட்சிக் கமிட்டியிடம் சமர்ப்பிக் கப்பட வேண்டும். சமுகமாயுள்ள கமிட்டி உறுப்பினர்கள் தமது கருத்துகளைப் பூரண மாகத் தெரிவித்து, தீர்க்கமான முடிவுக ளுக்கு வர வேண்டும். பின்னர் அவை சம்பந்தப்பட்ட உறுப்பினர்களால் அமுல் நடத்தப்பட வேண்டும். ...கட்சிக் கமிட்டிக் கூட்டங்களை நிரந்தரக் கமிட்டிக் கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள் என இரண்டு வகையாகப் பிரிக்க வேண்டும். இவை இரண்டையும் ஒன்ருகப் போட்டுக் குழப்பக் கூடாது. மேலும், கூட்டுத் தலை மையும், தனிநபர் பொறுப்பும் ஒன்றை ஒன்று உதாசீனம் செய்யும் முறையில் வற்புறுத்தப்படக் கூடாது என்பதைக் கவனிக்க வேண்டும். ராணுவத்தில் சம

ரின் போதும், சூழ்நிலைகள் கோரும் போதும், தலைமையில் உள்ளவருக்கு அவசர முடிவுகள் எடுக்கும் உரிமை உண்டு.

''கட்சிக் கமிட்டி முறையைப் பலப் படுத்துவது பற்றி'' (20. செப் டம்பர். 1948.) தே. ப. தொ. 4.

ஒரு கட்சிக் கமிட்டியின் காரியதரிசி ஒரு ''குழுத்தலைவ''ராகக் கடமையாற் றுவதில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஒரு கட்சிக் கமிட்டியில் பத்து முதல் இருபது பேர் வரை இருப்பர். இது ராணுவத்தில் உள்ள ஒரு குழு போன்றது. காரியதரிசி அக்''குழுவின் தலைவ''ரைப் போன்றவர். அதற்குச் சரியான தலைமை அளிப்பது அவ்வளவு இலகுவான தல்ல. இன்று மத்திய கமிட்டியின் ஒவ் வொரு பிராந்திய பியூரோவும் அல்லது உப-பிராந்திய பியூரோவும் ஒரு விசால மான பிரதேசத்துக்குத் தலைமை தாங்கி, மிகக் கடினமான பொறுப்புகளுக்குத் தோள்கொடுக்கின்றது. தலைமை தாங்

குவதன் அர்த்தம் பொதுக் கொள்கைகளை யும் ஸ்தூலமான கொள்கைகளையும் வகுப் பது மாத்திரமல்ல, சரியான வேலைமு றைகளையும் வகுப்பதாகும். சரியான பொதுக் கொள்கைகளும் ஸ்தூலமான கொள்கைகளும் இருந்தாலும் கூட, வேலை முறைகளில் கவனம் செலுத்தப்படா விட்டால், தொல்லைகள் இன்னும் ஏற் படலாம். ஒரு கட்சிக் கமிட்டி தலைமை அளிக்கும் அதன் கடமையை நிறைவேற்ற வேண்டுமானுல், அதன் ''குழு உறுப்பி னர்க''ளை சார்ந்து அவர்கள் தமது பாத் திரத்தைப் பூரணமாக வகிக்க அவர்களுக் குத் துணை செய்ய வேண்டும். ஒரு சிறந்த ''குழுத்தலைவ''ராக இருப்பதற் குக் காரியதரிசி மிக நன்ருகப் படிக்க வும் பரிசீலனை செய்யவும் வேண்டும். ஒரு காரியதரிசி அல்லது துணைக்காரிய தரிசி தனது ''குழு உறுப்பினர்கள்'' மத் தியில் பிரசார, ஸ்தாபன வேலையைச் செய்வதில் கவனம் செலுத்தாவிட்டால், கமிட்டி உறுப்பினர்களுடன் கொள்ளும்

தனது உறவுகளைச் சரியான முறையில் கை யாளாவிட்டால், கூட்டங்களை வெற்றி கரமாய் நடத்துவது எப்படி என்று ஆரா யாவிட்டால், தனது ''குழு''வுக்குச் சரி யாகத் தலைமை தாங்குவது அவருக்குக் கஷ்டமாக இருக்கும். ''குழு உறுப்பி னர்கள்'' அடிக்கு அடி அணிவகுத்துச் செல்லாவிட்டால், போராட்டத்திலும் நிர்மாணத்திலும் கோடானுகோடி மக்க ளுக்கு அவர்கள் தலைமை தாங்குவார்கள் என்று எதிர்ப்பார்க்க முடியாது. உண் மையில், காரியதரிசிக்கும் கமிட்டி உறுப் பினர்களுக்கும் உள்ள உறவு சிறுபான்மை பெரும்பான்மைக்கு பணிந்தொழுகும் உறவு. எனவே, இது குழுத்தலைவருக்கும் அவருடைய போர்வீரருக்கும் உள்ள உறவிலிருந்து வேறுபட்டது. இங்கு ஒப்புவமை வகையில் மாத்திரம் நாம் பேசுகின்ருேம்.

''கட்சிக் கமிட்டியின் வேலைமுறை கள்'' (13. மார்ச். 1949.) தே. ப. தொ. 4.

பிரச்சினைகளை மேசையில் வைக்க வேண்டும். ‘‘குழுத்தலைவர்’’ மாத்திரமல்ல கமிட்டி உறுப்பினர்களும் இப்படியே செய்ய வேண்டும். ஒருவர் முதுகுக்குப் பின் மற்றவர் புறங் கூறக் கூடாது. பிரச்சினைகள் தோன்றும் போதெல்லாம், கூட்டத்தைக் கூட்டி, பிரச்சினைகளை விவாதத்துக்காக மேசையில் வைத்து, சில முடிவுகளை எடுத்தால், பிரச்சினைகள் தீர்ந்து விடும். பிரச்சினைகள் இருந்து, அவை மேசையில் வைக்கப்படாவிட்டால், அவை நீண்டகாலம் தீர்க்கப் படாமல் இருக்கும், ஆண்டுக்கணக்காக அவை இழுபட்டுச் செல்லலாம். ‘‘குழுத் தலைவ’’ரும் கமிட்டி உறுப்பினர்களும் பரஸ்பரம் புரிந்து கொள்ள வேண்டும். காரியதரிசிக்கும் கமிட்டி உறுப்பினர்களுக்கும் இடையில், மத்திய கமிட்டிக்கும் அதன் பிராந்திய பியூரோக்களுக்கும் இடையில், பிராந்திய பியூரோக்களுக்கும், பிரதேசக் கட்சிக் கமிட்டிகளுக்கும் இடையில் பரஸ்பரம் புரிந்து கொள்ளல், ஆதரவு, நட்புறவு ஆகியவற்றிலும் பார்க்க முக்கியமானவை வேறொன்றுமில்லை.

ஷை

‘‘தகவல் பரிமாறுவது’’. இதன் அர்த்தம், கட்சிக் கமிட்டி உறுப்பினர்கள் எல்லாரும் தமது கவனத்துக்கு வந்த விஷயங்கள் பற்றி ஒருவருக்கு ஒருவர் அறிவித்து, கருத்துகளைப் பரிமாற வேண்டும். ஒரு பொதுவான மொழியை உருவாக்குவதில் இது மிக முக்கியமானது. சிலர் இப்படிச் செய்யத் தவறி விடுகின்றனர். லௌ ச்சு என்பவர் வருணித்த நபர்களைப் போல, ‘‘தமது கோழிகள் கூவுவதும், நாய்கள் குரைப்பதும், கேட்கக் கூடிய தூரத்திலிருந்தும், அவர்கள் உயிரோடு இருக்கும் வரை ஒருவரை ஒருவர் சந்திப்பதே இல்லை’’. இதன் விளைவாக அவர்களிடம் பொது மொழி என்பது குறைவு.

ஷை

உங்களுக்குப் புரியாத அல்லது தெரியாத விஷயங்கள் பற்றி உங்களுக்குக் கீழுள்ளவர்களிடம் கேளுங்கள். உங்களுடைய அங்கீகாரத்தையோ அல்லது நிராகரிப்பையோ இலேசாகத் தெரிவிக்கக் கூடாது. ...நமக்குத் தெரியாதவற்றைத் தெரிந்தது போல் நடக்கக் கூடாது. நாம் ''கீழே உள்ளவர்களிடமிருந்து கேட்டுப் படிப்பதற்கு வெட்கப்படக்கூடாது''. கீழ் மட்டங்களிலுள்ள ஊழியர்களின் அபிப்பிராயங்களை நாம் கவனமாகக் கேட்க வேண்டும். நீங்கள் ஆசிரியனுவதற்கு முன், மாணவனுய் இருங்கள். நீங்கள் உத்தரவுகள் விடுவதற்கு முன் கீழ் மட்ட ஊழியர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். ...கீழ் மட்ட ஊழியர்கள் கூறுவது சரியாக இருக்கலாம் அல்லது பிழையாக இருக்கலாம். கேட்டதும் நாம் அவற்றை ஆராய வேண்டும். நாம் சரியான கருத்துகளில் கவனம் செலுத்தி, அவற்றின் பிரகாரம் செயற்பட வேண்டும். ...கீழிருந்து வரும் தவருன கருத்துகளையும் நாம் கேட்க வேண்டும். அவற்றை முற்ருகக் கேளாமல் விடுவது தவறு. ஆனல் அவற்றின் பிரகாரம் செயற்படக் கூடாது. மாருக அவற்றை விமர்சனம் செய்ய வேண்டும்.

ஷெ

''பியானே வாசிக்க'' பழக வேண்டும். பியானே வாசிக்கும் போது பத்து விரல்களும் இயங்குகின்றன. சில விரல்களை மட்டும் அசைத்து, ஏனையவற்றை அசைக்காவிட்டால் பியானே வாசிக்க முடியாது. ஆனல் பத்து விரல்களையும் ஏககாலத்தில் அழுத்தினுலும் இசை என்பது பிறக்காது. நல்ல இசை பிறக்க வேண்டுமானல் அவை பரஸ்பரம் லயத்தோடும் இசைவாகவும் இயங்க வேண்டும். கட்சிக் கமிட்டி அதன் கேந்திரக் கடமையை உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டும். அதே வேளையில் அதன் கேந்திரக் கடமையைச் சுற்றியுள்ள இதர துறைகளிலும் வேலை செய்ய வேண்

டும். இன்று நாம் பல துறைகளில் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. நாம் பல்வேறு இடங்கள், ஆயுதப் படைகள், இலாகாக்கள் ஆகியவற்றின் வேலையையும் கவனிக்க வேண்டும். நாம் ஒருசில விஷயங்களில் மட்டும் முழுக் கவனத்தையும் செலுத்தி, ஏனையவற்றை தவிர்த்து விடக் கூடாது. எங்கே பிரச்சினை இருக்கின்றதோ, அங்கே நமது விரலை வைக்க வேண்டும். நாம் தேர்ச்சி பெற வேண்டிய முறை இது. சிலர் நன்ருகப் பியானோ வாசிக்கிறார்கள், சிலர் அப்படியல்ல. அவர்கள் வாசிக்கும் இசைகளிலும் பெரும் வித்தியாசம் இருக்கின்றது. கட்சிக் கமிட்டி உறுப்பினர்கள் நன்ருக ''பியானோ வாசிக்க''க் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஷ

''உறுதியாகப் பற்றிக்கொள்வது''. இதன் அர்த்தம் கட்சிக் கமிட்டி அதன் பிரதான கடமைகளைப் ''பற்றி''க் கொள்வது மாத்திரமல்ல, அதை ''உறுதியாகப் பற்றி''க் கொள்ள வேண்டும். ஒரு விஷயத்தைச் சிறிதளவேனும் வழுவாமல் உறுதியாகக் கிரகித்துக் கொண்டால் தான் அதை உறுதியாகப் பற்றிக் கொள்ள முடியும். உறுதியாகக் கிரகித்துக் கொள்ளாவிட்டால் அதைக் கிரகித்துக் கொள்ளாததற்குச் சமம். ஒருவர் விரித்த கையுடன் ஒரு பொருளைப் பிடிக்க முடியாது என்பது இயற்கையே. ஏதும் ஒன்றைப் பிடிப்பது போல் கையைப் பொத்தும் போதும், அதை இறுக்கமாகப் பற்ருவிட்டால், அதில் பிடி என்பது இருக்காது. நமது தோழர்கள் சிலர் பிரதான விஷயங்களைக் கிரகித்துக் கொள்கின்றனர், ஆனுல் அவர்களுடைய பிடி 'உறுதியானதாக இல்லை. எனவே அவர்கள் தமது வேலையை வெற்றிகரமாகச் செய்ய முடியாமல் இருக்கின்றனர். ஒன்றைப் பற்றிக் கொள்ளாவிட்டால் அதில் பயனில்லை. அதை உறுதியாகப் பற்றிக் கொள்ளா விட்டாலும் அதில் பயனில்லை.

ஷ

''கணிதத்துக்கான மூளை இருப்பது''. அதன் அர்த்தம், ஒரு நிலைமையின் அல்லது பிரச்சினையின் கணித அம்சத்தைக் கவனிக்கும் போது, அவற்றை நாம் கணித அடிப்படையில் ஆராய வேண்டும். ஒவ்வொரு குணும்சமும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் வெளிப்படுகின்றது. எண்ணிக்கை இல்லாவிட்டால், குணும்சமும் இருக்க முடியாது. இன்று வரை நமது தோழர்கள் பலர் விஷயங்களின் கணிதாம்சத்தை— அடிப்படைப் புள்ளி விபரங்களையும், பிரதான வீதங்களையும், விஷயங்களின் குணும்சங்களை நிர்ணயிக்கும் கணிதாம்ச எல்லைகளையும் — கவனிக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளவில்லை. அவர்களிடம் ''கணிதத்துக்கான'' மூளை இல்லை, அதன் விளைவாக அவர்கள் பிழை விடுவது தவிர்க்க முடியாதது.

ஷி

''பொதுமக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் அறிவித்தல்''. கூட்ட அறிவித்தல்கள் முன்னதாகக் கொடுக்கப்பட வேண்டும். இது ''பொதுமக்களுக்கு நம்பிக்கையூட்டும் அறிவித்தல்'' கொடுப்பதற்குச் சமம். இதன் மூலம் எல்லாரும் விவாதிக்கப்படவுள்ள விஷயம் யாது, தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் யாவை என்பதை அறிந்து கொள்வர். அதற்காகக் காலாகாலத்தில் தயாரிப்புகளும் செய்வர். சில இடங்களில் அறிக்கைகளையும், நகல் தீர்மானங்களையும் முன்னதாகத் தயார் செய்யாமல் ஊழியர் கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. கூட்டத்திற்கு எல்லாரும் வந்த பின்னர் தான் தற்காலிக ஒழுங்குகள் செய்யப் படுகின்றன. இது ''துருப்புகளும் குதிரைகளும் வந்துவிட்டன, ஆனால் உணவும் தீனியும் தயாராக இல்லை'' என்று சொல்வதற்குச் சமமாகும். இது சிறந்த முறையல்ல. தயாரிப்புகள் பூர்த்தியாகாவிட்டால், அவசரமாகக் கூட்டங்களைக் கூட்டுவது அவசியமற்றது.

ஷி

''குறைந்த, சிறந்த துருப்புகளும், சாமானிய நிர்வாகமும்''. சம்பாஷணை கள், சொற்பொழிவுகள், கட்டுரைகள், தீர்மானங்கள் எல்லாம் சுருக்கமானவை யாகவும், விஷயத்தோடு ஒட்டியவையா கவும் இருக்க வேண்டும். கூட்டங்களும் மிக நீண்ட நேரம் நடைபெறக் கூடாது.

ஷை

சொந்த அபிப்பிராயத்திலும் பார்க்க வேறுபட்ட அபிப்பிராயம் உள்ள தோழர் களுடன் ஐக்கியப்பட்டு வேலை செய் வதில் கவனம் செலுத்த வேண்டும். பல்வேறு ஸ்தலங்களிலும் அல்லது ராணு வத்தில் கூட, இதை மனதில் வைத்திருக்க வேண்டும். கட்சிக்கு வெளியேயுள்ள மக்களுடன் கொள்ளும் உறவுகளுக்கும் இது பொருத்தமானது. நாம் நாட்டின் ஐந்து வாவிகள்-நாலு கடல்களிலிருந்தும் வந்துள்ளோம். எங்களைப் போன்ற கருத் துடைய தோழர்களுடன் மாத்திரமல்ல,

வித்தியாசமான கருத்து உடையவர்க ளுடனும் நாம் ஐக்கியப்பட்டு வேலை செய் வதில் தேர்ச்சி பெற வேண்டும்.

ஷை

இயன்ற மட்டும் அகங்காரத்தை தவிர்ப்பது. தலைமையிலுள்ள எவரையும் பொறுத்தவரையில், இது கோட்பாடு தழுவிய ஒரு விஷயமும், ஐக்கியத்தைப் பேணுவதற்கான ஒரு முக்கிய நிபந்தனை யும் ஆகும். தமது வேலையில் பாரதூர மான தவறு இழையாதவர்கள், மிக பெரிய சாதனைகள் வழங்கியவர்கள் கூட அகங்காரம் கொள்ளக் கூடாது.

ஷை

வேறுபடுத்தும் இரண்டு எல்லைக்கோ டுகளை வரைந்து கொள்வது. முதலாவ தாக, புரட்சிக்கும் எதிர்ப்புரட்சிக்கும் இடையில், யென்ஆனுக்கும் சிஆனுக் கும் இடையில் தாம் இந்த எல்லைக்கோ டுகளை வரைந்து கொள்ள வேண்டும் என்

பதை சிலர் உணர்ந்து கொள்வதில்லை. உதாரணமாக, அதிகாரத்துவத்தை எதிர்த்துப் போராடும் பொழுது, அவர்கள் யென்ஆனைப் பற்றி குறிப்பிடுகையில் ‘‘அங்கு ஒன்றும் சரியாக இல்லை’’ என்பது போல் பேசுகின்றனர். யென் ஆனிலுள்ள அதிகாரத்துவம் சிஆனிலுள்ள அதிகாரத்துவம் இரண்டையும் ஒப்பு நோக்கி, வேறுபடுத்திப் பார்க்கத் தவறுகின்றனர். இது அடிப்படையில் தவறானது. இரண்டாவதாக, புரட்சி அணிகளுக்குள் சரிக்கும் பிழைக்கும் இடையில், சாதனைகளுக்கும் குறைபாடுகளுக்கும் இடையில், ஒரு தெளிவான எல்லைக்கோட்டை வகுத்து, இவற்றில் எது முதன்மையானது, எது இரண்டாந்தரமானது என்பதைத் தெளிவாக்குவது அவசியம். உதாரணமாக, சாதனைகள் 30 வீதமா அல்லது 70 வீதமா? இவற்றைக் குறைத்து மதிப்பது, கூட்டி மதிப்பது இரண்டும் தவறானவை. ஒருவருடைய வேலையில் அவருடைய சாதனைகள் 30 வீதமா அல்லது 70 வீதமா, அவருடைய தவறுகள் 30 வீதமா அல்லது 70 வீதமா என்பது அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். அவருடைய சாதனைகள் 70 வீதமாக இருந்தால் அவருடைய வேலை அடிப்படையில் அங்கீகரிக்கப்பட வேண்டும். சாதனைகள் முதன்மையாக உள்ள ஒரு வேலையைத் தவறுகள் முதன்மையாக உள்ள வேலை என வருணிப்பது முற்றிலும் தவறானது. நாம் பிரச்சினைகளை அணுகும் போது, புரட்சிக்கும் எதிர்ப்புரட்சிக்கும் இடையில் ஒரு எல்லைக்கோடு, சாதனைகளுக்கும் குறைபாடுகளுக்கும் இடையில் ஒரு எல்லைக்கோடு என இரண்டு எல்லைக்கோடுகளை வரைந்து கொள்ள மறந்து விடக் கூடாது. இந்த இரண்டு எல்லைக்கோடுகளையும் நாம் மனதில் வைத்திருந்தால், விஷயங்களைச் சரியான முறையில் நம்மால் கையாள முடியும். இல்லாவிட்டால், விஷயங்களின் தன்மைகளை நாம் குழப்பி விடுவோம். இந்த

எல்லேக்கோடுகளேச் சரியாக வரைய வேண்டுமாஞல், கவனமாகப் படிப்பதும், ஆராய்வதும் அவசியமானவை. ஒவ்வொருவரையும், ஒவ்வொரு விஷயத்தையும் பொறுத்தவரையில் நமது மனே பாவம் ஆராய்ச்சியும் படிப்பும் தழுவிய ஒன்ருகும்.

ஷை

ஸ்தாபனத் துறையில், மத்தியத்துவத்தின் வழி காட்டலில் ஜனநாயக முறை அமுல் நடத்தப்பட வேண்டும். அதற்கான வழிகள் பின்வருமாறு:-

(1) கட்சியின் தலேமை உறுப்புகள் சரியான வழிகாட்டும் மார்க்கத்தைப் பெற்று, பிரச்சினேகள் தோன்றும் போது, அவற்றைத் தீர்க்கும் வழிகளேக் கண்டு, தம்மைத் தலேமை கேந்திரங்களாக ஸ்தாபித்துக் கொள்ள வேண்டும்.

(2) மேல் மட்ட ஸ்தாபனங்கள் கீழ் மட்ட ஸ்தாபனங்களின் நிலேமையுடனும் மக்களின் வாழ்வுடனும் பரிச்சயம் பெற்று, இவ்வாறு சரியான தலேமை அளிப்பதற்கு ஒரு புறநிலே அடிப்படையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(3) பல்வேறு மட்டங்களிலுள்ள கட்சி ஸ்தாபனங்களும் பிரச்சினேகளேத் தீர்க்கும் போது சும்மா முடிவுக்கு வரக் கூடாது. ஒரு முடிவு எடுக்கப்பட்டதும் அது உறுதியாக அமுல் நடத்தப் பட வேண்டும்.

(4) கட்சியின் மேல் மட்ட ஸ்தாபனங்களின் பிரதானமான முடிவுகள் எல்லாம் கீழ் மட்ட ஸ்தாபனங்களுக்கும் பரந்துபட்ட கட்சி உறுப்பினர்களுக்கும் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும். . . .

(5) கட்சியின் கீழ் மட்ட ஸ்தாபனங்களும் சாதாரண உறுப்பினர்களும் மேல் மட்ட ஸ்தாபனங்களின் உத்தரவுகளே விபரமாக விவாதித்து,

அவற்றின் அர்த்தத்தைப் பூரணமாகப் புரிந்து, அவற்றை அமுல் நடத்தும் முறைகளைத் தீர்மானிக்க வேண்டும்.

''கட்சியில் நிலவும் தவருன கருத்துகளைத் திருத்துவது பற்றி'' (டிஸம்பர். 1929.) தே. ப. தொ. 1.

11. வெகுஜன மார்க்கம்

மக்கள், மக்கள் மட்டுமே, உலக வரலாற்றைச் சிருஷ்டிக்கும் உந்து சக்தி ஆவர்.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

பொதுமக்கள் தான் உண்மையான வீரர்கள். ஆனுல் நாம் அடிக்கடி சிறுபிள்ளைத்தனமுடையவர்களாகவும், நகைக்கத் தக்கவர்களாகவும் இருக்கின்ருேம். இதை விளங்கிக் கொள்ளாவிட்டால், மிக ஆரம்ப அறிவைக் கூடப் பெறுவது சாத்தியமாகாது.

'''கிராமிய பரிசீலனை'யின் முன்னுரையும் பின்னுரையும்'' (மார்ச்-ஏப்ரல். 1941.) தே. ப. தொ. 3.

பொதுமக்கள் எல்லையற்ற சிருஷ்டி ஆற்றல் உடையவர்கள். அவர்கள் தம்மை ஸ்தாபனரீதியில் அணி திரட்டி, தமது ஆற்றலைப் பூரணமாக வெளிப்படுத்தக் கூடிய இடங்களுக்கும், துறைகளுக்கும் படையெடுத்துச் செல்ல முடியும். அவர்கள் உற்பத்தியில் ஆழமாகவும் அகலமாகவும் சென்று, மென்மேலும் அதிகமான சேமநல முயற்சிகளைத் தமக்குத் தாமே உருவாக்க முடியும்.

''உபரி உழைப்பு சக்திக்கு ஒரு வழி பிறந்து விட்டது'' என்ற கட்டுரையின் அறிமுகக் குறிப்பு (1955.)

விவசாயி இயக்கத்தில் இன்றைய பேரெழுச்சி ஒரு மகத்தான சம்பவமாகும். ஒரு குறுகிய காலத்திற்குள் சீனாவின் மத்திய, தெற்கு, வடக்கு மாகாணங்களில் பல கோடி விவசாயிகள் ஒரு பெரும் புயல் போல, பெரும் சூறாவளி போல, எந்தப் பெரிய சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாத ஆற்றலுடன் கொந்

தளித்து எழுவார்கள். அவர்கள் தம்மைப் பிணைத்திருக்கும் விலங்குகள் எல்லாவற்றையும் உடைத்தெறிந்து, விடுதலைக்குச் செல்லும் பாதையில் வேகமாக முன்னேறுவர். ஏகாதிபத்தியவாதிகள், யுத்தப்பிரபுக்கள், ஊழல் மிகுந்த அதிகாரிகள், ஸ்தலக் கொடுங்கோலர்கள், தீய பிரபுக்கள் அனைவரையும் அவர்களுடைய சவக்குழிக்குள் வாரி வீசுவர். ஒவ்வொரு புரட்சிகரக் கட்சியும், ஒவ்வொரு புரட்சிகரத் தோழரும் அவர்களால் பரீட்சிக்கப்பட்டு, அவர்கள் தீர்மானத்தின் படி ஏற்றுக் கொள்ளப்படுவர் அல்லது நிராகரிக்கப்படுவர். அவர்களுக்கு முன்னே சென்று தலைமை தாங்குவதா? அவர்களுடைய வாலில் சென்று, சைகை காட்டி அவர்களை விமர்சனம் செய்வதா? அவர்களுக்குக் குறுக்கே நின்று அவர்களை எதிர்ப்பதா? ஒவ்வொரு சீனருக்கும் இந்த மூன்று மாற்று வழிகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் உண்டு. ஆனால் இந்தத் தேர்

வை விரைவாகச் செய்யும் படி நிலைமை கள் உங்களை நிர்ப்பந்திக்கின்றன.

''ஹூநான் விவசாயி இயக்கப் பரிசீலனை பற்றிய அறிக்கை'' (மார்ச். 1927.) தே. ப. தொ. 1.

இன்று நாட்டுப்புறத்தில் சமுதாய மாற்றப் பேரலை, கூட்டுறவுப் பேரலை, சில இடங்களை ஏற்கெனவே அடைந்து விட்டது. அது விரைந்து நாடு முழுவதிலும் பரவும். இது 50 கோடி கிராமிய மக்கள் கலந்து கொள்ளும் ஒரு பிரமாண்டமான சோஷலிஸப் புரட்சி இயக்கம். இது உலகரீதியிலும் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. நாம் இந்த இயக்கத்துக்கு ஊக்கமான, உற்சாகம் நிறைந்த, ஒழுங்கான தலைமை கொடுக்க வேண்டும். எந்த வழியிலும் இதைப் பின்னிழுத்து விடக் கூடாது. இவ்வியக்கத்தின் போக்கில் சில தவறுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. இது புரிந்து கொள்ளக் கூடியது. அவற்றைத் திருத்துவதும்

கஷ்டம் அல்ல. ஊழியர்கள் மத்தியிலும், விவசாயிகள் மத்தியிலும் குறைபாடுகளும் தவறுகளும் இருக்கின்றன. நாம் அவர்களுக்கு ஊக்கமான உதவி அளித்தால் தான் அவற்றை வெல்ல முடியும் அல்லது திருத்த முடியும்.

''விவசாயத்தைக் கூட்டுறவுமயமாக்கும் பிரச்சினை பற்றி'' (31. ஜூலை. 1955.)

பொதுமக்கள் மத்தியில் சோஷலிஸத்துக்கான ஒரு வற்றாத உற்சாக உணர்வு நிறைந்திருக்கின்றது. ஒரு புரட்சிக் காலகட்டத்தில் கூட பழக்கமான பழைய பாதையை மாத்திரம் பின்பற்றுபவர்கள் இந்த உற்சாக உணர்வை முற்றாகக் காண மாட்டார்கள். அவர்கள் கபோதிகள். அவர்களுக்கு முன் உள்ளதெல்லாம் இருள். சில சமயங்களில் அவர்கள் மெய்யையும் பொய்யையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பி, விஷயங்களைத் தலைகீழாகப் புரட்டும் அளவுக்

குச் செல்கிறுர்கள். இத்தகைய நபர்களை நாம் போதிய அளவு சந்திக்கவில்லையா? பழக்கமான பழைய பாதையை மாத்திரம் பின்பற்றக் கூடியவர்கள் மக்களின் உற்சாக உணர்வை இயல்பாகவே குறைத்து மதிப்பிடுகின்றனர். ஏதும் ஒரு புதிய விஷயம் தோன்றியபோதெல்லாம் அவர்கள் அதை அங்கீகரிக்காமல், எதிர்க்க ஓடுகின்றனர். பின்னர் தோல்வியை ஏற்று, சிறிது சுய-விமர்சனம் செய்கின்றனர். அடுத்த தடவை ஒரு புதிய விஷயம் தோன்றும் போதும், அவர்கள் மீண்டும் இப்படியே செய்கின்றனர். புதியவை அனைத்தையும் பொறுத்தவரையில், அவர்கள் நடந்து கொள்ளும் முறை இதுவாகவே இருக்கின்றது. இத்தகைய நபர்கள் எப்பொழுதும் செயலற்றவர்கள். நெருக்கடியான சமயம் வரும் போதெல்லாம் அவர்கள் முன்னேறத் தவறி விடுகின்றனர். அவர்கள் ஒவ்வொரு அடி எடுத்து வைப்பதற்கு முன்

னும் முதுகில் ஒரு குத்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது.

''இந்த நகராண்மை இரண்டாண்டுகளில் கூட்டுறவுக்குச் சென்றது'' என்ற கட்டுரையின் அறிமுகக் குறிப்பு (1955.)

நமது கட்சி 20 ஆண்டுகளுக்கு மேலாகத் தினம் தினம் வெகுஜன வேலையில் ஈடுபட்டு வந்திருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக அது தினம் தினம் வெகுஜன மார்க்கம் பற்றிப் பேசி வந்திருக்கிறது. புரட்சி என்பது பொதுமக்களைச் சார்ந்திருக்க வேண்டும், அதில் ஒவ்வொருவரும் பங்கு பற்ற வேண்டும், உத்தரவுகள் பிறப்பிக்கும் ஒரு சிலரை மட்டும் சார்ந்திருப்பதை எதிர்க்க வேண்டும் என்று நாம் எப்பொழுதும் கூறி வந்திருக்கிறோம். இருந்தும் சில தோழர்களின் வேலையில் வெகுஜன மார்க்கம் இன்னும் பூரணமாக அமுல் நடத்தப்படவில்லை. அவர்கள் தனிமையில் வேலை செய்யும்

ஒரு சில நபர்களே மட்டும் இன்னும் சார்ந்திருக்கின்றனர். இதற்கான ஒரு காரணம் என்னவென்ருல், தாம் ஒரு விஷயத்தைச் செய்யும் போது, அதை தாம் தலைமை தாங்கும் மக்களுக்கு விளக்கிக் கூற அவர்கள் ஒருபோதும் விரும்பவில்லை; தாம் தலைமை தாங்கும் மக்களின் முன்முயற்சியையும், சிருஷ்டி ஆற்றலையும் எப்படி வெளிப்படுத்த வேண்டும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வில்லை. மானசீகமாகப் பார்த்தால் வேலையில் எல்லாரும் கலந்து கொள்வதை அவர்களும் விரும்புகின்றனர். ஆனுல் எதைச் செய்வது, எப்படிச் செய்வது என்று பிறர் அறிவதை அவர்கள் அனுமதிக்கிருர்களில்லை. விஷயம் இப்படி இருக்கும் போது எல்லாரும் இயங்குவர் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? விஷயங்களை எப்படி நன்ருகச் செய்ய முடியும்? இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானுல், உண்மையான அடிப்படையில் வெகுஜன மார்க்கத்தில் சித்

தாந்த போதனையை நடத்த வேண்டும். அதே வேளையில் இந்தத் தோழர்களுக்கு உருப்படியான பல வேலைமுறைகளையும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

''ஷன்ஸி-சுய்யுவன் தினசரி ஆசிரியர் குழுவுக்கு ஆற்றிய உரை'' (2. ஏப்ரல். 1948.) தே. ப. தொ. 4.

24 ஆண்டுகால அனுபவமும் நமக்குப் பின்வருமாறு கூறுகின்றது:- சரியான கடமை, சரியான கொள்கை, சரியான வேலைநடை ஆகியவை ஒரு குறிப்பிட்ட சமயத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்து பொதுமக்களின் கோரிக்கைகளுடன் எப்பொழுதும் இசைவாக இருக்கும். பொது மக்களுடன் நமது தொடர்பைப் பலப்படுத்துவதாக இருக்கும். தவருன கடமை, தவருன கொள்கை, தவருன வேலை நடை ஆகியவை குறிப்பிட்ட சமயத்தில் குறிப்பிட்ட இடத்து பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு எப்பொழுதும் பொருந்தாமல் இருப்பதோடு, அவர்களி

டமிருந்து நம்மைத் தனிமைப்படுத்தியும் விடும். வரட்டுவாதம், அனுபவவாதம், கட்டளைவாதம், வால்வாதம், ஒருமுனை வாதம், அதிகாரவாதம், வேலையில் செருக்கு மனோபாவம் ஆகியவை எப்பொழுதும் தீமையானவை; சகிக்க முடியாதவை; இந்த நோய்களால் பாதிக்கப்பட்ட எவரும் அவற்றைத் திருத்திக் கொள்ள வேண்டும்; காரணம், அவை பொதுமக்களிடமிருந்து நம்மைத் தனிமைப்படுத்துகின்றன.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

பொதுமக்களுடன் இணைய வேண்டுமானால், பொதுமக்களின் தேவைகள் விருப்பங்களின் பிரகாரம் செயல்பட வேண்டும். பொதுமக்களுக்காகச் செய்யும் வேலைகள் எல்லாம் அவர்கள் தேவையிலிருந்து தொடங்க வேண்டும்; ஆனால் எவ்வளவு நல்லெண்ணம் உடைய எந்த ஒரு தனிநபரின் ஆசையிலிருந்தும் தொடங்கக்

கூடாது. பல சந்தர்ப்பங்களில், புறநிலையில் பொதுமக்களுக்கு ஒரு குறிப்பிட்ட மாற்றம் தேவைப்படுகின்றது; ஆனால் அகநிலையில் அவர்கள் அத்தேவையை இன்னும் உணராத, அம்மாற்றத்தை இன்னும் செய்ய விரும்பாத அல்லது தீர்மானிக்காத நிலை இன்னும் இருக்கின்றது. இத்தகைய நிலைமைகளில், நாம் பொறுமையாகக் காத்திருக்க வேண்டும். நமது வேலை மூலம் பொதுமக்களில் பெரும்பாலானவர்கள் இந்த மாற்றத்தின் தேவையை உணர்ந்து, அதைச் செய்ய விரும்பி, ஒரு தீர்மானத்துக்கு வரும் வரையில், நாம் அந்த மாற்றத்தைச் செய்யக் கூடாது. அல்லாவிட்டால் நாம் பொதுமக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டு விடுவோம். பொதுமக்கள் பங்கு பற்ற வேண்டிய எந்த ஒரு வேலையையும், அவர்கள் தாமாக உணர்ந்து, செய்ய விரும்பாவிட்டால், அது வெறும் சம்பிரதாயமாக மாறி, தோல்வியடைந்து விடும். ...இங்கு இரண்டு கோட்பாடுகள்

உண்டு:- ஒன்று, பொதுமக்களின் உண்மையான தேவைகள் அன்றி, அவர்களுக்குத் தேவை என்று நாம் நமது மூளையில் கற்பனை செய்வது அல்ல. இரண்டு, பொதுமக்களின் சுய-விருப்பம்; நாம் பொதுமக்களுக்காக அவர்களுடைய மனதைத் தயார் செய்வதற்குப் பதில் அவர்கள் தமது மனதைத் தாமே திடப்படுத்த வேண்டும்.

''கலாசார வேலையில் ஐக்கிய முன்னணி'' (30. அக்டோபர். 1944.) தே. ப. தொ. 3.

எந்தப் பதவியிலுள்ள எந்த ஒரு தோழரும் பொதுமக்களிடமிருந்து பிரிந்து விடாத படி விழிப்போடிருந்து கவனிக்குமாறு நமது காங்கிரஸ் முழுகட்சிக்கும் அறைகூவல் விடுக்க வேண்டும். ஒவ்வொருவரும் பொதுமக்களை நேசிக்க வேண்டும்; பொதுமக்களின் குரலைக் கவனமாகக் கேட்க வேண்டும்; எந்த இடத்துக்குச் சென்றாலும் அந்த இடத்து பொதுமக்களுடன் தன்னை ஒன்றாக இணைத்து, தன்னைப் பொதுமக்களுக்கு மேல் வைக்காமல் அவர்கள் மத்தியில் மூழ்கித் திளைக்க வேண்டும்; அவர்களுடைய இன்றைய உணர்வுத் தரத்தின் பிரகாரம், அவர்களைத் தட்டி எழுப்பி, அவர்களுடைய அரசியல் உணர்வை உயர்த்த வேண்டும்; பொதுமக்கள் தமது சுய-விருப்பத்தின் அடிப்படையில் படிப்படியாக ஸ்தாபன ரீதியில் திரள்வதற்கும், ஒரு குறிப்பிட்ட சமயம், குறிப்பிட்ட இடம் இவற்றின் அக, புற நிலைமைகளுக்கு இணங்க அவசியமான எல்லா போராட்டங்களையும் நடத்துவதற்கும் உதவி செய்ய வேண்டும் என்று ஒவ்வொரு தோழர்களுக்கும் போதனை அளிக்க வேண்டும்.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

பொதுமக்கள் இன்னும் விழித்து எழாத நிலையில் நாம் தாக்குதலில் செல்ல முயன்றால், அது துணிச்சல்வாதம்; பொது

மக்கள் விரும்பாத ஒரு விஷயத்தைச் செய்யும் படி நாம் அவர்களை வழிநடத்து வதில் பிடிவாதமாய் நின்றால், நாம் நிச்சயம் தோல்வியடைவோம். பொதுமக்கள் முன்னேற்றத்தைக் கோரும் போது, நாம் முன்னேறாவிட்டால், அது வலது சாரி சந்தர்ப்பவாதம் ஆகும்.

''ஷன்ஸி-சுய்யுவன் தினசரி ஆசிரியர் குழுவுக்கு ஆற்றிய உரை'' (2. ஏப்ரல். 1948.) தே. ப. தொ. 4.

எல்லா வேலைகளிலும் கட்டளைவாதம் என்பது தவறானது. காரணம், பொதுமக்களின் அரசியல் உணர்வுத் தரத்தைத் தாண்டி, சுயமான வெகுஜன நடவடிக்கை என்ற கோட்பாட்டை அத்து மீறி, சிந்திக்காமல் செயல் ஆற்றும் நோயை அது பிரதிபலிக்கின்றது. நமது தோழர்கள் தாம் புரிந்து கொள்ளும் எல்லாவற்றையும் பரந்துபட்ட பொதுமக்களும் புரிந்து கொள்வர் என்று எண்ணிவிடக் கூடாது. பொதுமக்கள் அதைப் புரிந்து

கொண்டார்களா, இல்லையா, அவர்கள் நடவடிக்கைக்குத் தயாராக இருக்கிறார்களா, இல்லையா என்பதை அவர்கள் மத்தியில் சென்று பரிசீலனைகள் நடத்துவதன் மூலம் தான் அறிய முடியும். நாம் இப்படிச் செய்தால் கட்டளைவாதத்தைத் தவிர்க்க முடியும். எல்லா வேலைகளிலும் வால்வாதமும் தவறானது. காரணம், அது பொதுமக்களின் அரசியல் உணர்வுத் தரத்துக்குக் கீழே தாழ்ந்து, பொதுமக்கள் முன்னேறத் தலைமை தாங்கும் கோட்பாட்டை அத்து மீறி, காலங்கடத்தும் நோயைப் பிரதிபலிக்கின்றது. நமது தோழர்கள் தாம் புரிந்து கொள்ளாத ஒன்றைப் பொதுமக்களும் புரிந்து கொள்ள மாட்டார்கள் என்று எண்ணிவிடக் கூடாது. பல சந்தர்ப்பங்களில், பரந்துபட்ட பொதுமக்கள் நம்மையும் தாண்டிச் சென்று, மேலும் முன்னேற ஆவலாய் இருக்கும் அதே வேளையில், நமது தோழர்கள் பொதுமக்களின் தலைவர்களாய்ச் செயல்படாமல், சில பின்தங்

கிய பிரகிருதிகளின் அபிப்பிராயங்களைப் பிரதிபலித்து, அவற்றைப் பரந்துபட்ட பொதுமக்களின் அபிப்பிராயங்களாகப் பிழைபடக் கருதி, பின்தங்கிய நபர்களின் வாலில் செல்கிறுர்கள்.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

பொதுமக்களின் கருத்துகளைத் தொகுத்து, ஒன்ருகச் செறித்து, பின்னர் பொதுமக்கள் மத்தியில் சென்று, இக்கருத்துகளில் அழுத்தமாக நின்று, அவற்றை அமுல் நடத்தி, தலைமையின் சரியான கருத்துகளை உருவாக்குவது— இதுவே தலைமைமுறையின் அடிப்படையாகும்.

''தலைமைமுறை பற்றிய சில பிரச்சினைகள்'' (1. ஜூன். 1943.) தே. ப. தொ. 3.

நமது கட்சியின் நடைமுறை வேலை அனைத்திலும் சரியான தலைமை என்பது

''பொதுமக்களிடமிருந்து பொதுமக்களுக்கு'' என்றிருப்பது அவசியம். இதன் அர்த்தம்:- பொதுமக்களின் கருத்துகளை (சிதறுண்டு, ஒழுங்கின்றிக் கிடக்கும் கருத்துகளை) எடுத்து, அவற்றை (ஆராய்ந்து, செறிந்த, ஒழுங்கான கருத்துகளாக) ஒன்று செறிப்பது, பின்னர் பொதுமக்கள் மத்தியில் சென்று பிரசாரம் செய்து, விளக்கி, பொதுமக்கள் அவற்றைத் தமது கருத்துகளாக்கி, அவற்றில் உறுதியாக நின்று, அவற்றைச் செயல்படுத்தச் செய்வது, பொதுமக்களின் நடவடிக்கையில் அக்கருத்துகளின் சரி பிழையைப் பரீட்சிப்பது ஆகும். பின்னர் மீண்டும் பொதுமக்களின் கருத்துகளை ஒன்று திரட்டி, மீண்டும் பொதுமக்கள் மத்திக்குச் சென்று, அக்கருத்துகளை உறுதியாக அமுல் நடத்த வேண்டும். இவ்வாறு மீண்டும் மீண்டும் எல்லையில்லாத அகல் சுருள் போல் நடைபெறும் ஒவ்வொரு தடவையும் இந்தக் கருத்துகள் மேலும் சரியானவையாக, மேலும் ஜீவசக்தியுடை

யவையாக, மேலும் செழுமையுடையவை யாக வரும். இதுவே அறிவு பற்றிய மார்க்ஸிஸ தத்துவம்.

ஷெ

நாம் பொதுமக்கள் மத்தியில் சென்று, அவர்களிடமிருந்து கற்று, அவர்களு டைய அனுபவங்களைத் தொகுத்து, அவற் றைச் சிறந்த, ஒழுங்கான கோட்பாடு களாகவும், வழிமுறைகளாகவும் வகுக்க வேண்டும். பின்னர் அக்கோட்பாடுக ளையும் வழிமுறைகளையும் பொதுமக்கள் மத்தியில் பிரசாரம் செய்து, அவற்றைச் செயல்படுத்துமாறு அறைகூவல் விடுக்க வேண்டும். இவ்வாறு அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, விடுத லையும் இன்பமும் பெற அவர்களுக்கு உதவ வேண்டும்.

''ஸ்தாபனரீதியில் அணிதிரள்க'' (29. நவம்பர். 1943.) தே. ப. தொ. 3.

சில இடங்களில் நமது தலைமை நிறு வனங்களிலுள்ள சிலர் கட்சியின் கொள் கைகளைத் தலைவர்கள் மட்டும் அறிந்தால் போதும், பொதுமக்கள் அறிவது அவசிய மில்லை என்று எண்ணுகின்றனர். நமது வேலைகளில் சிலவற்றை நன்ருகச் செய்ய முடியாமல் இருப்பதன் அடிப்படைக் காரணங்களில் இது ஒன்ருகும்.

''ஷன்ஸி-சுய்யுவன் தினசரி ஆசிரி யர் குழுவுக்கு ஆற்றிய உரை'' (2. ஏப்ரல். 1948.) தே. ப. தொ. 4.

எல்லா வெகுஜன இயக்கங்களிலும் ஊக்கமான ஆதரவாளர்கள் எத்தனை பேர், எதிர்ப்பவர்கள் எத்தனை பேர், நடுநிலையாளர்கள் எத்தனை பேர் என் பதை அடிப்படையில் பரிசீலனை செய்து, ஆராய வேண்டும். ஆதாரமின்றி மா னசீகமாகப் பிரச்சினைகளைத் தீர்மானிக்கக் கூடாது.

''கட்சிக் கமிட்டியின் வேலைமுறை கள்'' (13. மார்ச். 1949.) தே. ப. தொ. 4.

குறிப்பிட்ட எந்த இடத்துப் பொது மக்கள் மத்தியிலும் ஒப்பீட்டுவகையில் உற்சாகிகள், நடுநிலையாளர், ஒப்பீட்டு வகையில் பின்தங்கியவர்கள் என்ற மூன்று பகுதியினர் இருப்பர். எனவே தலைவர்கள் சிறிய தொகையினராக உள்ள உற்சாகிகளைத் தலைமையைச் சூழ ஐக்கியப்படுத்தி அவர்களை முதுகெலும்பாகக் கொண்டு, மத்திய பகுதியினரின் தரத்தை உயர்த்தி, பின்தங்கியவர்களை வென்றெடுப்பதில் தேர்ச்சி பெற வேண்டும்.

''தலைமைமுறை பற்றிய சில பிரச்சினைகள்'' (1. ஜூன். 1943.) தே. ப. தொ. 3.

கட்சியின் கொள்கையைப் பொதுமக்களின் செயலாக மாற்றுவதில் சிறந்து விளங்குவது, நாம் நடத்தும் ஒவ்வொரு இயக்கத்தையும், ஒவ்வொரு போராட்டத்தையும் பற்றி நமது தலைமை ஊழியர்கள் மாத்திரமல்ல, பரந்துபட்ட பொது மக்களும் கிரகித்துத் தேர்ச்சி பெறச் செய்வதில் திறமை பெற்றிருப்பது —

இதுவே மார்க்ஸிஸம்-லெனினிஸம் தழுவிய தலைமைக் கலை. நமது வேலையில் நாம் தவறு இழைக்கின்றோமா இல்லையா என்பதை நிர்ணயிக்கும் ஒரு எல்லைக்கோடு இது.

''ஷன்ஸி-சுய்யுவன் தினசரி ஆசிரியர் குழுவுக்கு ஆற்றிய உரை'' (2. ஏப்ரல். 1948.) தே. ப. தொ. 4.

தலைமைக் குழு எவ்வளவு உற்சாகமாயிருந்த போதிலும் அதன் நடவடிக்கை பொதுமக்களின் உற்சாகத்துடன் இணைக்கப்படாவிட்டால், அது ஒரு சில நபர்களின் பயனற்ற முயற்சியாகவே இருக்கும். மறுபுறம் பரந்துபட்ட பொதுமக்கள் மட்டும் ஊக்கமாக இருந்து, பொதுமக்களின் நடவடிக்கையைத் தகுதியான முறையில் ஒழுங்கு செய்ய ஒரு பலமான தலைமைக் குழு இல்லாவிட்டால், அந்த உற்சாகம் நீண்டகாலம் நீடித்திருக்க முடியாது; சரியான திசையில் செலுத்தப்பட முடியாது; ஒரு மேல் மட்டத்திற்கு

உயர்த்தப்பட முடியாது.

''தலைமைமுறை பற்றிய சில பிரச்சினைகள்'' (1. ஜூன். 1943.) தே. ப. தொ. 3.

பொதுமக்களின் உற்பத்தி, பொதுமக்களின் நலன்கள், பொதுமக்களின் அனுபவங்கள், பொதுமக்களின் உணர்வுகள்—இவற்றில் தலைமை ஊழியர்கள் இடைவிடாத கவனம் செலுத்த வேண்டும்.

நேரடியாகக் கட்சி மத்திய கமிட்டியின் கீழும், கட்சி மத்திய கமிட்டி ராணுவ கமிஷனின் கீழும் உள்ள ஸ்தாபனங்கள் நடத்திய உற்பத்திப் பொருட்காட்சிக்கு எழுதிய சாஸனம், யென்ஆன் ''விடுதலைத் தினசரி'' (24. நவம்பர். 1943.)

பொதுமக்களின் நல்வாழ்வில் —— நிலப் பிரச்சினை, உழைப்புப் பிரச்சினை முதல், விறகு, அரிசி, சமையல் எண்ணெய், உப்பு வரையில் —— நாம் ஆழ்ந்த அக்கறை செலுத்த வேண்டும். ...பொதுமக்களின் நல்வாழ்வு சம்பந்தமான இப்பிரச்சினைகள் எல்லாம் நமது நிகழ்ச்சி நிரலில் வைக்கப்பட வேண்டும். நாம் அவற்றை விவாதித்து, முடிவுகள் எடுத்து, அமுல் நடத்தி, விளைவுகளைப் பரிசீலனை செய்ய வேண்டும். நாம் அவர்களுடைய நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றோம், நமது வாழ்வு அவர்களுடைய வாழ்வுடன் பின்னிப் பிணைந்திருக்கின்றது என்பதைப் பொதுமக்கள் உணரும் படி செய்ய வேண்டும். நாம் இந்த விஷயங்களில் இருந்து தொடங்கி, நாம் முன்வைக்கும் உயர்ந்த கடமைகளை, அதாவது புரட்சி யுத்தம் பற்றிய கடமைகளை அவர்கள் புரிந்து கொள்ளும் படி செய்தால் அவர்கள் புரட்சியை ஆதரித்து அதை நாடு பூராவும் பரப்பி, நமது அரசியல் அறைகூவல்களை வரவேற்று புரட்சியின் இறுதி வரை போராடுவார்கள்.

''பொதுமக்களின் நல்வாழ்வில் அக்கறை கொள், வேலைமுறைகளில் கவனம் செலுத்து'' (27. ஜனவரி. 1934.) தே. ப. தொ. 1.

12. அரசியல் வேலை

அந்தக் காலத்தில் (1924-1927 முதலாவது உள்நாட்டுப் புரட்சி யுத்த காலத்தில் — ஆ-ர்) ஆயுதப்படைகளில் கட்சிப் பிரதிநிதிகள் முறையும், அரசியல் பகுதிகளும் ஸ்தாபிக்கப்பட்டன. இந்த இரண்டும் சீனுவில் முன்பு என்றும் கண்டிராதவையாகும். இவை படைகளின் தோற்றத்தையே முற்ருக மாற்றி விட்டன. 1927ம் ஆண்டுக்குப் பின் வந்த செஞ்சேனையும், இன்றைய 8வது மார்க்க ராணுவமும் இந்த அமைப்பு முறையை மரபாகப் பெற்று, விருத்தி செய்துள்ளன.

''பிரிட்டிஷ் பத்திரிகையாளர் ஜேம்ஸ் பெட்ருமுக்கு அளித்த பேட்டி'' (25. அக்டோபர். 1937.) தே. ப. தொ. 2.

மக்கள் விடுதலைச் சேனை மக்கள் யுத்தத்தின் அடிப்படையிலும், ராணுவத்துக்கும் மக்களுக்குமிடை ஐக்கியம், தளபதிகளுக்கும் போராளிகளுக்குமிடை ஐக்கியம், எதிரிப்படைகளைச் சின்னுபின்னப் படுத்துவது என்ற கோட்பாட்டின் அடிப்படையிலும் அதன் சக்திவாய்ந்த புரட்சிகர அரசியல் வேலையை ஸ்தாபித்துள்ளது. எதிரியை வெற்றி கொள்வதில் இது ஒரு முக்கியமான அம்சமாய் விளங்குகின்றது.

''இன்றைய நிலைமையும் நமது கடமைகளும்'' (25. டிஸம்பர். 1947.) தே. ப. தொ. 4.

இந்த ராணுவம் மக்கள் யுத்தத்துக்கு இன்றியமையாத ஒரு அரசியல் வேலை முறையைக் கட்டி வளர்த்துள்ளது. அதன் சொந்த அணிகளுக்குள் ஐக்கியம், நேசப்படைகளுடன் ஐக்கியம், மக்களுடன் ஐக்கியம் ஆகியவற்றை மேம்படச்

செய்வதும், எதிரிப்படைகளைச் சின்னாபின்னப்படுத்தி, சமரில் வெற்றியை உத்தரவாதம் செய்வதும் இவ்வரசியல் வேலையின் கடமையாகும்.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

அரசியல் வேலை என்பது பொருளாதார வேலை எல்லாவற்றினதும் உயிர்-நாடி. சமூக, பொருளாதார அமைப்பில் ஒரு அடிப்படை மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு தருணத்தில் இது குறிப்பாக உண்மையாகும்.

''ஒரு பாரதூரமான பாடம்'' என்ற கட்டுரையின் அறிமுகக் குறிப்பு (1955.)

''கட்சிக் கிளை கம்பெனி அடிப்படையில் ஸ்தாபிக்கப்படுகின்றது''. செஞ்சேனை தகர்ந்து நொறுங்காமல் இத்தகைய கடினமான போரை நடத்தக் கூடியதாய்

இருந்ததற்கு இதுவே ஒரு பிரதான காரணம்.

''சிங்காங் மலைகளில் போராட்டம்'' (25. நவம்பர். 1928.) தே. ப. தொ. 1.

8வது மார்க்க ராணுவத்தின் அரசியல் வேலையை வழிநடத்தும் அடிப்படைக் கோட்பாடுகள் மூன்று உண்டு. முதலாவதாக, அதிகாரிகளுக்கும் படையினருக்கும் இடையில் ஐக்கியம் என்ற கோட்பாடு. இதன் அர்த்தம் ராணுவத்தில் பிரபுத்துவ முறையை ஒழிப்பது, அடிப்பதையும் தூஷிப்பதையும் இல்லாமற் செய்வது, உணர்வுபூர்வமான கட்டுப்பாட்டை வளர்ப்பது, இன்பதுன்பங்களைப் பகிர்ந்து கொள்வது என்பதாகும். இதன் விளைவாக ராணுவம் முழுவதும் நெருக்கமாக ஐக்கியப்பட்டுள்ளது. இரண்டாவதாக, ராணுவத்துக்கும் மக்களுக்கும் இடையில் ஐக்கியம் என்ற கோட்பாடு. இதன் அர்த்தம் மக்களின்

நலன்களைச் சிறிதளவேனும் ஊறுபடுத்தாத ஒரு கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவது, பொதுமக்கள் மத்தியில் பிரசாரம் செய்வது, அவர்களை அணிதிரட்டி ஆயுதபாணிகளாக்குவது, அவர்களுடைய பொருளாதாரச் சுமைகளைக் குறைப்பது, படைக்கும் மக்களுக்கும் தீங்கு விளைவிக்கும் தேசத் துரோகிகளையும் நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்களையும் நசுக்குவது என்பதாகும். இதன் விளைவாக, ராணுவம் மக்களுடன் நெருங்கி ஐக்கியப்பட்டு, எங்கும் மக்களால் வரவேற்கப்படுகின்றது. மூன்றாவதாக, எதிரித் துருப்புகளைச் சின்னாபின்னப்படுத்தி, யுத்தக்கைதிகளைத் தயையுடன் நடத்துவது என்ற கோட்பாடு. நமது வெற்றி நமது ராணுவ நடவடிக்கைகளில் மாத்திரமல்ல எதிரித் துருப்புகளைச் சின்னாபின்னப்படுத்துவதிலும் தங்கியிருக்கின்றது.

''பிரிட்டிஷ் பத்திரிகையாளர் ஜேம்ஸ் பெட்ராமுக்கு அளித்த பேட்டி'' (25. அக்டோபர். 1937.) தே. ப. தொ. 2.

படைக்கும் மக்களுக்குமிடையிலும், படைக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலும், படைக்கும் கட்சிக்கும் இடையிலும், அதிகாரிகளுக்கும் படையினருக்கும் இடையிலும், ராணுவ வேலைக்கும் அரசியல் வேலைக்கும் இடையிலும், ஊழியர்கள் மத்தியிலும் உள்ள உறவுகளில் நமது துருப்புகள் சரியான கோட்பாடுகளைக் கைக்கொள்ள வேண்டும். அவை யுத்தப்பிரபுவாதத் தவறுகளை ஒருபோதும் இழைக்கக் கூடாது. அதிகாரிகள் படையினரைப் பேண வேண்டும்; அவர்களுடைய நல்வாழ்வில் பராமுகமாய் இருக்கவோ, அல்லது உடல் தண்டனை விதிக்கவோ கூடாது. படை மக்களைப் பேண வேண்டும். அவர்களுடைய நலன்களை ஒருபோதும் ஊறுபடுத்தக் கூடாது. படை அரசாங்கத்தையும் கட்சியையும் மதிக்க வேண்டும்; ஒருபோதும் ''சுதந்திரத்தை'' வலியுறுத்தக் கூடாது.

''ஸ்தாபனரீதியில் அணிதிரள்க'' (29. நவம்பர். 1943.) தே. ப. தொ. 3.

கைது செய்யப்பட்ட யப்பானிய துருப்புகள், பொம்மைத் துருப்புகள் அல்லது கம்யூனிஸ்ட்-எதிர்ப்பு துருப்புகளைப் பொறுத்தவரையில், மக்களின் அதீத வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டவர்கள், அதற்காக மரண தண்டனை விதிக்கப்பட வேண்டியவர்கள், உயர் அதிகாரிகளால் அம்மரண தண்டனை அங்கீகரிக்கப்பட்டவர்கள் தவிர்ந்த ஏனையோர் எல்லாரையும் விடுதலை செய்வது நமது கொள்கையாகும். கைதிகளில், பிற்போக்குப்படைகளில் பலாத்காரமாகச் சேர்க்கப்பட்டவர்களை, ஆனால் புரட்சியில் ஏறக்குறைய நாட்டங்கொண்டவர்களை நமது படைக்காக வேலை செய்வதற்குப் பெருந்தொகையில் வென்றெடுக்க வேண்டும்; ஏனையோர் எல்லாரும் விடுதலை செய்யப்பட வேண்டும். அவர்கள் நம்முடன் போரிட்டு, மீண்டும் கைது செய்யப்பட்டால், மீண்டும் விடுதலை செய்யப்பட வேண்டும். அவர்களை நாம் அவமானப்படுத்தக் கூடாது; அவர்

களுடைய உடைமைகளை எடுக்கவோ சரணடையும் பத்திரத்தில் கைச்சாத்திடும் படி கட்டாயப்படுத்தவோ கூடாது. மாறாக, எல்லாரையும் அன்போடும் கருணையோடும் நடத்த வேண்டும். அவர்கள் எவ்வளவு பிற்போக்கானவர்களாய் இருந்தாலும் இதுவே நமது கொள்கையாகும். பிற்போக்கு முகாமைத் தனிமைப்படுத்தும் மிகப் பயனுள்ள முறை இது.

''கொள்கை பற்றி'' (25. டிஸம்பர். 1940.) தே. ப. தொ. 2.

யுத்தத்தில் ஆயுதங்கள் ஒரு முக்கியமான அம்சம்; ஆனால் தீர்க்கமான அம்சம் அல்ல. தீர்க்கமான அம்சம் மக்கள் அன்றி, பொருட்கள் அல்ல. பலப்போட்டி என்பது ராணுவ பலம், பொருளாதார பலம் இவற்றின் போட்டி மாத்திரமல்ல, மனித பலம், மனவுறுதி இவற்றின் போட்டியுமாகும். ராணுவ, பொரு

ளாதார பலமும் மக்களால் தான் ஓச்சப்படுகின்றது.

''நீண்டகால யுத்தம் பற்றி'' (மே.1938.) தே. ப. தொ. 2.

அணுக்குண்டு என்பது மக்களை அச்சுறுத்துவதற்கு அமெரிக்க பிற்போக்குவாதிகள் உபயோகிக்கும் ஒரு கடதாசிப் புலி. அது பயங்கரமாகத் தோன்றுகின்றது; ஆனால் யதார்த்தத்தில் அப்படி அல்ல. அணுக்குண்டு வெகுஜன வதைக்குரிய ஒரு ஆயுதம் என்பது உண்மை தான். ஆனால் யுத்தத்தின் வெற்றி தோல்வி மக்களால் நிர்ணயிக்கப்படுகின்றது; ஒன்று அல்லது இரண்டு புதிய ரக ஆயுதங்களால் அல்ல.

''அமெரிக்க நிருபர் அன்னா லூயிஸ் ஸ்ட்ரோங்குடன் நிகழ்த்திய சம்பாஷணை'' (ஆகஸ்ட். 1946.) தே. ப. தொ. 4.

போர்வீரர்கள் ராணுவத்தின் அடித்தளம் ஆவர். அவர்கள் முற்போக்கான

அரசியல் உணர்வு ஊட்டப்பட்டால் ஒழிய, இத்தகைய உணர்வு முற்போக்கான அரசியல் வேலை மூலம் ஊட்டப்பட்டால் ஒழிய, அதிகாரிகளுக்கும் படையினருக்கும் இடையில் உண்மையான ஐக்கியத்தை உருவாக்குவது அசாத்தியம்; எதிர்ப்பு-யுத்தத்தில், அவர்களுடைய உற்சாகத்தைக் கூடிய அளவு தட்டி எழுப்புவது அசாத்தியம்; நமது தொழில் நுட்ப சாதனங்கள், தந்திரோபாயங்கள் எல்லாவற்றையும் மிகப் பயனுள்ள முறையில் உபயோகிப்பதற்கான மிகச் சிறந்த அடிப்படையை அளிப்பது அசாத்தியம்.

''நீண்டகால யுத்தம் பற்றி'' (மே.1938.) தே. ப. தொ. 2.

செஞ்சேனையிலுள்ள தோழர்கள் பலர் மத்தியில் கலப்பற்ற ராணுவக் கண்ணோட்டம் மிகப் பெருமளவிற்கு வளர்ந்திருக்கின்றது. அது பின்வருமாறு வெளிப்படுகின்றது:-

(1) இந்தத் தோழர்கள் ராணுவ விவகாரங்களேயும் அரசியலேயும் ஒன்றுக்கு ஒன்று விரோதமானவையாகக் கருதுகின்றனர். அரசியல் கடமைகளே நிறைவேற்றும் ஒரு சாதனமே ராணுவ விவகாரம் என்பதை அங்கீகரிக்க மறுக்கின்றனர். ''ராணுவ்ரீதியில் நீ நன்ருக இருந்தால், இயற்கையாகவே அரசியல் ரீதியிலும் நீ நன்ருக இருப்பாய்; ராணுவ ரீதியில் நன்ருக இல்லாவிட்டல், அரசியல்ரீதியிலும் நன்ருக இருக்க முடியாது'' என்று கூடச் சிலர் சொல்கின்றனர். இது ஒரு படி மேலும் சென்று, அரசியலுக்கு ராணுவ விவகாரங்கள் தலைமை தாங்க வேண்டும் என்று கருதுவதாகும்.

....

''கட்சியில் நிலவும் தவருன கருத்துகளேத் திருத்துவது பற்றி'' (டிஸம்பர். 1929.) தே. ப. தொ. 1.

சித்தாந்த போதனையைப் பற்றிக் கொள்வது கட்சி முழுவதையும் ஐக்கி

யப்படுத்தி, மாபெரும் அரசியல் போராட்டங்களே நடத்துவதற்குத் திறவு கோலாகத் திகழ்கிறது. இந்தக் கடமையைத் தீர்க்காவிட்டால், கட்சியின் அரசியல் கடமை ஒன்றையேனும் நிறைவேற்ற முடியாது.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

மாணவர்கள் புத்திஜீவிகள் மத்தியில் சமீபத்தில் சித்தாந்த அரசியல் வேலேயில் ஒரு வீழ்ச்சி காணப்பட்டு, சில ஆரோக்கியமற்ற சுபாவங்களும் தோன்றியுள்ளன. அரசியல் பற்றியோ அல்லது தாய்நாட்டின் எதிர்காலம் பற்றியோ, மனிதகுலத்தின் லட்சியங்கள் பற்றியோ அக்கறை கொள்ள வேண்டிய அவசியம் இனிமேல் இல்லே என்று சிலர் எண்ணுவது போல் தோன்றுகின்றது. ஒரு காலத்தில் பொது வேட்கையோடு படித்த மார்க்ஸிஸம் இன்று அவ்வளவு பாவனேயற்றதெனக் கருதுவது போல் தோன்றுகின்

றது. இத்தகைய நிலைமையை எதிர் நோக்கும் போது, நாம் நமது சித்தாந்த, அரசியல் வேலையைப் பலப்படுத்த வேண்டும். மாணவர்களாயினும் சரி, புத்தி ஜீவிகளாயினும் சரி, கஷ்டப்பட்டுப் படிக்க வேண்டும். தமது விசேஷ பாடங்களை படிக்கும் அதே வேளையில், அவர்கள் சித்தாந்தரீதியிலும், அரசியல்ரீதியிலும் முன்னேற்றம் அடைய வேண்டும்; அதாவது, அவர்கள் மார்க்ஸிஸம், நடப்பு விவகாரங்கள், அரசியல் ஆகியவற்றைப் படிக்க வேண்டும். சரியான அரசியல் கண்ணோட்டம் இல்லாதிருப்பது, உயிரில்லாதிருப்பதற்குச் சமம். ...எல்லா இலாகாக்களும், ஸ்தாபனங்களும் சித்தாந்த, அரசியல் வேலையிலுள்ள தமது பொறுப்புகளுக்குத் தோள்கொடுக்க வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சி, வாலிபர் சங்கம், இவ்வேலைக்குப் பொறுப்பான அரசாங்க இலாகாக்கள் ஆகியவற்றுக்கும், விசேஷமாகக் கல்வி கழகங்களின்

தலைவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கூட இது பொருந்தியதே.

''மக்கள் மத்தியில் முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது பற்றி'' (27. பெப்ரவரி. 1957.)

அரசியல் போதனை பெற்ற பின்னர், செஞ்சேனை வீரர்கள் எல்லாரும் வர்க்க உணர்வுடையவராக மாறியுள்ளனர்; நிலப்பங்கீடு செய்வது, அதிகாரத்தை ஸ்தாபிப்பது, தொழிலாளர்-விவசாயிகளை ஆயுதபாணிகளாக்குவது முதலியவை பற்றிப் பொதுவாக அறிந்துள்ளனர். தாம் போரிடுவது தமக்காக, தொழிலாளர், விவசாயி வர்க்கங்களுக்காக என்பதை எல்லாரும் அறிந்து கொள்கின்றனர். எனவே, கஷ்டங்களிலும் கசப்பான போராட்டங்களிலும் அவர்கள் முறையீடு செய்யாமல் இருக்கின்றார்கள். ஒவ்வொரு கம்பெனியிலும், பட்டாலியனிலும், றெஜிமென்டிலும், அவற்றுக்குச் சொந்தமான படைவீரர் கமிட்டிகள்

இருக்கின்றன. அவை படைவீரர்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவ தோடு, அரசியல் வேலை, வெகுஜன வேலை இரண்டையும் செய்கின்றன.

''சிங்காங் மலைகளில் போராட் டம்'' (25. நவம்பர். 1928.) தே. ப. தொ. 1.

மனக்குறைகளை (பழைய சமுதாயத் தாலும் பிற்போக்குவாதிகளாலும் உழைப்பாளி மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை) வெளியிடும் இயக்கமும் (வர்க்கத் தோற்றம், கடமை நிறை வேற்றம், போராடும் திடசித்தம் என்ற) மூன்று சோதனை இயக்கமும் சரியாக மலர்ந்து வருவது, சுரண்டப்பட்ட உழைப்பாளி மக்களின் விமோசனத்துக் காகவும், தேசியரீதியான நிலச்சீர்திருத் தத்துக்காகவும், மக்களின் பொது எதிரி யான சியாங் கை-ஷேக் கொள்ளைக் கூட் டத்தை ஒழிப்பதற்காகவும் நடத்தும் போரில் ராணுவம் முழுவதிலுமுள்ள

தளபதிகள், போராளிகளின் அரசியல் உணர்வைப் பெரிதும் உயர்த்தியிருக்கின் றது. அதே வேளையில் கம்யூனிஸ்ட் கட் சியின் தலைமையில் தளபதிகள், போரா ளிகள் அனைவரின் உறுதியான ஐக்கியத் தையும் அது பெரிதும் பலப்படுத்தியுள் ளது. இந்த அடிப்படையில், ராணுவம் அதன் அணிகளைப் பெரிதும் தூய்மைப்ப டுத்தி, கட்டுப்பாட்டைப் பலப்படுத்தி, பயிற்சிக்கான வெகுஜன இயக்கத்தை மலரச் செய்து, பூரணமான தலைமை யிலும், ஒழுங்கான முறையிலும் அதன் அரசியல், பொருளாதார, ராணுவ ஜன நாயகத்தை மேலும் விருத்தி செய்துள் ளது. இவ்வாறு, ராணுவம் முழுவதும், ஒவ்வொருவரும் தனது கருத்துகளையும் பலத்தையும் வழங்கும் முறையில், ஒருவர் போல் ஐக்கியப்பட்டுள்ளது. இது தியா கத்துக்கு அஞ்சாத, பொருளாயதக் கஷ் டங்களை வெற்றி கொள்ளும் ஆற்றலு டைய, வெகுஜன வீர சாகஸத்தை வெளிக்காட்டுகின்ற, எதிரிகளை ஒழிக்கும்

துணிவுடைய ஒரு படையாக மாறியுள்ளது. இத்தகைய படை உலகில் வெல்லப்பட முடியாத ஒரு படையாகும்.

''வட மேற்கில் ஈட்டிய மகத்தான வெற்றி பற்றியும், விடுதலைச் சேனையில் நடத்திய புதிய ரக சித்தாந்த கல்வி இயக்கம் பற்றியும்'' (7. மார்ச். 1948.) தே. ப. தொ. 4.

கடந்த சில மாதங்களாக ஏறக்குறைய மக்கள் விடுதலைச் சேனை முழுவதும் சமர்களுக்கிடை ஓய்வு நேரங்களை பெருமளவு சித்தாந்த அரசியல் போதனைக்கும் பயிற்சிக்கும் உபயோகித்து வந்தது. இது பூரணமாக வழி காட்டப்பட்ட, ஒழுங்கான, ஜனநாயக முறையில் நடத்தப்பட்டது. எனவே இது பரந்துபட்ட தளபதிகள் போராளிகளின் புரட்சி உற்சாகத்தைத் தூண்டி, யுத்த நோக்கத்தைத் தெளிவாகக் கிரகித்துக் கொள்ளச் செய்து, படையில் கண்ட குறிப்பிட்ட சில தவறான சித்தாந்த போக்குகளையும் விரும்பத் தகாத

வெளிப்பாடுகளையும் இல்லாமல் செய்து, ஊழியர்கள்-போராளிகளுக்குப் போதனையளித்து, படையின் போராற்றலையும் பெரிதும் விருத்தியாக்கியுள்ளது. இப்பொழுது முதல், இந்த புதிய ரக சித்தாந்த கல்வி இயக்கத்தை, ஜனநாயக இயல்பும் வெகுஜன குணும்சமும் பொருந்திய இயக்கத்தை நாம் படையில் தொடர்ந்து நடத்த வேண்டும்.

''ஷன்ஸி-சுய்யுவன் விடுதலைப்பிரதேச ஊழியர்கள் மாநாட்டுரை'' (1. ஏப்ரல். 1948.) தே. ப. தொ. 4.

யப்பானிய-எதிர்ப்பு ராணுவ, அரசியல் கல்லூரியின் கல்விக் கொள்கை ஒரு உறுதியான, சரியான அரசியல் திசை மார்க்கத்தையும், விடாமுயற்சியுள்ள சாதாரண வேலைநடையையும் வளைந்து கொடுக்கும் யுத்ததந்திர தந்திரோபாயங்களையும் பேணி வளர்ப்பதாகும். இவை ஒரு யப்பானிய-எதிர்ப்பு புரட்சிகரப்

படைவீரனை உருவாக்குவதற்குரிய மூன்று பிரதான அம்சங்களாகும். இந்த மூன்று அம்சங்களின் பிரகாரம் இக்கல்லூரியின் ஊழியர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் எல்லாரும் போதிக்கின்றனர், படிக்கின்றனர்.

''எதிரியால் தாக்கப்படுவது நல்ல விஷயமன்றித் தீய விஷயமல்ல''
(26. மே. 1939.)

கடினமாகப் போராடும் ஒரு பாரம்பரிய நடை நமது தேசத்துக்கு எப்பொழுதும் உண்டு. இந்த நடையை நாம் விருத்தி செய்ய வேண்டும். ...இன்னும், கம்யூனிஸ்ட் கட்சி ஒரு உறுதியான, சரியான அரசியல் திசைமார்க்கத்துக்காக எப்பொழுதும் வாதாடி வந்திருக்கின்றது. ...இந்த திசைமார்க்கம் கடினமான போராட்ட நடையிலிருந்து பிரிக்க முடியாத ஒன்று. ஒரு உறுதியான சரியான அரசியல் திசைமார்க்கம் இல்லாவிட்டால், கடினமான வேலைநடையைத் துரிதப்படுத்துவது சாத்தியமாகாது. கடினமான போராட்ட நடை இல்லாவிட்டால், ஒரு உறுதியான, சரியான அரசியல் திசைமார்க்கத்தை நிலைநிறுத்துவதும் சாத்தியமாகாது.

''யென்ஆனில் நிகழ்ந்த சர்வதேசிய உழைப்பாளர் தினக் கொண்டாட்டக் கூட்டத்தில் ஆற்றிய உரை'' (1. மே. 1939.)

ஐக்கியப்படு! விழிப்போடிரு! அக்கறையாயிரு! சுறுசுறுப்பாயிரு!

''யப்பானிய-எதிர்ப்பு ராணுவ, அரசியல் கல்லூரி''யின் நெறியுரை

உலகில் உண்மையில் எண்ணத் தகுந்தது யாதெனில் கடமை உணர்வாகும். கம்யூனிஸ்ட் கட்சி கடமை உணர்வில் மிகக் கண்டிப்பாக இருக்கின்றது.

மாஸ்கோவில் சீன மாணவர்கள்-பயிற்சியாளர்களை சந்தித்த போது ஆற்றிய உரை (17. நவம்பர். 1957.)

13. அதிகாரிகளுக்கும் படை யினருக்கும் இடையிலுள்ள உறவுகள்

நமது படையிடம் எப்பொழுதும் இரண்டு கொள்கைகள் உண்டு. முதலாவதாக, நாம் எதிரிகள் மீது ஈவிரக்கமற்றவர்களாக இருக்க வேண்டும். அவர்களை அடக்கித் துடைத்தொழிக்க வேண்டும். இரண்டாவதாக, நம்மவர்கள், மக்கள், எமது தோழர்கள், எமது உயர் அதிகாரிகள், கீழ்ப்பணியாளர்கள் ஆகியவர்களுடன் அன்பாக இருக்க வேண்டும். அவர்களுடன் ஐக்கியப்பட வேண்டும்.

பின்னணிப் படைப் பிரிவுகளின் ஆதர்ச படிப்புப் பிரதிநிதிகளுக்குக் கட்சி மத்தியக் கமிட்டி அளித்த விருந்தில் ஆற்றிய உரை (18. செப்டம்பர். 1944.)

நாம் ஐந்து வாவிகள்-நாலு கடல்களிலிருந்தும் வந்து, ஒரு பொதுவான புரட்சி இலட்சியத்துக்காக ஒன்று சேர்ந்திருக்கின்றோம். . . . நமது ஊழியர்கள் ஒவ்வொரு போர்வீரரிலும் அக்கறை செலுத்த வேண்டும். புரட்சி அணிகளிலுள்ள எல்லா மக்களும் ஒருவரை ஒருவர் கவனிக்க வேண்டும். ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும். ஒருவருக்கு ஒருவர் உதவி செய்ய வேண்டும்.

''மக்களுக்குத் தொண்டு செய்க'' (8. செப்டம்பர். 1944.) தே. ப. தொ. 3.

படைவீரர்களைப் பேணும் படி ஊழியர்களுக்கும், ஊழியர்களை ஆதரிக்கும் படி படைவீரர்களுக்கும் அறைகூவல் விடுத்து, ஊழியர்களை ஆதரிப்பது, படைவீரர்களைப் பேணுவது என்ற ஒரு இயக்கம் ஒவ்வொரு படைப்பிரிவிலும் நடத்தப்படல் வேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களின் குறைபாடுகள், தவ

றுகளை எடுத்துக் காட்டி அவற்றை விரை வில் திருத்த வேண்டும். இவ்வாறு அவர்கள் தமக்குள் மிகச் சிறந்த ஐக்கி யத்தை உருவாக்க முடியும்.

''1945மாண்டுக்கான கடமை கள்'' (15. டிஸம்பர். 1944.)

அதிகாரிகளுக்கும் படையினருக்கும் இடையில், ராணுவத்துக்கும் மக்களுக் கும் இடையில் உறவுகள் பாதிக்கப்படு வதற்கு காரணம் தவருன வழிமுறைகள் என்று பலர் எண்ணுகின்றனர். ஆனல் படையினருக்கும் மக்களுக்கும் மதிப்புக் கொடுக்கும் அடிப்படை மனேபாவம் (அல்லது அடிப்படைக் கோட்பாடு) தழுவிய ஒரு பிரச்சினே இது என்று நான் அவர்களுக்கு எப்பொழுதும் கூறுகின் றேன். இந்த மனேபாவத்திலிருந்து தான் பல்வேறு கொள்கைகளும், வழி முறைகளும், வடிவங்களும் பிறக்கின்றன. நாம் இந்த மனேபாவத்திலிருந்து விலகி னல் இந்தக் கொள்கைகள், வழிமுறை

கள், வடிவங்கள் எல்லாம் நிச்சயம் பிழை யாகி விடும்; அதிகாரிகளுக்கும் படையி னருக்குமிடையில், ராணுவத்துக்கும் மக்களுக்குமிடையில் நிலவும் உறவுகள் உண்மையில் திருப்திகரமானவையாக இருக்க மாட்டா. ராணுவத்தின் அரசி யல் வேலேக்கான நமது மூன்று பிரதான கோட்பாடுகளாவன:- ஒன்று, அதிகாரி களுக்கும் படையினருக்குமிடையில் ஐக்கி யம். இரண்டு, ராணுவத்துக்கும் மக்க ளுக்குமிடையில் ஐக்கியம். மூன்று, எதிரிப் படைகளேச் சீர்குலேப்பது. இந் தக் கோட்பாடுகளேப் பயனுள்ள முறை யில் பிரயோகிக்க வேண்டுமானுல், படை யினருக்கும் மக்களுக்கும் மதிப்புக் கொடுக்கின்ற, தமது ஆயுதங்களேக் கீழே போட்ட யுத்தக் கைதிகளின் மனித அந்தஸ்துக்கு மதிப்புக் கொடுக்கின்ற இந்த அடிப்படை மனேபாவத்துடன் நாம் தொடங்க வேண்டும். இவையனேத் தையும் ஒரு அடிப்படை மனேபாவம் தழுவிய ஒன்ருகக் கருதாமல் தொழில்

நுட்ப விஷயமாகக் கருதுபவர்கள் உண்மையில் தவறானவர்கள். அவர்கள் தமது கருத்தைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

''நீண்டகால யுத்தம் பற்றி''
(மே. 1938.) தே. ப. தொ. 2.

உழைப்பாளி மக்கள் மத்தியில் வேலை செய்யும் பொழுது கம்யூனிஸ்டுகள் இணங்க செய்வது, போதனையளிப்பது என்ற ஜனநாயக முறையைக் கையாள வேண்டும். எவ்விதத்திலும் கட்டளை வாதத்திலோ பலவந்தத்திலோ ஈடுபடக் கூடாது. சீன கம்யூனிஸ்ட் கட்சி இந்த மார்க்ஸிஸம்-லெனினிஸக் கோட்பாட்டை விசுவாசமாகக் கடைப்பிடிக் கின்றது.

''மக்கள் மத்தியில் முரண்பாடு களைச் சரியாகக் கையாள்வது பற்றி'' (27. பெப்ரவரி. 1957.)

சித்தாந்தப் புனருருவாக்கம் நீடித்த, பொறுமையான, பிரயாசையான வேலையை உள்ளடக்கியது என்பதை நமது தோழர்கள் புரிந்து கொள்ள வேண்டும். வாழ்வில் பல தசாப்தங்களாக உருவாக் கப்பட்டு வந்த மக்களின் சித்தாந்தத்தை ஒரு சில சொற்பொழிவுகள் கொடுப்பதன் மூலம் அல்லது ஒரு சில கூட்டங்கள் கூட்டு வதன் மூலம் மாற்றலாம் என முயற் சிக்கக் கூடாது. அவர்களை நம்பச் செய் யும் ஒரே ஒரு வழி இணங்க செய்வதன்றிப் பலவந்தப்படுத்துவதல்ல. பலவந்தப்ப டுத்துவதன் மூலம் ஒருபோதும் நம்பச் செய்ய முடியாது. பலாத்காரத்தின் மூலம் அவர்களை நம்பச் செய்ய முயல்வது ஒருபோதும் வேலை செய்யாது. எதிரி யைச் சமாளிக்கும் பொழுது இத்தகைய முறை அனுமதிக்கக் கூடியது. ஆனால் தோழர்களுடன் அல்லது நண்பர்களுடன் பழகும் பொழுது இது முற்றிலும் அனு மதிக்கப்படக் கூடாது.

''சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பிர சார வேலை பற்றிய தேசிய மாநாட் டுரை'' (12. மார்ச். 1957.)

எதிரிக்கும் நமக்குமிடையில் நாம் ஒரு வேறுபாடு செய்து கொள்ள வேண்டும். தோழர்கள் மீது ஒரு பகை நிலைப்பாட்டை மேற்கொண்டு எதிரிகளை நடத்துவது போல் அவர்களை நடத்தக் கூடாது. நாம் மக்களின் இலட்சியத்தைப் பாது காத்து, அவர்களுடைய அரசியல் உணர்வை உயர்த்தும் பேரார்வத்துடன் பேச வேண்டும்; நம்முடைய அணுகு முறையில் எள்ளி நகையாடுதலோ தாக்கு தலோ இருக்கக் கூடாது.

ஷெ

14. படைக்கும் மக்களுக்கும் இடையிலுள்ள உறவுகள்

மக்கள் தமது சொந்தப்படை என்று கருதக் கூடிய முறையில் ராணுவம் மக்களு டன் ஒன்றாக வேண்டும். இத்தகைய படை உலகில் வெல்லப்பட முடியாதது....

''நீண்டகால யுத்தம் பற்றி''
(மே. 1938.) தே. ப. தொ. 2.

நாம் மக்களைச் சார்ந்திருக்கும் வரை, பொதுமக்களின் வற்றாத சிருஷ்டி ஆற் றலை உறுதியாக நம்பும் வரை, இவ்வாறு அவர்கள் மீது நம்பிக்கை வைத்து நம்மை அவர்களுடன் இணைத்துக் கொள்ளும் வரை, நாம் எந்தக் கஷ்டத்தையும் வெல்ல முடியும்; எந்த ஒரு எதிரியும் நம்மை நசுக்க முடியாது, அதே வேளை

யில் எந்த எதிரியையும் நம்மால் நசுக்க முடியும் என்பதை ஒவ்வொரு தோழரும் புரிந்து கொள்ளும் படி செய்ய வேண்டும்.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

எமது தோழர்கள் தாம் செல்லுமிட மெங்கும் மக்களுடன் நல்ல உறவுகளை அமைத்து, அவர்கள் மீது அக்கறை செலுத்தி, அவர்கள் தமது கஷ்டங்களை வெல்வதற்கு உதவி செய்ய வேண்டும். நாம் பொதுமக்களுடன் ஐக்கியப்பட வேண்டும்; நாம் எவ்வளவுக்கு அதிகமாக மக்களுடன் ஐக்கியப்படுகிறோமோ அவ்வ ளவுக்கு நல்லது.

''சுங்கிங் பேச்சுவார்த்தைகள் பற்றி'' (17. அக்டோபர். 1945.) தே. ப. தொ. 4.

விடுதலைப் பிரதேசங்களில் படைகள் அரசாங்கத்தை ஆதரித்து மக்களைப் பேண வேண்டும். அதே வேளையில் ஜனநாயக அரசாங்கங்கள் படைகளை

ஆதரித்து யப்பானை எதிர்த்துப் போரி டும் போர்வீரர்களின் குடும்பங்களைச் சலுகையுடன் நடத்தும் வேலையில் மக் களுக்குத் தலைமை தாங்க வேண்டும். இம்முறையில் படைக்கும் மக்களுக்கும் இடை உறவுகள் இன்னும் சிறப்பாகும்.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

படையில் ஒவ்வொரு தளபதியும் போர்வீரரும் அரசாங்கத்தை ஆதரித்து மக்களைப் பேணும் முக்கியத்துவத்தைப் பூரணமாகப் புரிந்து கொள்வது சித்தாந்த ரீதியில் தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச் சினையாகும். ராணுவத்தைப் பொறுத்த வரை, அது இந்த வேலையை நன்ருகச் செய்யும் வரை, ஸ்தல கட்சியும் ஸ்தல அரசாங்கமும் மக்களும் கூட ராணுவத் துடன் தமது உறவுகளைத் திருத்திக் கொள்வார்கள்.

''விடுதலைப் பிரதேசங்களில் 1946 மாண்டுக்கான வேலைக் கொள்கை'' (15. டிஸம்பர். 1945.) தே. ப. தொ. 4.

அரசாங்கத்தை ஆதரித்து மக்களைப் பேணும் இயக்கம், படைகளை ஆதரித்து யப்பானை எதிர்த்துப் போரிடும் போர் வீரர்களின் குடும்பங்களைச் சலுகையுடன் நடத்தும் இயக்கம் ஆகியவற்றில் ஒருபு றம் ராணுவமும் மறுபுறம் கட்சியும் அர சாங்கமும் 1943ல் தத்தம் தரப்பில் இழைத்த குறைபாடுகளையும் தவறுகளை யும் பூரணமாகப் பரிசோதித்து 1944ல் உறுதியாகத் திருத்த வேண்டும். இப்பொ ழுது முதல் ஒவ்வொரு ஆண்டின் முதல் மாதத்திலும் இத்தகைய இயக்கங்கள் எங் கும் நடத்தப்பட வேண்டும். இந்த இயக் கங்களின் போது ''அரசாங்கத்தை ஆத ரித்து மக்களைப் பேணுவது'', ''ராணு வத்தை ஆதரித்து யப்பானை எதிர்த்துப் போரிடும் போர்வீரர்களின் குடும்பங் களைச் சலுகையுடன் நடத்துவது'' என்ற வாக்குறுதிகளைத் திரும்பவும் திரும்பவும் வாசிக்க வேண்டும். தளப்பிரதே சங்களில் கட்சி, அரசாங்க நிறுவனங்கள் வெகுஜன ஸ்தாபனங்கள் அல்லது பிர

ஜைகளுக்கு எதிரான துருப்புகளின் அதி கார நடவடிக்கைகளும் துருப்புகள் மீது கட்சி, அரசாங்க நிறுவனங்கள் வெகு ஜன ஸ்தாபனங்கள் அல்லது பிரஜை கள் காட்டிய அக்கறையீனமும் பொது மக்களுக்கு முன் மீண்டும் மீண்டும் சுய-விமர்சனம் செய்து, (ஒவ்வொரு தரப் பும் தன்னைத் தானே சுய-விமர்சனம் செய்ய வேண்டும், மறுதரப்பை அல்ல) இத்தவறுகளும் குறைபாடுகளும் பூரண மாகத் திருத்தப்பட வேண்டும்.

''தளப்பிரதேசங்களில் வாடகை யைக் குறைப்பது, உற்பத்தியைப் பெருக்குவது, அரசாங்கத்தை ஆத ரித்து மக்களைப் பேணுவது என்ற இயக்கங்களைப் பரப்ப வேண்டும்'' (1. அக்டோபர். 1943.) தே. ப. தொ. 3.

15. மூன்று பெரும் ஜனநாயகம்

ராணுவத்தில் ஒரு தகுதியான அளவு ஜனநாயகம் அமுல் நடத்தப்பட வேண்டும். பிரதானமாக, இம்சித்து அடிக்கும் பிரபுத்துவ நடைமுறையை ஒழித்து, அதிகாரிகளையும் படையினரையும் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளச் செய்ய வேண்டும். இது செய்யப்பட்டதும் அதிகாரிகளுக்கும் படையினருக்கும் இடையில் ஐக்கியம் உருவாகும்; படையின் போர்த் திறன் பெரிதும் விருத்தியடையும்; நீண்டகால கொடூர யுத்தத்தில் நின்று பிடிக்கும் நமது ஆற்றல் பற்றி சந்தேகமே இராது.

''நீண்டகால யுத்தம் பற்றி''
(மே. 1938.) தே. ப. தொ. 2.

செஞ்சேனையின் பொருளாயத வாழ்வு

இவ்வளவு வறியதாய் இருந்த போதிலும், போர்கள் இவ்வளவு அதிகமாக நடைபெற்ற போதிலும், செஞ்சேனை தொடர்ந்து செயல்பட முடிந்ததற்குக் காரணம் கட்சி வகித்த பாத்திரத்தை விட, செஞ் சேனைக்குள் ஜனநாயகம் அனுஷ்டிக்கப்பட்டதாகும். அதிகாரிகள் படையினரை அடிப்பதில்லை; அதிகாரிகளும் படையினரும் சமமாக நடத்தப்படுகின்றனர்; கூட்டங்கள் நடத்திப் பேசும் உரிமை படைவீரருக்குண்டு; அற்ப சம்பிரதாயங்கள் இல்லாமல் செய்யப்பட்டு விட்டன; கணக்குகள் எல்லாருடைய பரிசோதனைக்கும் விடப்பட்டுள்ளன. ...சீனாவில் மக்களுக்கு மட்டுமல்ல ராணுவத்துக்கும் ஜனநாயகம் தேவைப்படுகின்றது. எமது படையில் பயிலும் ஜனநாயகம் பிரபுத்துவ கூலிப்படைகளைச் சீர்குலைக்கும் ஒரு பிரதான ஆயுதமாகும்.

''சிங்காங் மலைகளில் போராட்டம்'' (25. நவம்பர். 1928.)
தே. ப. தொ. 1.

நமது படையில் அரசியல் வேலேக்கான கொள்கை சாதாரண போர்வீரர், தளபதிகள், ஊழியர் எல்லாரையும் பூரணமாகத் தட்டி எழுப்பி மத்தியப்படுத்தப் பட்ட தலைமையின் கீழ் ஒரு ஜனநாயக இயக்கத்தின் மூலம் உயர்ந்த அளவு அரசியல் ஐக்கியம், ஓரளவு சிறந்த வாழ்க்கை வசதிகள், சிறந்த ராணுவ நுட்பமும் தந்திரோபாயங்களும் என்ற மூன்று பிரதான குறிக்கோள்களை நிறைவேற்றுவதாகும். நமது படைப்பிரிவுகளில் இன்று உற்சாகமாக நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் மூன்று சோதனைகள், மூன்று அபிவிருத்திகள் என்ற இயக்கத்தின் நோக்கம் அரசியல், பொருளாதார ஜனநாயக முறைகள் மூலம் இந்தக் குறிக்கோள்களில் முன் இரண்டையும் நிறைவேற்றுவதாகும்.

பொருளாதார ஜனநாயகத்தைப் பொறுத்தவரை, படையினரால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கம்பெனியின் சப்ளை, உணவு விஷயங்களை நடத்

துவதில் கம்பெனித் தலைமைக்கு உதவி செய்யும் உரிமை இருக்க வேண்டும். (ஆனால் அதைத் தாண்டிச் செல்லக் கூடாது.)

ராணுவ ஜனநாயகத்தைப் பொறுத்தவரை, பயிற்சிக் காலங்களில் அதிகாரிகளுக்கும் போர்வீரருக்கும் இடையிலும் போர்வீரர்கள் மத்தியிலும் பரஸ்பர போதனை முறை நிலவ வேண்டும்; போர்க்காலங்களில் போர்முனையில் உள்ள கம்பெனிகள் பல்வேறு விதமான பெரிய, சிறிய கூட்டங்களை நடத்த வேண்டும். கம்பெனித் தலைமையின் வழிகாட்டலில் சாதாரண போர்வீரர்கள் எதிரி நிலைகளை எப்படித் தாக்கிக் கைப்பற்றுவது, இதர போர்க்கடமைகளை எப்படி நிறைவேற்றுவது என்பதை விவாதிக்கத் தட்டி எழுப்பப்பட வேண்டும். போர் பல நாட்கள் நீடிக்கும் பொழுது இத்தகைய பல கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். வட ஷென்சி பான்லுங் சமரிலும், ஷன்சி-சஹார்-ஹோபெய் பிரதேசத்தில் சிச்சியா

சுவாங் சமரிலும் இந்த வகையான ரா ணுவ ஜனநாயகம் அமுல் நடத்தப்பட்டு பெரும் சாதனைகள் ஈட்டப்பட்டன. இந்த நடைமுறை நன்மை செய்யும் அன்றி எவ்வித தீமையும் செய்யாது என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது.

''ராணுவத்தில் ஜனநாயக இயக் கம்'' (30. ஜனவரி. 1948.) தே. ப. தொ. 4.

மகத்தான போராட்டத்தில் சீன கம் யூனிஸ்ட் கட்சி அதன் தலைமை ஸ்தாப னங்கள் எல்லாவற்றையும், அதன் உறுப் பினர், ஊழியர் அனைவரையும் தமது முன்முயற்சியைப் பரிபூரணமாக வெளிப் படுத்த வேண்டும் என்று கோருகின்றது. இந்த முன்முயற்சி மட்டும் வெற்றியை உத்தரவாதம் செய்ய முடியும். இந்த முன்முயற்சி, தலைமை உறுப்புகளும் ஊழி யரும் கட்சி அணியினரும் ஆக்கபூர்வமாக வேலை செய்யும் ஆற்றலிலும், பொறுப்பு ணர்ச்சியிலும், வேலையில் காட்டும் நிரம்

பிய சுறுசுறுப்பிலும், கேள்விகள் எழுப்பி அபிப்பிராயங்கள் தெரிவித்துத் தவறுகளை விமர்சனம் செய்யும் துணிவிலும் திறமை யிலும், தலைமை உறுப்புகளையும் தலைமை ஊழியர்களையும் தோழமை பூர்வமாகக் கண்காணிப்பதிலும், ஸ்தூலமாகக் காட் டப்பட வேண்டும். இல்லாவிட்டால் ''முன்முயற்சி'' என்பது வெறும் வாய்ப் பந்தலாகும். ஆனால் இத்தகைய முன் முயற்சியின் பிரயோகம் கட்சி வாழ்வில் பரவியுள்ள ஜனநாயகத்தைச் சார்ந்தி ருக்கிறது. கட்சி வாழ்வில் போதிய ஜனநாயகம் இல்லாவிட்டல் இதைப் பூர ணமாக வெளிப்படுத்த முடியாது. ஜன நாயக சூழ்நிலையில் தான் பெருந்தொ கையான திறமைசாலிகளை வளர்த்தெ டுக்க முடியும்.

''தேசிய யுத்தத்தில் சீன கம்யூ னிஸ்ட் கட்சியின் பாத்திரம்'' (அக் டோபர். 1938.) தே. ப. தொ. 2.

யாராயிருந்தாலும் சரி, ஒருவர் பகை வர் அல்லாத வரையில், துர்நோக்கத்

துடன் தாக்குதல் தொடுக்காத வரையில், அவர் பூரணமாகப் பேச அனுமதிக்கப்பட வேண்டும். அவர் ஏதும் தவருனவற்றைச் சொன்னுல் பரவாயில்லே. எல்லா மட்டங்களிலுள்ள தலைவர்களும் ஏனேயோர் பேசுவதைக் கேட்கும் கடப்பாடு உடையவர்கள். இங்கு இரண்டு கோட்பாடுகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். (1) அறிந்தவை எல்லாவற்றையும் பேசுவது, ஒன்றையும் ஒழிக்காமல் பேசுவது. (2) பேச்சாளனேக் குறைகூருமல் இருப்பது, அவருடைய வார்த்தைகளே எச்சரிக்கையாகக் கொள்வது. ''பேச்சாளனேக் குறைகூருமல் இருப்பது'' என்ற கோட்பாட்டை போலியாக அல்ல, உண்மையாகக் கடைப்பிடிக்கா விட்டால் விளேவு ''அறிந்தவை எல்லாவற்றையும் பேசுவது, ஒன்றையும் ஒழிக்காமல் பேசுவ''தாக இருக்காது.

''1945மாண்டுக்கான கடமைகள்'' (15. டிஸம்பர். 1944.)

ஜனநாயக வாழ்வு, ஜனநாயகத்துக்கும் மத்தியத்துவத்துக்கும் உள்ள உறவு, ஜனநாயக மத்தியத்துவத்தை நடைமுறையில் பிரயோகிக்கும் வழி ஆகியவை பற்றி கட்சி உறுப்பினர்கள் புரிந்து கொள்வதற்காக, ஜனநாயக வாழ்வு பற்றிய போதனே கட்சிக்குள் நடத்தப்பட வேண்டும். இந்த வழியில் தான் கட்சிக்குள் ஜனநாயக வாழ்வை உண்மையில் விஸ்தரிக்க முடியும். அதே வேளேயில் அதீத-ஜனநாயகத்தையும், கட்டுப்பாட்டை அழிக்கும் தன் மனப் போக்கையும் தவிர்க்க முடியும்.

''தேசிய யுத்தத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம்'' (அக்டோபர். 1938.) தே. ப. தொ. 2.

படையிலும் ஸ்தல நிறுவனங்களிலும் உட்கட்சி ஜனநாயகம் என்பது கட்டுப்பாட்டைப் பலப்படுத்துவது, போராற்றலேப் பெருக்குவது என்று அர்த்தமேயன்றி, அவற்றைப் பலவீனப்படுத்துவ

தென்று அர்த்தமல்ல.

ஷை

தத்துவத் துறையில் அதீத-ஜனநாய கத்தின் வேர்களை அழிப்பது. முதலாவ தாக, அதீத-ஜனநாயகம் கட்சி ஸ்தா பனத்துக்குத் தீங்கு விளைவிக்கின்றது அல்லது அதைப் பூரணமாக உடைத்தும் விடுகின்றது; கட்சியின் போராற்றலை பலவீனப்படுத்தி அல்லது பூரணமாகச் சிதைத்துக் கூட விடுகின்றது. கட்சியின் போராட்டக் கடமைகளை நிறைவேற்ற முடியாமல் செய்கின்றது. இவ்வாறு புரட் சியைத் தோல்வியடையச் செய்கின்றது. இவை அதீத-ஜனநாயகத்தால் ஏற்படும் அபாயம் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டும். இரண்டாவதாக, கட்டுப் பாட்டை விரும்பாத குட்டி பூர்ஜுவா தனிநபர்வாதத்திலிருந்து அதீத-ஜனநா யகம் தோன்றுகின்றது என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டும். இந்த கட்டுப் பாட்டை விரும்பாத இயல்பு கட்சிக்குள்

கொண்டு வரப்பட்டதும், அது அரசியல் ரீதியிலும், ஸ்தாபனரீதியிலும் அதீத-ஜனநாயகக் கருத்துகளாக வளர்கின்றது. இந்தக் கருத்துகள் பாட்டாளி வர்க்கத் தின் போராட்டக் கடமைகளுக்குச் சிறி தளவேனும் பொருந்தியவையல்ல.

''கட்சியில் நிலவும் தவறான கருத்து களைத் திருத்துவது பற்றி'' (டிஸம் பர். 1929.) தே. ப. தொ. 1.

16. கல்வியும் பயிற்சியும்

நமது கல்விக் கொள்கை கல்வி பெறும் ஒவ்வொருவரையும் ஆத்மீகரீதியி லும், அறிவிலும், ஆரோக்கியத்திலும் வளர்ச்சி அடையவும், சோஷலிஸ உணர் வும் கலாச்சாரமும் உடைய தொழிலா ளியாகவும் துணை செய்ய வேண்டும்.

''மக்கள் மத்தியில் முரண்பாடு களைச் சரியாகக் கையாள்வது பற்றி'' (27. பெப்ரவரி. 1957.)

ஊழியர்களின் கல்வியைப் பொறுத்த வரை, வேலையிலாயினும் சரி, ஊழியர் களுக்கான பாடசாலைகளில் ஆயினும் சரி, சீன புரட்சியின் நடைமுறைப் பிரச்சி னைகளை ஆராய்வதை மையமாக வைத்து,

மார்க்ஸிஸம்-லெனினிஸத்தின் அடிப்ப டைக் கோட்பாடுகளை வழி காட்டியாக உபயோகிக்கும் கொள்கை ஸ்தாபிக்கப் பட வேண்டும். மார்க்ஸிஸம்-லெனினி ஸத்தை நிலையியலாகவும் தனிமைப்ப டுத்தியும் கற்கும் முறை புறக்கணிக்கப் பட வேண்டும்.

''நமது படிப்பைச் சீர்செய்வோம்'' (மே. 1941.) தே. ப. தொ. 3.

ஒரு ராணுவக் கல்லூரியைப் பொறுத் தவரை, ஒரு அதிபரையும், போதகா சிரியர்களையும் தேர்ந்தெடுப்பதும், ஒரு கல்விக் கொள்கையை வகுப்பதும் மிக முக்கியமான பிரச்சினையாகும்.

''சீன புரட்சி யுத்தத்தில் யுத்த தந்திரப் பிரச்சினைகள்'' (டிஸம் பர். 1936.) தே. ப. தொ. 1.

நூறு பேரைக் கொண்ட ஒரு கல்லூரி ஒரு சிலரை, அல்லது பத்துப் பேரை அல்லது அதற்குக் கூடுதலான பேரை தலைமைக் குழுவாகக் கொள்ளாவிட்டால்,

உண்மையில் நன்முக நடத்தப்பட முடியாது. இக்குழு யதார்த்த நிலைமைகளின் பிரகாரம் உருவாக்கப்பட வேண்டும் (வலிந்து உருவாக்கப்பட கூடாது). அது மிக ஊக்கமான, நேர்மையான, விழிப்பான ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்களைக் கொண்டதாயிருக்க வேண்டும்.

''தலைமைமுறை பற்றிய சில பிரச்சினைகள்'' (1. ஜுன். 1943.) தே. ப. தொ. 3.

நமது படையின் அதிகாரிகள், போராளிகள் எல்லாரும் தமது ராணுவக் கலையை விருத்தி செய்ய வேண்டும்; நிச்சயம் வெற்றி பெறும் போரில் துணிகரமாக முன்னேற வேண்டும்; எதிரிகள் அனைவரையும் உறுதியாகவும், துப்புரவாகவும், பூரணமாகவும், முற்று முழுதாகவும் ஒழித்துக்கட்ட வேண்டும்.

''சீன மக்கள் விடுதலைச் சேனையின் பிரகடனம்'' (அக்டோபர். 1947.) தே. ப. தொ. 4.

இப்பொழுது ஆரம்பித்த ஓராண்டு ஸ்திரப்படுத்தல், பயிற்சியளித்தல் என்ற வேலைத்திட்டத்தின் ராணுவ அம்சம் அரசியல் அம்சம் இரண்டுக்கும் சமமான முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும். இந்த இரண்டு அம்சங்களும் ஒன்றோடொன்று இணைக்கப்பட வேண்டும். ஆரம்பத்தில் அரசியல் அம்சத்துக்கு, அதாவது அதிகாரிகளுக்கும் படையினருக்கும் இடையில் உள்ள உறவுகளை விருத்தி செய்வது, அக ஐக்கியத்தை விரிவுபடுத்துவது, ஊழியர்கள் படைவீரர்கள் மத்தியில் ஒரு உயர்ந்த உற்சாகத்தைத் தூண்டுவது ஆகியவற்றுக்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறு தான் ராணுவத்தில் ஸ்திரப்படுத்தலும் பயிற்சியும் சுமுகமாக நடைபெற்று சிறந்த விளைவுகள் பெறும்.

''1945மாண்டுக்கான கடமைகள்'' (15. டிஸம்பர். 1944.)

பயிற்சி முறையைப் பொறுத்தவரை, அதிகாரிகள் படைவீரருக்குப் போதிப்

பது, படைவீரர் அதிகாரிகளுக்குப் போதிப்பது, படைவீரர் பரஸ்பரம் போதிப்பது என்ற வெகுஜனப் பயிற்சி இயக்கத்தை நாம் மலரச் செய்ய வேண்டும்.

''விடுதலைப் பிரதேசங்களில் 1946 மாண்டுக்கான வேலைக் கொள்கை'' (15. டிஸம்பர். 1945.) தே. ப. தொ. 4.

படைகளைப் பயிற்றுவதில் நமது சுலோகம், ''அதிகாரிகள் படைவீரருக்குப் போதிப்பது, படைவீரர் அதிகாரிகளுக்குப் போதிப்பது, படைவீரர் பரஸ்பரம் போதிப்பது'' என்பதாகும். போராளிகளுக்கு பெருமளவு நடைமுறைப் போர் அனுபவம் உண்டு. அதிகாரிகள் போராளிகளிடமிருந்து கற்க வேண்டும். பிறருடைய அனுபவத்தைத் தமதாக்கிக் கொண்டால் அவர்கள் மேலும் திறமையுடையவர்கள் ஆவர்.

''ஷன்ஸி-சுய்யுவன் தினசரி ஆசிரியர் குழுவுக்கு ஆற்றிய உரை'' (2. ஏப்ரல். 1948.) தே. ப. தொ. 4.

பயிற்சிப் பாடங்களைப் பொறுத்தவரை, பிரதான குறிக்கோள் இன்னும் இலக்குச் சூடு, துப்பாக்கி ஈட்டிமுனைப் போர், கைக்குண்டு எறிதல் போன்றவற்றின் நுட்பத் தரத்தை உயர்த்துவதேயாகும். இராப்போருக்கு விசேஷ அழுத்தம் கொடுக்கும் அதே வேளையில் தந்திரோபாயத் தரத்தை உயர்த்துவது இரண்டாந்தரமானதாகும்.

''விடுதலைப் பிரதேசங்களில் 1946 மாண்டுக்கான வேலைக் கொள்கை'' (15. டிஸம்பர். 1945.) தே. ப. தொ. 4.

17. மக்களுக்குத் தொண்டு செய்க

நாம் அடக்கமும், ஜாக்கிரதையுமுடையவர்களாக இருக்க வேண்டும்; இறுமாப்பு, அவசரபுத்தி இரண்டுக்கும் எதிராக நம்மைப் பாதுகாக்க வேண்டும்; உடல், பொருள், ஆவி மூன்ருலும் சீன மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும்....

''சீனுவின் சாத்தியமான இரண்டு தலைவிதிகள்'' (23. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

மக்களுக்கு முழுமனதுடன் தொண்டு செய்வது; ஒரு கணமேனும் பொதுமக்களிடமிருந்து நம்மைப் பிரியாமல் வைத்திருப்பது; எதைச் செய்தாலும் மக்களின் நலன்களிலிருந்து அன்றி, ஒருவரின் சுய-நலனிலிருந்தோ அல்லது ஒரு சிறு கும்பலின் நலன்களிலிருந்தோ தொடங்காமல் இருப்பது; மக்கள் மீதான நமது பொறுப்பையும் கட்சியின் தலைமை ஸ்தாபனங்கள் மீதான நமது பொறுப்பையும் ஒன்ருகக் கருதுவது—இவையே நமது தொடக்கப் புள்ளியாகும்.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

அரசாங்க நிறுவனங்கள் ஜனநாயக மத்தியத்துவத்தை அனுஷ்டிக்க வேண்டும். அவை பொதுமக்களைச் சார்ந்திருக்க வேண்டும். அவற்றின் ஊழியர்கள் மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும்.

''மக்கள் மத்தியில் முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது பற்றி'' (27. பெப்ரவரி. 1957.)

தோழர் பெத்யூன் அவர்களின் உணர்வு, தம்மைப் பற்றிய சிந்தனை ஒன்றுமின்றி பிறருக்கான அவருடைய பூரண தியாகம், தமது வேலையில் அவர் கொண்டிருந்த எல்லையற்ற பொறுப்புணர்ச்சியிலும், தோழர்கள் மீதும், மக்கள் மீதும் அவர் வைத்திருந்த எல்லையற்ற இதய-ஆர்வத்திலும் காணப்பட்டது. ஒவ்வொரு கம்யூனிஸ்டும் அவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

....

எள்ளத்தனையும் சுய-நலமற்ற உணர்வை நாம் எல்லாரும் அவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். இந்த உணர்வைக் கொண்டு ஒவ்வொருவரும் மக்களுக்கு மிகப் பயனுள்ளவராக வாழ முடியும். ஒருவருடைய திறமை பெரிதாக அல்லது சிறிதாக இருக்கலாம். ஆனால் இந்த உணர்வு அவருக்கு இருந்தால், அவர் உன்னத சிந்தையும் தூய்மையும் உடையவராக, ஆத்மீக பலமுடைய, கொச்சை நப்பாசைகளைக் கடந்த ஒரு மனிதனாக, மக்களுக்குப் பயனுள்ள ஒரு மனிதனாக இருப்பர்.

''நோர்மன் பெத்யூன் நினைவுக்காக'' *(21. டிஸம்பர். 1939.)* தே. ப. தொ. 2.

நமது கம்யூனிஸ்ட் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சி தலைமை தாங்கும் 8வது மார்க்க இராணுவமும், புதிய 4வது சேனையும் புரட்சியின் பட்டாளங்கள். நமது இந்தப் பட்டாளங்கள் மக்களின் விடுதலைக்குத் தம்மைப் பூரணமாய் அர்ப்பணித்து, மக்களின் நலன்களுக்காய் முற்றாக உழைப்பவை.

''மக்களுக்குத் தொண்டு செய்க'' *(8. செப்டம்பர். 1944.)* தே. ப. தொ. 3.

நமது ஊழியர்கள் அனைவரும், அவர்களுடைய அந்தஸ்து எதாயிருந்தாலும் சரி, மக்களின் சேவகர்கள் ஆவர். நாம் செய்வதெல்லாம் மக்களுக்குத் தொண்டு

செய்வதாகும். அப்படியானுல், நமது தீய சுபாவங்கள் எல்லாவற்றையும் வீசி எறிய நாம் ஏன் தயங்க வேண்டும்?

''1945மாண்டுக்கான கடமைகள்'' (15. டிஸம்பர். 1944.)

மக்களுக்கு பொறுப்புடையவர்களாக இருப்பது நமது கடமை. ஒவ்வொரு வார்த்தையும், ஒவ்வொரு செயலும், ஒவ்வொரு கொள்கையும் மக்களின் நலன்களுக்கு இசைவாக இருக்க வேண்டும்; தவறுகள் நேர்ந்தால், அவை திருத்தப் பட வேண்டும்—மக்களுக்குப் பொறுப்புடையவர்களாய் இருப்பதன் அர்த்தம் இதுவேயாகும்.

''யப்பானிய-எதிர்ப்பு யுத்த வெற்றிக்குப் பிந்திய நிலைமையும் நமது கொள்கையும்'' (13. ஆகஸ்ட். 1945.) தே. ப. தொ. 4.

எங்கே போராட்டம் இருக்கிறதோ, அங்கே தியாகமும் உண்டு. மரணம் என்பது அடிக்கடி நிகழ்வது. ஆனுல், நாம் மக்களின் நலன்களையும், ஏகப்பெரும்பான்மையினரின் துன்பதுயரங்களையும் மனதில் கொண்டு மக்களுக்காக உயிர் விட்டால், அது தகுதியான சாவாகும். இருந்தாலும், அனுவசியமான தியாகங்களைத் தவிர்க்க நாம் இயன்றதனைத்தையும் செய்ய வேண்டும்.

''மக்களுக்குத் தொண்டு செய்க'' (8. செப்டம்பர். 1944.) தே. ப. தொ. 3.

எல்லாரும் இறக்க வேண்டியவர்கள் தான். ஆனுல் இறப்பு என்பது அதன் முக்கியத்துவத்தில் வேறுபட்டது. ''ஒரே மாதிரி எல்லாருக்கும் மரணம் ஏற்பட்டாலும், அது தை மலையை விட தாக்கானதாக இருக்கலாம் அல்லது இறகை விட லேசானதாக இருக்கலாம்'' என்று ஸூமா சியென் என்ற புராதன சீன எழுத்தாளர் கூறினுர். மக்களின் நலன்களுக்காக மரணமடைவது தை மலையை

விடத் தாக்கானது. ஆனல் பாஸிஸ்டுக ளுக்காக உழைத்து, சுரண்டுவோருக்கும் ஒடுக்குமுறையாளருக்குமாக இறப்பது இறகை விட இலேசானதாகும்.

ஷி

18. தேசபக்தியும் சர்வ தேசியமும்

ஒரு சர்வதேசியவாதியாக இருக்கும் ஒரு கம்யூனிஸ்டு, அதே சமயத்தில் ஒரு தேசபக்தனுக இருக்க முடியுமா? அப்படி இருக்க முடியும் என்பது மட்டுமல்ல, இருக்கவும் வேண்டும் என்று நாம் கருதுகிறோம். தேசபக்தியின் குறிப்பிட்ட உள்ள டக்கம் வரலாற்று நிலைமைகளால் நிர்ண யிக்கப்படுகின்றது. ஒரு புறம் யப்பானிய ஆக்கிரமிப்பாளர், ஹிட்லர் ஆகியோரின் ''தேசபக்தி'' இருக்கின்றது. மறுபுறம் நமது தேசபக்தி இருக்கின்றது. இவற்றில் யப்பானிய-ஆக்கிரமிப்பாளர், ஹிட்லர் ஆகியோரின் ''தேசபக்தி''யைக் கம்யூனிஸ்டுகள் உறுதியாக எதிர்க்க வேண்டும். தத்தம் நாடுகளால் தொடுக்கப்

பட்ட யுத்தங்களைப் பொறுத்தவரையில், யப்பானிய கம்யூனிஸ்டுகளும் ஜெர்மன் கம்யூனிஸ்டுகளும் தோல்விவாதிகளாவர். சாத்தியமான எல்லா வழிகளிலும் யப்பானிய ஆக்கிரமிப்பாளருக்கும் ஹிட்லருக்கும் தோல்வியைக் கொண்டுவருவது யப்பானிய, ஜெர்மன் மக்களின் நலன்களுக்கு இசைவானதாகும். தோல்வி எவ்வளவுக்குப் பூரணமாக ஏற்படுகின்றதோ அவ்வளவுக்குச் சிறந்ததாக இருக்கும். ...காரணம் யப்பானிய ஆக்கிரமிப்பாளரும், ஹிட்லரும் தொடுத்துள்ள யுத்தங்கள் உலக மக்களுக்கு மாத்திரமல்ல, அவர்களுடைய நாட்டு மக்களுக்கும் ஊறு விளைக்கின்றன. இருந்தும், சீனுவின் நிலைமை வேறுபட்டது; காரணம் அது ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட நாடு. எனவே சீன கம்யூனிஸ்டுகள் தேசபக்தியைச் சர்வதேசியத்துடன் இணைக்க வேண்டும். நாம் ஒரே சமயத்தில் சர்வதேசியவாதிகளாகவும் தேசபக்தர்களாகவும் விளங்குகின்றேம். ''ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக தாய்நாட்டைப் பாதுகாக்கப் போரிடுவோம்'' என்பது நமது சுலோகம். நம்மைப் பொறுத்தவரையில், தோல்விவாதம் என்பது ஒரு குற்றம். யப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் வெற்றிக்காகப் பாடுபடுவது தட்டிக் கழிக்க முடியாத ஒரு கடமை. காரணம், தாய்நாட்டின் பாதுகாப்புக்காகப் போராடுவதன் மூலம் தான், ஆக்கிரமிப்பாளரைத் தோற்கடித்து நாம் தேசிய விடுதலை பெற முடியும். தேசிய விடுதலை பெறுவதன் மூலம் தான், பாட்டாளி வர்க்கமும் இதர உழைப்பாளி மக்களும் தமது சொந்த விமோசனத்தைப் பெறுவது சாத்தியம். சீனுவின் வெற்றியும், சீனுவை ஆக்கிரமிக்கும் ஏகாதிபத்தியவாதிகளின் தோல்வியும் இதர நாட்டு மக்களுக்கு உதவியாக இருக்கும். இவ்வாறு தேசிய விடுதலை யுத்தங்களில், தேசபக்தி என்பது சர்வதேசியத்தின் பிரயோகமாகும்.

''தேசிய யுத்தத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம்'' (அக்டோபர். 1938.) தே. ப. தொ. 2.

ஒரு அந்நியரைச் சிறிதளவேனும் சுய-நலமின்றி, சீன மக்களின் விடுதலை லட்சியத்தைத் தமது சொந்த லட்சியமாகக் கருதும் படி செய்த இவ்வுணர்வு எத்தகையது? இது தான் சர்வதேசிய உணர்வு, கம்யூனிஸ உணர்வு என்பது. இந்த உணர்விலிருந்து ஒவ்வொரு சீன கம்யூனிஸ்டும் கற்றுக் கொள்ள வேண்டும். ...எல்லா முதலாளித்துவ நாடுகளின் பாட்டாளி வர்க்கத்துடனும், யப்பான், பிரிட்டன், அமெரிக்கா, ஜெர்மனி, இத்தாலி முதலிய எல்லா முதலாளித்துவ நாடுகளின் பாட்டாளி வர்க்கத்துடனும் நாம் ஐக்கியப்பட வேண்டும். இவ்வாறு தான் ஏகாதிபத்தியத்தைத் தூக்கி எறிவதும், நமது தேசத்தையும் மக்களையும் விடுதலை செய்வதும், உலகின் இதர தேசங்களையும் மக்களையும் விடுதலை செய்வதும் சாத்தியம். இதுவே நமது சர்வதேசியம், குறுகிய தேசியவாதம் குறுகிய தேசாபிமானம் இரண்டையும் எதிர்க்க நாம்

கைக்கொள்ளும் சர்வதேசியம்.

''நோர்மன் பெத்யூன் நினைவுக்காக'' (21. டிஸம்பர். 1939.) தே. ப. தொ. 2.

பூரண விடுதலைக்கான போராட்டத்தில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் முதன் முதலாகத் தமது சொந்தப் போராட்டத்தைச் சார்ந்திருக்க வேண்டும். பின்னர் தான், சர்வதேசிய உதவியைச் சார வேண்டும். தமது சொந்தப் புரட்சியில் வாகை சூடிய மக்கள் விடுதலைக்காக இன்னும் போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு உதவி செய்ய வேண்டும். இது நமது சர்வதேசியக் கடப்பாடாகும்.

ஆபிரிக்க நண்பர்களுடன் நடத்திய சம்பாஷணை (8. ஆகஸ்ட். 1963.)

சோஷலிஸ நாடுகள் என்பவை முற்றிலும் புதிய ரக அரசுகள். அவற்றில் சுரண்டும் வர்க்கங்கள் தூக்கி எறியப்பட்டு, உழைப்பாளி மக்கள் அதிகாரத்

தில் இருக்கின்றனர். தேசபக்தியுடன் சர்வதேசியத்தை இணைக்கும் கோட்பாடு இந்த நாடுகளிடை உறவுகளில் அனுஷ் டிக்கப்படுகின்றது. பொது நலன்களா லும் பொது லட்சியங்களாலும் நாம் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கிறோம்.

''மகத்தான அக்டோபர் சோஷ லிஸப் புரட்சியின் 40வது ஆண்டு நிறைவு விழாவின் போது சோவி யத் யூனியன் உயர்தர சோவியத் கூட்டத்தில் ஆற்றிய உரை'' *(6. நவம்பர். 1957.)*

சோஷலிஸ முகாமைச் சேர்ந்த நாடு களின் மக்கள் ஐக்கியப்பட வேண்டும். ஆசிய, ஆபிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகளின் மக்கள் ஐக்கியப்பட வேண் டும். எல்லா கண்டங்களின் மக்களும் ஐக்கியப்பட வேண்டும். சமாதானம் விரும்பும் எல்லா நாடுகளும் ஐக்கியப்பட வேண்டும். அமெரிக்க ஆக்கிரமிப்பு, கட்டுப்பாடு, தலையீடு அல்லது இம்சை— இவற்றுக்குள்ளாகிய எல்லா நாடுகளும்

ஐக்கியப்பட வேண்டும். இவ்வாறு அமெ ரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு, யுத்தக் கொள்கைகளை எதிர்க்கவும், உலக சமாதானத்தைப் பாதுகாக்கவும் மிக விசாலமான ஐக்கிய முன்னணி ஒன்றை அமைக்க வேண்டும்.

''அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் பனமா மக்களின் நீதி யான தேசபக்த போராட்டத்துக்கு ஆதரவான அறிக்கை'' *(12. ஜன வரி. 1964.)*

விஷயங்கள் இடைவிடாது வளர்ச்சிய டைகின்றன. 1911 புரட்சி (ஸின் ஹாய் புரட்சி) முதல் இன்று வரை 45 ஆண்டுகள் மாத்திரம் கழிந்துள்ளன. இருந்தும், சீனாவின் தோற்றம் பூரண மாக மாறிவிட்டது. அடுத்த 45 ஆண் டுகளில், அதாவது, 2001வது ஆண்டில் அல்லது 21வது நூற்றாண்டின் ஆரம்பத் தில் சீனா இன்னும் மகத்தான மாறுதல் அடைந்து விடும். அது ஒரு பலமிக்க

சோஷலிஸ தொழில்துறை நாடாக மாறிவிடும். இதுவே சீனுவின் நிலைமை யாக இருக்கும். சீனு 96 லட்சம் சதுர கில்லோமீட்டர் பரப்பும், 60 கோடி ஜனத்தொகையும் உடைய ஒரு நாடு. இது மனிதகுலத்துக்கு மேலும் பெரும் சாதனையை வழங்கியிருக்க வேண்டும். ஆனுல் நீண்டகாலமாக அது வழங்கிய சாதனை மிகக் குறைவானதே. இதற்காக நாம் வருந்துகிறேம்.

ஆனுல் நாம் அடக்கமாக இருக்க வேண்டும். இன்று மாத்திரமல்ல, 45 ஆண்டுகளுக்குப் பின்னும் இப்படியே. நாம் எப்பொழுதும் அடக்கமாக இருக்க வேண்டும். நமது சர்வதேசிய உறவுகளில், சீன மக்களாகிய நாம் பெருந் தேச வெறியை உறுதியாகவும், முற்று முழுதாகவும், துப்புரவாகவும், பூரணமாகவும் இல்லாமல் செய்ய வேண்டும்.

''டாக்டர் சுன் யட்-ஸன் ஞாபகார்த்தமாக'' (நவம்பர். 1956.)

நாம் ஒரு போதும் இறுமாப்பான பெருந்தேசவெறி மனேபாவத்தை மேற்கொள்ளக் கூடாது. நமது புரட்சியின் வெற்றி, நமது நிர்மாணத்தின் குறிப்பிட்ட சாதனைகள் ஆகியவற்றுல் நாம் செருக்குடையவர்களாய் மாறக் கூடாது. ஒவ்வொரு தேசத்துக்கும், பெரிதாயினும் சரி, சிறிதாயினும் சரி, அதன் பலமான அம்சங்களும் பலவீனமான அம்சங்களும் உண்டு.

''சீன கம்யூனிஸ்ட் கட்சி 8வது தேசிய மாநாட்டின் ஆரம்ப உரை'' (15. செப்டம்பர். 1956.)

19. புரட்சிகர வீர-சாகஸம்

இந்தப் படைக்கு வெற்றி கொள்ளப் பட முடியாத உணர்வு உண்டு. அது எல்லா எதிரிகளையும் தோற்கடிக்குமே தவிர ஒருபோதும் எதிரிக்கு அடிபணிய மாட்டாது. எவ்வித கஷ்டங்கள் தொல்லைகள் நேர்ந்தாலும் பரவாயில்லை; கடைசி ஒரு மனிதன் இருக்கும் வரையில், அவன் போராடியே தீருவான்.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

சமரில் துணிவு, தியாகத்துக்கு அஞ்சாமை, களைப்புக்கு அஞ்சாமை, தொடர்ச்சியாகப் போரிடுவது (அதாவது, ஓய்வு இன்றி குறுகிய காலத்தில் அடுத்தடுத்துச் சமர் பல புரிவது) என்ற நமது போர் நடையைப் பூரணமாக வெளிப்படுத்துவது.

''இன்றைய நிலைமையும் நமது கடமைகளும்'' (25. டிஸம்பர். 1947.) தே. ப. தொ. 4.

நமக்கு முன் ஆயிரம் ஆயிரம் தியாகிகள் மக்களின் நலன்களுக்காக தமது உயிர்களை வீரதீரத்துடன் அர்ப்பணித்தார்கள்; அவர்களுடைய பதாகையை உயர்த்திப் பிடித்து, அவர்களுடைய இரத்தத்தால் சிவந்த பாதையில் பீடு நடை போட்டு முன்னேறுவோமாக.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

உறுதியாக இரு. தியாகத்துக்கு அஞ்சாதே! எல்லா கஷ்டங்களையும் கடந்து வெற்றி பெறு.

''மலைகளை அகற்றிய மூடக்கிழவன்'' (11. ஜூன். 1945.) தே. ப. தொ. 3.

...வடதிசைப்படையெடுப்பின் வளர்ச்சியில் ஒரு நெருக்கடியான தருணத்தில், கோமிங்தாங் அதிகார வட்டாரங்கள் மேற்கொண்ட ''கட்சி நீக்கம்'', வெகுஜன வதை என்ற துரோகமான, மக்கள்-எதிர்ப்புக் கொள்கைகள் தேசிய ஐக்கிய முன்னணியையும் — சீன மக்களின் விடுதலை லட்சியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கோமிங்தாங், கம்யூனிஸ்ட் கட்சி, மக்களின் சகல பகுதிகள் ஆகியவற்றின் ஐக்கிய முன்னணியையும் — அதன் புரட்சிகரக் கொள்கைகள் எல்லாவற்றையும் உடைத்தெறிந்து விட்டன. ...அப்பொழுது முதல் ஐக்கியத்தின் இடத்தை உள்நாட்டு யுத்தம் எடுத்தது; ஜனநாயகத்தின் இடத்தில் சர்வாதிகாரம் கோல் ஓச்சியது; ஒளி நிறைந்த சீனுவின் இடத்தில் இருள் கவிந்த சீனு தோன்றியது. ஆனுல் சீன கம்யூனிஸ்ட் கட்சியும் சீன மக்களும் அச்சுறுத்தப்படவோ, அடிப்படுத்தப்படவோ, அழிக்கப்படவோ இல்லை. அவர்கள் தாமாக எழுந்து, உதிரத்தைத் துடைத்து, விழுந்த தோழர்களைப் புதைத்து விட்டு, மீண்டும் சமர்க்களத்துக்குப் புறப்பட்டார்கள். மாபெரும் புரட்சி பதாகையை உயர்த்திப் பிடித்து, அவர்கள் ஆயுத எதிர்ப்பில் ஆர்த்தெழுந்தார்கள்; சீனுவின் விசாலமான பிரதேசத்தில் மக்கள்-அரசாங்கங்களை ஸ்தாபித்தனர்; நிலச்சீர்திருத்தத்தை நடத்தினர்; ஒரு மக்கள்-படையை — சீன செஞ்சேனையை — கட்டி வளர்த்தனர்; சீன மக்களின் புரட்சி சக்திகளைப் பாதுகாத்து விரிவுபடுத்தினர்.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

உங்களிடம் பல நல்ல குணதிசயங்கள் உண்டு. நீங்கள் மகத்தான தொண்டு ஆற்றியிருக்கிறீர்கள். ஆனுல், நீங்கள் செருக்குடையவர்களாய் மாறக் கூடாது என்பதை எப்பொழுதும் மனதில் பதித்துக் கொள்ள வேண்டும். நீங்கள் எல்லாராலும் மதிக்கப்படுகிறீர்கள்; இது

நியாயமானதே. ஆனல் இது செருக்குக்கு எளிதில் வழி கோலி விடும். நீங்கள் செருக்குடையவர்களாய் மாறினுல், அடக்கமாயிருப்பதை விட்டு, முயற்சி செய்யத் தவறினுல், பிறருக்கு மதிப்புக் கொடுக்க, ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் மதிப்புக் கொடுக்க தவறினுல், பின்னர் நீங்கள் வீரர்களாகவோ, ஆதர்ச சீலர்களாகவோ இருக்க மாட்டீர்கள். இத்தகைய நபர்கள் முன்பு இருந்தனர். நீங்கள் அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்ற மாட்டீர்கள் என நான் எதிர் பார்க்கிறேன்.

''பொருளாதார வேலை செய்ய நாம் கற்க வேண்டும்'' *(10. ஜனவரி. 1945.)* தே. ப. தொ. 3.

எதிரியைத் துடைத்தொழிக்கும் போரிலும், தொழில் விவசாய உற்பத்தியை மீட்டெடுத்து, விருத்தி செய்யும் போரிலும், நீங்கள் பல கஷ்டங்களையும் தொல்லைகளையும் கடந்து, மகோன்னதமான நெஞ்சுரத்தையும், விவேகத்தையும் முன்முயற்சியையும் காட்டியிருக்கிறீர்கள். நீங்கள் முழு சீன தேசத்துக்கும் ஆதர்சமாக, எல்லா துறைகளிலும் மக்கள் லட்சியத்தின் வெற்றிகர முன்னேற்றத்தின் முதுகெலும்பாக, மக்கள்-அரசாங்கத்தின் ஆதாரத் தூண்களாக, மக்கள்-அரசாங்கத்தைப் பரந்துபட்ட பொதுமக்களுடன் இணைக்கும் பாலங்களாக விளங்குகிறீர்கள்.

சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் சார்பில் தேசிய போராட்ட வீரர்கள், ஆதர்ச உழைப்பாளிகளின் பிரதிநிதிகள் மாநாட்டுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தி *(25. செப்டம்பர். 1950.)*

நமக்கு, சீன தேசத்துக்கு, கடைசித் துளி இரத்தம் இருக்கும் வரை எதிரியை எதிர்த்துப் போரிடும் நெஞ்சுரம் உண்டு; நமது சுயமுயற்சியைச் சார்ந்து இழந்த நமது பிரதேசத்தையும் புகழையும் மீட்கும் உறுதிப்பாடு உண்டு; உலக தேசங்

களின் மத்தியில் நமது சொந்தக் கால்களில் நிற்கும் ஆற்றல் உண்டு.

''யப்பானிய ஏகாதிபத்திய-எதிர்ப்பு தந்திரோபாயங்கள் பற்றி'' (27. டிஸம்பர். 1935.) தே. ப. தொ. 1.

20. விடாமுயற்சியுடனும் சிக்கனமாகவும் நாட்டை நிர்மாணிப்பது

நமது ஊழியர்கள் எல்லாரும், நமது மக்கள் அனைவரும் பின்வருவனவற்றை இடைவிடாது மனதிற் பதித்துக்கொள்ளுமாறு நாம் கவனிக்க வேண்டும்: நமது நாடு பிரமாண்டமான ஒரு சோஷலிஸ நாடு; ஆனால் பொருளாதாரரீதியில் பின்தங்கியது; வறியது; இது மிகப் பெரிய ஒரு முரண்பாடாகும். சீனாவைச் செல்வம் கொழிக்கும், பலமான நாடாக்குவதற்கு பல தசாப்தங்கள் தீவிரமான முயற்சி எடுப்பது அவசியம். இம்முயற்சி கண்டிப்பாகச் சிக்கனத்தைப் பயில்வது, விரையத்தை எதிர்ப்பது ஆகிய

வற்றை, அதாவது, விடாமுயற்சியுடனும், சிக்கனமாகவும் நமது நாட்டை நிர்மாணிக்கும் கொள்கையை உள்ளடக்கியது.

''மக்கள் மத்தியில் முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது பற்றி'' (27. பெப்ரவரி. 1957.)

தொழிற்சாலைகள், கடைகள், அரசாங்க முயற்சிகள், கூட்டுறவு-முயற்சிகள் முதலியவை எல்லாம் விடாமுயற்சியுடனும், சிக்கனமாகவும் நடத்தப்பட வேண்டும். விடாமுயற்சி, சிக்கனம் என்ற கோட்பாடு ஒவ்வொரு விஷயத்திலும் கையாளப்பட வேண்டும். இது தான். சிக்கனம் என்ற கோட்பாடாகும். சிக்கனம் என்பது சோஷலிஸப் பொருளாதாரத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்று. சீனு பிரமாண்டமான ஒரு நாடு. ஆனுல் அது இன்னும் வறிய நாடாக இருக்கின்றது, சீனு சுபிட்சமுடையதாக மாறப் பல தசாப்தங்கள் பிடிக்கும். அப்பொழுது கூட, விடாமுயற்சி, சிக்கனம் என்ற கோட்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆனுல் அடுத்த சில தசாப்தங்களில், இன்று தொடர்ச்சியாக நடைபெற்று வரும் ஐந்து-ஆண்டுத் திட்டங்களின் போது, நாம் குறிப்பாக விடாமுயற்சியையும் சிக்கனத்தையும் மேற்கொள்ள வேண்டும்; சிக்கனம் பற்றி விசேஷ கவனம் செலுத்த வேண்டும்.

''கூட்டுறவை விடாமுயற்சியுடனும் சிக்கனமாகவும் நடத்துவது'' என்ற கட்டுரையின் அறிமுகக் குறிப்பு (1955.)

நாம் எங்கிருந்தாலும் சரி, ஆட்பலத்தையும், பௌதீக செல்வாதாரங்களையும் பொன் போலப் பேண வேண்டும். தூர-திருஷ்டியின்றி விரையத்திலும் வீண் செலவிலும் ஈடுபடக் கூடாது. நாம் எங்கிருந்தாலும் சரி, எதிர்வரும் பல ஆண்டுகாலம், தொடர்ந்து நடத்தப்பட வேண்டியுள்ள நீண்டகால யுத்தம், எதிர்த்தாக்குதல், எதிரி வெளியேற்றத்தின் பின் நிக

மும் புனர்-நிர்மாண வேலை ஆகியவற்றை நமது வேலையின் அதி ஆரம்ப ஆண்டு முதல் நமது கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு புறம் நாம் விரையம் செய்பவர்களாகவும், வீண் செலவு செய் பவர்களாகவும் இருக்கக் கூடாது; மறுபு றம் ஊக்கமாக உற்பத்தியைப் பெருக்க வேண்டும். முன்பு சில இடங்கள் பெரு மளவில் பாதிக்கப்பட்டதற்குக் காரணம், தூர-திருஷ்டியின்றி, ஆட்பலம், பௌதீக செல்வாதாரங்கள் இரண்டிலும் சிக்கனத் தையும், உற்பத்தியைப் பெருக்குவதை யும் அலட்சியம் செய்ததாகும். இந்தப் படிப்பினை நமக்கு இருக்கின்றது. இதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

''பொருளாதார வேலை செய்ய நாம் கற்க வேண்டும்'' (10. ஜன வரி. 1945.) தே. ப. தொ. 3.

விவசாய உற்பத்தியையும் சிறிய பட் டினங்களில் தொழில் உற்பத்தியையும் விரைவில் மீட்டெடுத்து விருத்தி செய்ய

வேண்டுமானால், பிரபுத்துவ அமைப்பு முறையை ஒழித்துக் கட்டும் போராட் டத்தின் போக்கில், பயனுள்ள உற்பத்தி சாதனங்கள், வாழ்க்கைச் சாதனங்கள் எல்லாவற்றையும் பாதுகாக்கவும், அவற்றை யாரேனும் அழிப்பதற்கு அல் லது விரையமாக்குவதற்கு எதிராக உறுதி யான நடவடிக்கை எடுக்கவும், வீண் செலவு செய்து உண்பதையும் குடிப்பதை யும் எதிர்க்கவும், சிக்கனத்தில் அக்கறை செலுத்தவும் நம்மால் இயன்றதனைத்தை யும் செய்ய வேண்டும்.

''ஷன்ஸி-சுய்யுவன் விடுதலைப்பிர தேச ஊழியர்கள் மாநாட்டுரை'' (1. ஏப்ரல். 1948.) தே. ப. தொ. 4.

செலவினங்களில் சிக்கனம் என்பது வழி காட்டும் கோட்பாடாக இருக்க வேண் டும். ஊழலும் விரையமும் மிகப் பெரிய குற்றங்கள் என்பதை நமது அரசாங்கப் பணி ஆட்கள் எல்லாருக்கும் தெளிவுப

டுத்த வேண்டும். ஊழலுக்கும் விரையத்துக்கும் எதிரான நமது இயக்கங்கள் ஏற்கெனவே சில சாதனைகளைப் பெற்றுள்ளன. ஆனால் மேலும் கூடுதலான முயற்சி தேவைப்படுகின்றது. யுத்த முயற்சிக்காக, புரட்சி லட்சியத்துக்காக, நமது பொருளாதார நிர்மாணத்துக்காக ஒவ்வொரு செப்புச்சல்லியையும் சேமிப்பது நமது கணக்கீட்டுமுறையின் கோட்பாடாகும்.

''நமது பொருளாதார கொள்கை'' *(23. ஜனவரி. 1934.)* தே. ப. தொ. *1.*

சமீபத்தில் நமது ஊழியர்கள் பலர் மத்தியில் ஆபத்தான சுபாவம் ஒன்று — மக்களுடன் இன்பதுன்பங்களை பகிர்ந்து கொள்ளும் விருப்பமின்மை, தனிநபர்ப் புகழ், தனிநபர் நயம் இவற்றுக்கான ஒரு கவலை — தலைதூக்கியிருக்கின்றது. இது மிக கூடாத ஒரு விஷயம். இதைச் சமாளிக்கும் ஒரு வழி யாதெனில் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் சிக்கனத்தைப் பயில்வதற்குமாக நடத்தப்படும் நமது இயக்கத்தின் போக்கில் நமது ஸ்தாபனங்களை எளிதானவையாக்கி, ஊழியர்களைக் கீழ் மட்டங்களுக்கு மாற்றி, இவ்வாறு, குறிப்பிடத்தக்க தொகையினரை உற்பத்தி வேலையில் ஈடுபடச் செய்வதாகும்.

''மக்கள் மத்தியில் முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது பற்றி'' *(27. பெப்ரவரி. 1957.)*

ராணுவம் அதன் சுய-தேவைக்காக உற்பத்தியில் ஈடுபடுவது ராணுவத்தின் வாழ்க்கை நிலைமைகளை விருத்தி செய்து, மக்களின் சுமையைக் குறைத்தது மாத்திரமல்ல, அதன் மூலம் படைகளை மேலும் விஸ்தரிப்பதையும் சாத்தியமாக்கியுள்ளது. அத்துடன் அது உடனடியான உப-விளைவுகள் பலவற்றையும் ஏற்படுத்தியுள்ளது. அவை பின்வருமாறு:-

(1) அதிகாரிகள்-படையினருக்கி

டையில் உறவுகள் விருத்தியடைந்துள் ளன. அதிகாரிகளும் படையினரும் உற்பத்தியில் ஒன்ருக ஈடுபட்டு, சகோ தரர்களாக மாறியுள்ளனர்.

(2) உழைப்பில் காட்டும் மனோபா வம் திருந்தியுள்ளது. ...ராணுவம் அதன் சுய-தேவைக்காக உற்பத்தியில் இறங்கியது முதல், உழைப்பில் காட் டும் மனோபாவம் திருந்தியுள்ளது. கா லத்தை வீணடிக்கும் சோம்பல் சமா ளிக்கப்பட்டு விட்டது.

(3) கட்டுப்பாடு பலப்பட்டுள்ளது. சமரிலும் படைவாழ்விலும் கட்டுப் பாடு பலவீனமாவதற்குப்பதில், உற் பத்தியில் உழைப்புக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்ததால் அது உண்மையில் பலப்பட்டுள்ளது.

(4) படைக்கும் மக்களுக்குமிடை யில் உறவுகள் விருத்தியடைந்துள் ளன. ஆயுதப்படைகள் ஒருகால் சுய மாக ''குடும்பம் நடத்த''த் தொடங் கியதும், மக்களின் சொத்துகளைத் தீண்

டுவது குறைந்து விடும் அல்லது இல் லாமல் போய் விடும். ராணுவமும் மக்களும் உழைப்புப் பரிவர்த்தனை செய்து, உற்பத்தியில் பரஸ்பரம் உத வியளித்து வருவதோடு, அவர்களு டைய நட்புறவும் பலப்பட்டு வருகின் றது.

(5) அரசாங்கம் பற்றி படையினர் மத்தியில் முணுமுணுப்பு குறைந்துள் ளதோடு, இரு தரப்பு உறவுகளும் விருத்தியடைந்துள்ளன.

(6) மக்களின் மகத்தான உற்பத்தி இயக்கம் உத்வேகம் பெற்றுள்ளது. ராணுவம் உற்பத்தியில் இறங்கிய தும், அரசாங்கமும் இதர ஸ்தாபனங் களும் அப்படிச் செய்ய வேண்டிய அவசியம் மேலும் தெளிவாக, அவை மேலும் உற்சாகத்துடன் உற்பத்தியில் ஈடுபடுகின்றன. உற்பத்தியை பெருக் கும் மக்கள் அனைவரின் பொது இயக்கத்துக்கான தேவையும் மேலும் தெளிவாகின்றது. இது கூட மேலும்

மும்முரமாக நடத்தப்படுகின்றது.

''ராணுவத்தில் சுய-தேவைக்கான உற்பத்தியும், மாபெரும் சீர்செய் இயக்கம் உற்பத்தி இயக்கம் இவற்றின் முக்கியத்துவமும் பற்றி'' (27. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

படைப்பிரிவுகள் உற்பத்தியில் ஈடுபட்டால், அவற்ருல் பயிற்சி செய்யவோ போரிடவோ முடியாமல் போய் விடும் என்றும், அரசாங்கமும் இதர ஸ்தாபனங்களும் அப்படி செய்தால், அவற்ருல் தமது சொந்த வேலையைச் செய்ய முடியாமல் போய் விடும் என்றும் சிலர் கூறுகின்றனர். இது ஒரு போலி நியாயமாகும். சமீப ஆண்டுகளில் எல்லைப் பிராந்தியத்திலுள்ள நமது படைப்பிரிவுகள் தமக்குத் தாமே போதிய உணவும் உடையும் வழங்குவதற்காகப் பெருமளவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. அதே வேளையில் தமது ராணுவப்பயிற்சிகளைச் செய்து,

அரசியல் படிப்பு கலாசார படிப்பு முதலியவற்றையும் முன்னிலும் பார்க்க மேலும் வெற்றிகரமாய் நிறைவேற்றியுள்ளன. அன்றி, ராணுவத்தின் மத்தியிலும், ராணுவத்துக்கும் மக்களுக்குமிடையிலும் முன்னிலும் பார்க்கக் கூடுதலான ஐக்கியமும் நிலவுகின்றது. சென்ற ஆண்டு போர் முன்னணியில் ஒரு பெரும் உற்பத்தியியக்கம் நடைபெற்ற அதே வேளையில், விஸ்தாரமான பயிற்சி இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டதோடு, போரிலும் பெரும் வெற்றிகள் ஈட்டப்பட்டன. உற்பத்தியின் விளைவாக, ஸ்தாபனங்களின் ஊழியர்களும் சிறந்த வாழ்க்கையை நடத்தி, மேலும் தியாக உணர்வுடனும் திறமையாகவும் உழைக்கின்றனர். எல்லைப் பிராந்தியம், போர் முன்னணி இரண்டிலும் இதுவே நிலைமையாகும்.

''பொருளாதார வேலை செய்ய நாம் கற்க வேண்டும்'' (10. ஜனவரி. 1945.) தே. ப. தொ. 3.

21. சுய-சார்பும் கடினமான போராட்டமும்

நமது கொள்கை சார்ந்திருக்க வேண்டிய அடிப்படை யாது? அது நமது சொந்த பலத்தைச் சார்ந்திருக்க வேண்டும். அதன் அர்த்தம், ஒருவர் தமது சொந்த முயற்சிகள் மூலம் புது வாழ்வு பெறுவதாகும். நாம் தனிமைப்பட்டு நிற்கவில்லை. ஏகாதிபத்தியத்துக்கு எதிரான எல்லா உலக நாடுகளும் மக்களும் நமது நண்பர்கள். இருந்தும், நமது சுய முயற்சிகள் மூலம் புது வாழ்வு பெறுவதை நாம் வற்புறுத்துகின்ளுேம். நாம் சுயமாக அணிதிரட்டும் சக்திகளைச் சார்ந்து, உள்நாட்டு வெளிநாட்டுப் பிற்போக்குவாதிகளனைவரையும் எம்மால் தோற்கடிக்க முடியும்.

''யப்பானிய-எதிர்ப்பு யுத்த வெற்றிக்குப் பிந்திய நிலைமையும் நமது கொள்கையும்'' *(13. ஆகஸ்ட். 1945.) தே. ப. தொ. 4.*

நாம் சுய-சார்புக்காக நிற்கிருேம். நாம் அந்நிய உதவியை எதிர்ப்பார்க்கிருேம்; ஆனல் அதைச் சார்ந்திருக்க முடியாது. நாம் எமது சொந்த முயற்சிகளை, முழு ராணுவத்தினதும் மக்கள் அனைவரினதும் சிருஷ்டி ஆற்றலை சார்ந்திருக்கிருேம்.

''பொருளாதார வேலை செய்ய நாம் கற்க வேண்டும்'' *(10. ஜனவரி. 1945.) தே. ப. தொ. 3.*

தேசியரீதியான வெற்றி என்பது, 10,000லி நீண்டயாத்திரையில் முதலடி மாத்திரமே. ...சீன புரட்சி மகத்தா

னது. ஆனல் புரட்சிக்குப் பின் உள்ள பாதை மேலும் நீளமானது; வேலை மேலும் பெரியது, மேலும் கடினமானது. கட்சியில் இது இன்று தெளிவுபடுத்தப்பட வேண்டும். தோழர்கள் அடக்கமுடைய வர்களாகவும் ஜாக்கிரதையுடையவர்களாகவும் தமது வேலைநடையில் இறுமாப்பும் அவசரபுத்தியும் இல்லாதவர்களாகவும் இருப்பதற்கு உதவி கொடுக்கப்பட வேண்டும். சாதாரண வாழ்க்கை, கடினமான போராட்டம் என்ற நடையை நிலைநிறுத்தவும் அவர்களுக்கு உதவி அளிக்கப்பட வேண்டும்.

''சீன கம்யூனிஸ்ட் கட்சி 7வது மத்திய கமிட்டியின் 2வது பிளீனக் கூட்டத்தின் அறிக்கை'' (5. மார்ச். 1949.) தே. ப. தொ. 4.

நமது ஊழியர்கள் மத்தியிலுள்ள அதிர்ஷ்டத்தின் மூலம், கஷ்டமான, கசப்பான போராட்டம் இல்லாமல், வியர்வையும், இரத்தமும் சிந்தாமல், எளிதாக வெற்றி பெறலாம் என்ற கருத்துகள் எல்லாம் துப்புரவாக இல்லாமல் செய்யப்பட வேண்டும்.

''வடகிழக்கில் ஸ்திரமான தளப் பிரதேசங்களை அமைப்பது'' (28. டிஸம்பர். 1945.) தே. ப. தொ. 4.

வெற்றி மீது மக்களின் நம்பிக்கையை வளர்ப்பதற்காக, உலக முன்னேற்றம் பற்றியும் பிரகாசமான எதிர்காலம் பற்றியும் அவர்கள் மத்தியில் நாம் இடைவிடாது பிரசாரம் செய்ய வேண்டும். அதே வேளையில், நமது பாதையில் வளைவுகளும் சுளிவுகளும் உண்டு என்றும் மக்களுக்கும் நமது தோழர்களுக்கும் நாம் சொல்ல வேண்டும். புரட்சிப் பாதையில் இன்னும் பல தடைகளும் கஷ்டங்களும் கிடக்கின்றன. கஷ்டங்கள் குறைவாக இருப்பதிலும் பார்க்க, கூடுதலாக இருக்கும் என்று நாம் கொள்ள விரும்பும் காரணத்தால், நமது கட்சியின் 7வது

காங்கிரஸ் கஷ்டங்கள் கூடுதலாக இருக்கலாம் என்று நினைவூட்டியது. சில தோழர்கள் கஷ்டங்கள் பற்றிக் கூடுதலாகச் சிந்திக்க விரும்பவில்லை. ஆனால் கஷ்டங்கள் யதார்த்தத்தில் இருக்கின்றன; எத்தனை கஷ்டங்கள் இருந்தாலும், நாம் அத்தனையையும் அங்கீகரிக்க வேண்டும். ''அங்கீகரியாமைக் கொள்கை''யை நாம் கடைப்பிடிக்கக் கூடாது. நாம் கஷ்டங்களை அங்கீகரிக்க வேண்டும்; அவற்றை ஆராய வேண்டும், எதிர்த்துப் போராட வேண்டும். உலகில் நேரிய பாதைகள் கிடையாது. வளைவு சுளிவுகள் மலிந்த பாதையில் செல்ல நாம் தயாராக இருக்க வேண்டுமேயன்றி, விஷயங்களை மலிவாகப் பெறலாம் என எண்ணிவிடக் கூடாது. ஒரு நல்ல உதய காலத்தில் பிற்போக்குவாதிகள் எல்லாரும் சுயமாக அடிபணிந்து விடுவர் என்று நாம் கற்பனை செய்யக் கூடாது. சுருங்கச் சொன்னால், எதிர்காலம் பிரகாசமாய் இருக்கும் அதே வேளையில், பாதை வளைவு சுளிவுகளுடன் காணப்படுகின்றது. நாம் அலட்சியம் செய்யக் கூடாத பல கஷ்டங்கள் இன்னும் இருக்கின்றன. ஒரு பொது முயற்சியில் மக்கள் அனைவருடனும் ஐக்கியப்படுவதன் மூலம் நாம் கஷ்டங்கள் அனைத்தையும் நிச்சயம் கடந்து வாகை சூட முடியும்.

''சுங்கிங் பேச்சுவார்த்தைகள் பற்றி'' (17. அக்டோபர். 1945.) தே. ப. தொ. 4.

பிரகாசமான பக்கத்தை மாத்திரம் பார்க்கும் அதே வேளையில், கஷ்டங்களைக் காணத் தவறும் எவரும் கட்சிக் கடமைகளின் நிறைவேற்றத்துக்குப் பயனுள்ள முறையில் போராட முடியாது.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

சமுதாயத்தின் செல்வம் தொழிலாளர், விவசாயிகளாலும் உழைக்கும் புத்திஜீவிகளாலும் சிருஷ்டிக்கப்படுகின்றது. அவர்கள் தமது தலைவிதியைத் தமது

கைகளில் எடுத்து, ஒரு மார்க்ஸிஸம்-லெனினிஸ மார்க்கத்தைப் பின்பற்றி, பிரச்சினைகளைத் தட்டிக் கழிப்பதற்குப் பதில், அவற்றைத் தீர்ப்பதில் ஒரு ஊக்கமான மனோபாவத்தைக் கொண்டால், அவர்களால் கடக்க முடியாத கஷ்டங்கள் உலகில் இருக்கவே முடியாது.

''கட்சிக் காரியதரிசி தலைமை தாங்கக் கட்சி உறுப்பினர் அனைவரும் கூட்டுறவை நடத்துவது'' என்ற கட்டுரையின் அறிமுகக் குறிப்பு *(1955.)*

கட்சித் தோழர்கள் எல்லாரும் இவை அனைத்தையும் பூரணமாகக் கணக்கில் எடுத்து, வெல்லப்பட முடியாத திட சித்தத்துடன், ஒரு திட்டமிட்ட முறையில், எல்லா கஷ்டங்களையும் கடக்கத் தயாராயிருக்க வேண்டும். பிற்போக்கு சக்திகளுக்கும் நமக்கும் கஷ்டங்கள் இருக்கத் தான் செய்கின்றன. ஆனால் பிற்போக்கு சக்திகளின் கஷ்டங்கள் கடக்க

முடியாதவை. காரணம், அவை அழிவின் விளிம்பில் இருக்கின்ற, எதிர்காலம் இல்லாத சக்திகள். நமது கஷ்டங்கள் சமாளிக்கக் கூடியவை. காரணம், நாம் புத்தம் புதிய, வளரும் சக்திகள்; நமக்குப் பிரகாசமான ஒரு எதிர்காலம் உண்டு.

''சீன புரட்சியின் புதிய உச்ச நிலையை வரவேற்போம்'' *(1. பெப்ரவரி. 1947.)* தே. ப. தொ. 4.

கஷ்டங்களின் போது நமது சாதனைகளை நாம் மறந்துவிடக் கூடாது; பிரகாசமான எதிர்காலத்தை எண்ணி, நமது துணிவை வரவழைத்துக் கொள்ள வேண்டும்.

''மக்களுக்குத் தொண்டு செய்க'' *(8. செப்டம்பர். 1944.)* தே. ப. தொ. 3.

புதிய விஷயங்கள் அவற்றின் வளர்ச்சிப் போக்கில் எப்பொழுதும் கஷ்டங்களையும் பின்னடைவுகளையும் காண வேண்டியிருக்கின்றது. சோஷலிஸ லட்சியம் என்பது சமநீர்ப் பயணம் போன்றது,

கஷ்டங்கள், பின்னடைவுகள் இல்லாமல் அல்லது பெரும் முயற்சி செய்யாமல் எளிதில் வெற்றி பெறக் கூடியது என்று கற்பனை செய்வது வெறும் கனவாகும்.

''மக்கள் மத்தியில் முரண்பாடு களைச் சரியாகக் கையாள்வது பற்றி'' (27. பெப்ரவரி. 1957.)

புரட்சிப் போராட்டத்தில் சில சமயங் களில், கஷ்டங்கள் சாதக நிலைமைகளை விட மேலோங்கியிருப்பதுண்டு. இங்கு கஷ்டங்கள் முரண்பாட்டின் பிரதான அம்சமாகவும், சாதகமான நிலைமைகள் இரண்டாந்தர அம்சமாகவும் விளங்கு கின்றன. ஆனால் புரட்சிவாதிகள் தமது முயற்சிகள் மூலம் கஷ்டங்களைப் படிப்ப டியாக வென்று, ஒரு சாதகமான புதிய சூழ்நிலையைத் திறக்க முடியும்; இவ்வாறு கஷ்ட நிலைமை சாதக நிலைமைக்கு இடம் விட்டுக் கொடுக்கின்றது.

''முரண்பாடு பற்றி'' (ஆகஸ்ட். 1937.) தே. ப. தொ. 1.

வேலை என்றால் என்ன? வேலை என்பது போராட்டம். நாம் வெற்றி கொண்டு தீர்வு காண வேண்டிய கஷ்டங்களும் பிரச்சினைகளும் அந்த இடங்களில் உண்டு. நாம் அங்கு செல்வது வேலை செய்து, போராடி, இந்தக் கஷ்டங்களை வெற்றி கொள்வதற்கேயாகும். கஷ்டங்கள் அதி கமாக உள்ள இடங்களுக்கு யார் போக ஆவல்படுகின்றாரோ, அவரே சிறந்த தோ ழர் ஆவர்.

''சுங்கிங் பேச்சுவார்த்தைகள் பற்றி'' (17. அக்டோபர். 1945.) தே. ப. தொ. 4.

''மலைகளை அகற்றிய மூடக்கிழவன்'' என்று கூறப்படும் புராதன சீன கதை ஒன்று இருக்கின்றது. இது நீண்ட நெடுங் காலத்துக்கு முன் வட சீனாவில் வாழ்ந்த ஒரு கிழவனைப் பற்றிக் கூறுகிறது. அக் கிழவன் வட மலை மூடக்கிழவன் என்று அழைக்கப்பட்டான். அவனுடைய வீட்டு வாசலுக்குத் தெற்கே டைஹங்,

வாங்வூ என்ற இரண்டு பிரமாண்டமான மலைகள் பாதையைத் தடுத்து நின்றன. அவன் தனது மக்களுக்குத் தலைமை தாங்கி, மண்வெட்டிகளைக் கொண்டு இம்மலைகளை அகழ உறுதி பூண்டான். விவேகி என்று அழைக்கப்படும் இன்னொரு நரைத்தாடிக் கிழவன் அவர்களைப் பார்த்து, ''இப்படிச் செய்வது எவ்வளவு முட்டாள்தனம்! நீங்கள் ஒரு சில அற்பர்கள் பிரமாண்டமான இம்மலைகளை அகழ்வதென்பது அசாத்தியம்'' என்று ஏளனமாகக் கூறினான். ''நான் இறந்தால், எனது மக்கள் இதைச் செய்வார்கள்; அவர்கள் இறக்கும் போது எனது பேரப்பிள்ளைகள் இவ்வேலையைத் தொடர்ந்து செய்வர். பின்னர் அவர்களுடைய பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் என முடிவின்றி இதைச் செய்வர். இவ்வளவு உயரமாய் இருந்த போதிலும் இம்மலைகள் மேற்கொண்டு உயரப் போவதில்லை. நாம் எவ்வளவுக்குத் தோண்டுகின்றோமோ, அவ்வளவுக்கு அவை பதி

யும். அப்படியென்றால் நாம் ஏன் அவற்றை அகழ முடியாது?'' என்று மூடக் கிழவன் பதிலிறுத்தான். விவேகக்கிழவனின் தவறான கருத்தை மறுத்துரைத்து விட்டு தனது நம்பிக்கையில் தளராமல் அவன் தொடர்ந்து கிண்டிக் கொண்டே போனான். இதைக் கண்ட கடவுள் மனமுருகி, இரண்டு தேவ தூதர்களை அனுப்பினார். அவர்கள் அம்மலைகளைத் தமது முதுகில் தூக்கிச் சென்றார்கள். இன்று, இரண்டு பெரும் மலைகள் சீன மக்கள் மீது மரணச்சுமை போல் கிடக்கின்றன. ஒன்று ஏகாதிபத்தியம்; மற்றது நிலப் பிரபுத்துவம். சீன கம்யூனிஸ்ட் கட்சி அவற்றை அகழ்ந்தெறிவதற்கு வெகு காலத்துக்கு முன்பே கங்கணம் கட்டிவிட்டது. நாம் அழுத்தமாக நின்று, சளையாது வேலை செய்தால், நாமும் கடவுளுடைய இதயத்தைத் தொடுவோம். நமது கடவுள் பரந்துபட்ட சீன மக்கள் அன்றி வேறு யாருமில்லை. அவர்கள் நம்முடன் சேர்ந்து கிண்டத் தொடங்

கிஞல், இந்த இரண்டு மலைகளையும் தோண்டி எறிய முடியாதா?

''மலைகளை அகற்றிய மூடக்கிழவன்'' (11. ஜூன். 1945.) தே. ப. தொ. 3.

22. சிந்தனை முறையும் வேலைமுறையும்

மனிதகுல வரலாறு என்பது தேவை மண்டலத்திலிருந்து சுதந்திர மண்டலத்தை நோக்கித் தொடர்ச்சியாக முன்னேறும் ஒன்ருகும். இந்தப் போக்கு முடிவற்றது. வர்க்கங்கள் உள்ள எந்தச் சமுதாயத்திலும் வர்க்கப் போராட்டம் முடிவின்றி நிகழும். வர்க்கமற்ற சமுதாயத்தில் புதுமைக்கும் பழைமைக்கும் இடையில், சரிக்கும் பிழைக்கும் இடையில் நிகழும் போராட்டம் ஒருபோதும் ஓயாது. உற்பத்திப் போராட்டம், விஞ்ஞானப் பரிசோதனை ஆகிய துறைகளில் மனிதகுலம் இடையருது முன்னேற்றம் அடைகின்றது; இயற்கையும் இடைவிடாது வளர்ச்சி அடைகின்றது; அவை ஒருபோதும் ஒரே மட்டத்தில் நிற்பதில்லை. என

வே, மனிதன் இடைவிடாது அனுபவத்தைத் தொகுத்து, தொடர்ந்து கண்டுபிடித்து, புதியன புனேந்து, சிருஷ்டித்து, முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும். தேக்கம், சோர்வு, மடிமை, தன்னிறைவு ஆகிய கருத்துகள் எல்லாம் தவருனவை. அவை தவருயிருப்பதன் காரணம், அவை கடந்த பத்து லட்சம் ஆண்டுகால சமுதாய வளர்ச்சியின் வரலாற்று உண்மைகளுக்குப் பொருந்தாதவை மாத்திரம் அல்ல, இன்று வரை நாம் அறிந்த இயற்கையின் (அதாவது, விண்வெளிப் பிழம்புகள், பூமி, உயிர், இதர இயற்கை விஞ்ஞானம் — இவற்றின் வரலாற்ருல் வெளிப்படுத்தப்பட்ட இயற்கையின்) வரலாற்று உண்மைகளுக்கும் பொருந்தியவையல்ல.

''சீன மக்கள் குடியரசின் 3வது தேசிய மக்கள் காங்கிரஸ் 1வது கூட்டத்தில் அரசாங்க வேலை பற்றிய பிரதமர் சோ என்-லாய் அவர்களின் அறிக்கையில் மேற்கோள்'' காட்டப்பட்டது. (21-22. டிஸம்பர். 1964.)

சுதந்திரத்துக்கான மனிதனின் போராட்டத்தில், இயற்கை விஞ்ஞானம் என்பது ஓர் ஆயுதமாக விளங்குகின்றது. சமுதாயத்தில் சுதந்திரத்தைப் பெறுவதற்காக, சமுதாயத்தைப் புரிந்து கொள்ளவும் மாற்றவும் சமுதாயப் புரட்சியை நடத்தவும் மனிதன் சமுதாய விஞ்ஞானத்தை உபயோகிக்க வேண்டும். இயற்கை உலகில் சுதந்திரம் பெற வேண்டுமானுல், இயற்கையைப் புரிந்து கொள்ளவும் கட்டுப்படுத்தவும் மாற்றவும், இவ்வாறு இயற்கையிலிருந்து விடுதலே பெறவும் இயற்கை விஞ்ஞானத்தை உபயோகிக்க வேண்டும்.

எல்லே பிராந்திய இயற்கை விஞ்ஞான ஆராய்ச்சி சங்கத்தின் ஆரம்பக் கூட்ட உரை (5. பெப்ரவரி. 1940.)

இயங்கியல்-பொருள்முதல்வாதம் பற்றிய மார்க்ஸிஸ தத்துவத்துக்கு இரண்டு சிறப்பியல்புகள் உண்டு. ஒன்று அதன்

வர்க்க இயல்பு. இயங்கியல்-பொருள் முதல்வாதம் என்பது பாட்டாளி வர்க்கத்துக்குச் சேவை செய்வது என்று அது வெளிப்படையாகப் பிரகடனம் செய்கின்றது. மற்றது அதன் அனுஷ்டான சாத்தியப்பாடு. தத்துவம் அனுஷ்டானத்தில் தங்கியிருப்பதை அது வலியுறுத்துகின்றது; தத்துவம் அனுஷ்டானத்தை அடிப்படையாகக் கொண்டது, மீண்டும் அனுஷ்டானத்துக்கே சேவை செய்கின்றது என்று வலியுறுத்துகின்றது.

''நடைமுறை பற்றி'' (ஜூலை. 1937.) தே. ப. தொ. 1.

புறநிலை உலகின் விதிகளைப் புரிந்து, அவற்றை விளக்குவதில் திறமை பெற்றிருப்பது மிக முக்கியமான பிரச்சினையல்ல; பதிலுக்கு, ஊக்கமாக உலகை மாற்றுவதற்கு அவ்விதிகள் பற்றிய அறிவைப் பிரயோகிப்பது தான் மிக முக்கியமான பிரச்சினை என்று மார்க்ஸிஸத் தத்துவம் கருதுகின்றது.

ஷை

மனிதனின் சரியான கருத்துகள் எங்கிருந்து வருகின்றன? அவை வானத்திலிருந்து விழுகின்றனவா? இல்லை. மூளையில் இயல்பாக உள்ளனவா? இல்லை. அவை சமுதாய அனுஷ்டானத்திலிருந்து மட்டும் தோன்றுகின்றன; உற்பத்திப் போராட்டம், வர்க்கப்போராட்டம், விஞ்ஞானப் பரிசோதனை என்ற மூவகை அனுஷ்டானங்களிலிருந்து வருகின்றன.

''மனிதனின் சரியான கருத்துகள் எங்கிருந்து வருகின்றன?'' (மே. 1963.)

மனிதனின் சமுதாய வாழ்வே அவனுடைய சிந்தனையை நிர்ணயிக்கின்றது. முன்னேறிய வர்க்கத்தின் குணும்சமாக விளங்கும் சரியான கருத்துகள் ஒருகால் பொதுமக்களால் கிரகித்துக் கொள்ளப்பட்டதும், இக்கருத்துகள் சமுதாயத்தை மாற்றுகின்ற, உலகை மாற்றுகின்ற ஒரு பொருளாயத சக்தியாக வடிவெடுக்கின்றன.

ஷை

மக்கள், தமது சமுதாய அனுஷ்டானத்தில், பல்வேறு வகையான போராட்டங்களிலும் ஈடுபட்டு, தமது வெற்றிகள், தோல்விகள் இரண்டிலுமிருந்து செழுமையான அனுபவத்தைப் பெறுகின்றனர். புறநிலை உலகத்தின் எண்ணற்ற தோற்றப்பாடுகள் மனிதனின் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய பஞ்சப் புலன்களுக்கும் ஊடாகச் சென்று, அவனுடைய மூளையில் பிரதிபலிக்கின்றன. ஆரம்பத்தில் அறிவு புலக்காட்சியாக இருக்கின்றது. போதிய அளவு புலக்காட்சி அறிவு தொகுக்கப்பட்டதும், அதில் ஒரு பாய்ச்சல் நிகழ்ந்து அது பகுத்தறிவாக மாறுகின்றது. அதுவே கருத்துகள் என்று அழைக்கப்படுகின்றது. இது அறிகையின் ஒரு வளர்ச்சிப்போக்கு. இது அறிகையின் முழு வளர்ச்சிப்போக்கில் முதலாவது கட்டம், அதாவது புறநிலைச் சடப்பொருளிலிருந்து அகநிலை உணர்வுக்குச் செல்லுகின்ற, வாழ்விலிருந்து கருத்துகளுக்குச் செல்லுகின்ற கட்டம் ஆகும்.

(தத்துவங்கள், கொள்கைகள், திட்டங்கள், அல்லது வழிமுறைகள் உட்பட) ஒருவரின் உணர்வு அல்லது கருத்துகள் எல்லாம் புறநிலை யதார்த்த உலகைச் சரிவரப் பிரதிபலிக்கின்றனவா, இல்லையா என்பது இந்தக் கட்டத்தில் இன்னும் நிரூபிக்கப்பட இல்லை. இக்கட்டத்தில் அவை சரியானவையா, இல்லையா என்று நிச்சயிப்பதும் சாத்தியமாகாது. பின்னர் அறிகை வளர்ச்சிப்போக்கின் இரண்டாவது கட்டம், அதாவது உணர்விலிருந்து மீண்டும் சடப்பொருளுக்கு, கருத்துகளிலிருந்து மீண்டும் வாழ்வுக்குச் செல்லும் கட்டம் வருகின்றது. இந்தக் கட்டத்தில், தத்துவங்கள், கொள்கைகள், திட்டங்கள், அல்லது வழிமுறைகள் எல்லாம் எதிர்பார்த்த வெற்றியைத் தருகின்றனவா என்பதை நிச்சயிக்க, முதல் கட்டத்தில் சம்பாதிக்கப்பட்ட அறிவு சமுதாய அனுஷ்டானத்தில் பிரயோகிக்கப்படுகின்றது. பொதுவாகச் சொன்னால், எவை வெற்றி பெறுகின்றனவோ

அவை சரியானவை; எவை தோல்விய டைகின்றனவோ அவை பிசகானவை; விசேஷமாக இயற்கையுடன் மனிதன் நடத்தும் போராட்டத்தில் இது உண் மையாகும். சமுதாயப் போராட்டத் தில் முன்னேறிய வர்க்கத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் சக்திகள் சில சமயங் களில் தோல்வியடைகின்றன; காரணம் அவர்களுடைய கருத்துகள் தவறானவை என்பதல்ல; பதிலுக்கு, போராட்டத் தில் ஈடுபட்டுள்ள சக்திகளின் சமநிலையில் தற்காலிகமாக முற்போக்குசக்திகள் பிற் போக்குசக்திகளைப் போல் அவ்வளவு பலம் பெற்றிருக்கவில்லை; எனவே அவை தற்காலிகமாகத் தோல்வியடைகின்றன; ஆனால் இன்றோ, நாளையோ அவை வாகை சூடுவது நிச்சயம். அடுத்து, அனுஷ் டானப் பரீட்சை மூலம் மனிதனுடைய அறிவில் இன்னொரு பாய்ச்சல் நிகழ்கின் றது. இந்தப் பாய்ச்சல் முன்னைய பாய்ச் சலிலும் பார்க்க முக்கியமானது. கார ணம், முதலாவது பாய்ச்சலில், அதா

வது, புறநிலை யதார்த்த உலகைப் பிர திபலிக்கும் போக்கில் வகுக்கப்பட்ட கருத் துகள், தத்துவங்கள், கொள்கைகள், திட்டங்கள் அல்லது வழிமுறைகள் ஆகி யவற்றின் சரிபிழையை இந்தப் பாய்ச்சல் மட்டும் நிரூபிக்க முடியும். இவை தவிர உண்மையைப் பரீட்சிக்கும் வழி வேறு கிடையாது.

ஷி

சடப்பொருளிலிருந்து உணர்வுக்கும், பின்னர் உணர்விலிருந்து சடப்பொருளுக் கும், அதாவது, அனுஷ்டானத்திலிருந்து அறிவுக்கும், பின்னர் அறிவிலிருந்து அனுஷ்டானத்துக்கும் செல்லும் போக்கு திரும்பத் திரும்பப் பல தடவை நிகழ்ந்த பின்னர் மாத்திரம் ஒரு சரியான அறி வுக்கு வரக் கூடிய நிலை அடிக்கடி ஏற்ப டுகின்றது. இத்தகையது தான் அறிவு பற்றிய மார்க்ஸிஸத் தத்துவம், அறிவு பற்றிய இயங்கியல்-பொருள்முதல்வா தத் தத்துவம்.

ஷி

யார் ஒரு விஷயத்தை அறிய விரும்பினாலும், அவருக்கு அதனுடன் தொடர்பு கொள்வதைத் தவிர, அதாவது, அதன் சூழ்நிலையில் வாழ்வதை (அனுஷ்டானத்தில் ஈடுபடுவதை) தவிர வேறு வழியில்லை. ...நீங்கள் அறிவு பெற விரும்பினால், யதார்த்தத்தை மாற்றும் அனுஷ்டானத்தில் பங்கு பற்ற வேண்டும். பேரிக்காயின் சுவையை அறிய விரும்பினால், அதை நீங்கள் சொந்தமாக தின்று ருசிபார்க்க வேண்டும். ...புரட்சியின் தத்துவமும், வழிமுறைகளும் பற்றி நீங்கள் அறிய விரும்பினால், நீங்கள் புரட்சியில் பங்கு பற்ற வேண்டும். உண்மையான அறிவு முழுவதும் நேரடி அனுபவத்திலிருந்தே உதிக்கின்றது.

''நடைமுறை பற்றி'' (ஜூலை. 1937.) தே. ப. தொ. 1.

அறிவு என்பது அனுஷ்டானத்திலிருந்து ஆரம்பமாகின்றது, அனுஷ்டானத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட தத்துவ

அறிவு திரும்பவும் அனுஷ்டானத்துக்கே மீள்கின்றது. அறிவின் சுறுசுறுப்பான பாத்திரம் புலக்காட்சி அறிவிலிருந்து பகுத்தறிவாக மாறும் துரிதப் பாய்ச்சலில் வெளிப்படுவது மாத்திரமல்ல—இது மேலும் முக்கியமானது — பகுத்தறிவிலிருந்து புரட்சிகர அனுஷ்டானத்துக்குச் செல்லும் பாய்ச்சலிலும் வெளிப்பட வேண்டும்.

ஷை

நாம் எந்த விஷயத்தைச் செய்தாலும், அதன் உண்மையான சூழ்நிலைகள், அதன் இயல்பு, இதர விஷயங்களுடன் அதன் உறவுகள் ஆகியவற்றைப் புரிந்து கொண்டாலொழிய, அதை ஆளும் விதிகளை அறிய மாட்டோம்; அல்லது அதை எப்படிச் செய்வதென அறிய மாட்டோம்; அல்லது அதை நன்றாய்ச் செய்ய மாட்டோம் என்பது யாரும் அறிந்ததே.

''சீன புரட்சி யுத்தத்தில் யுத்த தந்திரப் பிரச்சினைகள்'' (டிஸம்பர். 1936.) தே. ப. தொ. 1.

ஒருவன் தனது வேலையில் வெற்றியடைய விரும்பினால், அதாவது, எதிர்பார்த்த விளைவுகளைப் பெற விரும்பினால், தனது கருத்துகளைப் புறநிலை உலகத்தின் விதிகளுடன் இசைவுடையவை ஆகச் செய்ய வேண்டும். அவை இசைவாகாவிட்டால் அவன் தனது அனுஷ்டானத்தில் தோல்வியடைவான். தோல்வியடைந்த பின், அவன் தோல்வியிலிருந்து தனது படிப்பினைகளைப் பெற்று, புறநிலை உலகத்தின் விதிகளுக்கு இசைவாகத் தனது கருத்துகளைத் திருத்தித் தோல்வியை வெற்றியாக மாற்ற முடியும். ''தோல்வி என்பது வெற்றியின் தாய்'', ''இடறி விழுதல், அறிவில் எழுதல்'' என்பதன் அர்த்தம் இதுவேயாகும்.

''நடைமுறை பற்றி'' (ஜூலை. 1937.) தே. ப. தொ. 1.

நாம் மார்க்ஸிஸவாதிகள். நாம் ஒரு பிரச்சினையை அணுகும் போது, யதார்த்த உண்மைகளிலிருந்து ஆரம்பிக்க வேண்டுமேயன்றி, வெறும் வரைவிலக்கணங்களிலிருந்து அல்ல என்றும், இந்த உண்மைகளை ஆராய்வதன் மூலம் நமது வழிகாட்டும் கோட்பாடுகள், கொள்கைகள், வழிமுறைகள் ஆகியவற்றை வகுக்க வேண்டும் என்றும் மார்க்ஸிஸம் போதிக்கின்றது.

''யென்ஆன் கலை இலக்கிய கருத்தரங்கு உரை'' (மே. 1942.) தே. ப. தொ. 3.

கம்யூனிஸ்டுகள் எல்லாரும் மனதில் உறுதியாகப் பதித்துக் கொள்ள வேண்டிய, மிக அடிப்படையான வேலைமுறையாதெனில், யதார்த்த நிலைமைகளின் பிரகாரம் வேலைக் கொள்கைகளை நிர்ணயிப்பதாகும். நாம் இழைத்த தவறுகளின் காரணத்தை ஆராய்ந்தால், ஒரு குறிப்பிட்ட காலம், இடம் — இவற்றின் யதார்த்த நிலைமையிலிருந்து விலகி, நமது வேலைக் கொள்கைகளை மானசீகமாக நிர்ணயித்த காரணத்தால் தான் அவை

தோன்றின என்பதைக் காண்போம்.

''ஷன்ஸி-சுய்யுவன் விடுதலைப்பிர தேச ஊழியர்கள் மாநாட்டுரை'' (1. ஏப்ரல். 1948.) தே. ப. தொ. 4.

கருத்துமுதல்வாதம், நிலையியல் இரண்டும் உலகில் மிக எளிதானவை. காரணம், யதார்த்த உண்மையை அடிப்படையாகக் கொள்ளாமலும், யதார்த்தத்தில் பரீட்சிக்காமலும் யார் எவ்வளவு விழல் அலம்ப விரும்பினாலும் அலம்பலாம். மறுபுறம் பொருள்முதல்வாதம், இயங்கியல் இரண்டுக்கும் முயற்சி என்பது அவசியம். அவை யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டு, யதார்த்தத்தில் பரீட்சிக்கப்பட வேண்டும். ஒருவர் முயற்சி செய்தால் ஒழிய, அவர் கருத்துமுதல்வாதம், நிலையியல் — இவற்றில் சறுக்கி விழுவது சாத்தியம்.

''ஹூ புங் எதிர்ப்புரட்சிக் கும்பல் பற்றிய ஆதாரங்க''ளின் அறிமுகக் குறிப்பு (மே. 1955.)

ஒரு விஷயத்தை நோக்கும் போது, நாம் அதன் சாராம்சத்தை ஆராய வேண்டும். அதன் தோற்றப்பாட்டை வாயிலுக்கு இட்டுச் செல்லும் படியாக மட்டும் கருத வேண்டும். ஒருகால் அந்த வாயிலைக் கடந்து விட்டால், நாம் அவ் விஷயத்தின் சாராம்சத்தைக் கிரகித்துக் கொள்ள வேண்டும். நம்பகமான விஞ்ஞானரீதியான ஆராய்ச்சி முறை என்பது இதுவே.

''சிறு பொறி பெரும் காட்டுத் தீயை மூட்டலாம்'' (5. ஜனவரி. 1930.) தே. ப. தொ. 1.

ஒரு பொருளின் வளர்ச்சிக்கான அடிப்படைக் காரணம் புறத்தில் அல்ல அகத்திலேயே இருக்கின்றது; அதற்குள்ளே நிலவும் முரண்பாட்டியல்பில் இருக்கின்றது. இந்த அக-முரண்பாடு ஒவ்வொரு பொருளிலும் உண்டு. எனவே தான் பொருட்களில் இயக்கமும் வளர்ச்சியும் ஏற்படுகின்றன. ஒரு பொருளிலுள்ள முரண்பாட்டியல்பு அதன் வளர்ச்சியின்

அடிப்படைக் காரணமாக இருக்கும் அதே வேளையில், இதர பொருட்களுடன் கொண்டுள்ள அதன் பரஸ்பர உறவுகளும் பரஸ்பர பாதிப்புகளும் உப-காரணங்க ளாகும்.

''முரண்பாடு பற்றி'' (ஆகஸ்ட். 1937.) தே. ப. தொ. 1.

புறக்காரணங்கள் என்பவை மாற்றத் துக்கான சூழ்நிலே; அகக்காரணங்கள் அம் மாற்றத்துக்கான அடிப்படை; புறக்கா ரணங்கள் அகக்காரணங்கள் மூலம் தொழிற்படுகின்றன என்று பொருள்முதல் வாத இயங்கியல் கருதுகின்றது. பொருத் தமான ஒரு வெப்பநிலேயில் ஒரு முட்டை குஞ்சாக மாறுகின்றது. ஆனல் எந்த உஷ்ண நிலேயும் கல்லேக் குஞ்சாக மாற்ற முடியாது. காரணம் ஒவ்வொன் றுக்கும் வேறுபட்ட அடிப்படை உண்டு.

ஷை

எதிர்மறைகளின் ஒற்றுமை சம்பந்த மான விதி தான் பிரபஞ்சத்தின் அடிப்

படை விதி என மார்க்ஸிஸ தத்துவம் கரு துகின்றது. இயற்கை உலகிலும் சரி, மனித சமுதாயத்திலும் சரி, மனித சிந் தனையிலும் சரி — எங்கும் இந்த விதி தொழிற்படுகின்றது. முரண்பாட்டின் எதிர்மறைகளுக்கிடையில் ஐக்கியமும் போராட்டமும் ஏககாலத்தில் நிகழ்கின் றன. இதுவே பொருட்களே இயக்கத் துக்கும் மாற்றத்துக்கும் உந்தித் தள்ளு கின்றது. முரண்பாடுகள் சர்வவியா பகமானவை. ஆனல் பொருட்களின் வேறுபட்ட இயல்புகளுக்கு ஏற்ப முரண் பாடுகளின் இயல்புகளும் வேறுபடுகின் றன. எந்த ஒரு குறிப்பிட்ட பொரு ளிலும் எதிர்மறைகளின் ஒற்றுமை என் பது நிபந்தனேக்குட்பட்டது; தற்காலிக மானது; மாறுந்தன்மையுடையது; என வே சார்புடையது. ஆனல் எதிர்மறை களின் போராட்டம் என்பது சார்பற் றது.

''மக்கள் மத்தியில் முரண்பாடு களேச் சரியாகக் கையாள்வது பற்றி'' (27. பெப்ரவரி. 1957.)

ஆராய்வு முறையே இயங்கியல் முறை என்பது. ஆராய்வு என்ருல் விஷயங்களிலுள்ள முரண்பாடுகளை ஆராய்வதாகும். வாழ்வு பற்றிய அன்னியோன்னியமான அறிவில்லாவிட்டால், சம்பந்தப்பட்ட முரண்பாடுகள் பற்றிய உண்மையான விளக்கம் இல்லாவிட்டால், சரியான ஆராய்வு என்பது சாத்தியமாகாது.

''சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பிரசார வேலை பற்றிய தேசிய மாநாட்டுரை'' (12. மார்ச். 1957.)

ஸ்தூலமான நிலைமைகளின் ஸ்தூலமான ஆராய்வு என்பது ''மார்க்ஸிஸத்தில் மிக அடிப்படையான விஷயம், மார்க்ஸிஸத்தின் ஜீவாத்மா'' என்று லெனின் கூறிஞர். நமது தோழர்களில் பலருக்கு ஆராய்ந்து பார்க்கும் அணுகு முறை குறைவு. அவர்கள் சிக்கலான விஷயங்களில் ஆழமாகச் செல்லவோ, அவற்றை மீண்டும் மீண்டும் ஆராய்ந்து படிக்கவோ விரும்புகிருர்களில்லை. மாருக, ஒன்றில் முற்றிலும் உடன்பாடான அல்லது முற்றிலும் எதிர்மறையான சாமானிய முடிவுகளை எடுக்க அவர்கள் விரும்புகின்றனர். ...இன்று முதல் நாம் இத்தகைய நிலைமைக்குப் பரிகாரம் செய்து கொள்ள வேண்டும்.

''படிப்பும் நடப்பு நிலைமையும்'' (12. ஏப்ரல். 1944.) தே. ப. தொ. 3.

இந்தத் தோழர்கள் பிரச்சினைகளை நோக்கும் முறை தவருனது. இவர்கள் அடிப்படையான அல்லது பிரதானமான அம்சங்களை நோக்காமல், அடிப்படையல்லாத அல்லது அற்ப அம்சங்களை வற்புறுத்துகின்றனர். இந்த அடிப்படையல்லாத விஷயங்களையும் அற்ப விஷயங்களையும் உதாசீனம் செய்யாமல், ஒவ்வொன்ருகச் சமாளிக்க வேண்டும் என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டியிருக்கின்றது. ஆனுல் அவற்றை அடிப்படை

யான அல்லது பிரதானமான அம்சங்க ளாகக் கொள்ளக் கூடாது. இல்லாவிட் டால், நாம் நமது நிலையில் திரிந்து விடு வோம்.

''விவசாயத்தைக் கூட்டுறவுமய மாக்கும் பிரச்சினை பற்றி'' (31. ஜுலை. 1955.)

உலகில் விஷயங்கள் சிக்கலானவை யாகவும் பல்வேறு கூறுகளால் நிர்ண யிக்கப்படுபவையாகவும் இருக்கின்றன. எனவே பிரச்சினைகளை நாம் ஒரு அம்சத் திலிருந்து மட்டுமல்ல, பல்வேறு அம்சங் களிலிருந்தும் நோக்க வேண்டும்.

''சுங்கிங் பேச்சுவார்த்தைகள் பற்றி'' (17. அக்டோபர். 1945.) தே. ப. தொ. 4.

மானசீகமாகவும், ஒருதலைப்பட்சமா கவும் மேலோட்டமாகவும் பிரச்சினைகளை அணுகுபவர்கள் தான் களத்திற்கு வந்த அதே கணத்தில், சூழ்நிலைகளை ஆராயா

மலும், விஷயங்களை முழுமையாக (அவற் றின் வரலாற்றையும் அவற்றின் இன் றைய நிலைமையையும்) நோக்காமலும், விஷயங்களின் சாராம்சத்தை (அவற்றின் இயல்பையும், ஒரு விஷயத்துக்கும் இன் னொன்றுக்கும் இடையிலுள்ள அக உற வுகளையும்) ஊடுருவிப் பாராமலும், தாம் சரியென்று கருதி கட்டளைகள் அல்லது உத்தரவுகள் விடுவர். இத்த கைய நபர்கள் தடுக்கி விழுவது திண் ணம்.

''நடைமுறை பற்றி'' (ஜுலை. 1937.) தே. ப. தொ. 1.

ஒரு பிரச்சினையை ஆராயும் பொழுது, மானசீகப் போக்கு, ஒருதலைப்பட்சப் போக்கு, மேலோட்டப் போக்கு ஆகிய வற்றை விலக்க வேண்டும். மானசீகப் போக்கு என்பது பிரச்சினைகளைப் புற நிலையாகப் பார்க்கத் தவறுவது, அதா வது, பிரச்சினைகளை நோக்கும் போது பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தை

உபயோகிக்கத் தவறுவது ஆகும். ''நடைமுறை பற்றி'' என்ற கட்டுரையில் இதை நான் விளக்கியுள்ளேன். ஒருதலைப்பட்சப் போக்கு என்பது பிரச்சினைகளை முழுமையாக பார்க்கத் தவறுவதாகும். ...அல்லது முழுமையைப் பாராமல் பகுதியை மாத்திரம் பார்ப்பது, காட்டைப் பாராமல் மரங்களைப் பார்ப்பது என்றும் இதைக் கூறலாம். இந்த வழியில் முரண்பாட்டைத் தீர்ப்பதற்குரிய வழிமுறையைக் காண்பது அசாத்தியம்; புரட்சியின் கடமைகளை நிறைவேற்றுவதோ ஒப்படைக்கப்பட்ட வேலைகளைச் செம்மையாகச் செய்வதோ அல்லது உட்கட்சிச் சித்தாந்தப் போராட்டத்தைச் சரிவர வளர்ப்பதோ சாத்தியமாகாது. ராணுவ விஞ்ஞானம் பற்றி விளக்கும் போது, ''பகைவனை அறிந்து, தன்னையும் அறிந்து கொண்டால், தோல்வியே இல்லாமல் நூறு சமர்களையும் நடத்த முடியும்'' என்று சுன் வு சு கூறினார். இங்கு அவர் சமரின் இரு தரப்பையும் குறிப்பிட்டுள்ளார். ''இரு தரப்புக்கும் செவி கொடு, நீ தெளிவு பெறுவாய்; ஒரு தரப்புக்கு மட்டும் செவி கொடு, நீ இருளில் தடுமாறுவாய்'' என்று கூறிய போது, தாங் வம்சத்தைச் சேர்ந்த வெய் செங் என்பவரும் ஒருதலைப்பட்சப் போக்கு தவறு என்பதை உணர்ந்திருந்தார். ஆனால் நமது தோழர்கள் பிரச்சினைகளை அடிக்கடி ஒருதலைப்பட்சமாகப் பார்ப்பதால், அடிக்கடி இடையூறுகளில் சிக்குகின்றார்கள். ...லெனின் கூறியதாவது:- ''ஒரு பொருளை உண்மையாக அறிய வேண்டுமானால், நாம் அதன் எல்லா பக்கங்களையும், எல்லா தொடர்புகளையும் 'இடை நிகழ்ச்சிகளை'யும் தழுவி ஆராய வேண்டும். இதை நாம் பூர்த்தியாகச் செய்ய முடியாது. ஆனால், எல்லா பக்கங்களையும் படிக்க வேண்டும் என்ற கோரிக்கை தவறுகளுக்கும், வளைந்து கொடுக்காத விறைப்புக்கும் எதிராக ஒரு பாதுகாப்பாய் விளங்குகின்றது''. நாம் அவருடைய வார்த்தைகளை நினைவில் கொள்ள

வேண்டும். மேலோட்டப் போக்கு என்பது முழுமையான முரண்பாட்டின் குணுதிசயங்களேயோ அல்லது முரண்பாட்டின் ஒவ்வொரு அம்சத்தின் குணுதிசயங்களேயோ ஆராயத் தவறுவதாகும்; ஒரு பொருளை ஆழமாகத் துருவிப் பார்த்து, அதன் முரண்பாட்டின் குணுதிசயங்களை நுணுக்கமாக ஆராயும் தேவையை மறுத்து, இதற்கு மாருக, அதைத் தூரத்திலிருந்து மட்டும் பார்த்து விட்டு, முரண்பாட்டின் வெளிவரையை மட்டும் ஓரளவு பார்த்து விட்டு, முரண்பாட்டிற்குத் தீர்வு காண (கேள்விக்குப் பதில் இறுக்க, தகராற்றைத் தீர்க்க, வேலையைக் கையாள, ராணுவ நடவடிக்கைகளுக்கு வழிகாட்ட) முயல்வதாகும். இவ்வாறு விஷயங்களைச் செய்வது தொல்லைக்கு வழி கோலுவது நிச்சயம். ...ஒருதலைப்பட்சப் போக்கும், மேலோட்டப் போக்கும் கூட மானசீகப் போக்கேயாகும்; காரணம், புறநிலைப் பொருட்கள் அனைத்தும் உண்மையில் பரஸ்பரம் தொடர்புடையவை; அக விதிகளால் ஆளப்படுபவை; ஆனுல், சில நபர்கள் விஷயங்களை உள்ளபடியே பிரதிபலிக்கும் கடமையை மேற்கொள்ளாமல், அவற்றை ஒருதலைப்பட்சமாகவும், மேலோட்டமாகவும் மட்டும் பார்க்கின்ருர்கள்; அவற்றின் பரஸ்பரத் தொடர்புகளையோ அக விதிகளையோ அறியாதிருக்கின்றனர்; எனவே அவர்களுடைய முறை மானசீகப் போக்காக இருக்கின்றது.

''முரண்பாடு பற்றி'' (ஆகஸ்ட். 1937.) தே. ப. தொ. 1.

ஒருதலைப்பட்சப் போக்கு என்ருல் விஷயங்களைத் தனித்தனியாகச் சிந்திப்பது; அதாவது, பிரச்சினைகளை நிலையியல் முறையில் அணுகுவது என்று அர்த்தமாகும். நமது வேலையை மதிப்பிடும்போது, ஒவ்வொரு விஷயத்திலும் எல்லாம் சாதகமானது அல்லது எல்லாம் பாதகமானது என்று கருதுவது ஒருதலைப்பட்சப் போக்காகும். ...எல்லா

வற்றையும் சாதகமானது என்று கருது வதென்றால், நன்மையை மாத்திரம் பார்த்து, தீமையைப் பார்க்கத் தவறு வது, பாராட்டை மட்டும் ஏற்று, விமர் சனத்தை சகிக்கத் தவறுவது ஆகும். ஒவ்வொரு அம்சத்திலும் நமது வேலை சிறந்தது என்று கதைப்பது உண்மைக்குப் பொருந்தியதல்ல. ஒவ்வொன்றும் சிறந் தது என்பது உண்மையல்ல; குறை பாடுகளும் தவறுகளும் இன்னும் இருக் கின்றன. ஆனால், எல்லாம் தீயவை என்பதும் உண்மையல்ல. அதுவும் சான் றுகளுக்கு மாறானது. இங்கு ஆராய்வு என்பது அவசியமானது. எல்லாவற் றையும் நிராகரிப்பதன் அர்த்தம், எவ் வித ஆராய்வும் இல்லாமல், ஒன்றும் நன்றாகச் செய்யப்படவில்லை, மாபெரும் சோஷலிஸ நிர்மாண இலட்சியம், பல கோடி மக்கள் பங்கு பற்றும் இந்த மகத் தான போராட்டம் எல்லாம் ஒரே குழ றுபடி, இதில் பாராட்டக் கூடியது ஒன் றுமே இல்லை என்று எண்ணுவதாகும்.

இத்தகைய கருத்துகள் உடையவர்களுக் கும், சோஷலிஸ அமைப்பு மீது பகை மையுடையவர்களுக்கும் இடையில் ஒரு வித்தியாசம் இருந்த போதிலும், இந் தக் கருத்துகள் மிக தவறானவை, தீங்கு விளைப்பவை. இவை மக்களை ஊக்கம் இழக்க மாத்திரம் செய்யும். எனவே, நமது வேலையை மதிப்பிடும் போது, எல்லாம் சாதகமானவை என்ற கண்ணோட்டத்திலிருந்து மதிப்பீடு செய் வது, எல்லாம் பாதகமானவை என்ற கண்ணோட்டத்திலிருந்து மதிப்பீடு செய் வது இரண்டும் தவறானவை.

''சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பிர சார வேலை பற்றிய தேசிய மாநாட் டுரை'' (12. மார்ச். 1957.)

மார்க்ஸிஸவாதிகள் ஒரு பிரச்சினையை அணுகும் போது, அதை பகுதிகளாக மட்டுமல்ல, முழுமையாகவும் நோக்க வேண்டும். கிணற்றிலுள்ள ஒரு தவளை, ''ஆகாயம் கிணற்றின் வாயின் அளவுக்

குச் சமமானது'' என்று கூறினுல் இது சரியல்ல. காரணம், ஆகாயம் கிணற்றின் வாயளவு அல்ல. ''ஆகாயத்தின் ஒரு பகுதி கிணற்றின் வாயின் அளவுக்குச் சம மானது'' என்று சொன்னுல், இது சரி யானது. காரணம் இது உண்மைகளுக் குப் பொருத்தமானது.

''யப்பானிய ஏகாதிபத்திய-எதிர்ப்பு தந்திரோபாயங்கள் பற்றி'' (27. டிஸம்பர். 1935.) தே. ப. தொ. 1.

நாம் பிரச்சினைகளை எல்லா பக்கங் களிலுமிருந்து நோக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்; அதாவது விஷயங்களை முன் புறமிருந்தும் அதே போல பின்புறமிருந் தும் ஆராயக் கற்றுக் கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட நிலைமைகளில் ஒரு தீய விஷயம் நல்ல விளைவுகளுக்கும், ஒரு நல்ல விஷயம் தீய விளைவுகளுக்கும் வழிகோல லாம்.

''மக்கள் மத்தியில் முரண்பாடு களைச் சரியாகக் கையாள்வது பற்றி'' (27. பெப்ரவரி. 1957.)

வரலாற்றின் பொது வளர்ச்சியில் சடப் பொருள் சிந்தனையை நிர்ணயிக்கின்றது, சமுதாய வாழ்வு சமுதாய உணர்வை நிர்ணயிக்கின்றது என்பதை அங்கீக ரிக்கும் அதே வேளையில், சிந்தனை சடப் பொருளிலும், சமுதாய உணர்வு சமு தாய வாழ்விலும், மேலமைப்பு பொரு ளாதார அடிப்படையிலும் பிரதிபலிப் பதையும் நாம் அங்கீகரிக்கின்ரும், உண்மையில் அங்கீகரிக்கவும் வேண்டும். இது பொருள்முதல்வாதத்துக்கு எதிரா னதல்ல. மாருக, இது இயந்திரீக பொருள்முதல்வாதத்தைத் தவிர்த்து, இயங்கியல் பொருள்முதல்வாதத்தை உயர்த்திப் பிடிக்கின்றது.

''முரண்பாடு பற்றி'' (ஆகஸ்ட். 1937.) தே. ப. தொ. 1.

ஒரு யுத்தத்தை நடத்துபவர்கள் புறச் சூழ்நிலைகள் இடும் எல்லைக்கோடுகளைத் தாண்டிச் சென்று யுத்தத்தில் வெற்றி பெற முடியாது. இருந்தும், இந்த எல்

லேகளுக்குள் நின்று ஆற்றலுடன் யுத்தத்தில் வாகை சூட முடியும்; சூடவும் வேண்டும். ஒரு யுத்தத்தில் தளபதிகளுக்கான செயல் அரங்கு புறநிலேச் சாத்தியப்பாடுகளில் கட்டியமைக்கப்பட வேண்டும். ஆனல் அந்த அரங்கில் ஒலியும் வண்ணமும், ஆற்றலும் ஆண்மையும் நிறைந்த பல நாடக நிகழ்ச்சிகளே அவர்கள் அரங்கேற்ற முடியும்.

''நீண்டகால யுத்தம் பற்றி''
(மே. 1938.) தே. ப. தொ. 2.

மாறிய நிலேமைகளுக்கு ஏற்ப மக்களும் தமது சிந்தனேயை மாற்ற வேண்டும். ஆனல் ஒருவரும் கற்பனேச் சிறகு கட்டிப் பறக்கவோ, அல்லது புறநிலேமையால் உத்தரவாதம் செய்யப்படாத செயல் திட்டங்களே வகுக்கவோ, அசாத்தியமானவற்றைச் செய்யும் படி கட்டாயப்படுத்தவோ கூடாது. இருந்தும் இன்றைய பிரச்சினே யாதெனில், வலதுசாரி பழைமைவாதச் சிந்தனே பல துறைகளில்

இன்னும் தொல்லே விளேவித்து, புற நிலேமையின் வளர்ச்சியுடன் அடியிட்டு முன்னேருமல் இந்தத் துறைகளின் வேலேயைத் தடை செய்கின்றது. தம்மால் நிறைவேற்றக் கூடிய விஷயங்களே நிறைவேற்ற முடியாது என்று பலர் கருதுவதும் இன்றைய பிரச்சினேயாகும்.

''சீனுவின் நாட்டுப்புறத்தில் சோஷலிஸப் பெருக்கு'' என்ற நூலின்
முன்னுரை (27. டிஸம்பர். 1955.)

நாம் எப்பொழுதும் நமது மூளேயைப் பாவித்து, எல்லாவற்றையும் கவனமாகச் சிந்திக்க வேண்டும். முதுமொழி ஒன்று கூறுவது போல, ''புருவத்தை நெறி, உபாயம் ஒன்று பிறக்கும்''; வேறு வார்த்தையில் கூறினுல், கூடுதலான சிந்தனே விவேகத்தைத் தரும். நமது கட்சியில் ஒரு பாரதூரமான அளவுக்கு நிலவும் கபோதித்தனத்தை இல்லாமற் செய்ய வேண்டுமானுல், சிந்திக்க, ஆராய்வு முறையைக் கற்றுக் கொள்ள, ஆராய்வுப் பழக்

கத்தை வளர்க்க நமது தோழர்களுக்கு நாம் ஊக்கமூட்ட வேண்டும்.

''படிப்பும் நடப்பு நிலைமையும்'' (12. ஏப்ரல். 1944.) தே. ப. தொ. 3.

எந்த ஒரு வளர்ச்சிப் போக்கிலும் ஒன்றுக்கு மேற்பட்ட முரண்பாடுகள் இருக்குமேயானால், அவற்றில் ஒன்று தலைமைப் பாத்திரத்தை, தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கும் பிரதான முரண் பாடாக இருக்கும். ஏனையவை இரண் டாந்தரமான, கீழ்ப்பட்ட நிலையில் இருக் கும். எனவே, இரண்டு அல்லது இரண் டுக்கு மேற்பட்ட முரண்பாடுகள் உடைய எந்த ஒரு சிக்கலான வளர்ச்சிப் போக் கையும் ஆராயும் போது, அதன் பிரதான முரண்பாட்டைக் காண்பதற்கு நாம் சகல வழிகளிலும் முயல வேண்டும். ஒருகால் இந்தப் பிரதான முரண்பாட் டைக் கிரகித்துக் கொண்டதும், எல்லா

பிரச்சினைகளும் எளிதில் தீர்ந்து விடுகின் றன.

''முரண்பாடு பற்றி'' (ஆகஸ்ட். 1937.) தே. ப. தொ. 1.

முரண்பாட்டு அம்சங்கள் இரண்டில் ஒன்று பிரதானமானது; மற்றது இரண் டாந்தரமானது. பிரதான அம்சமே முரண்பாட்டில் தலைமைப் பாத்திரத்தை வகிக்கின்றது. ஒரு விஷயத்தின் இயல்பு முக்கியமாக ஆதிக்கம் செலுத்தும் முரண் பாட்டின் பிரதான அம்சத்தால் நிர்ண யிக்கப்படுகின்றது.

ஆனால் இந்த நிலைமை நிலையானது அல்ல. முரண்பாட்டின் பிரதான அம் சமும் இரண்டாந்தர அம்சமும் அவற்றின் எதிர்மறைகளாக மாறுகின்றன. அதன் பிரகாரம் விஷயத்தின் இயல்பும் மாற் றமடைகின்றது.

ஷை

கடமைகளை முன்வைத்தால் மட்டும்

போதாது; அவற்றைக் கொண்டு நடத்தும் வழிமுறைப் பிரச்சினைக்கும் நாம் தீர்வு காண வேண்டும். ஒரு ஆற்றைக் கடப்பது நமது கடமையாக இருந்தால், ஒரு பாலம் அல்லது ஒரு படகு இல்லாமல் நாம் அதைக் கடக்க முடியாது. பாலம் அல்லது படகு பிரச்சினை தீர்க்கப்பட்டாலொழிய, ஆற்றைக் கடப்பது பற்றிப் பேசுவது வீண்பேச்சாகும். வழிமுறைப் பிரச்சினை தீர்க்கப்பட்டாலொழிய, கடமை பற்றி கதைப்பது வெறும் விழலாகும்.

''பொதுமக்களின் நல்வாழ்வில் அக்கறை கொள், வேலைமுறைகளில் கவனம் செலுத்து'' (27. ஜனவரி.1934.) தே. ப. தொ. 1.

எந்த ஒரு. கடமையிலும், ஒரு பொதுவான, வியாபகமான அறைகூவல் விடுக்கப்படாவிட்டால், பரந்துபட்ட பொதுமக்களைச் செயலுக்குத் தட்டியெழுப்ப முடியாது. ஆனால், தலைமைப் பதவிகளில் உள்ளவர்கள் ஒரு பொது அறைகூவலுடன் மட்டும் தம்மைக் கட்டுப்படுத்தி விட்டால்—ஸ்தாபனங்கள் சில வற்றில், அறைகூவல் விடுக்கப்பட்ட வேலையில் ஆழமாகவும் ஸ்தூலமாகவும் நேரடியாகவும் சென்று, ஒரு தனிமுனையில் உடைத்துப் புகுந்து, அனுபவத்தைப் பெற்று, இதர பகுதிகளுக்கு வழிகாட்ட இந்த அனுபவத்தை உபயோகிக்காவிட்டால் — தமது பொது அறைகூவல் சரியானதா என்பதைப் பரீட்சிக்கவோ அல்லது அதன் உள்ளடக்கத்தைச் செழுமைப்படுத்தவோ முடியாது. எனவே, இதனால் எவ்வித விளைவும் ஏற்பட முடியாத அபாயம் இருக்கவே செய்கின்றது.

''தலைமைமுறை பற்றிய சில பிரச்சினைகள்'' (1. ஜுன். 1943.) தே. ப. தொ. 3.

தலைமைப் பதவியிலுள்ள எவரும் கீழ்மட்டத்தில் குறிப்பிட்ட பிரிவுகளிலுள்ள குறிப்பிட்ட தனிநபர்களிடமிருந்து அல்லது சம்பவங்களிலிருந்து உருப்

படியான அனுபவத்தைச் சம்பாதிக்கா விட்டால், அவர் எல்லா பிரிவுகளுக்கும் பொது வழிகாட்டல் கொடுக்கத் தகு தியற்றவராவர். எல்லா மட்டங்களி லுள்ள தலைமை ஊழியர்களும் இந்த முறையைப் படித்துப் பிரயோகிப்பதற் காக, இதை எல்லா இடங்களிலும் பரப்ப வேண்டும்.

ஷி

எந்த ஒரு இடத்திலும், ஏககாலத்தில் பல கேந்திரக் கடமைகள் இருக்க முடி யாது. எந்த ஒரு சமயத்திலும் ஒரே ஒரு கேந்திரக் கடமை மட்டும் இருக்க முடியும். ஏனைய கடமைகள் அதை நிறைவு செய்யும் இரண்டாந்தர, மூன் றாந்தர முக்கியத்துவம் பெற்ற கடமை களாகவே இருக்கும். இதன் விளைவாக, ஒரு ஸ்தலத்தில் கூட்டுமொத்தப் பொறுப் புடைய ஒருவர் அங்கு நடைபெறும் போராட்டத்தின் வரலாற்றையும் சூழ் நிலைகளையும் கணக்கில் எடுத்து, பல்வேறு

கடமைகளையும் அவற்றின் தகுதியான அந்தஸ்தின் பிரகாரம் வைக்க வேண்டு மேயன்றி, தமது சொந்தத் திட்டம் ஒன்று இல்லாமல், மேல் ஸ்தாபனத்தி லிருந்து வரும் ஒவ்வொரு உத்தரவையும் அப்படியே அமுல் நடத்தி, ''கேந்திரக் கடமைகள்'' பலவற்றைச் சிருஷ்டித்து, ஒரு குழப்ப நிலைமையையும், ஒழுங்கீனத் தையும் தோற்றுவிக்கக் கூடாது. ஒரு மேல் ஸ்தாபனம் கூட கடமைகளில் எது முக்கியமானது, எது முக்கியமற்றது, எது அவசரமானது, எது அவசரமற்றது என் பதைக் குறிப்பிடாமல், அவற்றில் கேந் திரக் கடமை எது என்று குறிப்பிடாமல், ஒரு கீழ் ஸ்தாபனத்துக்கு பல கடமைகளை ஏககாலத்தில் கொடுக்கக் கூடாது. காரணம், அது தமது வேலையில் கீழ் ஸ்தாப னங்கள் எடுக்கும் நடவடிக்கைகளில் குழப் பத்தை உண்டாக்கி, தீர்க்கமான விளை வுகளும் பெற முடியாமல் போய் விடும். தலைவர்கள் ஒவ்வொரு குறிப்பிட்ட ஸ்த லத்தினதும் வரலாற்று நிலைமைகள்,

அன்றைய சூழ்நிலைகள் ஆகியவற்றின் பிரகாரம் நிலைமையைப் பூரணமாகக் கணக்கில் எடுத்து, ஒவ்வொரு காலகட்டத்திலும் வேலையின் ஈர்ப்பு மையத்தை யும் ஒழுங்கையும் சரியாகத் தீர்மானிப்பது, அத்துடன் தீர்மானத்தை ஆட்ட மசைவின்றி அமுல் நடத்துவது, தீர்க்க மான விளைவுகள் பெறுவதை உத்தரவாதம் செய்வது — இவை தலைமைக் கலையின் ஒரு பகுதியாகும்.

ஷி

வேலையின் முன்னேற்றத்தை அடிக்கடி கிரகித்து, அனுபவத்தைப் பரிமாறி, பிழைகளைத் திருத்திக் கொள்ள வேண்டும். பொதுப் பரிசோதனை, பிழைகளின் பொதுத் திருத்தம் இவற்றுக்கான தொகுப்புக் கூட்டங்களைக் கூட்டுவதற்கு மாதக்கணக்காகவோ, அரை ஆண்டு அல்லது ஒரு ஆண்டு காலமோ காத்திருக்கக் கூடாது. அப்படிக் காத்திருப்பது பெரும் நஷ்டத்துக்கு வழி கோலலாம்; தவறுகள் ஏற்பட்டவுடன் அவற்றைத் திருத்துவது நஷ்டத்தைக் குறைக்கும்.

''தொழில், வர்த்தகம் சம்பந்தமான கொள்கை பற்றி'' (27. பெப்ரவரி. 1948.) தே. ப. தொ. 4.

பிரச்சினைகள் குவிந்து, தொல்லைகள் பெருகும் வரை காத்திராமல், அவற்றைத் தீர்க்க வேண்டும். தலைவர்கள் என்போர் இயக்கத்தின் முன்னணியில் செல்ல வேண்டுமேயன்றி, பின் தங்கி நிற்கக் கூடாது.

''பருவ கால அடிப்படையில் ஒப்பந்த முறை'' என்ற கட்டுரையின் அறிமுகக் குறிப்பு (1955.)

நமக்குத் தேவையானது ஒரு உற்சாகமான, ஆனல் அமைதியான மனநிலை; தீவிரமான ஆனல் ஒழுங்கான வேலை முறை.

''சீன புரட்சி யுத்தத்தில் யுத்த தந்திரப் பிரச்சினைகள்'' (டிஸம்பர். 1936.) தே. ப. தொ. 1.

23. பரிசீலனையும் படிப்பும்

அனுஷ்டான வேலையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் கீழ் மட்டங்களிலுள்ள நிலைமைகளைப் பரிசீலனை செய்ய வேண்டும். இத்தகைய பரிசீலனை, விசேஷமாக, தத்துவத்தில் தேர்ச்சி பெற்ற, ஆனால் உண்மை நிலைமைகளை அறியாதவர்களைப் பொறுத்தவரையில், அவசியமானது. இல்லாவிட்டால், அவர்கள் தத்துவத்தை அனுஷ்டானத்துடன் இணைக்க இயலாதவர்கள் ஆவர். ''பரிசீலனை இன்றேல், பேசும் உரிமை இல்லை'' என்ற கூற்று ''குறுகிய அனுபவவாதம்'' என்று நையாண்டி செய்யப்பட்ட போதிலும், இன்று வரையில் நான் அதற்காக வருந்தவில்லை. வருந்துவதற்குப் பதில், பரிசீலனை இல்லாவிட்டால் பேச்சுரிமை

யும் இருக்கக் கூடாது என்பதை நான் இன்னும் வலியுறுத்துகின்றேன். ''உத்தியோக வண்டியில் வந்திறங்கிய அதே கணத்தில்'' சந்தடி செய்து, அபிப்பிராயங்களை அள்ளி வீசி, அதை விமர்சித்து, இதைக் கண்டிக்கும் நபர்களும் பலர் உண்டு. உண்மையில், இவர்களில் நூற்றுக்கு நூறும் தோல்வியைச் சந்திப்பது நிச்சயம். ஏனெனில், பூரணமான பரிசீலனையை அடிப்படையாகக் கொள்ளாத இத்தகைய பேச்சுகளும் விமர்சனங்களும் அறியாமை நிரம்பிய பிதற்றல்கள் அன்றி வேறல்ல. இங்கும், அங்கும், எங்கும் ஓடித் திரியும் இந்த ''ராஜ-தூதர்களால்'' நமது கட்சி எண்ணற்ற தடவை பாதிக்கப்பட்டது. ''புரட்சிகர அனுஷ்டானத்துடன் இணைக்கப்படாவிட்டால், தத்துவம் என்பது குறிக்கோள் அற்றதாகி விடும்'' என்று ஸ்டாலின் அவர்கள் சரியாகக் கூறினர். தொடர்ந்து அவர் ''அனுஷ்டானம் புரட்சிகரத் தத்துவத்தால் வழிநடத்தப்படாவிட்டால், அது

இருளில் கிடந்து தடுமாறும்'' என்றும் சரியாகக் கூறியுள்ளார். இருளில் அலைந்து திரிகின்ற, எதிர்கால நோக்கும் தூரதிருஷ்டியும் இல்லாத கூறப்படும் ''அனுஷ்டான வாதிகளுக்கு'' அன்றி, வேறுயாருக்கும் குறுகிய அனுபவவாதி என்ற முத்திரை குத்தப்படக் கூடாது.

'' 'கிராமிய பரிசீலனை'யின் முன்னுரையும் பின்னுரையும்'' (மார்ச்-ஏப்ரல். 1941.) தே. ப. தொ. 3.

இத்தகைய மனோபாவம் என்பது சான்றுகளிலிருந்து உண்மையைத் தேடுவதாகும். புறநிலையாய் உள்ள எல்லா விஷயங்களும் ''சான்றுகள்'' எனப்படும். ''உண்மை'' என்றால், அவற்றின் அக உறவுகள், அதாவது, அவற்றை ஆளும் விதிகள். ''தேடுவது'' என்றால் ஆராய்வது என்று அர்த்தம் ஆகும். நாடு, மாகாணம், மாவட்டம், பிரதேசம்—இவற்றின் உள்ளும் புறமும் உள்ள உண்மையான நிலைமைகளிலிருந்து நாம் தொடங்கி,

அவற்றிலிருந்து நமது செயலுக்கு வழிகாட்டியாக அமையும் விதிகளை வகுத்துக் கொள்ள வேண்டும். அவ்விதிகள் கற்பனையில் தோன்றுதவையாக, அவற்றிற்கு உரியவையாக இருக்க வேண்டும். அதாவது, நம்மைச் சூழ நடை பெறும் சம்பவங்களின் அக உறவுகளை நாம் கண்டறிய வேண்டும். இதைச் செய்வதற்கு, நாம் மானசீக கற்பனை, கணப்பொழுதில் தோன்றி மறையும் உற்சாகம், உயிரற்ற நூல்கள் ஆகியவற்றைச் சார்ந்திருக்கக் கூடாது. மாறாகப் புற நிலையாயுள்ள சான்றுகளைச் சார்ந்திருக்க வேண்டும். ஆதாரங்களை விபரமாகத் தொகுத்து, பொதுவான மார்க்ஸிஸம்-லெனினிஸ கோட்பாடுகளின் வழிகாட்டலின் கீழ் அவற்றிலிருந்து சரியான முடிவுகளை எடுக்க வேண்டும்.

''நமது படிப்பைச் சீர்செய்வோம்'' (மே. 1941.) தே. ப. தொ. 3.

''கண்ணைக் கட்டிவிட்டு கரிக்குருவி பிடிப்பது'' போல, அல்லது ''கபோதி

மீனுக்குத் தேடுவது'' போல நடந்து கொள்வது, தாறுமாறுகவும் கவலையீன மாகவும் இருப்பது, வெறும் வார்த்தை ஜாலங்களில் ஈடுபடுவது, மேலோட்ட மான அறிவுடன் திருப்தி அடைவது — இது நமது கட்சித் தோழர்கள் பலரிடம் இன்னும் உள்ள கடைகோடி தீய வேலை நடை. இந்த நடை மார்க்ஸிஸம்-லெனி னிஸத்தின் அடிப்படை உணர்வுக்கு முற் றிலும் விரோதமானது. நிலைமைகளை உணர்வுபூர்வமாக ஆராய வேண்டும் என்றும், மானசீக விருப்பங்களிலிருந்து தொடங்காமல், புறநிலை யதார்த்தத்திலி ருந்து தொடங்க வேண்டும் என்றும் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோர் நமக்குப் போதித்துள்ளனர். நமது தோழர்கள் பலர் இந்த உண்மைக்கு நேர் விரோதமாகச் செயல்படுகின்றனர்.

ஷி

உங்களால் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது? சரி, அந்தப் பிரச்சி

னையின் இன்றைய உண்மைகளையும் அதன் பழைய வரலாற்றையும் பரிசீலனை செய் யுங்கள்! பிரச்சினையைப் பூரணமாகப் பரி சீலனை செய்ததும், அதைத் தீர்ப்பது எப் படி என்பதை நீங்கள் அறிவீர்கள். நிலை மைகளைப் பரிசீலனை செய்த பின், எல்லா முடிவுகளும் கிடைக்குமேயன்றி, அதற்கு முன் அல்ல. எவ்வித பரிசீலனையும் செய் யாமல் ஒரு முட்டாள் மாத்திரம் சுய மாக அல்லது ஒரு கோஷ்டியுடன் சேர்ந்து, ''ஒரு தீர்வு காண்பதற்கு'' அல் லது ''ஒரு கருத்தை வெளியிடுவதற்கு''த் தனது மூளையைக் கசக்கிப் பிழிவான். இது எவ்வித நல்ல தீர்வுக்கும், அல்லது எவ்வித நல்ல கருத்துக்கும் வழிகோலு வது சாத்தியமாகாது என்பது வலியுறுத் தப்பட வேண்டும்.

''புத்தக வழிபாட்டை எதிர்ப்பது''
(மே. 1930.)

பரிசீலனை என்ருல் பத்து மாதங்கள் கர்ப்பம் தரித்திருப்பதற்குச் சமமானது;

பிரச்சினையைத் தீர்ப்பது பிரசவ நாளுக் குச் சமம். ஒரு பிரச்சினையைப் பரிசீலனை செய்வது உண்மையில் அதைத் தீர்ப்பதற் காகும்.

ஷே

சுற்றுடலின் ஒழுங்கான, பூரணமான பரிசீலனைக்கும், ஆராய்ச்சிக்கும், ஒருவர் மார்க்ஸிஸம்-லெனினிஸத் தத்துவத்தை யும் வழிமுறையையும் பிரயோகிக்கிறார். அவர் வெறும் உற்சாகத்தை மட்டும் கொண்டு வேலை செய்வதில்லை. ஸ்டா லின் கூறுவது போல, அவர் புரட்சிகர வீச்சையும் அனுஷ்டான உணர்வையும் இணைக்கின்றார்.

''நமது படிப்பைச் சீர்செய்வோம்''
(மே. 1941.) தே. ப. தொ. 3.

நிலைமைகளை அறியும் ஒரே ஒரு வழி யாதெனில், சமுதாய பரிசீலனைகளை நடத் துவது, உண்மையான வாழ்வில் சமுதா யத்தின் ஒவ்வொரு வர்க்கத்தின் நிலைமை களையும் பரிசீலனை செய்வது ஆகும். நிர்வாக வேலைக்குப் பொறுப்பாக உள் ளவர்களைப் பொறுத்தவரையில், நிலை மைகளை அறிவதற்கான அடிப்படை முறை, அடிப்படை மார்க்ஸிஸக் கண் ணோட்டத்தை, அதாவது, வர்க்க அந் வயமுறையை உபயோகித்து, ஒரு திட் டத்தின் பிரகாரம் ஒரு சில நகரங்கள், கிராமங்கள் மீது கவனம் செலுத்தி, பூரணமான பரிசீலனைகள் பலவற்றை நடத்துவதாகும்.

'' 'கிராமிய பரிசீலனை'யின் முன்னு
ரையும் பின்னுரையும்'' (மார்ச்-
ஏப்ரல். 1941.) தே. ப. தொ. 3.

ஒரு பரிசீலனை கூட்டம் பெரிதாக இருக்க வேண்டியதில்லை. மூன்று முதல் ஐந்து அல்லது ஏழு அல்லது எட்டுப் பேர் போதுமானது. இதற்குச் சமயம் கொடுக் கப்பட வேண்டும். பரிசீலனைக்கான ஒரு அட்டவணை தயாரிக்கப்பட வேண் டும். இன்னும், ஒருவர் தானாகக் கேள் விகள் கேட்டு, குறிப்புகள் எடுத்து, கூட் டத்தில் உள்ளவர்களுடன் விவாதங்கள்

நடத்த வேண்டும். எனவே, அவருக்கு மனம் நிறைந்த ஆர்வமும், தனது கண்களைக் கீழே செலுத்தும் உறுதிப்பாடும், அறிவுத் தாகமும் இல்லாவிட்டால், அசிங்கமான போலி வேடத்தைக் களைந்து விட்டு, விசுவாசமான ஒரு மாணவனாக மாருவிட்டால், அவர் உண்மையான ஒரு பரிசீலனையை நடத்த முடியாது. நடத்திஞலும், அதை நன்ருகச் செய்ய முடியாது.

ஷெ

ஒரு தளபதியின் சரியான படை ஏற்பாட்டுக் கணிப்புகள் அவருடைய சரியான தீர்மானங்களிலிருந்து வருகின்றன; அவருடைய சரியான தீர்மானங்கள் அவருடைய சரியான அனுமானங்களிலிருந்து பிறக்கின்றன; அவருடைய சரியான அனுமானங்கள் ஒரு பூரணமான, தேவையான ஒற்றறிதலிலிருந்து, ஒற்றறிதல் மூலம் சேகரித்த பல்வேறு வகையான தரவுகளையும் துருவி ஆராய்ந்து செப்பனிடுவதிலிருந்து தோன்றுகின்றன. அவர் சாத்தியமான, அவசியமான ஒற்றறியும் முறைகளைப் பிரயோகித்து, எதிரியின் நிலைமை சம்பந்தமாகச் சேகரித்த தகவலில் சக்கையை நீக்கிச் சாராம்சத்தை எடுத்து, பொய்ம்மையை விலக்கி மெய்ம்மையைக் கொண்டு, ஒன்றிலிருந்து இன்னென்றுக்கும், புறத்திலிருந்து அகத்துக்கும் சென்று, துருவித் துருவி ஆராய்கிருர்; பின்னர் தனது பக்கத்திலுள்ள நிலைமைகளைக் கணக்கில் எடுத்து, இரு தரப்பின் பலாபலத்தையும் அவற்றின் பரஸ்பர உறவுகளையும் ஆராய்ந்து, முடிவுகளுக்கு வந்து, மனதைத் திடப்படுத்தித் தனது திட்டங்களை வகுக்கிருர். ஒரு ராணுவ தந்திரி ஒரு யுத்ததந்திரத் திட்டத்தை, ஒரு போர்த் திட்டத்தை அல்லது ஒரு சமர்த் திட்டத்தை வகுப்பதற்கு முன், அவர் ஒரு நிலைமை பற்றி அறியும் பூரணமான போக்கு இத்தகையதே.

''சீன புரட்சி யுத்தத்தில் யுத்த தந்திரப் பிரச்சினைகள்'' (டிஸம்பர். 1936.) தே. ப. தொ. 1.

24. தவருன கருத்துகளைத் திருத்துவது

நமது வேலையில் அசுர சாதனைகளை ஈட்டினுலும் கூட, இறுமாப்பும் செருக்கும் அடைவதற்கு எவ்வித காரணமும் இல்லை. அடக்கம் ஒருவரின் முன்னேற்றத்துக்குத் துணை செய்யும். இறுமாப்பு பின்னடைவுக்கு வழி கோலுகின்றது. இது நாம் எப்பொழுதும் மனதில் வைத்திருக்க வேண்டிய ஒரு உண்மையாகும்.

''சீன கம்யூனிஸ்ட் கட்சி 8வது தேசிய மாநாட்டின் ஆரம்ப உரை''
(15. செப்டம்பர். 1956.)

வெற்றியுடன் சில சுபாவங்கள் — செருக்கு, தற்பெருமை வீரனின் கிறுக்கு, மடிமை, முன்னேற்றமடைய விரும்பாமை, இன்ப வேட்கை, தொடர்ச்சியான

கஷ்ட வாழ்வில் பிரியமின்மை ஆகியவை — கட்சிக்குள் வளரலாம். வெற்றியுடன் மக்கள் நமக்கு நன்றி பாராட்டுவர். பூர்ஜுவா வர்க்கம் நமக்கு முகஸ்துதி பாட முன்வரும். எதிரி ஆயுத பலத்தால் நம்மை வெல்ல முடியாது என்பதும் நிரூபிக்கப்பட்டு விட்டது. இருந்தும், பூர்ஜுவா வர்க்கத்தின் முகஸ்துதி நமது அணிகளிலுள்ள உறுதிப்பாடு குன்றியவர்களை வெற்றி கொள்ளலாம். துப்பாக்கிகளேந்திய எதிரிகளால் ஒருபோதும் வெல்லப்பட முடியாத, இந்த எதிரிகளுக்கு முன்னுல் வீரர்கள் என்ற பெயருக்குத் தகுதியான, ஆனுல் சீனியில் பொதிந்த ரவைகளுக்கு நின்று பிடிக்க முடியாத கம்யூனிஸ்டுகள் சிலர் இருக்கலாம். அவர்கள் சீனியில் பொதிந்த ரவைகளால் தோற்கடிக்கப்படுவார்கள். இத்தகைய நிலைமைக்கு எதிராக நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்.

''சீன கம்யூனிஸ்ட் கட்சி 7வது மத்திய கமிட்டியின் 2வது பிளீனக் கூட்டத்தின் அறிக்கை'' (5. மார்ச். 1949.) தே. ப. தொ. 4.

பல விஷயங்கள் மீது நாம் குருட்டுத் தனமாக, விமர்சன பாவமின்றி நம்பிக் கை வைத்தால், அவை நமக்கு ஒரு சுமை யாக, தடைகளாக மாறலாம். உதார ணமாக: பிழைகள் இழைத்ததும், தாம் தவறு செய்து விட்டதாக எண்ணி, ஆர் வம் குன்றி விடலாம்; பிழைகள் செய்யா விட்டால், தாம் தவறு அற்றவர்கள் என்று எண்ணி, இறுமாப்பு அடையலாம். வேலையில் சாதனைகள் பெருவிடில், நம் பிக்கை ஈனமும் மனச்சோர்வும் ஏற்ப டலாம்; அதே வேளையில் சாதனைகள் கர் வத்தையும் செருக்கையும் உண்டுபண்ண லாம். குறுகிய காலப் போராட்ட வர லாறுடையவர்கள் தமது குறுகிய காலப் போராட்ட வரலாறு காரணமாகப் பொறுப்புகளைத் தட்டிக் கழிக்கலாம்; அதே வேளையில் நீண்ட வரலாறுடைய ஒருவர் தமது நீண்டகாலப் போராட்ட வரலாறு காரணமாகத் தற்பெருமை கொள்ளலாம். தொழிலாளர்-விவசாயித்

தோழர்கள் தமது சிறந்த வர்க்கத் தோற் றம் காரணமாகப் புத்திஜீவிகளை இகழ்ந்து நோக்கலாம்; அதே சமயத்தில், தம்மிட முள்ள குறிப்பிட்ட அளவு அறிவைக் கொண்டு, புத்திஜீவிகள் தொழிலாளர்-விவசாயித் தோழர்களைத் தாழ்வாக நோக்கலாம். ஒருவரிடமுள்ள விசேஷமான தேர்ச்சிகள் அகங்காரத்துக்கும், பிறர் மீது இகழ்ச்சி மனோபாவத்துக்கும் மூலதனமாகலாம். ஒருவருடைய வயது கூட இறுமாப்புக்குத் தளமாக அமைய லாம். விவேகமும் திறமையும் இருப்பத னால், இளைஞர்கள் முதியோரை இகழ்ந்து நோக்கலாம்; முதியவர்கள், தமது பழுத்த அனுபவம் காரணமாக, வாலிபர்களைத் தாழ்வாகக் கருதலாம். இத்தகைய எல்லா விஷயங்களும், விமர்சனரீதியில் நோக்கப்படாவிட்டால், தடைகளாக அல்லது சுமையாக மாறலாம்.

''படிப்பும் நடப்பு நிலைமையும்'' (12. ஏப்ரல். 1944.) தே. ப. தொ. 3.

ராணுவத்திலுள்ள சில தோழர்கள், செருக்குடையவராகி, படையினரோடும் மக்களோடும் அரசாங்கத்தோடும் கட்சியோடும் பழகும் போது யதேச்சாதிகாரம் உடையவர்களாக மாறியுள்ளனர். அவர்கள் தம்மைப் பற்றி குறை கூறுமல், ஸ்தல வேலே செய்யும் தோழர்கள் மீது எப்பொழுதும் குற்றம் காண்கிருர்கள். அவர்கள் எப்பொழுதும் தமது சொந்தச் சாதனைகளேப் பார்க்கிருர்களே அன்றி, தமது குறைபாடுகளேக் கவனிக்கிருர்களில்லே. எப்பொழுதும் முகஸ்துதியை வரவேற்கிருர்களே அன்றி, விமர்சனத்தை வரவேற்கிருர்களில்லே. . . . ராணுவம் இந்தக் குறைபாடுகளே இல்லாமற்செய்யப் பாடுபட வேண்டும்.

''ஸ்தாபனரீதியில் அணிதிரள்க''
(29. நவம்பர். 1943.) தே. ப. தொ. 3.

கடினமான வேலே என்பது தோள்கொடுக்கும் படி நமக்குச் சவால் விடும் பளு ஒன்றை நம்முன் வைப்பதிருப்பதற்குச் சமமானது. சில பளுக்கள் லேசானவை, சில கனமானவை. சிலர் கனமானவற்றை விட்டு, லேசானவற்றையே விரும்புகின்றனர். அவர்கள் லேசானவற்றைத் தூக்கிக் கொண்டு, பாரமானவற்றைப் பிறரிடம் தள்ளி விடுகின்றனர். இது ஒரு சிறந்த மனுேபாவம் அல்ல. சில தோழர்கள் வேருனவர்கள். அவர்கள் சௌகரியமானவற்றைப் பிறருக்கு விட்டு, கனமானவற்றைத் தமக்கு எடுக்கின்றனர். கஷ்டங்களேத் தாங்குவதற்கு அவர்கள் முதலிடத்திலும், சௌகரியங்களே அனுபவிப்பதற்குக் கடைசியிலும் நிற்கின்றனர். இப்படிபட்ட தோழர்கள் உண்மையில் சிறந்த தோழர்கள். அவர்களுடைய கம்யூனிஸ உணர்விலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

''சுங்கிங் பேச்சுவார்த்தைகள் பற்றி''
(17. அக்டோபர். 1945.) தே. ப. தொ. 4.

லேசானவற்றை விரும்பி, கனமான

வற்றைத் தள்ளி விட்டு, அதாவது, பளு வான கடமைகளைப் பிறர் மீது சுமத்தி, தமக்கு லேசானவற்றைத் தேர்ந்தெடுத்து, தமது வேலையில் பொறுப்புணர்ச்சி அற்றிருக்கும் நபர்கள் பலர் இருக்கின்றனர். என்ன நேர்ந்தாலும் அவர்கள் தம்மைப் பற்றி முன்னும், மற்றவர்களைப் பற்றிப் பின்னும் சிந்திக்கின்றனர். தாம் ஏதும் சிறிய சாதனை ஒன்றை வழங்கி விட்டால், பெருமையால் தலைவீங்கி, பிறர் அதை அறிய மாட்டார்கள் என்று அஞ்சி, அது பற்றி ஐம்பமடிக்கின்றனர். தோழர்கள், மக்கள் மீது அவர்களுக்கு மனம் நிறைந்த ஆர்வம் இல்லை. பதிலுக்கு அன்பின்மையும், பராமுகமும், உணர்வின்மையும் அவர்களிடம் காணப்படுகின்றன. இத்தகையவர்கள் உண்மையில் கம்யூனிஸ்டுகள் அல்ல; அல்லது குறைந்த பட்சம் தூய்மையான கம்யூனிஸ்டுகள் என்றும் சொல்ல முடியாது.

''நோர்மன் பெத்யூன் நினைவுக்காக'' (21. டிஸம்பர். 1939.)
தே. ப. தொ. 2.

இந்த வகையான ''சுதந்திரத்தை'' வலியுறுத்துபவர்கள், வழக்கத்தில் ''நான் முதல்'' என்ற தத்துவத்தை மணம் முடித்தவர்கள் ஆவர்; தனிநபருக்கும் கட்சிக்குமிடை உறவு பற்றிய பிரச்சினையில் பொதுவாகத் தவறானவர்கள். சொல்லளவில் அவர்கள் கட்சிக்கு மதிப்புக் கொடுப்பது பற்றிப் பேசினாலும், செயலில் அவர்கள் தம்மை முதலிடத்திலும், கட்சியை இரண்டாவதாகவும் வைக்கின்றனர். இந்த நபர்கள் எதை நாடுகின்றனர்? அவர்கள் புகழை, பதவியை நாடுகின்றனர்; கீர்த்திப் பிரகாசம் பெற நாடுகின்றனர். ஒரு வேலைப் பிரிவுக்கு அவர்களைப் பொறுப்பாக விட்டதும், அவர்கள் ''சுதந்திரத்தை'' வலியுறுத்துகின்றனர். இந்த நோக்கத்துடன், சிலரை உள்ளே இழுத்து, ஏனையோரை வெளியே தள்ளி, தோழர்கள் மத்தியில் புழுகு, முகஸ்துதி, இச்சகம் பேசுதல் ஆகியவற்றில் ஈடுபட்டு, இவ்வாறு பூர்ஜுவா வர்க்க அரசியல் கட்சிகளின் இழிந்த வேலைநடையைக் கம்யூ

னிஸ்ட் கட்சிக்குள் இறக்குமதி செய்கின் றனர். அவர்களுக்குத் துன்பங் கொண் டுவருவது அவர்களுடைய நேர்மையீன மேயாகும். நாம் விஷயங்களை நேர்மை யாகச் செய்ய வேண்டும்; ஒரு நேர்மை யான மனோபாவம் இல்லாவிட்டால், இவ்வுலகில் எந்த ஒரு விஷயத்தையும் சாதிப்பது அசாத்தியம் என நான் நினைக் கின்றேன்.

''கட்சி நடையைச் சீர்செய்வோம்'' (1. பெப்ரவரி. 1942.) தே. ப. தொ. 3.

கம்யூனிஸ்டுகள் முழுமையின் தேவைக ளுக்குப் பகுதியின் தேவைகளைக் கீழ்ப்ப டுத்தும் கோட்பாட்டைக் கிரகித்துக் கொள்ள வேண்டும். ஒரு பிரேரணை பகுதி நிலைமைக்கு மாத்திரம் பொருந்தி யதாக இருக்கும் அதே வேளையில், முழு நிலைமைக்கும் பொருந்தியதாக இல்லா விட்டால், பகுதி முழுமைக்கு இடம் விட்டுக் கொடுக்க வேண்டும். வேறுவி

தமாகச் சொன்னால், ஒரு பிரேரணை பகுதி நிலைமைக்கு பொருத்தமற்றதாகவும், ஆனால் முழு நிலைமைக்கும் பொருந்திய தாகவும் இருந்தால், பகுதி முழுமைக்கு விட்டுக் கொடுக்க வேண்டும். நிலைமை யை முழுமையாக நோக்குவது என்பதன் அர்த்தம் இதுவே ஆகும்.

''தேசிய யுத்தத்தில் சீன கம்யூ னிஸ்ட் கட்சியின் பாத்திரம்'' (அக் டோபர். 1938.) தே. ப. தொ. 2.

இன்ப நாட்டம். செஞ்சேனையில் தமது தனிநபர்வாதம் இன்ப நாட்டத்தில் வெளிப்பாடு காணும் நபர்களும் கணி சமான அளவில் இருக்கின்றனர். தமது பிரிவு பெரும் நகரங்களுக்குள் பிரவே சிக்கும் என அவர்கள் எப்பொழுதும் எதிர்பார்க்கின்றனர். அவர்கள் அங்கு வேலை செய்வதற்கு அல்ல; இன்பம் அனு பவிப்பதற்கே செல்ல விரும்புகின்றனர். அவர்கள் மிகவும் விரும்பாதது யாதெ னில், வாழ்வு கஷ்டமாக இருக்கும் சிவப்

புப் பிரதேசங்களில் வேலை செய்வதாகும்.

''கட்சியில் நிலவும் தவறான கருத்துகளைத் திருத்துவது பற்றி'' (டிஸம்பர். 1929.) தே. ப. தொ. 1.

தனது சொந்த நலன்களை மாத்திரம் கவனித்து, பிறரின் நலன்களை ஒதுக்கி விடும் சுயநல-இலாகாவாத போக்கை நாம் எதிர்க்க வேண்டும். பிறருடைய கஷ்டங்களுக்கு யார் பராமுகமாக இருக்கின்றாரோ, கோரிக்கையின் பேரில் தனது சொந்த ஊழியர்களை பிற பகுதிகளுக்கு மாற்ற மறுக்கின்றாரோ, அல்லது, ''தனது மேலதிக நீர் ஓடும் வாயிலாக அயலவனின் வயலைப் பாவித்து'', தகுதி குறைந்த ஊழியர்களை மாத்திரம் அனுப்பி, இதர இலாகாக்களுக்கும் ஸ்தலங்களுக்கும் மக்களுக்கும் மிகக் குறைந்த பட்ச அக்கறை கூட செலுத்தாமல் இருக்கிறாரோ — அவர் கம்யூனிஸ உணர்வை முற்றாக இழந்த ஒரு சுயநல-இலாகாவாதியாவர்.

முழுமையின் நலன்களைக் கணக்கில் எடுக்காமல் இருப்பதும், இதர இலாகாக்கள்-ஸ்தலங்கள்-மக்களில் முற்றிலும் பராமுகமாயிருப்பதும் சுயநல-இலாகாவாதியின் இலக்கணங்கள் ஆகும். சுயநல-இலாகாவாதம் என்பது ஒரு ஒருமுனைவாதப் போக்கு; இதை வளர விட்டால் மிகப் பெரும் அபாயம் விளையும் என்பதை அவர்கள் புரியும் படி செய்ய நாம் இத்தகைய நபர்களுக்குத் தீவிர போதனையளிக்க வேண்டும்.

''கட்சி நடையைச் சீர்செய்வோம்'' (1. பெப்ரவரி. 1942.) தே. ப. தொ. 3.

தாராளவாதம் பல்வேறு வழிகளில் வெளிப்படுகின்றது.

ஒருவர் தவறிழைத்து விட்டார் என்பது தெளிவான போதும், நீண்டகாலம் பழகியவர், சக ஊரவர், ஒரே பாடசாலையில் படித்தவர், நெருங்கிய நண்பர், அன்பிற்குரியவர், பழைய கூட்டாளி, அல்

லது பழைய கீழ்ப்பணியாளர் என்ற காரணத்தால், அவருடன் கோட்பாட்டுரீதியில் வாதிடுவதற்கு மாறாக, சமாதானத்துக்காகவும் நட்புறவுக்காகவும் விஷயங்களை நழுவ விடுவது; அல்லது நல்ல உறவுகளை வைத்திருப்பதற்காக, விஷயங்களுக்குப் பூரணமான தீர்வு காண்பதற்குப் பதில், அவற்றை லேசாகத் தொட்டு விட்டு விடுவது, இதன் விளைவாக ஸ்தாபனத்துக்கும் தனிநபருக்கும் தீங்கு விளைவிக்கப்படுகின்றது. இது தாராளவாதத்தின் முதலாவது வகை.

ஸ்தாபனத்துக்குத் தனது யோசனைகளை ஊக்கமாய் முன்வைப்பதற்குப் பதிலாக, முதுகுக்குப் பின் பொறுப்பற்ற விமர்சனத்தில் ஈடுபடுவது. மக்களின் முகத்துக்கு முன் ஒன்றும் சொல்லாமல், அவர்களுடைய முதுகுக்குப் பின் வம்பளப்பது; கூட்டத்தில் ஒன்றும் பேசாமல், அது முடிந்த பின் வம்பளப்பது. கூட்டுறவு வாழ்வுக் கோட்பாடுகளை உதாசீனம் செய்து, தனது சொந்த மனப்போக்கைப்

பின்பற்றுவது. இது இரண்டாவது வகை.

விஷயங்கள் தன்னை நேரடியாகப் பாதிக்காவிட்டால், அவற்றை நழுவிச் செல்ல விடுவது; ஒரு விஷயம் தவறு என்பதைப் பூரணமாகத் தெரிந்தும், அது பற்றி இயன்ற அளவு சொற்பமாகப் பேசுவது. குறை கூறப்படாமல் தப்புவதற்காக ஆபத்தில்லாத முறையில் பாதுகாப்பாய் உலகமறிந்தவர் போல நடந்து கொள்வது. இது மூன்றாவது வகை.

கட்டளைகளுக்குப் பணிந்து ஒழுகாமல் தமது சொந்த அபிப்பிராயங்களுக்கு மேட்டிமையான ஸ்தானம் கொடுப்பது, ஸ்தாபனத்திடமிருந்து விசேஷ சலுகை கோரும் அதே வேளையில் அதன் கட்டுப்பாட்டை நிராகரிப்பது. இது நாலாவது வகை.

ஐக்கியத்துக்காக அல்லது முன்னேற்றத்துக்காக அல்லது வேலையை நன்றாய்ச் செய்வதற்காக அல்ல, பதிலுக்குத் தனிப்பட்ட தாக்குதல் தொடுப்பதற்காக, சண்டைகள் பிடிப்பதற்காக, சொந்த

மனஸ்தாபங்களைக் கொட்டித் தீர்ப்பதற்காக, அல்லது பழிவாங்குவதற்காக தவருன கருத்துகளுக்கு எதிரான போராட்டத்திலும் விவாதத்திலும் ஈடுபடுவது. இது ஐந்தாவது வகை.

தவருன கருத்துகளை மறுத்துரைக்காமல் கேட்பது, எதிர்ப்புரட்சிவாதிகளின் குறிப்புரைகளை அறிவிக்காமல் கேட்பது. ஆனுல் மாருக ஒன்றும் நடக்காதது போல் அவற்றை அமைதியாக எடுத்துக் கொள்வது. இது ஆருவது வகை.

மக்கள் மத்தியில் இருந்தும், பிரசாரம் செய்யாமலும், ஊக்கமூட்டாமலும் இருப்பது; அல்லது சொற்பொழிவுகள் ஆற்ருமல் அல்லது அவர்கள் மத்தியில் பரிசீலனைகளும் விசாரணைகளும் நடத்தாமல் இருப்பது; மக்கள் மீது பராமுகமாகவும், அவர்கள் நல்வாழ்வில் அக்கறை இல்லாமலும், தான் ஒரு கம்யூனிஸ்டு என்பதை மறந்து, ஒரு சாதாரண ஆள் போல நடந்து கொள்வது. இது ஏழாவது வகை.

ஒருவர் மக்களின் நலன்களை ஊறுபடுத்தக் கண்டும், ஆத்திரம் அடையாமல், அல்லது அவருக்கு அறிவுரை கூருமல், அல்லது அவரைத் தடுக்காமல், அல்லது அவருடன் நியாயம் காட்டி வாதிடாமல், தொடர்ந்து அப்படிச் செய்ய அவரை அனுமதிப்பது. இது எட்டாவது வகை.

ஒரு தீர்க்கமான திட்டமோ அல்லது திசையோ இல்லாமல், அரை-மனதுடன் வேலை செய்வது. கவனக்குறைவாகவும் தாறுமாருகவும் வேலை செய்வது—''ஒரு பூசாரியாய் இருக்கும் வரை மணியைக் கிலுக்கிக் கொண்டே இருப்பது''. இது ஒன்பதாவது வகை.

புரட்சிக்குத் தான் பெருஞ் சேவை வழங்கியதாகத் தானே கருதிக் கொள்வது; பெரும் அனுபவசாலி எனத் தன்னில் தானே பெருமைப்படுவது. உயர்ந்த கடமைகளுக்குத் தகுதி இல்லாமல் இருக்கும் அதே வேளையில், சிறிய பணிகளை அவமதிப்பது. வேலையில் கவலையீனமாகவும் படிப்பில் அக்கறையில்லாமலும்

இருப்பது. இது பத்தாவது வகை.

தனது சொந்த தவறுகளை அறிந்தும் அவற்றைத் திருத்த எவ்வித முயற்சியும் செய்யாமல், தன் மீது தாராள மனோபாவத்தை மேற்கொள்வது. இது பதினோராவது வகை.

''தாராளவாதத்தை எதிர்ப்போம்'' (7. செப்டம்பர். 1937.)
தே. ப. தொ. 2.

ஒரு புரட்சிகரக் கூட்டுறவில் தாராளவாதம் என்பது பெருந் தீங்கு விளைவிக்கும் ஒன்று. இது ஐக்கியத்தை அரித்துத் தின்னுகின்ற, ஒன்றிணைப்பைச் சீர்குலைக்கின்ற, வேலையில் பராமுகத்தை உண்டாக்குகின்ற, வேற்றுமையை விதைக்கின்ற ஒரு நச்சுத் திரவம். அது புரட்சிகர அணிகளிலுள்ள கட்டுக்கோப்பான ஸ்தாபன அமைப்பையும், கண்டிப்பான கட்டுப்பாட்டையும் அழித்து விடுகின்றது. கொள்கைகள் பூரணமாய் அமுல் நடத்தப்படுவதை அது தடுக்கின்றது.

கட்சியின் தலைமையிலுள்ள மக்களிடமிருந்து கட்சி ஸ்தாபனங்களைப் பிரித்து விடுகின்றது. இது மிகத் தீமையான ஒரு போக்காகும்.

ஷை

தாராளவாதிகள் மார்க்ஸிஸக் கோட்பாடுகளை வெறும் வரட்டுத் தத்துவமாகக் கருதுகின்றனர். அவர்கள் மார்க்ஸிஸத்தை அங்கீகரிக்கின்றனர்; ஆனால் அதை அனுஷ்டிக்க அல்லது பூரணமாக அனுஷ்டிக்கத் தயாராக இல்லை. தமது தாராளவாதத்துக்குப் பதிலாக, அதன் இடத்தில் மார்க்ஸிஸத்தை வைக்கவும் அவர்கள் தயாராக இல்லை. இந்த நபர்களிடம் மார்க்ஸிஸம் இருக்கும் அதே வேளையில், தாராளவாதமும் இருக்கின்றது. அவர்கள் மார்க்ஸிஸம் பேசுகின்றனர். ஆனால் தாராளவாதத்தை அனுஷ்டிக்கின்றனர். பிறருக்கு மார்க்ஸிஸத்தையும் தமக்குத் தாராளவாதத்தையும் பிரயோகிக்கின்றனர். அவர்கள் இரண்டு வித

மான சரக்குகளையும் இருப்பில் வைத்து, இரண்டுக்கும் உபயோகம் காண்கின்றனர். இப்படித் தான் சில நபர்களின் மூளைகள் வேலை செய்கின்றன.

ஷை

மக்கள்-அரசாங்கம் மக்களைப் பாது காக்கின்றது. மக்களுக்கு இத்தகைய அரசாங்கம் ஒன்று இருந்தால் தான், அவர்கள் தேசியரீதியாகவும் முழுமையாகவும் ஜனநாயக முறைகளைக் கொண்டு தமக்குத் தாமே போதனை அளித்து, தம்மைத் தாமே புநருருவாக்கிக் கொள்ள முடியும். (இன்னும் மிகப் பலமாக இருக்கின்ற, நீண்டகாலம் நிலைத்திருக்கப் போகின்ற, விரைவில் ஒழித்துக் கட்ட முடியாத) உள்நாட்டு, வெளிநாட்டுப் பிற்போக்குவாதிகளின் செல்வாக்கை உதறித் தள்ள முடியும். பிற்போக்குவாதிகளால் தவறாக வழி நடத்தப்படாமல், பழைய சமுதாயத்தில் தாம் கைக் கொண்டிருந்த தீய பழக்கவழக்கங்களையும் சிந்

தனைகளையும் திருத்தி, தொடர்ந்து முன்னேற, சோஷலிஸ கம்யூனிஸ சமுதாயத்தை நோக்கி முன்னேற முடியும்.

‘‘மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் பற்றி’’ (30. ஜூன். 1949.) தே. ப. தொ. 4.

ஒருவர் ஒரு சிறிய அளவு நன்மை செய்வது அவ்வளவு கஷ்டமல்ல. கஷ்டமானது யாதெனில், தமது வாழ்நாள் முழுவதும் நன்மையே செய்து, தீமை ஒன்றுமே செய்யாமல், பரந்துபட்ட பொதுமக்களுக்கும், இளைஞர்களுக்கும், புரட்சிக்கும் சாதகமாகச் செயல்பட்டு, தசாப்தம் தசாப்தமாகக் கடினமான போராட்டத்தில் ஈடுபடுவதாகும். இதுவே எல்லாவற்றிலும் மிகக் கடினமான விஷயமாகும்.

‘‘தோழர் வூ யீ-சாங் அவர்களின் 60வது பிறந்த நாள் வாழ்த்துச் செய்தி’’ (15. ஜனவரி. 1940.)

25. ஐக்கியம்

நமது நாட்டின் ஒருமைப்பாடு, நமது மக்களின் ஐக்கியம், நமது பல்வேறு தேசிய இனங்களின் ஐக்கியம் — இவை நமது லட்சியத்தின் நிச்சய வெற்றிக்கான அடிப்படை உத்தரவாதங்கள் ஆகும்.

''மக்கள் மத்தியில் முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது பற்றி'' (27. பெப்ரவரி. 1957.)

கம்யூனிஸ்ட் கட்சியின் ஐக்கியத்தின் மூலம் தான் முழு வர்க்கத்தினதும் ஐக்கியத்தையும், முழு தேசத்தினதும் ஐக்கியத்தையும் பெற முடியும். முழு வர்க்கத்தினதும், முழு தேசத்தினதும் ஐக்கியத்தின் மூலம் தான் எதிரியைத் தோற்கடிக்க முடியும்; தேசிய ஜனநாயகப்

புரட்சியின் கடமைகளை நிறைவேற்ற முடியும்.

''யப்பானிய-எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணிக்குப் பொதுமக்களை கோடிக்கணக்கில் வென்றெடுப்போம்'' (7. மே. 1937.) தே. ப. தொ. 1.

நாம் ஸ்தாபனமும் கட்டுப்பாடும் பற்றிய ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டின் பிரகாரம் நமது கட்சியின் சக்திகள் எல்லாவற்றையும் கெட்டியாக ஐக்கியப்படுத்துவோம். கட்சியின் வேலைத் திட்டம், சட்டதிட்டங்கள், தீர்மானங்கள் ஆகியவற்றின் படி ஒழுகும் எந்த தோழருடனும் நாம் ஐக்கியப்படுவோம்.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

மக்கள் மத்தியிலுள்ள முரண்பாடுகளைத் தீர்க்கும் இந்த ஜனநாயக முறை, 1942ல், ''ஐக்கியம், விமர்சனம், ஐக்கியம்'' என்ற சூத்திரத்தில் சுருக்கிக் கூறப்

பட்டுள்ளது. இதை விரித்துக் கூறினல், இதன் அர்த்தம், ஐக்கியத்துக்கான ஆசையுடன் தொடங்கி, விமர்சனத்தின் அல்லது போராட்டத்தின் மூலம் முரண்பாடுகளைத் தீர்த்து, ஒரு புதிய அடிப்படையில் ஒரு புதிய ஐக்கியத்துக்கு வருவதாகும். நமது அனுபவத்தில், மக்கள் மத்தியிலுள்ள முரண்பாடுகளைத் தீர்க்கும் சரியான முறை இதுவே.

''மக்கள் மத்தியில் முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது பற்றி'' (27. பெப்ரவரி. 1957.)

இந்தப் படை, அதன் சொந்த அணிகளிலும், அதற்கு வெளியே உள்ள அணிகளுடனும் குறிப்பிடத்தக்க ஐக்கியத்தை உருவாக்கியுள்ளது. உள்ளே, அதிகாரிகளுக்கும் படையினருக்கும் இடையிலும், உயர்தர அணிகள் கீழ் மட்ட அணிகள் இரண்டுக்குமிடையிலும், ராணுவ வேலை, அரசியல் வேலை, பின்னணி சேவை இவற்றுக்கிடையிலும் ஐக்கியம் நிலவுகின்றது. வெளியே, ராணுவத்துக்கும் மக்களுக்கும் இடையிலும், ராணுவத்துக்கும், அரசாங்க நிறுவனங்களுக்கும் இடையிலும், நமது படைக்கும் நேசப் படைகளுக்கும் இடையிலும் ஐக்கியம் நிலவுகின்றது. இந்த ஐக்கியத்துக்கு ஊறுவிளைவிக்கும் எதையும் வெற்றி கொள்வது இன்றியமையாதது.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

26. கட்டுப்பாடு

மக்களின் அணிகளுக்குள் ஜனநாயகம் மத்தியத்துவத்துடன் தொடர்புடையது; சுதந்திரம் கட்டுப்பாட்டுடன் தொடர்புடையது. அவை ஒரே முழுமையான அம்சத்தின் இரண்டு எதிர்மறைகள். அவை முரண்பாடும் அதே சமயத்தில் ஐக்கியமும் உடையவை. நாம் ஒரு தலைப்பட்சமாக ஒன்றை வலியுறுத்தி, மற்றதை மறுக்கக் கூடாது. மக்களின் அணிகளுக்குள் சுதந்திரம் இல்லாமல் இருக்க முடியாது; கட்டுப்பாடும் இல்லாமல் இருக்க முடியாது. ஜனநாயகம் இல்லாமல் இருக்க முடியாது; மத்தியத்துவமும் இல்லாமல் இருக்க முடியாது. ஜனநாயகம் மத்தியத்துவம் இரண்டின் ஐக்கியம், சுதந்திரம் கட்டுப்பாடு இரண்டின் ஐக்கியம் — இதுவே நமது ஜனநாயக மத்தியத்துவ கோட்பாடாகும். இந்த அமைப்பின் கீழ் மக்கள் விஸ்தாரமான ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் அனுபவிக்கின்றனர். அதே சமயத்தில் அவர்கள் சோஷலிஸ கட்டுப்பாடு என்ற எல்லைக்குட்பட்டு ஒழுக வேண்டும்.

''மக்கள் மத்தியில் முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது பற்றி'' *(27. பெப்ரவரி. 1957.)*

நாம் கட்சியின் கட்டுப்பாட்டைப் புதிதாக ஊர்ஜிதம் செய்ய வேண்டும்; அதாவது,

(1) தனிநபர் ஸ்தாபனத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும்;

(2) சிறுபான்மை பெரும்பான்மைக்குக் கீழ்ப்படிய வேண்டும்;

(3) கீழ் மட்டம் மேல் மட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும்;

(4) உறுப்பினர் அனைவரும் மத்திய கமிட்டிக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

யார் கட்டுப்பாட்டின் இந்த விதிகளை அத்து மீறுகிருரோ, அவர் கட்சி ஐக்கியத்தைச் சீர்குலைப்பவராவர்.

''தேசிய யுத்தத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம்'' (அக்டோபர். 1938.) தே. ப. தொ. 2.

கட்சிக் கட்டுப்பாட்டின் ஒரு அம்சம் சிறுபான்மை பெரும்பான்மைக்குக் கீழ்ப்படிவதாகும். சிறுபான்மையின் அபிப்பிராயம் நிராகரிக்கப்பட்டால், அது பெரும்பான்மையால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும். தேவையாஞல், அடுத்த கூட்டத்தில் அவ்விஷயத்தை அது புனராலோசனைக்குக் கொண்டு வரலாம். ஆனுல், இதை விட்டு எவ்விதத்திலும் தீர்மானத்துக்கு எதிராகச் செயல்படக் கூடாது.

''கட்சியில் நிலவும் தவருன கருத்துகளைத் திருத்துவது பற்றி'' (டிஸம்பர். 1929.) தே. ப. தொ. 1.

கட்டுப்பாடு பற்றிய மூன்று பிரதான விதிகளும் பின்வருமாறு:-

(1) நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் கட்டளைக்குக் கீழ்ப்படி.

(2) மக்களிடமிருந்து ஒரு ஊசியையோ அல்லது ஒரு துண்டு நூலையோ எடுக்காதே.

(3) கைப்பற்றிய எல்லாவற்றையும் ஒப்படை.

கவனத்துக்கான எட்டு அம்சங்களும் பின்வருமாறு:-

(1) மரியாதையாகப் பேசு.

(2) வாங்குவதிலும் விற்பதிலும் நியாயமாக நடந்து கொள்.

(3) கடன் வாங்கியவற்றைத் திருப்பிக் கொடு.

(4) சேதங்களுக்கு நஷ்ட ஈடு செலுத்து.

(5) மக்களை அடிக்கவோ நிந்திக்கவோ கூடாது.

(6) பயிர்களை அழிக்காதே.

(7) பெண்களிடம் ஒழுங்கீனமாய் நடவாதே.

(8) கைதிகளைத் துன்புறுத்தாதே.

''கட்டுப்பாட்டுக்கான மூன்று பிரதான விதிகளையும் கவனத்துக்கான எட்டு அம்சங்களையும் மீண்டும் வெளியிடுவது பற்றி — சீன மக்கள் விடுதலைச் சேனை தலைமை அலுவலக உத்தரவு'' (10. அக்டோபர். 1947.) தே. ப. தொ. 4.

கட்டுப்பாடு பற்றிய நமது உணர்வை உயர்த்த வேண்டும். கட்டளையை உறுதியாக அமுல் நடத்த வேண்டும். நமது கொள்கையை அமுல் நடத்த வேண்டும். கட்டுப்பாட்டுக்கான மூன்று பிரதான விதிகளையும் கவனத்துக்கான எட்டு அம்சங்களையும் அனுசரிக்க வேண்டும். ராணுவமும் மக்களும் ஐக்கியப்பட்டு, ராணுவமும் அரசாங்கமும் ஐக்கியப்பட்டு, அதிகாரிகளும் படையினரும் ஐக்கியப்பட்டு, முழு ராணுவமும் ஐக்கியப்பட்டு,

எவ்விதத்திலும் கட்டுப்பாட்டை மீறுவதை அனுமதிக்கக் கூடாது.

''சீன மக்கள் விடுதலைச் சேனையின் பிரகடனம்'' (அக்டோபர். 1947.) தே. ப. தொ. 4.

27. விமர்சனமும் சுய-விமர்சனமும்

கம்யூனிஸ்ட் கட்சி விமர்சனத்துக்கு அஞ்சுவதில்லை. காரணம், நாம் மார்க்ஸிஸ்டுகள்; உண்மை நம் பக்கத்தில் இருக்கின்றது; அடிப்படை மக்கள், தொழிலாளரும் விவசாயிகளும் நம் பக்கத்தில் இருக்கின்றனர்.

''சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பிரசார வேலை பற்றிய தேசிய மாநாட்டுரை'' (12. மார்ச். 1957.)

பூரணமான பொருள்முதல்வாதிகள் அச்சமற்றவர்கள். நமது சக-போராளிகள் எல்லாரும் துணிகரமாகத் தமது பொறுப்புகளுக்குத் தோள்கொடுப்பர்; கஷ்டங்கள் எல்லாவற்றையும் வெற்றிகொள்வர்; பின்னடைவுகளுக்கோ அல்லது ஏளனங்களுக்கோ அஞ்ச மாட்டார்கள், கம்யூனிஸ்டுகளாகிய எங்களை விமர்சனம் செய்வதற்கும், தமது ஆலோசனைகளைக் கொடுப்பதற்கும் அஞ்ச மாட்டார்கள் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். ''ஆயிரம் வெட்டுகளாலும் இறப்பதற்கு அஞ்சாத ஒருவன் தான் சக்கரவர்த்தியைக் குதிரையிலிருந்து இழுத்து விழுத்தும் துணிவுடையவன்'' — இதுவே சோஷலிஸத்தையும் கம்யூனிஸத்தையும் கட்டி வளர்க்கும் நமது போராட்டத்திற்குத் தேவையான தளராத உணர்வு.

ஷை

விமர்சனம், சுய-விமர்சனம் என்ற மார்க்ஸிஸம்-லெனினிஸ ஆயுதம் நம்மிடம் உண்டு. கூடாத நடையை நீக்கி, நல்ல நடையை நாம் வைத்திருக்க முடியும்.

''சீன கம்யூனிஸ்ட் கட்சி 7வது மத்திய கமிட்டியின் 2வது பிளீனக் கூட்டத்தின் அறிக்கை'' (5. மார்ச். 1949.) தே. ப. தொ. 4.

உணர்வுபூர்வமாகச் சுய-விமர்சனம் செய்து கொள்வது, நமது கட்சியை இதர அரசியல் கட்சிகள் எல்லாவற்றிலுமிருந்து பிரித்துக் காட்டும் இன்னொரு தெளிவான எல்லைக்கோடாகும். அறை அடிக்கடி ஒழுங்காகக் கூட்டப்பட வேண்டும், ஒரு அறை ஒழுங்காகக் கூட்டப்படா விட்டால் அங்கு தூசி படிந்து விடும்; முகம் அடிக்கடி ஒழுங்காகக் கழுவப்பட வேண்டும், நமது முகங்களை ஒழுங்காகக் கழுவாவிட்டால், அவை அழுக்குப் பிடித்துவிடும் என்று நாம் கூறுவதுண்டு. நமது தோழர்களின் உள்ளங்களிலும் நமது கட்சியின் வேலையிலும் கூட தூசி பிடிக்கலாம்; அவையும் கழுவிச் சுத்தம் செய்யப்பட வேண்டும். ''ஓடும் நீர் ஊசிப் போகாது, கதவுப் பிணைச்சல் கறள் பிடியாது'' என்ற பழமொழியின் அர்த்தம், இடைவிடாத இயக்கம் கிருமிகளும் சேதனப் பொருள்களும் நுழையும் வாயிலைத் தடுக்கும் என்பதாகும். நமது வேலையை அடிக்கடி ஒழுங்காகப் பரிசோதனை செய்வது, அதன் போக்கில் ஜனநாயக வேலை நடை ஒன்றை விருத்தி செய்வது, விமர்சனத்துக்கோ, சுய-விமர்சனத்துக்கோ அஞ்சாமலிருப்பது, ''அறிந்தவை எல்லாவற்றையும் பேசுவது, ஒன்றையும் ஒழிக்காமல் பேசுவது'', ''பேச்சாளனைக் குறை கூருதே, பதிலுக்கு அவர் வார்த்தையிலிருந்து எச்சரிக்கை பெற்றுக் கொள்'', ''தவறுகள் இழைத்தால் அவற்றைத் திருத்து, இழைக்காவிட்டால் அவற்றுக்கெதிராக ஜாக்கிரதையாய் இரு'' என்பவை போன்ற சிறந்த ஜனரஞ்சகமான சீன முதுமொழிகளைப் பிரயோகிப்பது — நமது தோழர்களின் சிந்தனைகளும், நமது கட்சியின் உடலும் அரசியல் தூசிகள், கிருமிகள் எவற்ருலும் பாதிக்கப்படாமல் தடுக்கும் பயனுள்ள ஒரே ஒரு வழி இதுவேயாகும்.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

கட்சிக்குள் பல்வேறு விதமான கருத்

துகளுக்கிடையிலும் இடைவிடாது எதிர்ப்பும் போராட்டமும் நிகழ்கின்றன. இவை சமுதாயத்தில் வர்க்கங்களுக்கிடையிலும், புதியவை பழையவை இரண்டுக்குமிடையிலும் உள்ள முரண்பாடுகள் கட்சிக்குள் பிரதிபலிப்பதேயாகும். கட்சிக்குள் எவ்வித முரண்பாடுகளும் இல்லாவிட்டால், அவற்றைத் தீர்ப்பதற்கான சித்தாந்தப் போராட்டங்கள் இல்லாவிட்டால், கட்சியின் வாழ்வு நின்று விடும்.

''முரண்பாடு பற்றி'' (ஆகஸ்ட். 1937.) தே. ப. தொ. 1.

நாம் ஊக்கமான சித்தாந்தப் போராட்டத்துக்காக நிற்கிறோம். காரணம், அது நமது போராட்டத்துக்கு உதவியாக, கட்சிக்குள்ளும் புரட்சிகர ஸ்தாபனங்களுக்குள்ளும் ஐக்கியத்தை உருவாக்கும் ஒரு ஆயுதமாக விளங்குகின்றது. ஒவ்வொரு கம்யூனிஸ்டும் ஒவ்வொரு புரட்சிவாதியும் இந்த ஆயுதத்தை கையில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் தாராளவாதம் சித்தாந்தப் போராட்டத்தை நிராகரித்து, கோட்பாடற்ற சமாதானத்துக்காக நிற்கிறது; இதன் விளைவாக உளுத்துப் போன பண்பற்ற மனோபாவம் தோன்றி, கட்சியிலும் புரட்சிகர ஸ்தாபனங்களிலுமுள்ள சில பிரிவுகளையும் தனிநபர்களையும் அரசியல்ரீதியில் சீர்குலைக்கின்றது.

''தாராளவாதத்தை எதிர்ப்போம்'' (7. செப்டம்பர். 1937.) தே. ப. தொ. 2.

மானசீகவாதம், ஒருமுனைவாதம், வாய்பாட்டு கட்சி எழுத்து நடை ஆகியவற்றை எதிர்க்கும் போது, நாம் இரண்டு நோக்கங்களை மனதில் வைக்க வேண்டும்:- ஒன்று, ''கடந்த காலத் தவறுகளிலிருந்து படிப்பினை பெற்று, எதிர்காலத்தில் தவறுகளைத் தவிர்ப்பது'', இரண்டு, ''நோயாளியைக் காப்பாற்ற நோய்க்குச் சிகிச்சை அளிப்பது''. எவருடைய உணர்வு மேம்பாட்டையும் பொருட்படுத்தாமல் கடந்த

காலத் தவறுகள் எல்லாம் அம்பலப்படுத் தப்பட வேண்டும். எதிர்கால வேலையை மேலும் கவனமாகவும் சிறப்பாகவும் செய்வதற்காக, கடந்த கால வேலையில் உள்ள தீய அம்சங்களை ஒரு விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து, விமர் சனம் செய்வது அவசியமானது. இதுவே ''கடந்த காலத் தவறுகளிலிருந்து படிப் பினை பெற்று, எதிர்காலத்தில் தவறுகளைத் தவிர்ப்பது'' என்பதன் அர்த்தமாகும். ஆனால் பிழைகளை அம்பலப்படுத்தி, குறை பாடுகளை விமர்சனம் செய்வதில் நமக் குள்ள நோக்கம், வைத்தியர் ஒருவர் நோய்க்குச் சிகிச்சை அளிப்பது போல, நோயாளியைக் காப்பாற்றுவதன்றி, அவர் இறப்பதற்குச் சிகிச்சை அளிப்ப தல்ல. குடல்வால் நோயுடைய ஒரு வர், அறுவை வைத்தியர் அவருடைய குடல்வாலை அகற்றியதும், காப்பாற்றப் படுகிறார். தவறுகள் இழைத்த ஒருவர் சிகிச்சைக்கு அஞ்சித் தனது நோயை மறைக்காத வரையில், அல்லது சிகிச்சை

செய்ய முடியாமல் போகுமளவுக்குத் தனது பிழைகளில் அழுத்தி நிற்காத வரை யில், அவர் உண்மையாகவும், விசுவாச மாகவும் குணப்படுத்தப்பட விரும்பி, தனது தவறுகளைத் திருத்தும் வரையில், நாம் அவரை வரவேற்று, அவர் நல்ல ஒரு தோழராய் மாறுவதற்காக, அவரு டைய நோய்க்குச் சிகிச்சை அளிக்க வேண் டும். எவ்விதக் கட்டுப்பாடுமின்றி, அவரை விளாசித் தாக்குவோமேயானால், நாம் ஒருபோதும் வெற்றி பெற முடியாது. ஒரு சித்தாந்த அல்லது அரசியல் நோ யைக் குணப்படுத்தும் போது, நாம் கடி னமாகவும் மூர்க்கத்தனமாகவும் நடந்து கொள்ளக் கூடாது. பதிலுக்கு ''நோயா ளியைக் காப்பாற்ற நோய்க்குச் சிகிச்சை அளிப்பது'' என்ற அணுகுமுறையை நாம் கடைப்பிடிக்க வேண்டும். இதுவே சரி யான, பயனுள்ள ஒரே ஒரு வழியாகும்.

''கட்சி நடையைச் சீர்செய்வோம்''
(1. பெப்ரவரி. 1942.) தே. ப. தொ. 3.

உட்கட்சி விமர்சனம் சம்பந்தமாகக் குறிப்பிட வேண்டிய இன்னொரு குறிப்பும் இருக்கின்றது. அதாவது, சில தோழர்கள் விமர்சனம் செய்யும் போது பிரதான பிரச்சினைகளை மறந்து, சிறிய விஷயங்களில் தமது கவனத்தைச் செலுத்துகின்றனர். விமர்சனத்தில் பிரதான கடமை அரசியல், ஸ்தாபனப் பிழைகளைச் சுட்டிக் காட்டுவதே என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. தனிநபரின் குறைபாடுகளைப் பொறுத்தவரையில், அவை அரசியல், ஸ்தாபனப் பிழைகளுடன் தொடர்புடையவையாய் இருந்தாலொழிய, கூடுதலாக விமர்சனம் செய்வது அனுவசியமாகும். அப்படிச் செய்தால் சம்பந்தப்பட்ட தோழர்கள் யாது செய்வது என்று அறியாமல் தடுமாறி விடுவர். இன்னும் இத்தகைய விமர்சனம் ஒருகால் வளர்ந்தால், கட்சிக்குள் சிறிய தவறுகளில் பிரத்தியேகக் கவனம் செலுத்தப்படும்; ஒவ்வொருவரும் அஞ்சி, மிதமிஞ்சிய எச்சரிக்கையால், கட்சியின் அரசியல்

கடமைகளை மறந்து விடுவர். இது மிக பெரிய அபாயமாகும்.

''கட்சியில் நிலவும் தவறான கருத்துகளைத் திருத்துவது பற்றி'' (டிஸம்பர். 1929.) தே. ப. தொ. 1.

உட்கட்சி விமர்சனத்தில், மானசீக வாதம், மனம் போன போக்கு, விமர்சனத்தை இழிமைப்படுத்தல் ஆகியவற்றுக்கெதிராக ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். கூற்றுகள் எப்பொழுதும் சான்றுகளை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். விமர்சனம் அரசியல் அம்சத்தை வலியுறுத்த வேண்டும்.

ஷி

உட்கட்சி விமர்சனம் என்பது கட்சி ஸ்தாபனத்தை பலப்படுத்தி, அதன் போராட்ட ஆற்றலைப் பெருக்கும் ஒரு ஆயுதம். இருந்தும், செஞ்சேனைக் கட்சி ஸ்தாபனத்தில், விமர்சனம் எப்பொழுதும் இப்படி இருப்பதில்லை. சில வேளை

களில் அது தனிநபர்-தாக்குதலாக மாறி விடுகின்றது. இதன் விளைவாக தனி நபருக்கு மாத்திரமல்ல கட்சி ஸ்தாபனத் துக்கும் கேடு விளைவிக்கப்படுகின்றது. இது குட்டி பூர்ஜுவா வர்க்க தனிநபர்வாதத் தின் ஒரு வெளிப்பாடாகும். இதை திருத் தும் முறை யாதெனில், விமர்சனத்தின் நோக்கம் வர்க்கப் போராட்டத்தில் வெற்றி பெறுவதற்காகக் கட்சியின் போ ராட்ட ஆற்றலைப் பெருக்குவதே என் றும், அதைத் தனிநபர்-தாக்குதலுக்கான ஒரு கருவியாக உபயோகிக்கக் கூடாது என்றும் கட்சி உறுப்பினர்களுக்கு விளக் குவதாகும்.

ஷை

எம்மிடம் குறைபாடுகள் இருந்தால், அவை சுட்டிக் காட்டி விமர்சனம் செய் யப்படுவதற்கு நாம் அஞ்சவில்லை. ஏனெ னில் நாம் மக்களுக்காகத் தொண்டு செய்கிறோம். எவராயினும், அவர் யா ராயிருந்தாலும் பரவாயில்லை, நமது குறைபாடுகளைச் சுட்டிக் காட்டலாம். அவர் சரியாயிருந்தால், நாம் அவற்றைத் திருத்திக் கொள்வோம். அவர் பிரே ரேபிப்பது மக்களுக்கு நன்மை பயப்பதாய் இருந்தால், நாம் அவற்றைச் செயல் படுத்துவோம்.

''மக்களுக்குத் தொண்டு செய்க'' (8. செப்டம்பர். 1944.) தே. ப. தொ. 3.

சீன கம்யூனிஸ்டுகளாகிய நாம் பரந் துபட்ட சீன மக்களின் அதி உயர்ந்த நலன்களை நமது செயல்கள் எல்லாவற் றுக்கும் அடிப்படையாகக் கொண்டவர் கள். நமது லட்சியம் நீதியானது என் பதில் பூரண நம்பிக்கை உடையவர்கள். தனிப்பட்ட தியாகங்கள் எதற்கும் தயங் காதவர்கள். லட்சியத்துக்காக நமது உயிர்களையும் எந்தச் சமயத்திலும் அர்ப் பணிக்கச் சித்தமாயிருப்பவர்கள். என வே, மக்களின் தேவைகளுக்குப் பொருந் தாத எந்தக் கருத்தையும், எந்த கண்

ஞோட்டத்தையும், எந்த அபிப்பிராயத் தையும் அல்லது வழிமுறையையும் நாம் புறக்கணிக்கத் தயங்கலாமா? அரசியல் தூசிகளும் கிருமிகளும் நமது சுத்தமான முகத்தை அழுக்குப்படுத்த அல்லது ஆரோக்கியமான நமது உறுப்புகளை அரித்துத் தின்ன நாம் அனுமதிக்கலாமா? எண்ணற்ற புரட்சித் தியாகிகள் மக்களின் நலன்களுக்காகத் தமது உயிர்களை அர்ப் பணித்துள்ளனர். வாழுகின்ற நாம் அவர்களைப் பற்றி எண்ணும் போது, நமது இதயங்களில் துன்பம் பெருகி ஓடுகின்றது — அப்படியானல், நாம் தத்தம் செய்ய விரும்பாத எந்த ஒரு தனிப்பட்ட நலனும், அல்லது நாம் வீசியெறிய விரும்பாத எந்த ஒரு தவறும் இருக்க முடியுமா?

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

எந்த ஒரு வெற்றியையும் ஒட்டி, நாம் இறுமாப்பு அடைந்து விடக் கூடாது.

அழுக்கை அகற்றி, தூய்மையாய் வைத் திருப்பதற்காகத் தினந்தோறும் நமது முகங்களைக் கழுவுவது போலவும், நிலத் தைக் கூட்டுவது போலவும், நமது இறு மாப்பை நாம் கட்டுப்படுத்த வேண்டும்; நமது குறைபாடுகளை நாம் அடிக்கடி விமர் சனம் செய்ய வேண்டும்.

''ஸ்தாபனரீதியில் அணிதிரள்க'' (29. நவம்பர். 1943.) தே. ப. தொ. 3.

விமர்சனத்தைப் பொறுத்தவரையில், அது சரியான சமயத்தில் செய்யப்பட வேண்டும். சம்பவம் நிகழ்ந்த பின்னர் மாத்திரம் விமர்சனம் செய்வதைப் பழக் கமாக்கி விடக் கூடாது.

''விவசாயத்தைக் கூட்டுறவுமய மாக்கும் பிரச்சினை பற்றி'' (31. ஜுலை. 1955.)

தவறுகள் பின்னடைவுகளால் போத‌னை பெற்று, நாம் ஓரளவு விவேகம்

பெற்றுள்ளோம், நமது விவகாரங்களை மேலும் சிறப்பாகக் கையாளுகின்றோம். எந்த ஒரு அரசியல் கட்சியையும் அல்லது தனிநபரையும் பொறுத்தவரையில், தவறுகளைத் தவிர்ப்பது கஷ்டமானது. ஆனால் நமது தவறுகளை இயன்ற அளவு குறைத்துக் கொள்ள வேண்டும். ஒரு கால் தவறு இழைக்கப்பட்டதும், நாம் அதைத் திருத்த வேண்டும்; அதை எவ்வளவுக்கு விரைவாக, பூரணமாகச் செய்கிறோமோ, அவ்வளவுக்கு நல்லதாகும்.

''மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் பற்றி'' (30. ஜுன். 1949.) தே. ப. தொ. 4.

28. கம்யூனிஸ்டுகள்

கம்யூனிஸ்டு ஒருவர் விசால உள்ளம் படைத்தவராக இருக்க வேண்டும். அவர் நேர்மையும் ஊக்கமும் உடையவராக இருக்க வேண்டும். புரட்சியின் நலன்களைத் தனது சொந்த உயிர் போல் கருத வேண்டும். தனது சொந்த நலன்களைப் புரட்சியின் நலன்களுக்குக் கீழ்ப்படுத்த வேண்டும். எங்கும் எப்பொழுதும் அவர் சரியான கோட்பாட்டின் வழி ஒழுகி, தவறான கருத்துகள், செயல்கள் எல்லாவற்றுக்கும் எதிராகச் சளையாத போராட்டம் நடத்த வேண்டும். இவ்வாறு, கட்சியின் கூட்டு வாழ்வை ஸ்திரப்படுத்தி, கட்சிக்கும் பொதுமக்களுக்கும் இடையிலுள்ள தொடர்புகளைப் பலப்படுத்த வேண்டும். அவர் எந்த ஒரு தனி

நபரிலும் பார்க்க கட்சியிலும் மக்களிலும் கூடுதலான அக்கறையும், தன்னை விடப் பிறர் மீது கூடுதலான அக்கறையும் செலுத்த வேண்டும். இப்படிச் செய் தால் தான் அவரை ஒரு கம்யூனிஸ்டு என்று கருத முடியும்.

''தாராளவாதத்தை எதிர்ப் போம்'' (7. செப்டம்பர். 1937.) தே. ப. தொ. 2.

ஒரு கம்யூனிஸ்டின் சொற்களையும், செயல்களையும் உரைத்துப் பார்க்கும் அதி உயர்ந்த முறை யாதெனில், அவை ஏகப் பெரும்பான்மையான மக்களின் அதி உயர்ந்த நலன்களுக்கு இசைவாக இருக் கின்றனவா, இல்லையா, அவர்களுடைய ஆதரவைப் பெறுகின்றனவா இல்லையா என்று பார்ப்பதாகும். இதை நமது தோழர்கள் எல்லாரும் உணரும் படி செய்ய வேண்டும்.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

எந்தக் காலத்திலும் எந்த சந்தர்ப் பத்திலும் ஒரு கம்யூனிஸ்டு தனது சொந்த நலன்களை முதலிடத்தில் வைக்கக் கூடாது. அவர் அவற்றைத் தேசத்தின் நலன்களுக் கும், மக்களின் நலன்களுக்கும் கீழ்ப்பட் டதாக்க வேண்டும். எனவே, சுய-நலம், வேலையில் அசிரத்தை, ஊழல், புகழ் நாட்டம் முதலியவை எல்லாம் மிக இகழத் தக்கவை. ஆனால், சுய-நல மின்மை, தனது முழு சக்தியையும் கொண்டு வேலை செய்வது, பொது கட மைக்குப் பூரண விசுவாசம், அமைதியான கடின உழைப்பு முதலியவை மதிப்புக் குரியவையாகும்.

''தேசிய யுத்தத்தில் சீன கம்யூ னிஸ்ட் கட்சியின் பாத்திரம்'' (அக் டோபர். 1938.) தே. ப. தொ. 2.

கம்யூனிஸ்டுகள் எப்பொழுதும் உண் மைக்காக வாதாடத் தயாராய் இருக்க வேண்டும். காரணம், உண்மை என்பது மக் களின் நலன்களுக்குச் சாதகமானது. கம்யூ

னிஸ்டுகள் எப்பொழுதும் தமது தவறுகளைத் திருத்தத் தயாராய் இருக்க வேண்டும். காரணம், தவறுகள் மக்களின் நலன்களுக்குப் பாதகமானவை.

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

கம்யூனிஸ்டுகள் எப்பொழுதும் விஷயம் ஒவ்வொன்றையும் ஏன் எப்படி என்று ஆராய வேண்டும். தமது தலைகளைப் பாவித்து, அது யதார்த்தத்துக்குப் பொருந்தியதா, இல்லையா, உண்மையில் அது நல்ல ஆதாரமுடையதா, இல்லையா என்று கவனமாகச் சிந்திக்க வேண்டும். எவ்விதத்திலும் ஒன்றைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றி, அடிமைத்தனத்தை வளர்க்கக் கூடாது.

''கட்சி நடையைச் சீர்செய்வோம்'' (1. பெப்ரவரி. 1942.) தே. ப. தொ. 3.

முழுமையின் நலன்களைக் கணக்கில் எடுக்க வேண்டும். ஒவ்வொரு கட்சி

உறுப்பினரும், ஒவ்வொரு வேலைத் துறையும், ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு செயலும், முழுக் கட்சியினதும் நலன்களிலிருந்து தொடங்க வேண்டும். இந்தக் கோட்பாட்டை அத்து மீறுவது முற்றிலும் அனுமதிக்கக் கூடாதது.

ஷ

கம்யூனிஸ்டுகள் நடைமுறை சாத்தியப்பாடு, தூரதிருஷ்டி இரண்டிலும் ஒரு ஆதர்சத்தைச் சிருஷ்டிக்க வேண்டும். நடைமுறை சாத்தியமாயிருப்பதன் மூலம் தான், நியமிக்கப்பட்ட கடமைகளை அவர்களால் நிறைவேற்ற முடியும். தூரதிருஷ்டி மாத்திரம் முன்னேற்றப் போக்கில் அவர்கள் நிலை கலங்காத படி தடுக்க முடியும்.

''தேசிய யுத்தத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம்'' (அக்டோபர். 1938.) தே. ப. தொ. 2.

கம்யூனிஸ்டுகள் மிகத் தூரதிருஷ்டியுடையவர்களாகவும், மிகுதியும் சுய-

பரித்தியாக உணர்வு உடையவர்களா கவும் மிக உறுதியானவர்களாகவும், நிலைமைகளைக் கணிப்பதில் பட்சபாத மில்லாதவர்களாகவும் இருக்க வேண் டும். அவர்கள் பெரும்பான்மை மக் களைச் சார்ந்து, அவர்களுடைய ஆதரவை வென்றெடுக்க வேண்டும்.

''யப்பானிய-எதிர்ப்பு யுத்த காலத் தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் கடமைகள்'' (3. மே. 1937.) தே. ப. தொ. 1.

கம்யூனிஸ்டுகள் படிப்பில் ஒரு ஆதர்ச மாயிருக்க வேண்டும். அவர்கள் எப்பொ ழுதும் மக்களின் ஆசிரியர்களாக விளங் கும் அதே வேளையில் அவர்களுடைய மா ணவர்களாகவும் இருக்க வேண்டும்.

''தேசிய யுத்தத்தில் சீன கம்யூ னிஸ்ட் கட்சியின் பாத்திரம்'' (அக் டோபர். 1938.) தே. ப. தொ. 2.

வெகுஜன இயக்கங்களில் வேலை செய் யும் ஒவ்வொரு கம்யூனிஸ்டும், மக்களின்

நண்பனுய் விளங்க வேண்டுமேயன்றி அவர்களின் எஜமானுக அல்ல. சளையாத ஆசிரியனுய் விளங்க வேண்டுமே தவிர, ஒரு அதிகார வர்க்க அரசியல்வாதியாக அல்ல.

ஷை

கம்யூனிஸ்டுகள் பெரும்பான்மையான மக்களிடமிருந்து தம்மைத் தாமே பிரித் துக் கொள்ளவோ, ஒரு தனிமைப்பட்ட, மூர்க்கத்தனமான முன்னேற்றத்தில் முற் போக்கான ஒருசில படைப்பகுதிகளுக்கு மாத்திரம் தலைமை கொடுத்து பெரும் பான்மையான மக்களைக் கைவிட்டுவிட வோ கூடாது. பதிலுக்கு முற்போக்கான வர்களுக்கும் பரந்துபட்ட மக்களுக்குமி டையில் நெருங்கிய தொடர்புகளை உரு வாக்குவதில் கவனம் செலுத்த வேண் டும். பெரும்பான்மையின் சார்பில் சிந்திப்பது என்பதன் அர்த்தம் இதுவே.

ஷை

கம்யூனிஸ்டுகளாகிய நாம் விதை போன்றவர்கள், மக்கள் மண் போன்ற வர்கள். செல்லுமிடமெங்கும், நாம் மக்களுடன் ஐக்கியப்பட்டு, அவர்கள் மத்தியில் வேர் ஊன்றி, மலர வேண்டும்.

''சுங்கிங் பேச்சுவார்த்தைகள் பற்றி'' (17. அக்டோபர். 1945.) தே. ப. தொ. 4.

எந்த ஒரு விஷயத்திலும் கம்யூனிஸ்டுகளாகிய நாம் மக்களுடன் இரண்டறக் கலக்க வேண்டும். நமது கட்சி உறுப்பினர்கள் தமது வாழ்நாள் முழுவதையும் வீடுகளுக்குள் கழித்து, ஒருபோதும் உலகத்துக்கு முகம் கொடுக்காமலும் புயல்களை எதிர்நோக்காமலும் இருந்தால், சீன மக்களுக்கு அவர்களால் என்ன பயன்? ஒன்றுமேயில்லை. இத்தகைய நபர்கள் கட்சியுறுப்பினர்களாய் இருப்பது அவசியமற்றது. கம்யூனிஸ்டுகளாகிய நாம் உலகுக்கு முகம் கொடுக்க வேண்டும். புயல்களை எதிர்நோக்க வேண்டும். உலகம் என்பது வெகுஜனப் போராட்டப் பேருலகாகும். புயல் என்பது வெகுஜனப் போராட்டப் பெரும் புயலாகும்.

''ஸ்தாபனரீதியில் அணிதிரள்க'' (29. நவம்பர். 1943.) தே. ப. தொ. 3.

கம்யூனிஸ்டுகள் ஆதர்சமான முன்னணிப்படையின் பாத்திரத்தை வகிப்பது ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்தது. 8வது மார்க்க ராணுவத்திலும் புதிய 4வது சேனையிலும் கம்யூனிஸ்டுகள் எல்லாரும் துணிகரமாகப் போரிடுவது, கட்டளைகளை அமுல் நடத்துவது, கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பது, அரசியல் வேலையில் ஈடுபடுவது, அக-ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் வளர்ப்பது ஆகியவற்றில் ஒரு ஆதர்சமாக விளங்க வேண்டும்.

''தேசிய யுத்தத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம்'' (அக்டோபர். 1938.) தே. ப. தொ. 2.

கம்யூனிஸ்டு ஒருவர், தான் மட்டும் எல்லாவற்றிலும் மேலானவர், பிறர் ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்ற அகங்கார எண்ணம் படைத்தவராகவோ அல்லது இறுமாப்புடையவராகவோ இருக்கக் கூடாது. அவர் தனது சிறிய அறையில் இருந்து கொண்டு, ஜம்பம் அடிக்கவோ, புழுகிக் கொட்டவோ, அல்லது பிறர் மீது ஆதிக்கம் செலுத்தவோ கூடாது.

''ஷென்ஸி - கான்ஸு - நிங்ஷியா எல்லைப் பிரதேச பிரதிநிதிகள் சபைச் சொற்பொழிவு'' (21. நவம்பர். 1941.) தே. ப. தொ. 3.

கம்யூனிஸ்டுகள் எப்பொழுதும் கட்சிக்கு வெளியிலுள்ள மக்களின் அபிப்பிராயங்களைக் கவனமாகக் கேட்க, அவர்களுக்குத் தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும் வாய்ப்பைக் கொடுக்க வேண்டும். அவர்கள் சொல்வது சரியாய் இருந்தால், நாம் அதை வரவேற்க வேண்டும், அவர்களுடைய பலமான அம்சங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும். அது தவருக இருந்தால், அவர்கள் சொல்வதைப் பூரணமாகச் சொல்ல விட்டு, பின்னர் அவ்விஷயங்கள் பற்றி அவர்களுக்குப் பொறுமையோடு விளக்க வேண்டும்.

ஷை

வேலையில் தவறு இழைத்த எந்த ஒரு நபர் மீதும் கம்யூனிஸ்டுகள் கடைப்பிடிக்கும் மனோபாவம், அவருக்கு அறிவுரை கூறி, அவர் மாறுவதற்கு, புதிய தொடக்கத்தை எடுப்பதற்கு உதவி செய்யும் ஒன்ருகும். அவர் திருத்த முடியாதவராயிருந்தாலொழிய அவரை நாம் விலக்கக் கூடாது.

''தேசிய யுத்தத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம்'' (அக்டோபர். 1938.) தே. ப. தொ. 2.

அரசியல்ரீதியில் பின்தங்கியவர்களைப் பொறுத்தவரையில், கம்யூனிஸ்டுகள் அவர்களை மரியாதையீனமாக நடத்த

வோ, இகழவோ கூடாது. பதிலுக்கு அவர்களுடன் நேசம் கொள்ள வேண்டும், ஐக்கியப்பட வேண்டும். அவர்களுக்கு நம்பிக்கையூட்டி, அவர்கள் முன்னேறுவதற்கு ஊக்கமளிக்க வேண்டும்.

ஷெ

29. ஊழியர்கள்

நமது கட்சியும் நமது நாடும் அவற்றின் நிறம் மாருமல் இருப்பதை உத்தரவாதம் செய்ய வேண்டுமானுல், நாம் ஒரு சரியான மார்க்கத்தையும், சரியான கொள்கைகளையும் பெற்றிருப்பது மாத்திரமல்ல, பாட்டாளி வர்க்கப் புரட்சி லட்சியத்தை முன்னெடுத்துச் செல்லும் லட்சோப லட்சம் வழித்தோன்றல்களையும் பயிற்றி வளர்க்க வேண்டும்.

இறுதியாக ஆராய்ந்து பார்த்தால், பாட்டாளி வர்க்கப் புரட்சி லட்சியத்துக்கு வழித்தோன்றல்களைப் பயிற்றும் பிரச்சினை என்பது பாட்டாளி வர்க்கப் புரட்சிவாதிகளின் பழைய பரம்பரை தொடக்கி வைத்த மார்க்ஸிஸம்-லெனினிஸப் புரட்சி லட்சியத்தை முன்னெடுத்து

செல்லும் மக்கள் இருப்பார்களா, இல்லை யா, நமது கட்சி-அரசாங்கத்தின் தலைமை என்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சிவா திகளின் கைகளில் தொடர்ந்து இருக் குமா, இல்லையா, மார்க்ஸிஸம்-லெனி னிஸம் வகுத்துள்ள சரியான பாதையில் நமது வரும்கால சந்ததிகள் தொடர்ந்து முன்னேறுவார்களா, இல்லையா, அல்லது, வேறு வார்த்தைகளில் சொன்னால், சீன வில் குருசேவ் திரிபுவாதம் தோன்றுவதை நம்மால் வெற்றிகரமாகத் தடுக்க முடி யுமா, இல்லையா என்பது தழுவிய ஒரு பிரச்சினையாகும். சுருங்கக் கூறின், இது நமது கட்சியும் நமது நாடும் சம் பந்தப்பட்ட வகையில், வாழ்வும் மரண மும் சம்பந்தப்பட்ட மிக முக்கியமான ஒரு பிரச்சினை. இது பாட்டாளி வர்க்கப் புரட்சி லட்சியத்துக்கு நூறு, ஆயிரம், பத்தாயிரம் ஆண்டுகாலம் அடிப்படை முக்கியத்துவத்துடன் விளங்கும் ஒரு பிரச்சினை. சோவியத் யூனியனில் நிகழ்ந்த மாற்றங்களைத் தமக்கு ஆதார

மாகக் கொண்டு, ஏகாதிபத்தியத் தீர்க்க தரிசிகள் ''சமாதானப் பரிணாம''த்துக் கான தமது நம்பிக்கையை சீன கட்சி யின் மூன்றாவது அல்லது நாலாவது பரம் பரை மீது வைக்கின்றனர். ஏகாதிபத்தியத் தின் இந்த தீர்க்கதரிசனங்களை நாம் சுக்கு நூறாக்க வேண்டும். அதி உயர்ந்த ஸ்தா பனங்கள் முதல் அடி மட்ட ஸ்தாபனங் கள் வரை, எங்கும் புரட்சி லட்சியத்தின் வழித்தோன்றல்களைப் பயிற்றி வளர்ப்ப தில் நாம் இடைவிடாது கவனம் செலுத்த வேண்டும்.

பாட்டாளி வர்க்கப் புரட்சி லட்சியத் தின் தகுதியான வழித்தோன்றல்களுக்கு உரிய நிபந்தனைகள் யாவை?

அவர்கள் உண்மையான மார்க்ஸிஸ-லெனினிஸவாதிகளாக இருக்க வேண்டும். மார்க்ஸிஸம்-லெனினிஸப் போர்வை அணிந்த குருசேவ் போன்ற திரிபுவா திகளாய் இருக்க கூடாது.

அவர்கள் ஏகப்பெரும்பான்மையான சீன மக்களுக்கும், ஏகப்பெரும்பான்மை

யான உலக மக்களுக்கும் முழுமனதுடன் சேவை செய்யும் புரட்சிவாதிகளாக இருக்க வேண்டும். உள்நாட்டில் சலு கை பெற்ற பூர்ஜுவா வர்க்கத் தட்டைச் சேர்ந்த ஒரு சில நபர்களின் நலன்கள், வெளிநாட்டில் ஏகாதிபத்தியம், பிற் போக்கு இவற்றின் நலன்கள் இரண்டுக் கும் சேவை செய்யும் குருசேவைப் போல் இருக்கக் கூடாது.

ஏகப்பெரும்பான்மையான மக்களுடன் ஐக்கியப்பட்டு, வேலை செய்யக் கூடிய பாட்டாளி வர்க்க அரசியல்வாதிகளாக இருக்க வேண்டும். அவர்கள் தமக்கு உடன்பாடானவர்களுடன் ஐக்கியப்ப டுவது மாத்திரமல்ல, தமக்கு உடன் பாடில்லாதவர்களுடன், தம்மை முன்பு எதிர்த்து, இன்னும் நடைமுறையில் பிழை என்று நிரூபிக்கப்பட்டவர்களுடன் கூட ஐக்கியப்பட வேண்டும். ஆனால், அவர் கள் குருசேவ் போன்ற பதவிவேட்டைக் காரரையும் சதிகாரர்களையும் விசேஷ மாகக் கவனித்து, இத்தகைய தீய பிரகி

ருதிகள் எந்த மட்டத்திலும் கட்சி-அரசாங்கத் தலைமையை அபகரித்து விடா மல் தடுக்க வேண்டும்.

அவர்கள் கட்சியின் ஜனநாயக மத் தியத்துவத்தை அமுல் நடத்துவதில் ஆதர் சமாக விளங்க வேண்டும். ''பொதுமக் களிடமிருந்து பொதுமக்களு''க்கு என்ற தலைமைமுறையில் தேர்ச்சி பெற வேண் டும். பொதுமக்களின் அபிப்பிராயங்களை நன்முகக் கேட்கும் ஜனநாயக நடையை வளர்க்க வேண்டும். அவர்கள் குருசே வைப் போல் கட்சியின் ஜனநாயக மத்தி யத்துவத்தை அத்துமீறி, கொடுங்கோ லர்களாய் விளங்கக் கூடாது, தோழர் கள் மீது திடீர்த் தாக்குதல்கள் தொடுக் கவோ, நியாயம் அற்ற முறையிலும் யதேச்சாதிகாரமாகவும் நடக்கவோ கூடாது.

அவர்கள் அடக்கமும் ஜாக்கிரதையும் உடையவர்களாக இருக்க வேண்டும். இறுமாப்பும் அவசர புத்தியும் இல்லா தவர்களாக இருக்க வேண்டும். அவர் கள் சுய-விமர்சன உணர்வில் ஊறித்தி

ளைத்து, தமது வேலையில் காணும் தவ றுகளையும் குறைபாடுகளையும் திருத்தும் துணிவுடையவர்களாய் இருக்க வேண் டும். அவர்கள் குருசேவைப் போல் தமது தவறுகளை மூடிமறைத்து புகழ் எல்லாவற்றையும் தமக்கே உரித்தாக்கி, பிழை அனைத்தையும் பிறர் மீது சுமத்தக் கூடாது.

பாட்டாளி வர்க்க புரட்சி லட்சியத் தின் வழித்தோன்றல்கள் வெகுஜனப் போராட்டங்களில் தோன்றி, பெரும் புரட்சிப் புயல்களில் புடம் போட்டெ டுக்கப்படுகின்றனர். நீண்டகால வெகு ஜனப் போராட்டங்களில் ஊழியர்களைப் பரீட்சித்து மதிப்பீடு செய்வதும், வழித் தோன்றல்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற் றுவதும் அவசியமானவை.

''குருசேவின் போலிக் கம்யூனிஸ மும் உலகத்துக்கான அதன் வர லாற்றுப் படிப்பினைகளும் பற்றி'' என்ற கட்டுரையில் மேற்கோள், மக்கள் தினசரி. (14. ஜுலை. 1964.)

நமது கட்சி ஸ்தாபனங்கள் நாடு முழு வதிலும் விஸ்தரிக்கப்பட வேண்டும். நாம் பல பத்தாயிரம் ஊழியர்களை உணர்வுபூர்வமாகப் பயிற்ற வேண்டும். நூற்றுக்கணக்கான தலைசிறந்த பொதுமக் களின் தலைவர்களைப் பெற்றிருக்க வேண் டும். அவ்வூழியர்களும் தலைவர்களும், மார்க்ஸிஸம்-லெனினிஸத்தில் தேர்ச்சி யும், அரசியல்ரீதியில் தூரதிருஷ்டியும், வேலையில் திறமையும், பூரண சுய-பரித் தியாக உணர்வும், பிரச்சினைகளைச் சுதந் திரமாகத் தீர்க்கும் ஆற்றலும், கஷ்டங் கள் மத்தியில் நிதானமும், தேசம், வர்க் கம், கட்சி இவற்றுக்குத் தொண்டு செய் வதில் விசுவாசமும் அர்ப்பணசிந்தையும் உடையவர்களாக இருக்க வேண்டும். உறுப்பினர்களுடனும் பொதுமக்களுட னும் கொள்ளும் அதன் தொடர்புகளுக் குக் கட்சி அவர்களைத் தான் சார்ந்திருக் கின்றது. பொதுமக்களுக்கு அவர்கள் அளிக்கும் உறுதியான தலைமையைச் சார்வதன் மூலம், எதிரியைத் தோற்க

டிப்பதில் கட்சி வெற்றி பெற முடியும். இத்தகைய ஊழியர்களும் தலைவர்களும் சுயநலம், தனிநபர் வீரவாதம், வெளிப் பகட்டு, சோம்பல், செயலற்ற நிலை, செருக்குடைய ஒருமுனைவாதம் ஆகிய வற்றிலிருந்து விடுதலை பெற்ற, சுய-நல மற்ற தேசிய வீரர்களாகவும், வர்க்க வீரர்களாகவும் திகழ வேண்டும். நமது கட்சியின் உறுப்பினர்கள், ஊழியர்கள் தலைவர்களுக்குத் தேவையான குணுதிச யங்களும் வேலைநடையும் இத்தகைய வையே.

''யப்பானிய-எதிர்ப்பு தேசிய ஐக் கிய முன்னணிக்குப் பொதுமக்களை கோடிக்கணக்கில் வென்றெடுப் போம்'' (7. மே. 1937.) தே. ப. தொ. 1.

அரசியல் மார்க்கம் நிர்ணயிக்கப்பட் டதும், ஊழியர்கள் ஒரு தீர்க்கமான அம் சம் ஆகின்றனர். எனவே, ஒரு திட்ட மிட்ட முறையில் புதிய ஊழியர்களை

பெரும் தொகையில் பயிற்றுவது நமது போராட்டக் கடமையாகும்.

''தேசிய யுத்தத்தில் சீன கம்யூ னிஸ்ட் கட்சியின் பாத்திரம்'' (அக் டோபர். 1938.) தே. ப. தொ. 2.

கம்யூனிஸ்ட் கட்சி அதன் ஊழியர் கொள்கையில் பிரயோகிக்க வேண்டிய வரையறை யாதெனில், ஒரு ஊழியர் கட்சி மார்க்கத்தை அமுல் நடத்துவதில் உறுதியாக இருக்கிருரா, இல்லையா, கட்சிக் கட்டுப்பாட்டின் படி ஒழுகுகிருரா, இல்லையா, பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்புகள் வைத்திருக்கிருரா, இல் லையா, சுதந்திரமாக வேலை செய்யும் திற மையுடையவரா, இல்லையா, ஊக்கமு டையவராக, கடின உழைப்புடையவ ராக, சுயநலமற்றவராக இருக்கிருரா, இல்லையா என்பதாகும். ''மக்களை அவர் கள் தகுதியின் படி நியமிக்கும்'' மார்க் கம் இதுவே ஆகும்.

ஷி

ஊழியர்கள் கூட்டு உற்பத்தி உழைப்பில் கலந்து கொள்ளும் முறையை நிலைநிறுத்துவது அவசியமானது. நமது கட்சி-அரசாங்கத்தின் ஊழியர்கள் என்போர் சாதாரண பணியாட்கள் அன்றி, மக்களின் முதுகில் சவாரி செய்யும் எஜமானர்கள் அல்ல. ஊழியர்கள் கூட்டு உற்பத்தி உழைப்பில் பங்கு பற்றுவதன் மூலம் உழைப்பாளி மக்களுடன் விசாலமான, இடைவிடாத, நெருங்கிய தொடர்புகளை நிலைநிறுத்துகின்றனர். சோஷலிஸ அமைப்பில், அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரதான நடவடிக்கை இது. அதிகாரத்துவத்தை வெற்றி கொள்ளவும், திரிபுவாதத்தையும் வரட்டுவாதத்தையும் தடுக்கவும் இது உதவுகின்றது.

''குருசேவின் போலிக் கம்யூனிஸமும் உலகத்துக்கான அதன் வரலாற்றுப் படிப்பினைகளும் பற்றி'' என்ற கட்டுரையில் மேற்கோள், மக்கள் தினசரி. *(14. ஜுலை. 1964.)*

ஊழியர்களை மதிப்பீடு செய்வது எப்படி என்று நாம் அறிய வேண்டும். ஊழியரின் வாழ்வில் குறுகிய காலகட்டத்தை அல்லது ஒரு தனிப்பட்ட சம்பவத்தை மாத்திரம் கொண்டு நாம் அவரை மதிப்பீடு செய்யக் கூடாது. அவருடைய வாழ்வையும் வேலையையும் நாம் முழுப்படியாக நோக்க வேண்டும். இது ஊழியர்களை மதிப்பீடு செய்யும் பிரதான முறையாகும்.

''தேசிய யுத்தத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம்'' (அக்டோபர். 1938.) தே. ப. தொ. 2.

ஊழியர்களை நன்கு உபயோகிப்பது எப்படி என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இறுதியாக ஆராய்ந்து பார்த்தால், தலைமைக்கு கருத்துகளை முன்வைப்பது, ஊழியர்களை உபயோகிப்பது என்ற இரண்டு பொறுப்புகள் உண்டு. திட்டங்கள் வகுப்பது, தீர்மானங்கள் எடுப்பது, கட்டளைகள், உத்தரவு

கள் பிறப்பிப்பது போன்றவை ''கருத்துகளை முன்வைக்கும்'' வகையைச் சேர்ந்தவை. கருத்துகளைச் செயல்படுத்த வேண்டுமானால், நாம் ஊழியர்களை ஐக்கியப்படுத்தி, செயலில் இறங்கும் படி அவர்களுக்கு உற்சாகம் ஊட்ட வேண்டும். இது ''ஊழியர்களை நன்கு உபயோகிப்ப''தைச் சேர்ந்ததாகும்.

ஷ

ஊழியர்களை நன்றாகக் கவனிப்பது எப்படி என்பதை நாம் அறிய வேண்டும். அப்படிச் செய்வதற்கான வழிமுறைகள் என்னவென்றால்:-

முதலாவதாக, அவர்களுக்கு வழி காட்டுவது. இதன் அர்த்தம் அவர்கள் பொறுப்புகளை ஏற்கும் துணிவு பெறுவதற்காக, அவர்களுடைய வேலையில் அவர்களைச் சுதந்திரமாய் விடுவதாகும். அதே வேளையில் கட்சியின் அரசியல் மார்க்கத்தின் வழி காட்டுதலில்

அவர்கள் தமது முன்முயற்சியைப் பூரணமாய் வெளிப்படுத்துவதற்காக, அவர்களுக்குக் காலாகாலத்தில் அறிவுரை கூற வேண்டும்.

இரண்டாவதாக, அவர்களுடைய தரத்தை உயர்த்துவது. இதன் அர்த்தம், அவர்கள் தமது தத்துவ விளக்கத்தையும், வேலையாற்றலையும் விரிவுபடுத்துவதற்காக, அவர்களுக்குப் படிக்கும் வாய்ப்பை அளித்து, அவர்களைப் போதனை பெறச் செய்வதாகும்.

மூன்றாவதாக, அவர்களுடைய வேலையைச் சரிபார்த்து, தமது அனுபவத்தைத் தொகுக்கவும், தமது சாதனைகளைப் பெருக்கவும், பிழைகளைத் திருத்தவும் அவர்களுக்கு உதவி செய்வது. சரிபார்க்காமல் அவர்களுக்கு வேலை வழங்குவது, பாரதூரமான தவறுகள் ஏற்பட்ட பின்னர் மாத்திரம் கவனம் செலுத்துவது — இது ஊழியர்கள் மீது அக்கறை செலுத்தும் முறையல்ல.

நான்காவதாக, தவறுகள் இழைத்த ஊழியர்களைப் பொறுத்தவரையில், பொதுவாக அறிவுறுத்தி இணங்கச் செய்யும் முறையை உபயோகித்து, தமது பிழைகளைத் திருத்த அவர்களுக்கு உதவி அளிக்க வேண்டும். பாரதூரமான தவறுகள் இழைத்த பின்பும், வழிகாட்டலை ஏற்க மறுக்கும் ஊழியர்களுக்கு மட்டும் போராட்ட முறையை உபயோகிக்க வேண்டும். இங்கு பொறுமை அவசியமானது. ஆட்களுக்கு ''சந்தர்ப்பவாதிகள்'' என்று லேசாக முத்திரை குத்துவதும், அவர்களை எதிர்த்து லேசாகப் ''போராட்டங்கள் தொடுக்க'' தொடங்குவதும் தவறு ஆகும்.

ஐந்தாவதாக, அவர்களுடைய கஷ்டங்களில் கவனம் செலுத்துவது. நோய், வாழ்வு, குடும்பம் முதலியவற்றின் தொல்லைகள் காரணமாக ஊழியர்கள் கஷ்டப்படும் போது, நாம் நிச்சயம் அவர்கள் மீது சாத்தியமான அளவு கவனம் செலுத்த வேண்டும். ஊழியர்களை நன்றாகக் கவனிப்பது என்பது இதுவேயாகும்.

ஷ

உண்மையாக ஐக்கியப்பட்ட, பொது மக்களுடன் இணைந்த ஒரு தலைமைக்குழு வெகுஜனப் போராட்டத்தின் போக்கில் மாத்திரம் படிப்படியாக உருவாக்கப்பட முடியுமேயன்றி, அதனிலிருந்து தனிமைப்பட்ட நிலையில் அல்ல. பெரும்பாலான நிலைமைகளில் மாபெரும் போராட்டத்தின் போக்கில், தலைமைக்குழுவின் அமைவு முதல், இடை, இறுதிக்கட்டங்கள் பூராவும் மாருமல் இருக்க மாட்டாது, இருக்கவும் முடியாது. போராட்டத்தின் போக்கில் முன்வரும் உற்சாகிகள் ஒப்பீட்டுவகையில் தாழ்ந்த அல்லது சீரழிந்த ஆரம்ப உறுப்பினர்களின் இடத்திற்கு அடிக்கடி உயர்த்தப்பட வேண்டும்.

''தலைமைமுறை பற்றிய சில பிரச்சினைகள்'' (1. ஜூன். 1943.) தே. ப. தொ. 3.

பழைய ஊழியர்களுடன் ஐக்கியமாக வும் ஒத்துழைப்புடனும் வேலை செய்யும் பெருந்தொகையான புதிய ஊழியர்கள் நமது கட்சியிடம் இல்லாவிட்டால், நமது லட்சியம் ஸ்தம்பித்து நின்று விடும். எனவே பழைய ஊழியர்கள் எல்லாரும் புதிய ஊழியர்களைப் பேருற்சாகத்துடன் வரவேற்று, அவர்கள் மீது அக்கறை காட்ட வேண்டும். புதிய ஊழியர்களிடம் குறைபாடுகள் இருப்பது உண்மையே. அவர்கள் நீண்டகாலம் புரட்சியில் பங்கு பற்றாதவர்கள், அவர்கள் அனுபவம் குறைந்தவர்கள். அவர்களில் சிலர் பழைய சமுதாயத்தின் விரும்பத்தகாத சித்தாந்தத்தின் மீதமிச்சங்களை, குட்டி பூர்ஜுவா தனிநபர்வாத சித்தாந்தத்தின் மிச்சசொச்சங்களை தவிர்க்க முடியாத படி தம்முடன் கொண்டு வந்திருப்பார்கள். ஆனால் இத்தகைய குறைபாடுகள் போ தனை பெற்று, புரட்சியில் புடம் போட் டெடுக்கப்படுவதன் மூலம் படிப்படியாக நீக்கப்பட முடியும். ஸ்டாலின் கூறி

யது போல, புதிய ஊழியர்களின் பலமான அம்சம் யாதெனில், புதியவை மீது கூரிய உணர்வுடையவர்கள், எனவே, உயர்ந்த உற்சாகமும் ஊக்கமுமுடையவர்கள். இந் தக் குணாதிசயங்கள் பழைய ஊழியர்கள் சிலரிடம் குறைவாக இருக்கின்றன. புதிய ஊழியர்களும், பழைய ஊழியர்களும் ஒரு வருக்கு ஒருவர் மதிப்புக் கொடுக்க வேண் டும், ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக் கொள்ள வேண்டும். ஒருவருடைய பல மான அம்சங்களிலிருந்து மற்றவர் கற்றுக் கொள்வதன் மூலம் தமது சொந்தக் குறை பாடுகளை வெற்றி கொள்ள வேண்டும். இவ்வாறு பொதுவான லட்சியத்தில் ஐக் கியப்பட்டு, ஒருமுனைவாத சுபாவங்களுக் கெதிராகப் பாதுகாத்துக் கொள்ள வேண் டும்.

''கட்சி நடையைச் சீர்செய்வோம்''
(1. பெப்ரவரி. 1942.) தே. ப. தொ. 3.

கட்சி ஊழியர்கள் மீது மாத்திரம்

அல்ல, கட்சியில் இல்லாத ஊழியர்கள் மீதும் நாம் கவனம் செலுத்த வேண்டும். நாம் புறக்கணிக்க முடியாத திறமைசா லிகள் பலர் கட்சிக்கு வெளியில் இருக்கின் றனர். தனிமை, செருக்கு — இவற்றிலி ருந்து தன்னை விடுவித்து, கட்சியில் இல் லாத ஊழியர்களுடன் நன்ருக வேலை செய்து, அவர்களுக்கு விசுவாசமான உத வியளித்து, அவர்கள் மீது ஒரு ஆர்வம் நிறைந்த, தோழமை மனேபாவத்தை மேற்கொண்டு, யப்பானை எதிர்த்து, தே சத்தைப் புநரமைக்கும் மாபெரும் லட்சி யத்தில் அவர்களை முன்முயற்சி எடுக்க செய்வது ஒவ்வொரு கம்யூனிஸ்டினதும் கடமையாகும்.

''தேசிய யுத்தத்தில் சீன கம்யூ னிஸ்ட் கட்சியின் பாத்திரம்'' (அக் டோபர். 1938.) தே. ப. தொ. 2.

30. வாலிபர்கள்

உலகம் உங்களுடையது. அது போல எங்களுடையதுமாகும். ஆனுல் இறுதி யாக ஆராய்ந்து பார்த்தால், உங்களு டையது தான். இளைஞர்களாகிய நீங் கள் உத்வேகமும் ஜீவசக்தியும் நிறைந் தவர்கள். வாழ்வின் ஆரம்பத்தில் இருக் கிறீர்கள். காலை 8 அல்லது 9 மணி யளவில் காணும் சூரியன் போல் இருக்கி றீர்கள். நம்பிக்கை முழுவதும் உங்கள் மீது வைக்கப்பட்டிருக்கின்றது.

....

உலகம் உங்களுக்கு உரியது. சீனுவின் எதிர்காலம் உங்களுக்கு உரியது.

மாஸ்கோவில் சீன மாணவர்கள்- பயிற்சியாளர்களை சந்தித்த போது ஆற்றிய உரை (17. நவம்பர். 1957.)

நமது நாடு இன்னும் மிக வறிய ஒரு நாடாக இருக்கின்றது. ஒரு குறுகிய காலத்தில் இந்த நிலைமையை எம்மால் அடிப்படையில் மாற்ற முடியாது. நமது இளம் சந்ததியும் நமது மக்கள் அனைவரும் தமது சொந்தக் கைகளால் வேலை செய்து, கூட்டு முயற்சிகள் எடுப்பதன் மூலம் தான், சீனவைச் சில தசாப்தங்களில் ஒரு பலம் வாய்ந்த, சுபிட்சமான நாடாக்க முடியும் என்பதை நமது வாலிபர்கள் அனைவரும் புரிந்து கொள்ள நாம் உதவி செய்ய வேண்டும். நமது சோஷலிஸ அமைப்பின் ஸ்தாபகம் எதிர்காலத்தின் லட்சிய சமுதாயத்துக்குச் செல்லும் பாதையைத் திறந்திருக்கின்றது. ஆனல் இந்தக் கனவை நனவாக மாற்ற கடின உழைப்பு அவசியம்.

''மக்கள் மத்தியில் முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது பற்றி'' (27. பெப்ரவரி. 1957.)

அரசியல், சமுதாய அனுபவக்குறைவின் காரணமாக, கணிசமான அளவு வாலிபர்கள் பழைய சீனவுக்கும் நவ சீனவுக்கும் உள்ள வேறுபாட்டைக் காண முடியாமல் இருக்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில், ஏகாதிபத்தியவாதிகளினதும் கோமிந்தாங் பிற்போக்குவாதிகளினதும் ஒடுக்குமுறையிலிருந்து தம்மை விடுதலை செய்வதற்கு நடத்திய போராட்டத்தில் நமது மக்கள் அடைந்த கஷ்டங்கள் பற்றியோ, ஒரு இன்பமான சோஷலிஸ சமுதாயத்தை ஸ்தாபிப்பதற்குத் தேவையான நீண்டகாலக் கடின வேலை பற்றியோ புரிந்து கொள்வது எளிதான காரியமல்ல. எனவே தான், பொதுமக்கள் மத்தியில் உயிர்த்துடிப்பும் பயனும் உள்ள அரசியல் போதனையை நாம் இடைவிடாது நடத்த வேண்டும். தோன்றும் கஷ்டங்கள் பற்றிய உண்மைகளை அவர்களுக்கு எப்பொழுதும் சொல்லி, இந்தக் கஷ்டங்களை வெல்வது எப்படி என்று அவர்களுடன் ஆராய வேண்டும்.

ஷை

சமுதாயத்தில், வாலிபர்கள் மிக ஊக்கமுள்ள மிக உயிர்த்துடிப்புள்ள ஒரு சக்தியாவர். படிக்கும் ஆர்வம் மிகுந்தவர்கள், தமது சிந்தனையில் பழமைப் பற்று மிகவும் குறைந்தவர்கள். சோஷலிஸ சகாப்தத்தில் இது மேலும் உண்மையாகும். பல்வேறு இடங்களிலும் உள்ள ஸ்தலக் கட்சி ஸ்தாபனங்கள் வாலிபர் சங்க நிறுவனங்களுக்கு உதவி செய்து, அவற்றுடன் ஒன்ருக உழைத்து, குறிப்பாக நமது வாலிபர்களின் ஆற்றலைப் பூரணமாகப் பயன்படுத்தும் பிரச்சினை பற்றி கவனமாக ஆராயும் என்றும் நாம் நம்புகிறோம். கட்சி ஸ்தாபனங்கள் அவர்களுடைய விசேஷ குணும்சங்களைப் புறக்கணித்து, எல்லாரையும் போல அவர்களை நடத்தக் கூடாது. உண்மையில் வாலிபர்கள் வயோதிபர்களிடமிருந்தும் வயது வந்தவர்களிடமிருந்தும் கற்றுக் கொள்ள வேண்டும். அவர்களுடைய ஒத்தாசையுடன் பயனுள்ள பல்வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபட இயன்ற அளவு பாடு பட வேண்டும்.

''சுங்ஷான் மாவட்டத்திலுள்ள ஸின்பிங் கிராமத்தின் 9வது விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவின் வாலிபர் அதிர்ச்சிப்படை'' என்ற கட்டுரையின் அறிமுகக் குறிப்பு (1955.)

ஒரு இளைஞன் புரட்சிவாதியாக இருக்கிருனு என்று நாம் கணிப்பது எப்படி? அவன் ஒரு புரட்சிவாதி என்று நாம் கண்டு கொள்வது எப்படி? இதற்கு ஒரே ஒரு அளவுகோல் மாத்திரம் உண்டு. அதாவது, பரந்துபட்ட தொழிலாளர் விவசாயிகளோடு தானும் ஒருவனுக விரும்புகிருனு, இல்லையா, அனுஷ்டானத்தில் அப்படிச் செய்கிருனு என்று பார்ப்பதாகும். அவன் அப்படிச் செய்ய விரும்பினுல், உண்மையில் அப்படிச் செய்தால், அவன் ஒரு புரட்சிவாதியாவன். அப்படிச் செய்யாவிட்டால், அவன் புரட்சிகரமற்றவன், அல்லது எதிர்ப்புரட்சிவாதியா

வன். இன்று ஒருவன் பரந்துபட்ட தொழிலாளர் விவசாயிகளுடன் தன்னைத் தானே இணைத்துக் கொண்டால், அவன் இன்று ஒரு புரட்சிவாதியாவன். நாளைய தினம் அவன் அப்படிச் செய்யத் தவறினால் அல்லது பொதுமக்களை அடக்கி ஒடுக்குவதற்கு ஒரு திருப்பம் எடுத்தால், அவன் புரட்சிவாதியல்லாதவனாக அல்லது ஒரு எதிர்ப்புரட்சிவாதியாக மாறி விடுவான்.

''வாலிபர் இயக்கத்தின் திசை மார்க்கம்'' (4. மே. 1939.) தே. ப. தொ. 2.

புத்திஜீவிகள் வெகுஜனப் புரட்சிப் போராட்டங்களில் உள்ளமும் உயிருமாக ஈடுபடாத வரையில் மக்களின் நலன்களுக்காகத் தொண்டு செய்யத் தீர்மானித்து, மக்களோடு இரண்டறக் கலக்காத வரையில், அவர்கள் அடிக்கடி மானஸீக வாதப் போக்கு, தனிநபர்வாத இயல்பு, சிந்தனையில் நடைமுறை சாத்தியப்பாட்டின்மை உடையவர்களாகவும் செயலில் உறுதிப்பாடில்லாதவர்களாகவும் இருப்பதுண்டு. ஆகவே, சீனாவில் பரந்துபட்ட புரட்சிகர புத்திஜீவிகள் ஒரு முன்னணிப் படையின் பாத்திரத்தை வகித்த அல்லது மக்களுடன் ஒரு இணைப்புப் பாலமாகச் சேவை செய்த போதிலும், இறுதி வரை எல்லாரும் புரட்சிவாதிகளாக இருப்பர் என்று சொல்ல முடியாது. நெருக்கடியான தருணங்களில் சிலர் புரட்சி அணிகளை விட்டு விலகிச் செயலற்ற நிலையில் ஆழ்ந்து விடுவர். அதே வேளையில் ஒரு சிலர் புரட்சியின் எதிரிகளாகக் கூட மாறி விடுவர். ஒரு நீண்டகால வெகுஜனப் போராட்டங்களில் தான் புத்திஜீவிகள் தமது இந்தக் குறைபாடுகளை வெற்றி கொள்ள முடியும்.

''சீன புரட்சியும் சீன கம்யூனிஸ்ட் கட்சியும்'' (டிஸம்பர். 1939.) தே. ப. தொ. 2.

கட்சியின் கேந்திரக் கடமையில் அதனுடன் இசைவாகத் தொடர்ந்தும்

செயல்படுவதைத் தவிர, வாலிபர் சங்கம் வாலிபர்களின் விசேஷ குணும்சங்களுக்குப் பொருத்தமான அதன் சொந்த வேலைகளிலும் ஈடுபட வேண்டும். நவ சீனு அதன் வாலிபர்களில் கவனம் செலுத்தி, இளம் சந்ததியின் வளர்ச்சியில் அக்கறை காட்ட வேண்டும். வாலிபர்களும் படித்து, வேலை செய்ய வேண்டும். ஆனுல் அவர்கள் உடல் - வளர்ச்சியடையும் பருவத்தில் இருக்கின்றனர். எனவே, அவர்களுடைய வேலை, படிப்பு இரண்டிலும், அவர்களுடைய பொழுது போக்கு, விளையாட்டு, ஓய்வு ஆகிய வற்றிலும் பூரண கவனம் செலுத்தப்பட வேண்டும்.

வாலிபர் சங்கத்தின் 2வது தேசிய மாநாட்டு தலைமைக் குழுவைச் சந்தித்த போது நிகழ்த்திய உரை (30. ஜுன். 1953.)

31. மாதர்

சீனுவில் உள்ள ஒரு ஆண் வழக்கத்தில் [அரசியல் அதிகாரம், வம்ச அதிகாரம், மத அதிகாரம் என்ற — ஆ-ர்] மூன்று அதிகார அமைப்புகளின் ஆதிக்கத்துக்கு உள்ளாகின்றுன். . . . பெண்களைப் பொறுத்தவரை, இம்மூன்று ஆதிக்கத்துக்கு உட்படுவதுடன் ஆண்களாலும் (கணவனின் அதிகாரத்தாலும்) ஆதிக்கம் செலுத்தப் படுகின்றுர்கள். அரசியல், வம்சம், மதம், ஆண் — இந்த நாலு அதிகாரங்களும் முழுப் பிரபுத்துவ-பிதா வழி சித்தாந்தத்தினதும் அமைப்பினதும் உருவாக்கமாகும். இவை சீன மக்களை, குறிப்பாக விவசாயிகளைப் பிணைத்திருக்கும் நாலு பெரும் தளைகளாகும். விவசாயிகள் நாட்டுப்புறத்தில் நிலப்பிர

புக்களின் அரசியல் அதிகாரத்தை எப்படித் தூக்கியெறிந்தார்கள் என்பது மேலே விளக்கப்பட்டுள்ளது. நிலப்பிரபுக்களின் அரசியல் அதிகாரம் தான் இதர எல்லா அதிகார அமைப்புகளினதும் முதுகெலும்பாகும். இது தூக்கியெறியப்பட்டதும் வம்ச அதிகாரம், மத அதிகாரம், கணவன் அதிகாரம் எல்லாம் சரிந்து விழத் தொடங்குகின்றன. ... கணவன் அதிகாரத்தைப் பொறுத்தவரை, ஏழை விவசாயிகள் மத்தியில் இது எப்பொழுதும் பலவீனமாகவே இருந்து வருகின்றது. ஏனென்ருல் பொருளாதாரத் தேவையினுல் அப்பெண்கள், செல்வந்த வர்க்கங்களின் பெண்களிலும் பார்க்கக் கூடுதலான உழைப்பில் ஈடுபட வேண்டியிருக்கின்றது. எனவே இவர்களுக்குக் குடும்ப விஷயங்களில் பேச்சுரிமையும், முடிவுகள் எடுக்கும் உரிமையும் கூடுதலாக உண்டு. சமீப ஆண்டுகளில் கிராமிய பொருளாதாரம் பெரிதும் பங்கலோட்டாகி வருவதுடன், பெண்கள் மீது ஆண்கள் ஆதிக்கம் செலுத்துவதற்கான அடிப்படையும் ஏற்கெனவே பாதிக்கப்பட்டு விட்டது. சமீபத்தில் விவசாயி இயக்கத்தின் தோற்றத்துடன் பல இடங்களில் உள்ள பெண்கள் கிராமிய மாதர் சங்கங்களே ஸ்தாபிக்கத் தொடங்கியுள்ளனர்; அவர்களுக்குத் தலேயை நிமிர்த்தும் சந்தர்ப்பம் வந்து விட்டது; கணவனின் அதிகாரம் நாளுக்கு நாள் ஆட்டம் கண்டு வருகின்றது. ஒரு வார்த்தையில் சொன்னுல், முழு பிரபுத்துவ-பிதாவழிச் சித்தாந்தமும் அமைப்பும் விவசாயிகளின் அதிகார வளர்ச்சியுடன் தகர்ந்து விழுகின்றன.

> ''ஹுனான் விவசாயி இயக்க பரிசீலனே பற்றிய அறிக்கை'' (மார்ச். 1927.) தே. ப. தொ. 1.

பெண்களின் பொருளாதார அரசியல் அந்தஸ்தை விருத்தி செய்ய, ஐக்கியப்பட்டு உற்பத்தியிலும் அரசியல் நடவ

டிக்கையிலும் பங்கு பற்றுங்கள்.

''நவ சீன மாதர்'' சஞ்சிகைக்கான சாசனம், 20. ஜூலை. 1949. முதலாவது இதழில் வெளி வந்தது.

இளைஞர், மாதர், குழந்தைகள் ஆகியோரின் நலன்களுக்குப் பாதுகாப்பளியுங்கள் — படிக்கும் வாய்ப்பு இல்லாத இளம் மாணவர்களுக்கு உதவி அளியுங்கள். யப்பானிய-எதிர்ப்பு யுத்த முயற்சிக்கும் சமுதாய முன்னேற்றத்துக்கும் உபயோகமான எல்லா வேலையிலும் ஒரு சமத்துவ அடிப்படையில் பங்குபற்றுவதற்காக இளைஞரும் மாதரும் ஸ்தாபனரீதியில் திரள உதவி செய்யுங்கள். ஆண்களுக்கும் பெண்களுக்கும் திருமண சுதந்திரம், சமத்துவம் இரண்டையும் உத்தரவாதம் செய்யுங்கள். இளைஞர்களுக்கும் குழந்தைகளுக்கும் ஒரு பயனுள்ள கல்வி அளியுங்கள்....

''கூட்டரசாங்கம் பற்றி'' (24. ஏப்ரல். 1945.) தே. ப. தொ. 3.

விவசாய உற்பத்தியில் நமது அடிப்படைக் கடமை உழைப்பு சக்தியின் உபயோகத்தை ஒரு ஸ்தாபனரீதியில் இசைவாக்குவதும், உற்பத்தியில் ஈடுபடப் பெண்களை ஊக்குவதும் ஆகும்.

''நமது பொருளாதார கொள்கை'' (23. ஜனவரி. 1934.) தே. ப. தொ. 1.

ஒரு பெரும் சோஷலிச சமுதாயத்தைக் கட்டி வளர்ப்பதற்கு உற்பத்தி நடவடிக்கையில் பங்குபற்ற பரந்துபட்ட பெண்களைத் தட்டி எழுப்புவது மிக முக்கியமான விஷயமாகும். ஆண்களும் பெண்களும் உற்பத்தியில் சமவேலைக்குச் சமசம்பளம் பெற வேண்டும். சமுதாயத்தின் முழுமையான சோஷலிச மாற்றப் போக்கில் தான் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் உண்மையான சமத்துவம் நிலவ முடியும்.

''பெண்கள் உற்பத்தி முன்னணிக்குச் சென்று விட்டனர்'' என்ற கட்டுரையின் அறிமுகக் குறிப்பு (1955.)

விவசாயக் கூட்டுறவு பூர்த்தியானதும், பல கூட்டுறவுகளுக்கு உழைப்பு சக்தி குறைவாக இருக்கின்றது. முன்பு வயல்க ளில் வேலை செய்யாத பரந்துபட்ட பெண் களை உழைப்பு முன்னணியில் பங்கு பற் றுவதற்குத் தட்டி எழுப்புவது தேவை யாகி விட்டது. ...சீன மாதர் உழைப்பு சக்தியின் பிரமாண்டமான சேமப்படை யாக விளங்குகின்றனர். ஒரு மகத்தான சோஷலிச நாட்டைக் கட்டி வளர்க்கும் போராட்டத்தில் இந்த சேமப்படை பாவிக்கப்பட வேண்டும்.

''உற்பத்தியில் சேரப் பெண்களைத் தட்டி எழுப்புவதன் மூலம் உழைப்பு சக்தியின் பற்றுக்குறையைத் தீர்ப் பது'' என்ற கட்டுரையின் அறி முகக் குறிப்பு (1955.)

சமவேலைக்குச் சமசம்பளம் என்ற கோட்பாட்டில் வேலை செய்யக் கூடிய ஒவ்வொரு பெண்ணையும் உற்பத்தி முன் னணியில் பங்கு பற்றும் படி செய்யுங்கள்.

இது சாத்தியமான அளவு விரைவில் செய் யப்பட வேண்டும்.

''சிங்டை மாவட்டத்திலுள்ள ஜன நாயக மாதர் சம்மேளனத்தின் விவ சாய கூட்டுறவு இயக்கத்தில் பெண் களின் வேலையை விஸ்தரிக்கும் திட் டம் பற்றி'' என்ற கட்டுரையின் அறிமுகக் குறிப்பு (1955.)

32. கலையும் கலாசாரமும்

இன்றைய உலகில் கலாசாரம் அனைத்தும், கலை இலக்கியம் அனைத்தும் குறிப்பிட்ட வர்க்கங்களுக்குச் சொந்தமானவை, குறிப்பிட்ட அரசியல் மார்க்கங்களில் முடுக்கி விடப்படுகின்றன. கலை கலைக்காக, வர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட கலை, அரசியலிலிருந்து பிரிந்த அல்லது விடுதலை பெற்ற கலை என ஒன்று உண்மையில் கிடையாது. பாட்டாளிவர்க்க கலை இலக்கியம் என்பது முழுப் பாட்டாளி வர்க்கப் புரட்சி லட்சியத்தின் ஒரு பகுதி. அவை, லெனின் கூறியது போல, முழுப் புரட்சி யந்திரத்தின் ''பல்லும் சில்லு'' மாக விளங்குகின்றன.

''யென்ஆன் கலை இலக்கிய கருத்தரங்கு உரை'' (மே. 1942.) தே. ப. தொ. 3.

புரட்சிகர கலாசாரம் பரந்துபட்ட மக்களின் ஒரு சக்தி மிக்க புரட்சிகர ஆயுதமாகும். புரட்சி வெடித்தெழுவதற்கு முன் அது சித்தாந்தரீதியில் புரட்சிக்கான தளத்தைத் தயார் செய்கிறது, புரட்சி வெடித்ததும் பொதுப்புரட்சி முன்னணியில் அது ஒரு முக்கியமான, அவசியமான போர் முனையாகின்றது.

''புதிய ஜனநாயகம் பற்றி'' (ஜனவரி. 1940.) தே. ப. தொ. 2.

நமது கலை இலக்கியம் எல்லாம் பரந்துபட்ட பொதுமக்களுக்கு, முதன் முதலாக தொழிலாளர், விவசாயிகள், படையினருக்கு உரியவை. அவை தொழிலாளர், விவசாயிகள், படையினருக்காக சிருஷ்டிக்கப்படுகின்றன; அவர்களின் உபயோகத்துக்கு உரியவை.

''யென்ஆன் கலை இலக்கிய கருத்தரங்கு உரை'' (மே. 1942.) தே. ப. தொ. 3.

நமது கலை இலக்கிய ஊழியர்கள் இந்தக் கடமையை கண்டிப்பாக நிறைவேற்றி, தமது நிலைப்பாட்டை மாற்ற வேண்டும். அவர்கள் தொழிலாளர், விவசாயிகள், படையினர் மத்தியில், யதார்த்தப் போராட்டங்களின் மத்தியில் ஆழமாகச் செல்லும் போக்கில், மார்க்ஸிஸத்தையும் சமுதாயத்தையும் படிக்கும் போக்கில், தொழிலாளர், விவசாயிகள், படையினரின் பக்கத்துக்கு, பாட்டாளிவர்க்கத்தின் பக்கத்துக்கு, தமது நிலைப்பாட்டை படிப்படியாக நகர்த்த வேண்டும். இவ்வாறு தான் உண்மையில் தொழிலாளர், விவசாயிகள், படையினருக்குரிய கலை இலக்கியத்தை, உண்மையான பாட்டாளிவர்க்கக் கலை இலக்கியத்தை, நாம் பெற முடியும்.

ஷெ

கலை இலக்கியம் முழுப்புரட்சி யந்திரத்தினதும் ஒரு பகுதியாக நன்கு அமைய வேண்டும்; மக்களை ஐக்கியப்படுத்தி, போதித்து, எதிரியைத் தாக்கி அழிக்கும் சக்தி மிக்க ஆயுதமாகச் செயல்பட வேண்டும்; மக்கள் ஒரே மனம் ஒரே உள்ளத்துடன் எதிரியை எதிர்க்கத் துணை புரிய வேண்டும்.

ஷெ

கலை இலக்கிய விமர்சனத்தில் அரசியல், கலையியல் என இரண்டு வரையறைகள் உண்டு. . . .

அங்கு அரசியல் வரையறையும், கலையியல் வரையறையும் உண்டு. இவை இரண்டுக்கும் உள்ள உறவு யாது? அரசியலைக் கலையுடன் சமனுக்க முடியாது. ஒரு கலா சிருஷ்டி, கலா விமர்சன முறையுடன் பொது உலகநோக்கையும் சமப்படுத்த முடியாது. ஒரு சூட்சுமமான, முற்றிலும் மாருத அரசியல் வரையறை உண்டு என்பதை மாத்திரமல்ல, ஒரு சூட்சுமமான, முற்றிலும் மாருத கலையியல் வரையறை உண்டு என்பதையும் நாம் மறுக்கின்ருேம். வர்க்க சமுதாயங்களி

லுள்ள ஒவ்வொரு வர்க்கத்துக்கும் அதற்குரிய அரசியல், கலையியல் வரையறைகள் உண்டு. ஆனால் எல்லா வர்க்க சமுதாயங்களிலுமுள்ள எல்லா வர்க்கங்களும் விதி விலக்கின்றி அரசியல் வரையறையை முதலிடத்திலும், கலையியல் வரையறையை இரண்டாமிடத்திலும் வைக்கின்றன. ...நாம் அரசியல், கலை இரண்டின் ஐக்கியத்தை, உள்ளடக்கம், வடிவம் இரண்டின் ஐக்கியத்தை, புரட்சிகர அரசியல் உள்ளடக்கம், சாத்தியமான அதி உயர்ந்த அளவு பூர்த்தியான கலையியல் வடிவம் இரண்டின் ஐக்கியத்தை கோருகின்றோம். கலையியல் பண்பு குறைந்த கலா சிருஷ்டிகள், அரசியல்ரீதியில் எவ்வளவு முற்போக்குடையவையானாலும், அவ்வளவு சக்தி வாய்ந்தவையல்ல. எனவே, தவறான அரசியல் கண்ணோட்டமுடைய கலா சிருஷ்டிகள், சரியான அரசியல் கண்ணோட்டமுடைய, ஆனால் கலை ஆற்றல் குறைந்த ''சுவரொட்டி அல்லது சுலோக நடை'' தழுவிய போக்கு இரண்டையும் நாம் எதிர்க்கிறோம். கலை இலக்கியப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட வகையில் நாம் இரு முனைகளிலும் போராட்டம் நடத்த வேண்டும்.

ஷே

நூறு மலர்கள் மலரட்டும், நூறு கருத்துகள் முட்டி மோதட்டும் என்பது கலை வளர்ச்சியையும் விஞ்ஞான முன்னேற்றத்தையும் நமது நாட்டின் சோஷலிஸ கலாசாரத்தின் சுபிட்சத்தையும் துரிதப்படுத்துவதற்குரிய கொள்கையாகும். கலையில் பல்வேறு வடிவங்களும் பல்வேறு நடைகளும் சுதந்திரமாக வளரலாம. விஞ்ஞானத்தில் பல்வேறு கருத்துகளும் சுதந்திரமாக முட்டி மோதலாம். கலையின் குறிப்பிட்ட ஒரு நடையை அல்லது ஒரு சிந்தனை முறையைத் திணித்து, இன்னொன்றைத் தடை செய்ய நிர்வாக நடவடிக்கைகள் உபயோகிக்கப்பட்டால், அது கலை, விஞ்ஞான வளர்ச்சிக்குத் தீங்கு பயக்கும் என நாம் கருதுகின்றோம். கலை

கள், விஞ்ஞானங்களில் சரியும் பிழையும் சம்பந்தமான பிரச்சினைகள் கலை விஞ்ஞான வட்டாரங்களில் சுதந்திரமான விவாதங்கள் மூலமும், இந்தத்துறைகளில் அனுஷ்டான வேலை மூலமும் தீர்க்கப்பட வேண்டும். சாமானிய முறையில் தீர்க்கப் படக் கூடாது.

''மக்கள் மத்தியில் முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது பற்றி'' (27. பெப்ரவரி. 1957.)

கலாசாரம் இல்லாத ஒரு படை மந்த-புத்தியுடைய ஒரு படையாகும். ஒரு மந்த-புத்தியுடைய படை எதிரியைத் தோற்கடிக்க முடியாது.

''கலாசார வேலையில் ஐக்கிய முன்னணி'' (30. அக்டோபர். 1944.) தே. ப. தொ. 3.

33. படிப்பு

ஒரு பின்தங்கிய விவசாய நாடாக விளங்கும் சீனவை ஒரு முன்னேறிய தொழில் துறை நாடாக மாற்றும் போது, நாம் கடினமான கடமைகளை எதிர் நோக்குகின்றோம்; நமது அனுபவம் போதுமானதல்ல; எனவே, நாம் நன்ருகப் படிக்க வேண்டும்.

''சீன கம்யூனிஸ்ட் கட்சி 8வது தேசிய மாநாட்டின் ஆரம்ப உரை'' (15. செப்டம்பர். 1956.)

நிலைமைகள் சர்வசதாவும் மாறிக் கொண்டிருக்கின்றன. நமது சிந்தனையைப் புதிய நிலைமைகளுக்கு இசைவாக்க வேண்டுமானுல், நாம் படிக்க வேண்டும். மார்க்ஸிஸத்தை ஒப்பீட்டு வகையில் நன்கு

கிரகித்து, தமது பாட்டாளி வர்க்க நிலைப் பாட்டில் உறுதியாய் நிற்பவர்கள் கூட படித்துக் கொண்டே இருக்க வேண்டும். புதியவற்றைக் கிரகித்துக் கொள்ள வேண்டும்; புதிய பிரச்சினைகளை ஆராய வேண்டும்.

''சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பிரசார வேலை பற்றிய தேசிய மாநாட்டுரை'' *(12. மார்ச். 1957.)*

நாம் அறியாதவற்றை நம்மால் படிக்க முடியும். பழைய உலகை ஒழிப்பதில் மாத்திரமல்ல, புதிய உலகைச் சிருஷ்டிப்பதிலும் நாம் சிறந்து விளங்குகின்றோம்.

''சீன கம்யூனிஸ்ட் கட்சி 7வது மத்திய கமிட்டியின் 2வது பிளீனக் கூட்டத்தின் அறிக்கை'' *(5.மார்ச். 1949.)* தே. ப. தொ. 4.

படிப்பில் இரண்டு விதமான மனோபாவங்கள் உண்டு. ஒன்று, நமது நாட்டு நிலைமைகளுக்குப் பொருந்தினாலும் சரி,

பொருந்தாவிட்டாலும் சரி, எல்லாவற்றையும் அப்படியே எடுத்து நடும் வரட்டு மனோபாவம். இது நல்லதல்ல. மற்றது, நமது தலைகளைப் பாவித்து, நமது நாட்டு நிலைமைகளுக்குப் பொருந்தியவற்றைப் படிக்கின்ற, அதாவது, நமக்கு உபயோகமான அனுபவங்களைக் கிரகித்துக் கொள்ளுகின்ற மனோபாவம். இது தான் நாம் கடைப்பிடிக்க வேண்டிய மனோபாவம்.

''மக்கள் மத்தியில் முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது பற்றி'' *(27. பெப்ரவரி. 1957.)*

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் தத்துவம் சர்வவியாபகமாகப் பிரயோகிக்கப்படக் கூடியது. நாம் அதை வரட்டுத் தத்துவமாக அல்ல, செயலுக்கு ஒரு வழிகாட்டியாகக் கருத வேண்டும். மார்க்ஸிஸம்-லெனினிஸத்தை படிப்பது என்பது வெறும் சொற்களையும் சொற்றொடர்களையும் படிக்கும் ஒரு விஷயமல்ல, பதிலுக்கு அதைப் புரட்சியின்

விஞ்ஞானமாகப் படிக்க வேண்டும். அது மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோர் விசாலமான யதார்த்த வாழ்வையும், புரட்சி அனுபவத்தையும் ஆராய்ந்து, அதிலிருந்து வகுத்த பொது விதிகளைப் புரிந்து கொள்ளும் ஒரு விஷயம் மட்டுமல்ல, பிரச்சினைகளை ஆராய்வதிலும் தீர்ப்பதிலும் அவர்களுடைய நிலைப்பாட்டையும், வழிமுறையையும் கிரகித்துக் கொள்ளும் ஒரு விஷயமுமாகும்.

''தேசிய யுத்தத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம்'' (அக்டோபர். 1938.) தே. ப. தொ. 2.

நாம் ஒரு சரியான தத்துவத்தைப் பெற்றிருந்தால், அதை அனுஷ்டானத்தில் பிரயோகிக்காமல், அது பற்றி சும்மா பிதற்றித் திரிந்தால் அல்லது பூட்டி வைத்திருந்தால், அந்தத் தத்துவம் எவ்வளவு சிறந்ததானாலும் அதனால் ஒரு பிரயோஜனமுமில்லை.

''நடைமுறை பற்றி'' (ஜூலை. 1937.) தே. ப. தொ. 1.

மார்க்ஸிஸத் தத்துவத்தைப் பொறுத்தவரையில், அதில் தேர்ச்சி பெற வேண்டும், அதை உபயோகிக்க வேண்டும். தேர்ச்சி பெறுவதன் நோக்கம் அதை உபயோகிப்பதாகும். ஒன்று அல்லது இரண்டு அனுஷ்டான பிரச்சினைகளைத் தெளிவுபடுத்துவதில் மார்க்ஸிஸம்-லெனினிஸக் கண்ணோட்டத்தை உங்களால் பிரயோகிக்க முடியுமானால், நீங்கள் பாராட்டுக்கு உரியவர்கள், ஓரளவு சாதனைகளை ஈட்டியவர் ஆவீர்கள். எவ்வளவுக்கு அதிகமான பிரச்சினைகளை நீங்கள் தெளிவுபடுத்துகிறீர்களோ, எவ்வளவுக்குப் பூரணமாகவும், ஆழமாகவும் தெளிவுபடுத்துகிறீர்களோ, அவ்வளவுக்கு உங்கள் சாதனையும் பெரிதாய் இருக்கும்.

''கட்சி நடையைச் சீர்செய்வோம்'' (1. பெப்ரவரி. 1942.) தே. ப. தொ. 3.

மார்க்ஸிஸம்-லெனினிஸத் தத்துவத்தைச் சீன புரட்சி அனுஷ்டானத்துடன் இணைப்பது எப்படி? ஒரு பொது

வான சொற்றொடரால் குறிப்பிட்டால், அது ''இலக்கில் அம்பை எய்வதன் மூலம்'' ஆகும். இலக்கிற்கு அம்பு எப்படியோ, அப்படியே சீன புரட்சிக்கு மார்க்ஸிஸம்-லெனினிஸமும். இருந்தும், சில தோழர்கள் ''இலக்கின்றி எய்கிறூர்கள்'', மனம் போன போக்கில் எய்கிறூர்கள். இத்தகைய நபர்கள் புரட்சிக்கு ஊறு விளை விக்கக்கூடும்.

ஷ

வேலையில் அனுபவம் உடையவர்கள் தத்துவப் படிப்பை மேற்கொள்ள வேண்டும்; பாரதூரமாகப் படிக்க வேண்டும்; அப்பொழுது தான் அவர்கள் தமது அனுபவத்தை ஒழுங்குபடுத்தி, தொகுத்து, அதைத் தத்துவ மட்டத்துக்கு உயர்த்தக் கூடியவர்களாய் இருப்பர்; அப்பொழுது தான் தமது அரைகுறை அனுபவத்தை பொது உண்மை என்று கருதாமல், அனுபவவாதத் தவறுகளை இழைக்காமல் இருக்க முடியும்.

ஷ

வாசிப்பு என்பது படிப்பாகும். பிரயோகிப்பதும் படிப்பே; இந்த வகையில், இது படிப்பில் மிக முக்கியமான ஒன்று. நமது முக்கியமான முறை யுத்தத்தை யுத்தத்தின் மூலம் படிப்பது. பாடசாலைக்குச் செல்லும் வாய்ப்பு கிடையாத ஒருவர் கூட, யுத்தம் பற்றி படிக்க முடியும், அவர் யுத்தத்தில் போரிடுவதன் மூலம் படிக்க முடியும். புரட்சி யுத்தம் என்பது ஒரு வெகுஜன முயற்சி. இது வழமையாக முதலில் படித்து, பின்னர் செய்யும் ஒரு விஷயமல்ல. மாருக, முதலில் செய்து, பின்னர் படிப்பது; செய்வதே படிப்பு ஆகும்.

''சீன புரட்சி யுத்தத்தில் யுத்த தந்திரப் பிரச்சினைகள்'' (டிஸம்பர். 1936.) தே. ப. தொ. 1.

சாதாரண பிரஜைக்கும் படைவீரனுக்கும் இடையில் ஒரு வெளி இருந்தாலும், அது ஒரு பெரும் சுவரல்ல, அதை விரைவில் அடைத்துவிட முடியும். அதை

அடைக்கும் வழி யாதெனில், புரட்சியில், யுத்தத்தில் பங்கு பற்றுவதேயாகும். ஒன்றைப் படிப்பதும் பிரயோகிப்பதும் எளிதல்ல என்று நாம் கூறும் போது, அதைப் பூரணமாகப் படிப்பதும், தேர்ச்சி பெற்ற முறையில் பிரயோகிப்பதும் கஷ்டம் என்று நாம் கருதுகின்றோம். சாதாரண பிரஜைகள் விரைவில் படைவீரர் ஆக முடியும் என்று கூறும் போது, நுழைவாயிலைக் கடப்பது கஷ்டமானதல்ல என்று நாம் கருதுகின்றோம். இவ்விரண்டு கூற்றுகளையும் ஒன்றாகச் சேர்த்து கூறினால், ''மனதைத் திடப்படுத்திக் கொண்ட ஒருவனுக்கு உலகில் கஷ்டமானது ஒன்றுமே இல்லை'' என்ற சீன முதுமொழியை மேற்கோள் காட்டலாம். நுழைவாயிலைக் கடப்பது கஷ்டமானது அல்ல; தேர்ச்சி பெறுவது கூட கடமையில் மனதைச் செலுத்தி, படிப்பதில் நன்றாக இருந்தால், சாத்தியமானதே.

ஷி

பொருளாதார வேலையில் தேர்ச்சி பெற்ற எல்லாரிடமுமிருந்து (அவர்கள் யாராயிருந்தாலும் பரவாயில்லை) நாம் அதைக் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் அவர்களை ஆசிரியர்களாக மதித்து, அவர்களிடமிருந்து மரியாதையாகவும் நேர்மையாகவும் கற்க வேண்டும். நாம் அறியாதவற்றை அறிந்தது போல் நடிக்கக் கூடாது.

''மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் பற்றி'' (30. ஜுன். 1949.) தே. ப. தொ. 4.

அறிவு என்பது விஞ்ஞானம் தழுவிய ஒரு விஷயம். இதில் நேர்மையீனமோ செருக்கோ அனுமதிக்க முடியாதவை. இதில் உண்மையில் தேவையானது இவற்றுக்கு எதிரானவை — நேர்மை, அடக்கம் — ஆகும்.

''நடைமுறை பற்றி'' (ஜுலை. 1937.) தே. ப. தொ. 1.

சுய-திருப்தி என்பது படிப்பின்

விரோதி. இந்தச் சுய-திருப்தி உணர்வை நம்மிட மிருந்து நீக்கினுல் ஒழிய, நாம் ஒன் றையும் உண்மையாகக் கற்க முடியாது. நம்மைப் பொறுத்தவரையில் ''படிப்பில் தெவிட்டாமை'' என்ற மனேபாவத்தை யும், பிறருக்கு, ''போதிப்பதில் சளே யாமை'' என்ற மனேபாவத்தையும் நாம் மேற்கொள்ள வேண்டும்.

''தேசிய யுத்தத்தில் சீன கம்யூ னிஸ்ட் கட்சியின் பாத்திரம்'' (அக் டோபர். 1938.) தே. ப. தொ. 2.

சில நபர்கள் ஒரு சில மார்க்ஸிஸ நூல்களேப் படித்ததும், தம்மைப் பெரும் படிப்பாளிகளாக எண்ணிக் கொள்கின் றனர். ஆனல் அவர்கள் வாசித்தது ஆழமாகப் புகுந்து, அவர்களுடைய உள் ளங்களில் பதியவில்லே; அதை எப்படி உபயோகிப்பது என்று அவர்கள் உண ராது இருக்கின்றனர். அவர்களுடைய வர்க்க உணர்வுகளும் பழைய உணர்வு களாகவே இருக்கின்றன. வேறு சிலர்

மிகத் தற்பெருமை பிடித்து, சில வார்த் தைக் கோவைகளேப் படித்து விட்டு, தம்மைப் பயங்கரமானவர்களாகக் கருதி, பெரும் இறுமாப்பு அடைகின்றனர். ஆனல் புயல் ஒன்று அடித்த போதெல் லாம் அவர்கள் தொழிலாளர்கள் பெரும் பான்மையான உழைக்கும் விவசாயிகள் ஆகியோரின் நிலேப்பாட்டிலிருந்து வேறு பட்ட ஒரு நிலேப்பாட்டை எடுக்கின்ற னர். தொழிலாளர்களும் விவசாயிக ளும் உறுதியாக நிற்கும் அதே வேளேயில் அவர்கள் ஈடாடுகின்றனர். தொழிலா ளர்களும் விவசாயிகளும் நேர்மையாக இருக்கும் அதே வேளேயில் அவர்கள் தெளி வின்றி நிற்கின்றனர்.

''சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பிர சார வேலே பற்றிய தேசிய மாநாட் டுரை'' (12. மார்ச். 1957.)

மார்க்ஸிஸத்தை ஒருவர் உண்மையில் கிரகித்துக் கொள்ள வேண்டுமானுல், அவர் அதை நூல்களிலிருந்து மாத்திர

மல்ல, பிரதானமாக வர்க்கப்போராட்டத்தின் மூலமும், அனுஷ்டான வேலை, பரந்துபட்ட தொழிலாளர்-விவசாயிகளுடன் நெருங்கிய தொடர்பு ஆகியவற்றின் மூலமும் படிக்க வேண்டும். மார்க்ஸிஸ நூல்கள் சிலவற்றைப் படிப்பதோடு, நமது புத்திஜீவிகள் பரந்துபட்ட தொழிலாளர்-விவசாயிகளுடன் நெருங்கிய தொடர்புகள் மூலமும், தமது சொந்த அனுஷ்டான வேலை மூலமும் சிறிது விளக்கம் பெற்றபோது, நாம் எல்லாரும் ஒரே பாஷையை பேசுவது சாத்தியம்; தேசபக்தி என்ற பொது பாஷையையும், சோஷலிஸம் என்ற பொது பாஷையையும் பேசுவது மாத்திரமல்ல, கம்யூனிஸ் உலகநோக்கு என்ற பொது பாஷையைக் கூடப் பேசுவது சாத்தியம். இப்படி ஏற்பட்டால், நாம் எல்லாரும் இன்னும் நன்றாக வேலை செய்வது நிச்சயம்.

ஷை

毛主席语录

外文出版社出版（北京）
1972年版
编号：（泰米尔）1050—658
00077
1—Ta—734P

毛 主 席 语 录
*
外文出版社出版（北京）
1972年版
编号：（泰米尔）1050—658
00077
1—Ta—734Pc